# நானிருப்பேன் நிழலாக



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நானிருப்பேன், நிழலாக! |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : நவம்பர், 2006 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 304 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர் ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை: ரூ.100.00**



# நானிருப்பேன்,
# நிழலாக!

## பதிப்புரை

அருணோதயம் வெளியீடுகளுக்கு உலக மெல்லாம் வாழும் தமிழ் பெருமக்களின் பேராதரவு பெருகி வருவது வாசகர்கள் அறிந்ததே. அதிலும் 'ஜெய்சக்தி'யின் நாவல்களுக்கு நாளுக்கு நாள் நல்லாதரவு கிடைத்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

புதிய சிந்தனைகள், குடும்ப ஒற்றுமைக்கு வழிகாட்டும் நிகழ்வுகள், குடும்பப் பிரச்சனைகளை எளிதாக தீர்த்துக் கொள்ளும் வழிமுறைகளைக் கதை ஓட்டத்திலே சேர்த்து அற்புதமாக வழிவகை காணுகிறார் 'ஜெய்சக்தி' இந்தப் பாங்கு மேலும் மேலும் தொடர புதிய புதிய வாசகர்கள் பெருகு வார்கள் என எண்ணுகிறோம். மேலும் வளர வாழ்த்துக்கள்.

அருணோதயம் அருணன்

# நானிருப்பேன், நிழலாக!



1

''நல்லா ஆச்சு போ! உன் பொண்ணு என்ன சொல்றா கேட்டியோ பாரிஜாதம்'' என்று இடிஇடியென்று சிரித்தார் சக்கர வர்த்தி.

சக்கரவர்த்தி பத்திரிகை உலகின் முடி சூடா மன்னர். நிஜமாகவே சக்கரவர்த்தி தான். அவரது ஒரே மகள் அபிநயா. ஒரே மகன் விவேக். அபிநயா என்று பெயர் வைத்திருந்தாலும் செல்வி என்று அழைத்தார்கள். அது சுருங்கிப் போய் செல்வி என்று ஆகி விட்டது.

''கேட்டயா? உன் பொண்ணும் பத்திரிகைத் துறைக்கு வராளாம்.''

''அப்பாவோட கிறுக்கெல்லாம் மகளுக்கும் வராமயா போகும்?'' என்றாள் பாரிஜாதம். பிறகு கடுப்பாக மகளை நோக்கித் திரும்பினார்.

''போடி போய் ஆகற வேலையைப் பாரு! அப்பனும் மகளும் எப்ப எந்தப் பிரச்சினைல மாட்டிப்பாளோன்னு

நான் வயித்துல நெருப்பைக் கட்டிண்டு நடமாடறது போதாதாக்கும். இனி உனக்காகவும் நான் டென்ஷனா யிட்டு அலையணுமாக்கும்'' என்றாள்.

மகள் அலட்டிக் கொள்ளாமல் தந்தையைப் பார்த்தாள். ''நான் முடிவு செஞ்சா மாத்த மாட்டேன்னு அம்மாவுக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரியுமோன்னா?'' என்றாள்.

அப்பா அவளை சிந்தனையுடன் பார்த்தார். ''நீயே பையனா இருந்தா உங்க அம்மாவோட அப்ஜெக்ஷனை ஒதுக்கித் தள்ளிடலாம்? ஆனா இப்ப அவளோட அப்ஜெக் ஷனுக்கும் ஒரு வெயிட்டேஜ் கொடுக்க வேண்டியிருக்கு தெரியுமோ?'' என்றார்.

அப்பா ''ஐ டேக் இட் அஸ் எ கிரேட் இன்ஸல்ட். இன்னும் எத்தனை நாளைக்கு ஜெண்டர் டிஃபரன்ஸைச் சொல்லியே எங்களைச் சாகடிப்பேள். நான் ஒத்துக்க மாட்டேன்ப்பா.''

''சரி சின்னதா ஏதாவது ஒரு அஸைன்மெண்ட் தரேன். செய். திருப்தியா இருந்தாப் பாக்கலாம்.'' என்று அப்பா வழிக்கு வந்தார்.

பாரிஜாதம் கவலையாகப் பார்த்தார்.

செல்வி குறும்பாக அம்மாவைப் பார்த்தாள். ''அம்மா நான் வெளியே போறேன். உன் ஆத்துக்காரர் கிட்டே வேணுமட்டும் சண்டை போட்டு முடிச்சுக்கோ. அப்புறம் டோண்ட் ட்ரை டு பிரெயின் வாஷ் மி. தட் வோன்ட் வொர்க்'' என்று கலகலவென்று சிரித்துக் கொண்டே ஓடி விட்டாள்.

அப்பாவின் புன்னகை முகத்தைப் பார்த்த அம்மா மேலும் கடுப்பானார்.

''நீங்க என்ன பண்றேள்னு புரியறதா?'' என்றாள். அவர் ஒரு பெருமூச்சுடன் சொன்னார். ''உன் பொண்ணைப் பத்தி



நீதான் புரிஞ்சுக்கலே. பரி... அவ நேத்திக்கு நம்ம போட்டிப் பத்திரிகைக்கு இன்டர்வ்யூ போயிட்டு வந்திருக்கா. நான் இங்க வேலை குடுக்கலேன்னா அங்க போவா. அவளை லுக்கு எப்படி நீனி கிடைச்ச மாதிரி இருக்கும். யோசிச்சுப் பாரு'' என்றார்.

பாரிஜாதம் அதிர்ந்து போனார். ''அப்படியே உங்க சின்ன வயசு சுபாவம் இவளுக்குப் படிஞ்சிருக்கு. இது எங்க போய் முடியுமோ தெரியலையே'' என்று புலம்பினாள்.

சக்கரவர்த்திக்கே கூட அப்படி ஒரு அச்சம் இருந்தது. ஆனால் கவனமாக அதை வெளியிடாமல் எழுந்து போய் விட்டார்.

* * *

''ஏன்டி? நீ என்ன? அந்தப் போட்டிப் பத்திரிகைக் காராளோட பத்திரிகைக்கு இன்டர் வியூவுக்குப் போனயாமே?'' என்றான் விவேக்.

''ஆமா இப்போ அதுக்கு என்ன? ஐ ம் லுக்கிங் பார் எ ஜாப். எங்க கிடைக்குதோ அங்கே போறேன். எங்கெல்லாம் வேகன்ஸி இருக்கோ அங்கெல்லாம் டிரை பண்ணுவேன் தானே?'' என்றாள்.

''அவாளண்டை சொன்னயோ நீ நம்மாத்துப் பொண்ணுன்னு?''

''நான் என்னத்தைச் சொல்றது? அவாளே எல்லாத்தையும் கண்டு பிடிச்சு வச்சிருந்தா தெரியுமோ? அந்த ஆள் நமுட்டுச் சிரிப்பு சிரிக்கறான் தெரியுமோ?''

''ம்'' என்றான் அரைச் சிரிப்புடன்.

''அப்புறம் நான் டான் டான்னு சொன்ன பதில்ல அசந்து போயிட்டான். அப்புறம் நான் கடைசியா சொல் லிட்டுத்தான் வந்தேன். இத பாருங்கோ. நான் வேலை

கேட்டுத்தான் வந்திருக்கேன். அதுக்காக எங்கப்பாவும் அண்ணாவும் நடத்தற பத்திரிகை விஷயமெல்லாம் சொல வேண்டு நினைக்காதீங்கன்னு'' என்றாள் பெருமையாக.

விவேக் இடியிடியென்று சிரித்தான். ''செய்வடி நீ!'' என்றான். ஆனால் அன்புடன் அவள் தலையைக் கலைத்து விட்டான்.

''பத்திரிகையிலே நுழைஞ்சு புளுகு மூட்டையை அவுத்து வுடறதுன்னு ஆச்சு. அதை தினப்பத்திரிகையிலிருந்து அவுத்து விட்டா என்ன? வாரப் பத்திரிகையிலிருந்து அவுத்து விட்டா என்ன?'' என்று சிரித்தாள் தங்கை.

''சரிடி. சும்மா அலட்டிக்காதே!'' என்றான். ஆனால் உடனே சீரியஸாக மாறினான். ஆசிரியர் குழுவில் இருந்த இரண்டு பேரை அழைத்தான்.

''அப்துல்! இவ என் சிஸ்டர். ஜர்னல்ல வேலை செய் யணுங்கறா. எதுல போடலாம் சொல்லு'' என்றான்.

அவன் விழித்தான். ''சார்! உங்க சிஸ்டர்ங்கறீங்க? அப்புறம் என்கிட்டே போய் கேட்கறீங்களே?'' என்றான்.

''சிஸ்டர்ல்லாம் ஆபீஸுக்கு வெளியிலே. இங்க வெறும் ஸ்டாஃப்தான் புரியுதா? இங்க பிகின்னர் லெவல்ல ஏதாவது வேலை குடுங்க'' என்றான்.

''எதுக்கும் விக்டரைக் கூப்பிட்டுச் சொல்லுங்க'' என்றான்.

''சரி. கூப்பிடு'' என்றான் விவேக். விக்டர் வந்தான். சுவாரசியமாக அவளைப் பார்த்தான். விவேக்கின் தங்கை என்று தெரிந்தவுடன் ஸ்விட்ச் போட்டாற் போல் பார்வையை மாற்றிக் கொண்டான்.

''சார் போட்டோ கிராஃபியில் இன்ட்ரஸ்ட் உண்டா சார்?'' என்றான்.

''எதுக்குக் கேட்கறே?'' என்றான்.



''சார் முதல்ல அதுல ஆரம்பிக்கட்டுமே?''

''நோ. நோ. எனக்கு அதெல்லாம் வேண்டாம். இன்வெஸ்டி கேட்டிங் ஜர்னலிஸம். அதுலதான் இன்ட்ரஸ்ட்'' என்றாள் அபிநயா அடம் பிடிக்கிற குழந்தை போல்.

''ஏய். கிடைக்கற வேலையை ஒத்துக்கடி. பெரிய துப்பறியும் சாம்பு. பெரிமேஸன்'' என்று வீட்டில் சண்டை போடுவது போல் ஆரம்பித்த விவேக் சூழ்நிலையைக் கருதிக் கட்டுப்படுத்திக் கொண்டான். சிரித்தான்.

''அப்துல் விக்டர் கண்டுக்காதீங்க'' என்று விளையாட் டாக முயன்றான்.

''வேண்டாம். சப் எடிட்டர் சார்! என்னோட ஈகோவை உசுப்பாதீங்க. அப்புறம் ரொம்ப அவஸ்தைப் படுவீங்க'' என்றாள் மிரட்டலாக.

அப்துலும் விக்டரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு நின்றார்கள்.

''ஓ.கே. ஓ.கே. வி கம் டு எ காம்ப்ரமைஸ். நெக்ஸ்ட் இஷ்யூவுக்குள்ளே ஏதாவது நல்லதா நாலு போட்டோ எடுத்துக் காட்டு. குடுக்கறது மட்டும்தான் உன்னோட வேலை. செலக்ட் பண்றது கமிட்டியே பாத்துக்கும். அதுலயெல்லாம் எந்த இன்ஃப்ளுயன்ஸும் கிடையாது புரியுதா?'' என்றான்.

''பு... ரி... ஞ்... சு... து'' என்றாள். தன் தோளில் பையை மாட்டிக் கொண்டு டாக் டாக்கென்று நடந்து போனாள்.

அவள் போவதைப் பார்த்த விவேக் சற்று நேரம் கவலையான முகத்துடன் அமர்ந்திருந்தான். பிறகு சொன்னான்.

''யாராவது அவ கூட எப்பவும் இருந்தாத் தேவலை. டோன்ட் அன்டர் எஸ்டிமேட் ஹர். ரொம்ப பிரில்லியன்ட் அது மட்டுமில்ல பயங்கர டிரபிள் ஷூட்டர்.''

''அப்ப பேசாம விக்ரமைக் கூட அனுப்பிடுவோம்'' என்றார்கள்.

விவேக் முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டான். ''ம்'' என்று யோசித்தான்.

பிறகு குபீரென்று சிரித்தான். ''சரி விடு அவன் தலை யெழுத்து அதுன்னா என்ன செய்ய முடியும்'' என்றான்.

* * *

''ஹலோ! இவருதான் மிஸ்டர் விக்ரமாதித்யன்'' என்று அறிமுகப்படுத்தினார்கள்.

''ஹலோ!'' என்றாள் அபிநயா.

'தனக்கு மேலே என்றால் ஏதோ வயதானவராக இருப்பார் என்று பார்த்தால் இதென்ன இவர் ரொம்ப சின்ன வயசாக இருக்கிறாரே!' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் சொல்ல வில்லை.

''என்ன விக்டர்?'' என்றான் விக்ரமாதித்யன்.

''சார்! இவங்க மிஸ் அபிநயா. விவேக் சாரோட சிஸ்டர். நம்ப பத்திரிகையிலே புதுசா சேர்ந்திருக்காங்க'' என்றான்.

''ஏன் மேடம்! உங்களுக்கு அந்தப் பத்திரிகையில நல்ல சம்பளமாக் குடுக்கறேன்னிருக்காங்க. நீங்க இங்கே வந்துட்டீங்க'' என்றான். சம்பளத் தொகையையும் குறிப்பிட்டுச் சொல்லவும் அபிநயா கொஞ்சம் அசந்துதான் போனாள்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''மேடம். சோர்ஸ் எல்லாம் கேட்கக் கூடாது. நான் சொன்னது கரெக்டா இல்லையா அதை மட்டும் சொல்லுங்க!''

''கரெக்ட்தான். இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிஸம்! ம்!!'' என்று சிரித்தான்.

''சார். நீங்க இவங்களுக்கு ட்ரெயினிங் குடுக்கணும்'' என்றான் விக்டர். ''நான் இவங்களுக்கு ட்ரெயினிங் குடுக்



கறதா? இவங்க எனக்கு ட்ரெயினிங் குடுத்தாப் பத்தாதா?'' என்றான்.

''ஓ! நீ இடக்குப் பேச ஆரம்பிச்சாச்சா? இனி உனக்குப் பதில் பேச என்னால் முடியாது'' என்றான் விக்டர். இதுவரை கடைப்பிடித்த அலுவலக சம்பிரதாயத்தைத் தூக்கி வைத்து விட்டு மெல்ல நகர்ந்தும் விட்டான்.

விக்ரமாதித்யன் அலட்டிக் கொள்ளாமல் அபிநயாவை நோக்கித் திரும்பினான்.

''அப்புறம் உங்க முழுப்பேரே அபிநயாவா?'' என்றான்.

''அபிநவ குசலாம்பாள். அபிதான சிந்தாமணி''ன்னு ரெண்டு மூணு பேரிருக்கு.'' என்றாள் சிரிக்காமல்.

''மேடம். அபிதான சிந்தாமணின்னு ஒரு புத்தகம் கேள்விப் பட்டிருக்கேன். அப்புறம் நான் ஏன் நான் அந்தக் கேள்வி கேட்டேன்னா இப்ப என் பேரே பாருங்க. விக்ரமாதித்யன். ஆனா என் ஃபிரண்ட்ஸ் விதவிதமாக கூப்பிடுவாங்க. விக்ரம், விக்கி, ஆதித் அப்படின்னு அதனால கேட்டேன்'' என்றான்.

''இத்தனை பேரா விக்கிக்கும் போல இருக்கே!'' என்றாள். அவன் புன்னகைத்தான்.

''உட்காருங்க!'' என்றான். அமர்ந்தாள்.

''நல்ல வசதியா இருக்கற ஃபாமிலியில பொறந்துட்டு ஏதோ ஃபேஷன் ஷோ பாத்துட்டு, நகை புடவைன்னு வாங்கிக் குவிச்சுட்டு நிம்மதியா இருக்க வேண்டியதுதானே?''

''ம்.. அரிப்பு தாங்கலை?'' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் திகைத்தான். சிரித்தான்.

அவள் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு ''ஐயோ! நான் உங்களைச் சொல்லலை. என்னவாவது செய்! ஏதாவது செய்ன்னு உள்ளே ஒரு அரிப்பு. அதான்!'' என்றாள்.

''மேடம்! அறிவாளிகள் அவமானப்படறதும், சோம்பேறிகள் சுகம் காணறதும் ஏமாந்தறதும் ஜெயிக்கறதும் இந்த நாட்டோட நியதி'' என்றான்.

''அப்புறம்... ஏன் நீங்க இந்தத் தொழில்ல இருக்கீங்க...?''

''ம்... அதே அரிப்புத்தான்!'' என்றான்.

''சரி..சொல்லுங்க! முதல் அசைன்மெண்ட்.. என்ன செய்யப் போறீங்க?''

''நீங்களே சொல்லுங்க!''

''நான் சொல்ல மாட்டேன். ஃபர்ஸ்ட் அசைன்மெண்ட்டைப் பொறுத்தவரை உங்களுக்கு ஃபுல் ஃப்ரீடம். உங்களுக்குத் தோணின எதையாவது செஞ்சு எடுத்துட்டு வாங்க... அதுக்கப்புறம் மேல என்ன செய்யறதுன்னு முடிவு செய்துக்கலாம்...'' என்றான்.

''போட்டோவா! இல்லே ஏதாவது ஆர்ட்டிகிளா?''

''எனிதிங்... யு லைக்...!''

''ஆர்! ஐ டிஸ்லைக்?'' என்றான்.

அவன் மறுபடியும் சிரித்தான். ''சாய்ஸ் இஸ் யுவர்ஸ்''

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பினான்.

அவன் அந்தப் பக்கம் போனதும் போன் ஒலித்தது. சக்கரவர்த்தி!

''சார்!'' என்று பவ்யமானான்.

''என்னப்பா... சொல்றா! உன் அசிஸ்டெண்ட் என்றார்.

அவன் தன்னையறியாமல் ''அரபிக் குதிரை, சார்'' என்றான். பிறகுதான் உளறியதை உணர்ந்தான்.

''சார்! தப்பா எடுத்துக்காதீங்க... மனசுல தோணினதைச் சொன்னேன்'' என்றான் தயக்கத்துடன்.



''நீ வேற! நானே அதான் நினைக்கறேன். அதான் ஃபீல்டில இறங்கிப் பார்க்கட்டும். அப்பதான் உலகம் புரியும். நீ பத்திரமாப் பாத்துக்குவேன்னு... நம்பிக்கை!'' என்றார்.

''தேங்க்ஸ் சார்! ஆனா சொன்னால் கட்டுப்படுவாங்களா?'' என்றான்.

''அதெல்லாம்... செய்வா! சரின்னு பட்டா ஒத்துக்குவா. ஆனா அழிச்சாட்டியம் செய்ய மாட்டா!'' என்றார். சிரித்தார்.

''ரொம்ப செல்லமா வளர்த்திருக்கேன்ப்பா... நிம்மதியா இருக்கலாம்.'' என்று இழுத்தார்.

''கேட்டேன்! சார்! அரிப்புங்கறாங்க... ஏதோ செய்யணும்னு அரிப்பாம்!'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

''என்ன அசைன்மெண்ட் குடுத்திருக்கே!''

''இல்ல... சார்! அவங்களே... ஏதோ செஞ்சிட்டு வரட்டும்னு சொல்லியிருக்கேன்'' என்றான்.

''அசத்துவா... பாரு!'' என்று சிரித்தார். பிறகு வைத்தார்.

சற்றுக் கழித்து விவேக் பேசினான். ''விக்ரம் ரொம்ப வசதியா வளர்ந்தவ. டேக் கேர்'' என்றான் அக்கறையாக.

''ஐயோ! என்னப்பா.. அப்பாவும், மகனும் இப்படி உருகறீங்க. கிலுகிலுப்பை வச்சுகிட்டு விளையாடற பாப்பாவா அவங்க...!'' என்று சிரித்தான் விக்ரம்.

''ஐயோ! நீ வேற. டேன்ஜரஸ். எப்ப எதைச் செய்வான்னே தெரியாது!'' என்றான் விவேக்.

''அப்புறம்... ஏன்? எனக்கு அசிஸ்டெண்ட்டாப் போடறீங்க?''

''உனக்குத்தான்... அந்த சைகாலஜியெல்லாம் புரியும்'' என்றான் விவேக்.

இரண்டு பேரும் மாற்றி மாற்றிப் பேசியதிலிருந்து விக்ரமுக்கே கொஞ்சம் உள்ளூர ஆட்டம் கண்டது.

அதற்கேற்ப அடுத்த பத்து நாட்களுக்குள்ளாக அபிநயா கொண்டு வந்து கொடுத்த போட்டோக்களைப் பார்த்தான். இறுக்கமான முகத்துடன் அமர்த்தலாகப் பார்த்தவன் வெடிச் சிரிப்பு சிரித்துவிட்டான்.



2

புகைப்படம் பற்றிய பேச்சு வந்தவுடன் மூவரும் சிரித்தார்கள்.

ஒரு படத்தில் ஒரு பிரபலம் மூக்கு சிந்திக் கொண்டிருந்தார். இன்னொரு படத்தில் எப்போதும் வெள்ளைக் கதர் மடமடப்பில் ட்ரிம்மாக நடமாடும் அந்தத் தலைவர் தொப்பையும், தொந்தியுமாகத் தன் வீட்டின் பின் கட்டில் விச்ராந்தியாக அமர்ந்திருந்தார். மற்றொரு படத்தில் இளமை ததும்ப நடமாடும் அந்தத் திரைப்படப் பிரபலம் தனது தொப்பியை எடுத்து வைத்து விட்டு சொட்டைத் தலை தெரிய அமர்ந்திருந்தார்.

மற்றொரு படத்தில் ஒழுக்கத்தின் சிகரம் என்று போற்றப்படுகின்ற ஒருவர் புகை பிடித்துக் கொண்டு தனக்கு முன்னால் பல சைனில் பாட்டில்கள் அமர்த்திருக்க உலகம் மறந்திருந்தார்.

மறுபடியும் ஒரு சிரிப்பலை கிளம்பியது.

''விவேக்...! இந்தப் பொண்ணு ரொம்ப ரிஸ்க் எடுத்திருக்கா போல இருக்கே?'' என்றார் சக்கரவர்த்தி கவலை தொனிக்கும் குரலில்.

பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் மட்டுமல்லாமல் தன் கீழ் பணிபுரிபவர்களைப் பற்றியும் பெரிதும் அக்கறை கொள்பவர் சக்கரவர்த்தி.

''கேட்டேன்ப்பா... எந்தக் காம்பவுண்டுக்குள்ளயும் நுழையல. ஜூம் பண்ணி எடுத்தேன்'' அப்படீங்கறா'' என்றான் விவேக்.



''எந்தெந்த மரத்து மேல ஏறினாளோ?'' என்றார் சக்கரவர்த்தி பாதி சிரிப்பும், பாதி கவலையுமாக.

''சார் கொஞ்சம் சுறுசுறுப்பா... இருக்காங்க... ஆனா, டேஞ்ஜரஸ் மாதிரித் தெரியலே.'' என்றான் விக்ரமாதித்யன்.

''என்னமோப்பா... உங்க ஆன்ட்டிக்கு... அவ இந்த ஃபீல்டுக்கு வர்றதே பிடிக்கலே. ஆனா, இந்தப் பொண்ணு... உன் வேலையைப் பாத்துட்டுப் போன்னுட்டு வந்துட்டா... ரொம்ப செல்லம் குடுத்துட்டேனேன்னு கவலையா இருக்கு.'' என்றார்.

''இல்லப்பா.. அவ போக்கிலதான் கொஞ்ச நாள் விடுங்களேன். இந்த ஃபீல்டுல இருக்கற சிரமம் தெரிஞ்சுக்கிட்டா... தானே விலகிப் போயிடுவா...'' என்றான் விவேக்.

''எனக்கென்னமோ... அப்படியெல்லாம் விலகற பொண்ணு மாதிரித் தெரியலே'' என்றார் சக்கரவர்த்தி. பிறகு திரும்பி விக்ரமாதித்யனிடம்.

''ஏம்ப்பா! நீ என்ன நினைக்கறே?'' என்றார்.

''சார்!'' நோஸ் ஃபார் நியூஸ்'ன்னு சொல்வாங்களே... அது மாதிரி... ஒரு அர்ஜ் உங்க டாட்டர்கிட்டே இருக்கு... ஆர்வம்... இருக்கு. நாலெட்ஜும் இருக்கும்னு நினைக்கறேன்'' என்றான்.

''இல்லப்பா... இப்படி எக்குத் தப்பா... நுழைஞ்சு எதை யாவது செய்தா... யாரப்பா... பதில் சொல்றது?'' என்றார் சக்கரவர்த்தி.

''சார்! இது நியாயமே இல்லே! உங்க டாட்டர் மேலே நீங்க நம்பிக்கை வைக்கணும்.''

''நான் அபி மேல் வைக்கற நம்பிக்கையை விட உன்மேல நான் நம்பிக்கை வச்சிருக்கேன்'' பாத்துக்கப்பா... என்றார்.

அவன் சிரித்தான்.

''சார்! நீங்க நினைக்கற மாதிரியில்லே... ஷி இஸ் சென்சிபிள். பட் எ லிட்டில் பிட் ஓவர் என்த்யூஸியாட்டிக்... சரியாயிடும் கொஞ்சம் ஆர்வக் கோளாறு'' என்றான்.

அவன் அழுத்தமாகப் பேசியதைக் கேட்டு மற்ற இருவரும் தெம்பானார்கள்.

அதே நேரம்!

புயல் போல் உள்ளே வந்தாள் அபிநயா. ''என்ன சார்! போட்டோஸ் எல்லாம் ஓ.கே.வா?'' என்றாள் தன் தந்தையிடம்.

''ம்... போட்டோஸ்... எல்லாம் ஓ.கே.தான். ஆனா வெளியிட்டதுக்கப்புறம் நான் எந்த ஊருக்கு ஓடறதுன்னு யோசிச்சகிட்டிருக்கேன்'' என்றார் சக்கரவர்த்தி.

''நெனச்சேன்.. இப்படித்தான் ஏதாவது சொல்வீங்கன்னு'' என்றாள் எரிச்சலாக.

விக்ரமாதித்யன் இடையில் புகுந்து ''மேடம்! ஆபீஸ் எதிக்ஸ்ன்னு ஒண்ணு இருக்கு. இப்ப நீங்க பிகின்னர்தான். உங்களுக்குக் குடுத்த அசைன்மெண்ட்டை முடிச்சுட்டீங்க... அதுக்கு மேலே டெஸிஷன் எடுக்கறதுக்கு எடிட்டர், சப் எடிட்டர்னு இருக்காங்க... புரியுதா?'' என்றான் எரிச்சலான குரலில்.

அவள் மூவரையும் மாறி மாறிப் பார்த்தாள். வெடிக்கப் போகிறாள் என்று விவேக் நினைக்கையிலேயே அவள் பனிமழை போல் புன்னகைத்தாள்.

''சரி... அடுத்த அசைன்மெண்ட்?'' என்றாள்.

''அதை நீங்களே... முடிவு செஞ்சுக்கலாம். ஆனா, அதை ஷேப்... பண்றது... அதாவது டிரிம் பண்றது வெளியிடறது பத்தின முடிவு எல்லாம் எங்களோடது'' என்றான் விக்ரம்.

''ம்...!'' என்று உள்வாங்கிக் கொண்டாள்.



''போலாமா.. என்று எழுந்தான் விக்ரம்.''

''ம்...!'' என்று ஆவலுடன் நடக்கிற தங்கையை சற்று நேரம் பார்த்து விட்டுத் திரும்பி தந்தையைப் பார்த்தான். அவர் மறுபடியும் அந்த புகைப்படங்களை ஆழ்ந்து பார்த்து விட்டு குபீரென்று சிரிக்கக் கண்டான். விவேக்கும் சேர்ந்து சிரித்தான்.

* * *

''அடுத்தவங்க பிரைவஸியில நுழையறதுல உங்களுக்கு அப்படியென்ன இன்ட்ரஸ்ட்?'' என்றான் விக்ரம்.

''சார்! எல்லா போட்டோவையும் பாத்தீங்கள்ல'' என்றாள்.

''ஆமா! எல்லாமே ஆக்ஷன் ஷாட்ஸ்தான்'' என்றான் விக்ரம்.

''நான் அதைச் சொல்லலே. எதிலயுமே யார் வீட்டுக்குள்ளேயும் நான் நுழைஞ்சு படம் எடுக்கலே!''

''ஆனா, அவங்க பிரமிஸஸ்குள்ளே நுழைஞ்சிருக்கீங்க!''

''இல்லே! நுழையலே. எல்லாமே ஜூம் பண்ணி எடுத்தது தான். வெளிநாடானா பர்மிஷன் வாங்கிட்டே இப்படிப் படம் எல்லாம் போடுவாங்க..''

விக்ரம் அவளைத் திரும்பிப் பார்த்தான். ''தட்ஸ் தி டிஃபரன்ஸ். வெளி நாடானா இப்படிப் படங்கள் போடறதுக்குப் பர்மிஷன் குடுப்பாங்க. இங்க அப்படியில்ல. தாட் பூட் தஞ்சாவூர்னு குதிப்பாங்க'' என்றான்.

''அதென்ன... தஞ்சாவூர்?'' என்றாள் அபிநயா.

''சரி... தண்டையார் பேட்டைன்னு வச்சுக்குங்க... ஆனா, குதிப்பாங்க'' என்றான்.

''தட்ஸ் ட்ரூ!'' என்றாள் அபிநயா. ''ஒண்ணு சொல்லட்டா?''

"சொல்லுங்க."

"என்னா, இங்கே வெளியுலகத்துக்கு ஒரு வாழ்க்கை... உள்ளே ஒரு வாழ்க்கைன்னு வாழறாங்க. வெளிப்படையான வாழ்க்கை வாழறவங்களுக்கு எங்கே... எப்படி போட்டோக்கள் எடுத்தாலும் கவலை வராது" என்றாள் அபிநயா.

"அடிப்படைகளையெல்லாம் மாத்த முடியாது. என்னா பத்திரிகை நடத்தறதும் இன்னைக்கு ஒரு தொழில்தான். உங்கப்பாவே இங்கே எத்தனையோ விஷயங்கள்ல காம்ப்ரமைஸ் பண்ணிக்க வேண்டியதாத்தான் போச்சு."

"சார்! என்னைப் பொறுத்தவரைக்கும் ஒருத்தர் சோஷியல் ஃபிகர்ன்னு வந்தாச்சன்னா. அவங்களுடைய வாழ்க்கையைப் பத்தி உலகம் தெரிஞ்சுக்க வேண்டியது அவசியம்ன்னு நினைக்கறேன்."

"வேண்டாம்! அவ்வளவு டீப்பாய் போகாதீங்க.. கொஞ்சம் சுவாரசியமான விஷயங்களை மட்டுமே. முதல்ல குடுங்க... அப்புறம் பாக்கலாம்...." என்றான் விக்ரம் எச்சரிக்கை தொனிக்கும் குரலில்.

"சார்... ரொம்பக் கவலைப்படாதீங்க! எங்கப்பா... அதான் நம்ம எம்.டி. இருக்காரே வில்லாதி வில்லன். ஹேண்டில் பண்ணிக்குவாரு..." என்றாள்.

"ம்...!" என்று பெருமூச்சு விடுவது போல் நடித்தாள்.

"என்னத்துக்குப் பெருமூச்சு?" என்றான் விக்ரம்.

"பத்திரிகைன்னு ஆரம்பிச்ச காலத்துல இருந்தே இந்தப் போராட்டம் இருக்கு தெரியுமா? ஹிக்கி... ஹிக்கியைத் தெரியுமா? உங்களுக்கு?" என்றாள் சோகமான குரலில்.

"யாரு! நம்ம ஆபீஸ்ல கேண்டீன் நடத்தறாரே அவரா?"

"இதுக்குப் பேருதான்... இட்டு நிரப்பறது? தெரியலேன்னா.. தெரியலேன்னு... சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே?"



"அதெப்படி...! நேத்திக்குத்தான் ஃபீல்டுக்கே வந்திருக்கீங்க.. உங்ககிட்டே எப்படி அப்படியெல்லாம் சொல்றது? சரி... சொல்லுங்க" என்றான் விக்ரம்.

"சார் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கிதான் முதல் இந்திய செய்தித்தாளை வெளியிட்டதாச் சொல்றாங்க. அவர் அப்ப கவர்னர் ஜெனரலா இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸையும், அவர் துணைவியாரையுமே கிண்டல் பண்ணி எழுதியிருக்காரு. அப்பவே அவரை ஜெயில்ல போட்டிருக்காங்க.. தன் பணத்தையெல்லாம் இழந்தப்பக் கூட வறுமையில கஷ்டப்பட்டப்ப கூட அவர் தொடர்ந்து துணிச்சலாப் போராடினார். அதனால பத்திரிகை சுதந்திரம்ங்கறது நம்ம மரபிலயே இருக்கு" என்றாள்.

"ஆமாமா. ஆளுவோர்களின் அடக்குமுறையும் தொடர்ந்து இருந்துட்டுத்தான் இருக்கு மேடம்! நாம பத்திரிகைக்காரங்க அப்படீங்கற முறையில் நமக்கு சில தார்மீகப் பொறுப்புக்களும் இருக்கு."

"யெஸ் ஐ அண்டர்ஸ்டாண்ட்!" என்றாள்.

"சரி! அடுத்த அசைன்மெண்ட் என்ன பண்றீங்க!"

சொன்னான்.

அவன் சற்றே யோசித்தான்.

"எதுக்கும் ரெண்டு நாள் டைம் குடுங்க.. யோசிச்சுச் சொல்றேன்" என்றாள்.

அப்படியெல்லாம் இரண்டு நாட்களுக்குக் காத்து கொண்டிருக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது.

"சரிங்க சார்!" என்றாள் பவ்யமாக.

அவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான் அந்த பவ்யத்தின் பொருள் உன்னை மீறப் போகிறேன் என்று தெரிந்திருந்ததால்.

* * *

''எங்கே உன் திருமகள்?'' என்றார் சக்கரவர்த்தி.

''தெரியலே! கொஞ்ச நேரம் இங்க ஹால்ல குட்டி போட்ட பூனையாட்டமா அலைஞ்சுகிட்டிருந்தா... அப்புறம்... இப்ப மாடி வெராண்டாவில் அலைஞ்சிட்டிருக்கா...'' என்றார் அம்மா.

''முதல் அசைன்மென்ட்லயே வாலையெல்லாம் அவுத்து வுட்டுட்டா'' என்றார் சக்கரவர்த்தி. புகைப்படங்களைக் காட்டினார்.

அம்மா பாரிஜாதம் மலைத்துப் போனார்.

''ஏன்னா! இப்படி போட்டோவெல்லாம் எடுக்கறதுக்கு இந்தப் பொண்ணு எந்தெந்த மரத்து மேல ஏறினாளோ! நேக்கு பயமாயிருக்கு. பேசாம அவளை ஏதாவது படிப்பு கிடிப்புன்னு ஓரங்கட்டி ஃபாரினுக்கு அனுப்புங்கோ இல்லே... கல்யாணத்தைப் பண்ணி வைங்க...'' என்றார்.

சக்கரவர்த்தி ''அதெல்லாம் நடக்காது அவளுக்குள்ளே ஒரு தேடல் இருக்கு. இவளையெல்லாம் கட்டிப் போடறதுக்கு... இவளை மாதிரியே யோசிக்கறவனாக கிடைக்கணும் இல்லே! பொம்மனாட்டி மாதிரி அவன் அடங்கிப் போறவனா இருக்கணும்'' என்றார்.

''ஆண்டவா! நேக்கு வயத்தைக் கலக்கறதே'' என்றார் அம்மா.

''ஒண்ணும் பயப்படாதேடி... அதுக்காக உன் பொண்ணு ரொம்பக் கெட்டவளும் இல்லே கொஞ்சம் ஓவர் துறு துறுப்பு. அவ்வளவுதான்'' என்றார் ஆறுதல் சொல்வது போல. அதே நேரம்!

விவேக்கும், விக்ரமும் அவளைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.



''டேய்... விவேக்! எத்தனை நாளா என்னைப் பழி வாங்கறதுன்னு திட்டம் போட்டுகிட்டிருந்தே...!'' என்றான் விக்ரம்.

''ஏன்?''

''இம்ப்படிதல்ன்னா... வீசை என்ன விலைன்னு கேட்பாங்க... போல இருக்கு... உன் தங்கை... உடம்புல ஒவ்வொரு நரம்புலயும் குறும்பு கொப்பளிச்சுட்டு இருக்குது. அவங்களைக் கொண்டு வந்து ட்ரெயினிங் குடுக்கச் சொல்லி. எனக்கு வேலை குடுக்கறீங்க'' என்றான் லேசான சிரிப்புடன்.

''டேய்! விக்ரம்...! உன்னாலதான்டா அவளைச் சமாளிக்க முடியும். எனக்கென்னவோ உன்னாலதான் அவளோட இங்கிங்கோட போக்கை முன்னாடியே கண்டுபிடிக்க முடியும்னு தோணறது'' என்றான்.

''விவேக்! லேசப்பட்ட ஆளில்லடா.. கொஞ்சம் ஜர்னலிசம் பத்தித் தரோ பண்ணிகிட்டுத்தான் உள்ளே வந்திருக்காப்ல தெரியுது! நரிக்கின்னா யாருன்னு உனக்குத் தெரியுமா? எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுகிட்டு எனக்கு விளக்கமாய் சொன்னாப்ல'' என்றான். கலகலவென்று சிரித்தான்.

விவேக் புன்னகைத்தான். ''சரி... நீ எவ்வளவு நாலெட்ஜ பிள்ன்னு அவகிட்டே சொல்றேன்'' என்றான்.

''வேண்டாம்பா.. விட்டுடு... எனக்குத் தெரியாத விஷயங்களும் அவங்ககிட்டே இருந்து கிடைக்கலாம் இல்லே...!'' என்றான்.

''இப்ப... அடுத்து என்ன செய்யப் போறாளாம்'' என்றான்.

''அந்த கிரேட் ஆக்டர் இல்லே... அவரை சுவாரசியமான தருணங்கள்ங்கற தலைப்பிலே போட்டோ எடுத்துத் தள்ளப் போறாங்களாம்'' என்றான்.

''சரி... நீ எதுக்கும் கூட இருந்து பாத்துக்க'' என்றான் விவேக் வேண்டுதல் போல்.

''கடைசில, எனக்கு பாடிகார்டு வேலை குடுத்துட்டீங்க...'' என்றான் சோகம் போல.

விவேக் சற்றே கவலையானான்.

''என்னடா... விக்ரம்....! நான் இவ்வளவு தூரம் ரிக்வெஸ்ட் பண்ணிக் கேக்கறேன். அப்பா வேற... அபியை விக்ரம் பொறுப்பில விடு. எல்லாம் சரியாய் போயிடும் கறார்'' என்றான்.

''நான் சும்மா... தமாஷுக்கு சொன்னேன்டா'' என்றான் வேறு விஷயத்துக்குத் தாவினான்.

''சரி... அப்புறம்... அடுத்த இஷ்யூவுக்கு எல்லாம் ரெடியா?'' என்றான்.

''ம்... எல்லாம்... ரெடி! ரெண்டு மூணு ஃபில்லர்ஸ் இருந்தாத் தேவலை... நீதான் ஏதாவது கவிதை சொல்லேன்டா.''

'மழையில் விழித்தெழுந்தது
எனக்குள்
கவிப்புயல்....
அந்த சிறுவனுக்குள்ளும்
விழித்தெழுந்தது
பசிப்புயல்
தந்தை தள்ளு வண்டிக்காரன்..!'

''குட்... நல்ல கவிதைடா...!'' என்றான் விவேக். ''யாருது?''

''இன்னும் வெளியுலகம் தெரிஞ்சுக்காத கவிஞர்கள் நிறையப் பேர் இருக்காங்க... இல்லே! அப்படி ஒருத்தருது.''

''தெரிய வைப்போமேடா... பேரைச் சொல்லு..!'' என்றான் விவேக்.



''இப்போதைக்கு அவரு கவி ஒவியன்னு பேரு வச்சுகிட்டு இருக்காரு. நாளைக்கு எப்படி மாத்திக்குவாரோ தெரியலை'' என்றான் விக்ரம்.

எழுந்தவன். ''சரி... நான் லைப்ரரிக்குப் போயி ஏதாவது சுவாரசியமான விஷயங்களா ரெண்டு மூணு ஃபில்லர்ஸ் தரேன்'' என்றான்.

''ஆஹா! இந்த இஷ்யூ களைகட்டிடும் போ...'' என்று உற்சாகமானான் விவேக்.

கதவு வரை போனவன் நின்றான். ''விவேக்! நீ எதுக்கும் அந்த ஆக்டரோட பி.ஏ.கிட்டே பேசி உங்க தங்கை அந்த ஷூட்டிங் ஸ்பாட்டுல அப்சர்வ் பண்றதுக்குப் பர்மிஷன் வாங்கிக்க...'' என்றான்.

லைப்ரரிக்குப் போகும்போது சிரித்துக் கொண்டான்.

புயல் மாதிரி ஒரு பொண்ணைத் தன் பொறுப்பில் விட்டுப் பாத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். இனிமேல் தொழில் கொஞ்சம் சுவாரசியமாகப் போகும் என்று நினைத்துக் கொண்டான்.



## 3

## கூட்டம் அலைமோதியது!

அது ஒரு வெளிப்புறப் படப்பிடிப்பு.

நடிப்பரசர் ரகுவீர் வருகிறார் என்று அக்கம் பக்கத்து ஊர்க்காரர்களெல்லாம் திரண்டிருந்தார்கள்.

போலீஸ் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குள் திணறிக் கொண்டிருந்தார்கள். பெரிய கடைவீதி செட் போட்டிருந்தார்கள்.

காதல் காட்சியாம் கதாநாயகி வந்து காத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன... சார் ''அவரை இன்னும் காணோம்'' என்றாள் டைரக்டரிடம்.

''அம்மா. சார் ரொம்ப பங்ச்சுவலா வருவாரு. எட்டரை மணிக்கு ஷூட்டிங்குன்னு சொல்லிருக்கு. பத்து நிமிஷம் முன்னாலயே வந்தர்றேன்னு சொல்லியிருக்காரு!'' என்றார் டைரக்டர்.

''அப்ப... எதுக்கு..என்னை ஒரு மணி நேரம் முன்னாடியே வரச் சொன்னீங்க?'' என்றாள் ரொம்பக் கோபமும் காட்டாமல் ஆனால் கேட்டுவிட வேண்டும் என்ற துடிப்பிலான ஒரு குரலில்.

''வெளியே போய்க் கூட்டம் பாருங்க... மேடம்! நீங்க இந்த நேரத்துக்கு வந்திருந்தீங்கன்னா... துவைச்சுத் துணி யாக்கியிருப்பாங்க'' என்றார் டைரக்டர். அதே நேரம்!

வெளியே அரவம் கேட்டது!

ரகுவீர் வழக்கமாக வருகிற காரும், பின்னாலேயே அந்த காரவானும் வந்தன.

ரகுவீர் நின்று பேசுவதற்காகவே ஒரு மேடை போடப் பட்டிருந்தது. இறங்கி ஒரு வணக்கம் போட்டபடி மேடையில் ஏறினான்.

''வணக்கம் ரசிகப் பெருமக்களே!'' என்றான். கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

''டி.எஸ்.பியின் பக்கத்தில் அபிநயா நின்றாள். சற்றுத் தள்ளி விக்ரமாதித்யன் நின்று கொண்டிருந்தான்.

அவன் மேடையேறுவதற்குள்ளாக, ''தடால்'' தடாலென்று காலில் விழுகிறவர்கள் என்ன? தூரத்தில் நின்றபடியே அவன் கன்னங்களைக் கைகளால் வழிப்பது போல் பாவனை செய்து நெட்டி முறித்த வயதான, மற்றும் இளம் பெண்கள் என்ன? ''தலைவா தலைவா!'' என்று அடித்தொண்டையில் இருந்து ''கத்துற இளைஞர்கள் என்ன?''



அபிநயாவுக்கு இதெல்லாம் பார்க்கச் சுவாரசியமாகவும் இருந்தது. சற்றே எரிச்சலாகவும் இருந்தது.

மெல்ல விக்ரமாதித்யனின் அருகில் போய் நின்றாள்.

''விக்ரம் இது என்ன? இந்த மனுஷங்க எல்லாம் இவ்வளவு வெகுளியா இருக்காங்க... ஒரு மனுஷன் கிட்டே இருக்கிற கலையை ரசிக்கலாம். ஆனா இப்படிப் பைத்தியம் பிடிச்சு அலையறாங்களே...!'' என்றாள்.

''அக்கம் பக்கம் பார்த்துப் பேசு! உதை பின்னிருவா னுங்க'' என்று சிரித்தான் விக்ரம். பிறகு அவனே சொன்னான்.

''நீ ஒரு வார்த்தை போட்டயே! அதுலயே எல்லா விளக்கமும் அடங்கிருது. ''வெகுளி'' அப்பாவின்னு நம்ம ஜனங்க அப்படித்தான். திரையில பார்க்கற உருவமும், வெளியில அவங்க கேரக்டரும் ஒண்ணாவே இருக்கும்ன்னு நினைச்சுக் கறாங்க. அதான் இப்படி ஹீரோ வொர்ஷிப்'' என்றான்.

சலிப்பாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''அப்ப... நிஜத்துல வேற மாதிரி இருப்பாங்களா என்ன?'' என்று கேட்டாள் அபிநயா.

விக்ரம் தோளைக் குலுக்கினான்.

''யாருக்குத் தெரியும்? சில பேர் எல்லா இடங்கள்ளயும் ஒரே மாதிரி இருக்கலாம். சில பேர் அப்படி இல்லாமலும் இருக்கலாம்'' என்றான்.

அப்போதுதான் அவளுக்குள் அந்த எண்ணம் உதித்தது. ஆனால் விக்ரமிடம் உடனே தெரிவிக்கவில்லை.

''நான் உங்களுக்காக, உங்களை சந்தோஷப் படுத்தணும் கறதுக்காகத்தான் இந்த நடிப்புத் தொழில்லயே இருக்கேன். வேணுங்கற புகழும், பணமும் வந்தாச்சு... ஆனாலும் நம்ம ரசிகர்களை ஏமாத்தக் கூடாதேங்கற எண்ணத்துலதான் தொடர்ந்து நடிக்கறேன்.. நீங்க எல்லோரும் என்மேல

உண்மையான பிரியம் வச்சிருக்கீங்கன்னா... எந்தவித இடைஞ்சலும் இல்லாம... இங்க படப்பிடிப்பு நடக்க உதவணும். எங்க ரசிகர் படைத் தொண்டர்கள் உங்களை ஒழுங்கு படுத்துவாங்க... படப்பிடிப்புக்கு இடைஞ்சல் இல்லாம.... உங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்துல இருந்து... நீங்க ஷூட்டிங்கை பார்க்கலாம்'' என்றான் ரகுவீர்.

''விவரமான ஆளுப்பா! இந்த பசங்களை தொழிலுக்கு இடைஞ்சல் இல்லாம மடக்கிப் போட்டுட்டார் பாத்தியா'' என்று அஸிஸ்டென்டுக்கு மட்டும் கேட்கும்படியாக முணுமுணுத்துக் கொண்டார் டைரக்டர்.

விக்ரமாதித்யன் அபி... வா! ''அவரு உள்ளே போறதுக்கு முன்னாடி நாம ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போயிடலாம்'' என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

சாதாரணமாக ஒரு சட்டை. அதே போல ஒரு பாண்ட்.

எந்த விதமான தனிப்பட்ட அடையாளங்களையும் காட்டிக் கொள்ளாமல் நடந்தான் விக்ரமாதித்யன். அவனும் கூடவே நடந்தான். அவனும் லூசாக ஒரு சட்டை. ரொம்ப டைட்டாக இல்லாமல் ஒரு பாண்ட் என்று அணிந்திருந்தான்.

டைரக்டரிடம் போய் அறிமுகப்படுத்தினான். அவர் சிரித்தார்.

''ஓஹோ! சக்கரவர்த்தித் திருமகளா! மேடம்! நீங்க பாட்டுக்கு எதையாவது தப்பாய் கேட்டு எங்க இரேட் ஸ்டாரோட மூடைக் கெடுத்துறாதீங்க... அப்புறம் எங்க ஷூட்டிங்கே கான்சலாயிரும். இன்னைக்குப் போட்டிருக்கிற செட்டுக்கு மட்டும் செலவு கால் கோடி'' என்றார்.

''ஏன்...சார்! பத்திரிகைக்காரங்கன்னாலே பயப்பட நீங்க...'' என்றான் விக்ரம் பால்வடியும் முகத்துடன்.

டைரக்டர் அபிநயாவைப் பார்த்தார். புன்னகைத்தார்.



''மேடம்! பால் வடியற முகத்தோட நிக்கறாரேன்னு நம்பிடாதீங்க... நிறையப் பெரிய ஆளுங்களைக் கலங்கடிச் சிருக்காப்ல... என் மேல ஏதோ கொஞ்சம் மரியாதை!'' என்றார்.

''ஆமா! நீங்க பெரிய ட்ரெண்ட் செட்டராச்சே! வெறும் மேடை நாடகம் மாதிரிப் போய்கிட்டிருந்த சினிமா உலகத்தை இயற்கையான விஷயங்களைச் சொல்ற ஒரு மீடியாவா மாத்தினவராச்சே!'' என்றான்.

அதற்குள்ளாக நடிகரின் கார் ஷெட்டுக்குள்ளே வர ''சரிங்க... சார் அப்புறம் பார்க்கறேன்!'' என்று விலகினான் விக்ரமாதித்யன்.

அபிநயாவிடம் திரும்பி ''செட்ல என்னென்ன உனக்குப் புடிச்ச மாதிரிப் படுதோ அதை நீ போட்டோ எடுக்கலாம். உன்னோட சின்ன டைரியில குறிச்சுக்கலாம்'' என்றான்.

மிகச் சாதாரணமாக ஷூட்டிங் ஸ்பாட்டில் ஒரு ஓரமாக இருந்த கார் மேல் சாய்ந்து கொண்டு நின்றான் விக்ரமாதித்யன். ஆனால், அபிநயாவுக்குப் புரிந்தது இரை தேடும் புலி போல் அவன் கண்கள் செய்திக்காகக் காத்திருந்தனவென்று.

தங்கள் பத்திரிகையில் அவனுக்கு என்ன போஸ்ட் என்பதே அவளுக்குப் புரியாமல் இருந்தது.

சப்-எடிட்டர் ரேங்க் என்றார்கள். எப்போது வேண்டுமானாலும் வந்தான். எப்போது வேண்டுமானாலும் போனான். எதையாவது தெரிவிக்க வேண்டுமென்றால் நேரடியாகச் சக்கரவர்த்தியிடமே பேசினான். அவர் இல்லாத போது விவேக்கிடம் பேசினான்.

எல்லாரும் அவனிடம் இயல்பாக இருந்தார்கள். அவனும் இயல்பாக இருந்தான். ஆனால் அலுவலகத்தில் எல்லாருக்கும் அவனிடம் ஒரு பயம் இருப்பது தெரிந்தது. கூடுதலான மரியாதையும் கூட...

''மேடம்! உங்க சப்-எடிட்டருக்கு உடம்பெல்லாம் மூளை'' என்றார்கள் அவனிடம்.

''அது ஓவர்சைஸாச்சே! இருக்க வேண்டிய இடத்துல இருக்க வேண்டிய அளவுக்கு இருந்தாத்தான்... மூளை!'' என்றான் கிண்டலாக.

''ஐயோ! இந்தப் பொண்ணு அந்தாளுக்குச் சரியா இருக்கும் போல் இருக்கு. அதனாலதான் அவருக்கு அஸிஸ்டென்ட்டாய் போட்டிருக்காங்க'' என்று அவன் காது பட முணுமுணுத்துக் கொண்டு போனார்கள்.

சிரித்துக் கொண்டான்.

அபிநயா மற்றவர்கள் எதிர்பார்க்கிற கோணங்களில் கொஞ்சம் ஆக்ஷன் ஷாட்டுகள் எடுத்துக் கொண்டாள். பிறகு விக்ரமின் அருகில் சற்று நின்று கொண்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

கதாநாயகனும், கதாநாயகியும் டூயட் பாடுவதை எடுத்தார்கள்.

நான்கு வரிப் பாட்டுக்கு கிட்டத்தட்ட அரை நாளைக்கு மேல் செலவிட்டார்கள்.

''சை! இதென்ன... இப்படி போரடிக்குது!'' என்றாள் அபிநயா.

''ஷூட்டிங்... பாத்தா... கொஞ்சம் போராத்தான் இருக்கும். சும்மாவா பின்னே! ஒரு மூணு மணி நேரப் படத்தை உருவாக்கறதுக்கு.. நூத்துக் கணக்கான பேர் மூணு மாசம் ஏன் சில சமயம் ஒரு வருஷமே கூட உழைக்கிறாங்க...'' என்றான் விக்ரமாதித்யன்.

''விக்ரம்... சார்!'' என்றவள் திரும்பிப் பார்த்துக் கேட்டாள் ''நான் என்னன்னு உங்களைக் கூப்பிடட்டும்?'' என்று.



அவன் ஆச்சரியமாக அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''என்ன வேணுமானாலும் கூப்பிடு. இப்பத்தான்... வாடா போடாங்கறது, வா போன்னு பேசறது எல்லாம் ஃபாஷனாயிருச்சே'' என்றான் கிண்டலான தொனியில்.

''எனக்கு அந்த மாதிரியெல்லாம் பிடிக்காது. என்ன இருந்தாலும் நீங்க வயசுல பெரியவங்க... அதிக பட்சம் பேர் வச்சுக் கூப்பிடலாம்.. இப்போதைக்கு விக்ரம்னே கூப்பிடறேன்'' என்றாள்.

''தாங்க்ஸ்... ஏதோ ஒரு பேரு வச்சுக் கூப்பிடறேன்கறியே.. ரொம்பத் தாங்க்ஸ்'' என்றான்.

''ஆமா! நேத்திக்கு எங்கண்ணன்கிட்டே எனக்கு ஒரே டோஸ்.. என்னடி... விக்ரம்கிட்டே போயி நதிக்கியைப் பத்திப் பேசி... பந்தா காட்டினியாமே.. அவன் உடனே பக்கிங்ஹாம்... ராஜாராம் மோகன்ராய்ன்னு ஆரம்பிச்சிருந்தா... உனக்குப் புரிஞ்சிருக்கும் அவன் ரொம்ப... நாலேட்ஜபிள்ன்னு ஒரே புலம்பல்... அப்படியா... என்ன?'' என்றாள்.

''அவன் கிடக்கறான்... நாலெட்ஜ்ங்கறது யாருகிட்டே வேணா இருக்கலாம். சொல்லப் போனா உங்களை மாதிரி புதுசா ஃபீல்டுக்குள்ள வர்றவங்க... லேட்டஸ்ட் இன்ஃபர்மேஷன் நிறையத் தெரிஞ்சு வச்சிருப்பீங்க...'' என்றான் விக்ரம்.

''விக்ரம்... சார்! எனக்கு ஏதாவது அட்வைஸ் குடுக்கணும்ன்னா... அஸ் எ நியூ கமர் என்ன அட்வைஸ் குடுப்பீங்க...'' என்று கேட்டாள் ஆர்வமாக.

''எனக்கு இந்த அட்வைஸ் குடுக்கறதுங்கற கான்ஸெப்ட்லயே நம்பிக்கையில்லே. ஆலோசனை வேணா சொல்லலாம். உங்ககிட்டே ஒரு வேகம் இருக்கு. எதையும் வித்தியாசமா செய்யணுங்கிற ஆசையிருக்கு. ஆனா, மூக்கு சிந்தற மாதிரியும், தொப்பையைக் காட்டற மாதிரியும் இது

வரைக்கும் படமெடுக்கத் தெரியாமயா நாங்கள்ளாம் உட்கார்ந்துகிட்டிக்கோம்? நமக்கு எப்படி பத்திரிகை சுதந்திரம் இருக்கோ அது மாதிரி அவங்கவங்களுக்கு அவங்களோட தனிப்பட்ட வாழ்க்கையை வாழச் சுதந்திரம் இருக்கு... எந்த விஷயத்தை சொஸைட்டிக்குக் கொடுக்கலாம் கறதுல நமக்கு ஒரு எதிக்ஸ் இருக்கணும்'' என்றான்.

''ஓ!'' என்றாள்.

''இந்த விஷயத்துல உங்கப்பாவுக்கும், எனக்குமே கருத்து வேறுபாடு இருக்கு. நடிகைங்களை தொப்புள் தெரியப் படம் போட்டாத்தான்... பத்திரிகை ஓடும்ன்னு சில சமயத்துல பேச்சு வரும். அதுல எனக்கு உடன்பாடு இல்லே. ஆனா, பத்திரிகையோட நோக்கங்கள்ல நாலு விஷயம் இருக்கு. அறிவித்தல், (டு இன்ஃபார்ம்), அறிவுறுத்தல் (டு இன்ஸ்ட்ரக்ட்), மகிழ்வித்தல் (டு என்டர்டெய்ன்) அப்புறம் வாணிகம் செய்தல் (டு மெர்க்கன்டைல்) அதுல, வாணிபம் நடந்துச்சுன்னாத்தான் மத்ததெல்லாம் நடக்கும்... அதனால சில விஷயங்களைக் கண்டுக்காம இருக்க வேண்டியிருக்கு...'' என்றான் விக்ரம்.

''என்ன... விக்ரம் சார்! உங்க வயசுக்கு அதெல்லாம் பிடிக்கலேன்னு சொல்றீங்க?'' என்றாள் கேலி போல்.

''ஐ ம்... சீரியஸ்... அபி. ஏதோ பொண்களோட படத்தைப் பார்த்து சில உணர்வுகளை நிறைவு செய்துக் கணும்கற அவசியம் ரொம்பக் கேவலமானது'' என்றவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான்.

''வேண்டாம்.. வேற ஒரு நாளைக்கு அதைப் பத்திப் பேசுவோம்'' என்றான். பிறகு அவளைப் பார்த்து சிரித்தான். ''அபி! நம்ம நடிப்புக் கடல் பாருங்க... எப்படிக் காதல் பொங்கக் கதாநாயகியைப் பார்க்கறார்ன்னு.. பாரு'' என்றான்.



அவள் ''குபுக்'' கென்று சிரித்தாள். ''ஆமா! இதுக்குப் பேரு காதலாக்கும்.. டீப்புக் கடைல மிட்டாய்க் கடையைப் பாத்த மாதிரிப் பாக்கறாரு...'' என்றாள். இருவரும் சிரித் தார்கள்.

உணவு இடைவேளை விட்டார்கள்!

டைரக்டரிடம் அந்த நடிகர் பவ்யமாகவே நடந்து கொண்டார்.

''சார்! நான் எப்ப வரணும்'' என்றார்.

''சார்! நீங்க.. ரெண்டு மணி நேரம் கழிச்சு வந்தாப் போதும். ''அதுக்குள்ள நான் கொஞ்சம் லாங் ஷாட்கள் எடுத்து முடிச்சுக்கறேன்'' என்றார் டைரக்டர்.

''தேங்க்ஸ்!'' என்று போக முற்பட்ட போது அவரது பி.ஏ. ''சார்!'' என்று வந்து நின்றார்.....

''என்னப்பா!'' என்றார் ரகுவீர்.

''சார்! நீங்க படிப்புக்கு உதவி பண்றேன்னு சொன்னீங் களே... அந்தப் பொண்ணு வந்திருக்கு'' என்றார்.

''ஓ...! வரச் சொல்லு!'' என்றார்.

பி.ஏ. உடனே டைரக்டரிடம் திரும்பி ''ஏன்... சார் பத் திரிகைக்காரங்க... யாரும் இருக்காங்களா!'' என்றார்.

''இருக்காங்களாவா! உங்க அதிர்ஷ்டம் 'தமிழ்க்கோயில்' பத்திரிகை சக்கரவர்த்தி சாரோட டாட்டரே வந்திருக் காங்க'' என்று அபிநயாவைக் காட்ட விக்ரம் சற்று மறை வாகத் தள்ளி நின்று கொண்டான்.

டைரக்டர் அபிநயா அருகில் வந்தவுடனே ''மேடம்! விக்ரம் இருக்கறதைச் சொல்லாதீங்க'' என்று முணுமுணுத் தார்.

அபிநயா தலையாட்டியபடி முன்னால் போய் வணக்கம் சொன்னாள்.

''சக்கரவர்த்தி சார்... பொண்ணா!'' என்று விசில் அடித்த ரகுவீர், ''இப்படி ஒரு பொண்ணு இருக்கறதையே அவரும்... சொல்லலை. விவேக்கும் சொல்லலையே!'' என்று சிரித்தான். கண்களில் வேறு விதமான பார்வை மின்னி மறைந்தது போல் அபிநயாவுக்குப் பட்டது. ஆனால் அலட்டிக் கொள்ளவில்லை.

டாக்டர் படிப்புக்கு ஒரு பொண்ணுக்கு உதவித் தொகை கொடுக்க.. அதை போட்டோ எடுத்தாள். செய்தி குறித்துக் கொண்டாள்.

''மேடம்! நீங்க எப்ப வேண்ணா எங்க வீட்டுக்கு வர்லாம்'' என்று முக்கியமானவர்களுக்கென்று கொடுக்க வைத்திருக்கிற தனிப்பட்ட விசிட்டிங் கார்டு ஒன்று பி.ஏ.விடம் வாங்கிக் கொடுத்தார்.

''தாங்க்ஸ்... சார்!'' என்று அபிநயா மலர்ச்சியாய் சிரித்ததில்... குளிர்ச்சியானார்.

''சார்! உங்க காரவானைப் படம் எடுக்கலாமா?'' என்று கேட்டாள்.

''மேடம்! யாருக்கும் இது வரைக்கும் பர்மிஷன் குடுக்கலையே!'' என்றார்.

''சார்! நான் பப்ளிஷ் பண்றதுக்குக் குடுக்க மாட்டேன். என்னோட பிரைவேட் கலெக்ஷனுக்கு வச்சுக்கறேன்'' என்றாள்.

''ரொம்ப ஆசைப்படறீங்க!'' என்று காரவானுக்குள்ளே அமர்ந்து போஸ் கொடுத்தார்.

காரவானுக்குள் இருக்கிற பகுதிகளைப் பார்த்து அபிநயா அசந்து போனாள். கிட்டத்தட்ட ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குள் இருக்கிற மாதிரி இருந்தது.

''பி.ஏ...! மேடம்க்கு காபி... ஏதாவது குடுங்கப்பா'' என்று உத்தரவிட்டார்.



உடனே காபி ஸ்நாக்ஸ் என்று உபசரிப்பு பலமாக இருந்தது.

அபிநயா... அவருடைய சில படங்கள் பார்த்திருந்தாள். ''சார்! உங்க படம் நல்லா இருந்துச்சு... இது நல்லாருந்துச்சு'' என்று சற்றுப் புகழ்ந்து குஷிப்படுத்தினாள்.

பேச்சுக்கு நடுவே ''அந்த விக்ரம்...அவன் உங்க ஆபீஸ்ல தான் இருக்கானா?'' என்று கேட்டார் நடிப்புக் கடல்.

அந்தக் குரலில் தெரிந்த ஏதோ ஒன்றில் அபிநயா எச்சரிக்கையானாள்.

''நீங்க அவரைப் பார்த்திங்களா? சார்'' என்றாள்.

''இல்லல்லே! நான் அந்தாளைப் பார்த்ததில்லை. அவன் தான் முன்னால வராமலே எல்லாருக்கும் ஆப்பு வைப்பானே. நீங்க அவனை மாதிரி இல்லாம நல்ல பத்திரிகையாளரா.. இருங்க...'' என்றார்.

''சரிங்க சார்!'' என்றாள் பவ்யமாக. விடைபெற்றுக் கொண்டாள்.

''மேடம்! உங்கப்பா... கிட்டே சொல்லுங்க... விக்ரம் மாதிரி ஆளையெல்லாம் உங்க மாதிரிப் பத்திரிகையில வச்சுக்கக் கூடாதுன்னு'' என்றார் மறுபடியும்.

அபிநயா யோசனையுடன் இறங்கி நடந்தாள்.

''என்னம்மா... சொல்றார்... எங்க நடிப்பரசர்'' என்றார் டைரக்டர்.

''பரவாயில்லையே... சார்! படிப்புக்கெல்லாம் ஹெல்ப் பண்றார்'' என்றாள்.

டைரக்டரிடம் இருந்து ஒரு அழுத்தமான புன்னகையே பதிலாக வந்தது.

விக்ரமாதித்யனின் பைக்கில் போகும்போது அபிநயா சொன்னாள்.

''ரொம்ப நல்ல ஆளாத்தான் தெரியறாரு; படிப்புக்கெல்லாம் ஹெல்ப் பண்றார்'' என்றாள்.

''ஏன்? இப்படி ஷூட்டிங் ஸ்பாட்ல வச்சு... எல்லாருக்கும் தெரியற மாதிரித்தான் குடுக்கணுமாக்கும்? நடிகர் சைலேஷ் கேள்விப்பட்டிருக்கியா? எத்தனை பேருக்கு ஹெல்ப் பண்றாரு... தெரியுமா? காட்டிக்கவே மாட்டாரு..'' என்றான்.

சற்று தூரம் போனதும் அவனே கேட்டான்.

''ஏன் அபி.. என்னைப் பற்றி விசாரிக்கலையா? ரொம்ப அன்பா விசாரிச்சுருப்பாரே'' என்றான். அன்பா... என்ற வார்த்தைக்கு அதற்கு நேர் மாறான பொருள் தொனிக்கிற மாதிரி அழுத்தம் கொடுத்து.

''ஆமா... விசாரிச்சாரு... எங்கப்பாவுக்கு வேற அட்வைஸ் சொல்லச் சொன்னாரு... எதுக்கு... அந்த மாதிரி ஆளுங்களையெல்லாம் உங்கப்பா.. வேலைக்கு வச்சிருக்காருன்னு கேட்டாரு'' என்றாள்.

அவன் சிரிப்பது கண்ணாடியில் தெரிந்தது.

''என்ன அப்படி உங்களுக்குள்ளே...?''

''அது... ஒரு வகையான பாசம்'' என்றான் மறுபடியும் சிரித்தான்.

''மறக்காம. உங்கப்பாகிட்டே போய்ச் சொல்லு. சீக்கிரம் என்னை அனுப்பிட்டார்ன்னா... நானும் விடுதலையாவேன்'' என்றான்.

அவள் விழித்தாள்.

''எதிலிருந்து விடுதலையாவேன்னு.. கேட்க மாட்டியா... ன்னோட தொல்லையிலிருந்துதான்'' என்றான் விக்ரம்.

சற்றும் எதிர்பாராமல் தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த பயால் அவன் தலையில் ஒன்று போட்டாள்.



''ஹேய்! என்னஇது?'' என்றான்.

அவள் பதை பதைத்துப் போனாள். ''சாரி... சாரி! நான் விவேக்கிட்டே விளையாடற மாதிரி...'' என்றாள்.

''ஓ.கே..! ஓ.கே..!'' என்றான் விக்ரம். ஆனால், அலுவலகம் வந்தவுடன் இரண்டு பேரும் இறங்கி நடக்கும்போது அவன் நின்றான். திரும்பி அவளைப் பார்த்தான்.

''ஐ ஆம் விக்ரம்... நாட் விவேக்.. ஸோ... டோன்ட் ரிபீட்... தட்... ஓ.கே..?'' என்றான் கடுகடுப்பான முகத்துடன் வேகமாகப் போய்விட்டான்.

அவள் திகைத்தாள். முகம் வாடிப் போக மெதுவான நடையாக அலுவலகம் நோக்கி நடந்தாள்.



4

ஒரேயடியாக ஆர்ப்பாட்டம் செய்கிற மகளை அலட்டிக் கொள்ளாமல் பார்த்தார் சக்கரவர்த்தி.

''அந்த ஆள் என்ன பெரிய இவரா! அப்படி மிரட்டறார். நான் ஒண்ணும் அந்த ஆள் கிட்டே ட்ரெயினிங் எடுத்துக்க மாட்டேன்'' என்றாள் அபிநயா. அத்தனை கோபத்திலும் விக்ரமாதித்யனை தன் மகள் அவர், இவரென்றே மரியாதையாகவே குறிப்பிடுவதைக் கண்டு சிரித்துக் கொண்டார்.

''உன் இஷ்டம். என் பத்திரிகையில வேலை வேணும்னா... யு ஹேவ் டு டேக் ட்ரெயினிங் அண்டர் ஹிம்'' என்றார் அப்பா.

''ஹி இஸ் பாஸிங் ஓவர் மி'' என்றாள் அபிநயா முணுமுணுப்பாக.

கொஞ்சம் வேகம் குறைந்திருந்தது.

''ஒரு வாக்கியம் படிச்சிருக்கியோ'' எவனுக்குக் கீழ்ப்படியத் தெரிகிறதோ அவனே தலைவனாக முடியும்னு விவே

காளந்தர் சொன்னது. இப்படியக் கத்துக்கோ...'' என்றார் சக்கரவர்த்தி.

''அப்படி நான் என்ன சொன்னேன்!'' என்றாள்.

''என்ன சொன்னேன்னு எனக்கென்ன தெரியும்! நியா யப்படி பாத்தா தொழில் கத்துக்கணும்னு நீ நினைச்சின்னா என் மகள்ன்னே எங்கயும் காட்டிக்கக் கூடாது. யார் கிட்டயும் எந்த சலுகையும் எதிர்பார்க்கக் கூடாது. வந்த ஒரே வாரத்துல ஹையர் அபீஷியல் தலையில அடிச்சு விளையாடினின்னா... என்ன அர்த்தம்? அதுவும் ரோட்ல. நீ சரியா நடந்துக்கலே... அவன் சரியாக் குடுத்தான்.'' என்றார் கறாரான குரலில்.

அபிநயா விழித்தாள். விக்ரம் எப்படியும் நடந்ததை சொல்லியிருக்க மாட்டான் என்று நினைத்தாள். ஆனால் சொல்லியிருக்கிறார். அதுவும் இல்லாமல் தான் பேசியதை யும் சொல்லியிருக்கிறார் என்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''என்னப்பா... இப்படிச் சொல்றேன்!'' என்று சிணுங் கினாள்.

''ஆமா! மகளா உனக்கு என்ன வேணும்னு கேளு... செய்யறேன். ஆனா, தொழில்ன்னு வந்தா ஆபீஸ்ன்னா அங்க எப்படி நடந்துக்கணுமோ அப்படி நடந்துக்க...'' என்றார்.

''அப்பாஉன்னா... சுபீரியர்ன்னா... ஃபிரண்ட்லியா இருக்கக் கூடாதா?'' என்றாள்.

''அது... அவனைப் பொறுத்தது. அவன் ஃபிரண்ட்ஷிப் ஆஃபர் பண்ணினா... அக்செப்ட் பண்ணிக்க... அவனைப் புத்தி முதல்ல புரிஞ்சுக்க. அவன் வில்லேஜ்ல இருந்து வந்தவன். பெரிய குடும்பத்துப் பையன். அவனுக்குன்னு சில கொள்கைகள் வச்சிருக்கான். பொம்மனாட்டிங்ககிட்டே



ரொம்ப இயல்பாப் பழகுவான். அனாவசியமா சகிக்க மாட்டான். அப்படி யாராவது சகினாலும் பிடிக்காது. ஃப்ரீ லான்ஸராத்தான் இருப்பேன்னான். நான் அவனை என் அன்பால கட்டிப் போட்டிருக்கேன். அதைக் கெடுத்துராத'' என்றார்.

''ஏன்... அப்படியென்ன பெரிய ஆளாக்கும்?'' என்றாள் எரிச்சலுடன்.

''ஆமாடி... பொண்ணே! உன்னை மாதிரி குறைகுட மில்லடி... அவன்... நிறைகுடம்... எவ்வளவு பெரிய அக்கிரமங்களையெல்லாம் வெளியே கொண்டு வந்திருக் கான் தெரியுமா? நம்ம ஆபீஸ்ல வச்சு என்னை எதுத்துக் கேட்கறவனும் அவன்தான். என் சொல்லுக்காகவே தனக்குப் பிடிக்காத விஷயத்துக்குக் கூடப் பணிஞ்சு போறவனும் அவன்தான்'' என்றார்.

''சரி.. இப்ப நான் என்ன செய்யட்டும்?'' என்றாள் அடங்கிய குரலில்.

''ஒண்ணும் செய்ய வேண்டாம். அவன் நாளைக்கு வரும் போது இந்த விஷயமே நடக்காத மாதிரி இருப்பான். நீயும் அதே மாதிரி... இரு...'' என்றார்... கடுமையான குரலில்.

விவேக் அப்பாவும், மகளும் பேசிக் கொண்டதை ஒரு பார்வையாளன் போல் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த வனுக்கே அப்பாவின் கடுமை கொஞ்சம் அச்சத்தை ஏற் படுத்தியது.

அதற்குப் பிறகு சாப்பாடு முடியும் வரை அமைதியே நிலவியது. சாப்பாட்டு முடித்து விட்டு ''குட் நைட்'' என்று முணுமுணுப்பாகச் சொல்லி விட்டு எழுந்து போகிற தங்கையைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

அவள் மாடிக்குப் போனபின் அப்பாவிடம் திரும்பினான்.

''அப்பா!'' என்று ஆரம்பித்தான்.

அவர் கையை உயர்த்தினார். 'ஷி வில் ஒவர்கம் இட்' என்றார்.

மகன் வாயைக் கப்பென்று மூடிக்கொண்டான்.

* * *

தோள் பையை மாட்டிக் கொண்டு அந்த சணல் பையில் அழகுக்காக முன்னே தொங்க விடப்பட்டிருந்த கயிற்றைத் திருகிக் கொண்டே தயக்கத்துடன் உள்ளே நுழைந்தாள் அபிநயா.

புத்தக அலமாரிக்கு அருகில் நின்று கொண்டு ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான் விக்ரமாதித்யன். அவள் வரும் அரவம் கேட்டுத் திரும்பினான்.

''குட் மார்னிங்!'' என்றாள் சிரிக்காமல்.

''குட் மார்னிங்!'' என்றான் முகம் நிறைந்த புன்னகையுடன்.

நேற்றுக் கடுவன் பூனை மாதிரிக் கடித்த ஆள் இவன்தானா? என்று ஒரு கணம் ஆச்சரியமானாள். உடனே தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டாள்.

''இன்னைக்கென்ன சார்... ப்ரோகிராம்?'' என்றாள் தயக்கத்துடன்.

''உட்காருங்க...'' என்று எதிர் சீட்டைக் காட்டினான்.

''பெரிசா ஒண்ணுமில்லே... நேத்து நீங்க எடுத்துட்டு வந்த போட்டோக்கள். மேட்டர் எல்லாத்தையும் ட்ரிம் பண்ணிட்டா இந்த இஷ்யூவுக்கே குடுத்தர்லாம். ஹாட்டா இருக்கும்'' என்றான்.

மிகத் தீவிரமான முக பாவத்துடன் எதிரில் அமர்ந்தாள்.



அபிநயா தன்னுடைய போட்டோக்களையெல்லாம் எடுத்துக் கடை பரப்பினாள். அவன் மேஜை மேல் இருந்த புகைப்படங்களை வரிசையாகப் பார்த்தான்.

''நீங்களும் செலக்ட் செய்ங்க... நானும் செலக்ட் செய்யறேன். அதுலருந்து பெஸ்ட்டா இருக்கறதா... எடுத்துக்கலாம்'' என்றான்.

முதலில் பத்து புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவன் சிரித்தான்.

''பரவாயில்லே! அந்த ஆள் நேர்ல பாக்கறதுக்கு இருக்கறதை விட இதுல அழகா இருக்காரு'' என்றான்.

''நம்ம ஜனங்கள் யாரையும் முதல்ல ஒத்துக்கறதுதான் கஷ்டம். ஒத்துகிட்டாங்கன்னா... அப்புறம் ரொம்பவே நேசிக்க ஆரம்பிச்சருவாங்க'' என்றான்.

''இந்த ப்ரொஃபைல் நல்லா இருக்கில்லே!'' என்று இருவருக்குமாகப் பிடித்த நான்கு போட்டோக்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அவன் எச்சரிக்கும் குரலில் சொன்னான்.

''இதுல ஏதோ ஒண்ணோ ரெண்டோதான் ஃபைனலா செலக்ட் செய்வாங்க'' என்று.

அவள் தோளைக் குலுக்கினாள்... ''நீங்கதான் சொல்லீட்டீங்களே! மேட்டரை ரிஜெக்டும் பண்ணலாம். அப்படீன்னு'' என்றாள் அபிநயா.

''ஆமா! சில நேரத்துல நம்ம 'பசங்க' ரொம்பக் கஷ்டப்பட்டு ஒரு மேட்டர் பிடிச்சிட்டு வருவாங்க... ஆனா, ஏதோ ஒரு காரணத்துக்காகப் போட முடியாமப் போயிடும். ரொம்ப அப்செட் ஆயிடுவாங்க. சில நேரத்துல எதிர்பாராம கவர் ஸ்டோரியா வரும்'' என்றான்.

ஒரு நிமிடம் இடைவெளி விட்டு மறுபடியும் சொன்னான்.

''அதனால... எதுக்கும் தயாராயிருங்க'' என்றான்.

''சார்.. இந்த நியூஸ் கண்டிப்பா ரிஜக்ட் ஆகாது. ஏன்னா.. நான் செலக்ட் செஞ்சுவந்தது நடிப்புக் கடல். மூனு பக்கம் அந்தாளைப் பத்தி நியூஸ்ன்னா நிச்சயமா சர்க்குலேஷன் எகிறும்... எங்கப்பா... எந்த அளவுக்குப் பத்திரிகைக்காரரோ... அந்த அளவுக்கு பிஸினஸ் மேனும் கூட அதனாலதான், என்னோட ஃபர்ஸ்ட் கவரேஜ் யாரைப் பத்தினதா இருக்கணும்னு யோசிச்சு முடிவு செஞ்சேன்'' என்றாள் அபிநயா.

அவன் ஒரு நிமிடம் விழித்துப் பார்த்தான். பிறகு சொன்னான். ''குட் திங்கிங்'' என்று.

செய்திகளையும் எழுதினாள். படிப்பதற்கு சுவாரசியமாக கலகலப்பாக இருக்கிற மாதிரியான பாணியில் எழுதினாள்.

அவன் படித்து பார்த்தான். ஒன்றிரண்டு திருத்தங்கள் சொன்னான். சொல்லும்போதே,

''இது வெறும் சஜஷன்தான். உங்களுக்கு சரின்னு பட்டுதுன்னா.. மாத்துங்க... இல்லேன்னா விட்டுடுங்க..'' என்றான்.

''இல்ல.. சார்! நீங்க சொன்ன வார்த்தையே பெட்டரா இருக்கு...!'' என்று ஏற்றுக் கொண்டாள்.

மணியைப் பார்த்தாள் பதினொன்றரை ஆகியிருந்தது.

''ஹலோ! வாங்க... கேன்டீன் பக்கம் போயிட்டு வரலாம்'' என்றான்.

சூடாக வெங்காய பஜ்ஜியும்... காபியும் வாங்கிக் கொடுத்தான்.

விக்ரமாதித்யன் வந்திருக்கிறான் என்றவுடன் சமையற்காரர் வெளியே வந்தார்.

''அம்பி! நோக்கு இந்த வீக்ல டைம் கிடைக்குமோ?'' என்றார் ஆவலாக.



''அவன் ஒரு நிமிடம் யோசித்தான்.'' சரி சனிக்கிழமை மத்தியானமா வர்றேன்னு சொல்லுங்கோ... மூனு மணி நேரம்... ஒதுக்கிடறேன்'' என்றான்.

சமையற்காரர் அபிநயாவிடம் சொன்னார்.

''அம்பி எங்காத்துப் பொண்ணுக்கு டியூஷன் சொல்லித் தரார்.'' என்றான்.

''ட்யூஷன்னு சொல்லாதீங்க.. கமர்ஷியலாகும் ஹெல்ப் பண்றேன்னு சொல்லுங்க'' என்று சொன்னபடியே வெங்காய பஜ்ஜியை ஒரு கடி கடித்தான்.

''இவர் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்சப்புறம் என் பொண்ணுக்கு மாத்ஸ் ரொம்பப் பிடிச்சுப் போச்சுன்னு வச்சுக்கோங்களேன்'' என்றார் சமையற்காரர்.

''ப்ளீஸ்!'' என்று அவர் பக்கம் திரும்பவும்'' சரி.. காபி நானே போட்டிருக்கேன்... ஆறிடப்போறது சாப்பிடுங்கோ... என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

''அபி! மாத்ஸும் சரி, இலக்கணமும் சரி... பயங்கரமாக விஷயங்கள்ன்னு எல்லாரும் நினைக்கறா. ஆனா... ரெண்டுமே புரிய ஆரம்பிச்சுருச்சுன்னு வை... ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா... இருக்கும்'' என்றான்.

'ஆமா..! மனிதர்கள் கூட அப்படித்தான்!' என்று எண்ணிக் கொண்டாள் அபிநயா.

அபிநயாவுக்கு அன்றைக்குப் புரிந்தது ஏன் விக்ரமாதித்யனுக்குத் தங்கள் அலுவலகத்தில் அவ்வளவு மதிப்பு என்று.

பிற்பகலுக்குள்ளாக அவனுடைய மேட்டரை முடித்துக் கொடுத்து விட்டாள்.

''சரி... ஆஃப் யு கோ...! அடுத்த அஸைன்மென்ட் என்னன்னு யோசிச்சுக்கோங்க'' என்று சொல்லும் போதே செல்போன் ஒலித்தது.

''அப்படியா...! எந்த ஹாஸ்பிடலில்... இதோ நான் புறப்பட்டு வர்றேன்...'' என்றான் எழுந்தான்.

''அபி! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு. நீங்க விவேக்கைப் பாத்து உங்க மேட்டரைக் குடுத்துருங்க'' என்று பைக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

அபிநயா ஏதோ நட்டாற்றில் விடப்பட்டவள் போல் நின்றாள்.

''என்ன மேடம்! கழட்டி விட்டுட்டானா! அவன் அப்படித்தான்!'' என்று சிரித்தான் விக்டர்.

* * *

''குப்பத்துக் குழந்தைக்கு உதவிக்கரம் நீட்டிய தமிழ்க் கோயில்'' என்று அந்த வார இஷ்யூவில் வந்தபோது அபிநயா கொஞ்சம் அசந்துதான் போனாள்.

திடீரென்று ஒரு குழந்தைக்கு மூச்சுத் திணறல். ஏற்கனவே இதய நோயுள்ள குழந்தை என்று குப்பத்தைச் சேர்ந்த விவரமான இளைஞன் ஒருவன் தமிழ்க்கோயில் அலுவலகத்திற்கு போன் செய்தவுடனே விக்ரமாதித்யனுக்கு பொறுப்புக் கொடுத்தான் விவேக்.

உடனடியாகக் கிளம்பிப் போனான். விஜயா ஹாஸ்பிட்டலில் அட்மிட் செய்தான். சொந்தப் பணம் இருபதாயிரத்தை முன் பணமாகக் கட்டினான். உடனடி சிகிச்சை கொடுத்த பின்பு குழந்தையின் இதயத்தில் ஓட்டை ஒன்று உள்ளது. அடைக்க வேண்டும்'' என்றார்கள்.

ஐந்தே மாதக் குழந்தை. மொத்தச் செலவு ஒன்றரை லட்சம் ஆகும் என்றார்கள்.

''இருபதாயிரம் விக்ரமாதித்யன் தன் சொந்தப் பொறுப்பில் கொடுக்கிறார். சமூக நலப் பணியாளர் திரு. பொன்னம்பலம் முப்பதாயிரம் கொடுக்கிறார்'' என்று செய்தி வெளி



விட்டவுடனேயே அந்த வாரத்திலேயே அறுவை சிகிச்சைக்குத் தேவையான அளவு பணம் கிடைத்ததோடு மட்டுமல்லாமல் குழந்தையின் எதிர்காலத்துக்கென்று ஒரு இருப்புத் தொகை வைக்கிற அளவுக்குத் தொகை சேர்ந்திருந்தது.

ஒரே வாரத்தில் இத்தனையையும் செய்து முடித்துவிட்டுத்தான் அலுவலகம் வந்தான் விக்ரமாதித்யன். விஷயம் கேள்விப்பட்டுத்தான் அபிநயா அசந்து போனாள்.

''வொண்டர்ஃபுல்... சார்!'' என்று பாராட்டினாள்.

அவன் அவளிடம் அழகாகப் புன்னகைத்தான்.

''இந்த மாதிரித் தருணங்களுக்காகத்தான் நான் இந்தப் பத்திரிகையில வேலை செய்யறதே'' என்றான்.

அவள் கண்களில் மதிப்பு மிளிரப் பார்த்தாள்.

''ஹலோ! ரொம்பத் தெய்வமாய்ப் பண்ணிடாதீங்க... வர்றியா... இன்னைக்கு அந்தக் குழந்தையை ரூமுக்குக் கொண்டு வந்துடுவாங்க...'' என்றான்.

''வர்றேன்'' என்றாள்.

பைக்கிலேயே போனார்கள். போகும் வழியில் ''எங்கப்பா எவ்வளவு குடுத்தாரு!'' என்றாள்.

''உங்கப்பாவும் இருபதாயிரம் குடுத்தாரு. ஆனா, அதை ஒரு வாசகர் கொடுத்த மாதிரி சொல்லச் சொல்லிட்டாரு'' என்றான்.

''நானும் ஏதாவது தரட்டுமா?'' என்றாள். ''வேண்டாம்! இப்போதைக்கு இந்தக் குழந்தைக்குத் தேவையானது கிடைச்சிருச்சு. ''அஞ்சு லட்ச ரூபா அந்தக் குழந்தை பேர்ல டெபாசிட் செய்யுது. இனிமேலும் நிறைய இந்த மாதிரி அவசியங்கள் வரும். அப்பக் குடு'' என்றான்.

''சரி..!'' என்றாள்.

''ஐயா!'' என்று குழந்தையின் பெற்றோர்கள் அவனைக் கும்பிட்டார்கள். குப்பத்து இளைஞர்கள் ஏதோ மன்றம் வைத்திருந்தார்கள். அவர்களும் இவனைக் கண்டவுடன் ஓடி வந்தார்கள்.

''என்னப்பா... குழந்தை எப்படியிருக்கு?'' என்று அன்பாக விசாரித்தான்.

''நல்லாத் தூங்கய்யா. இன்னைக்கு ரூமுக்குக் கொண் டாந்துடுவாங்கய்யா'' என்றார் தந்தை. அப்போது அங்கு நின்ற குழந்தையின் தாய் தடாலென்று அவன் காலில் விழுந்தார்.

''ஐயா! மறக்கவே மாட்டோம்...'' என்று அழுதார். அவன் பதறிப் போய் நகர்ந்தான்.

''அம்மா! மனுஷங்க ஒருத்தர் கால்ல ஒருத்தர் விழக் கூடாது'' என்றான் நெகிழ்ந்து போன குரலில்.

''நீ தெய்வமாச்சேப்பா.. உன்னை மாதிரி ஆளுங்க கால்ல விழுந்தா... இன்னா குறைஞ்சு போகும்'' என்றார். அந்தப் பெண் எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டு நின்றாள்.

''குழந்தையைக் கொஞ்ச நாள் நல்லா வச்சுக்கணும் டஸ்ட் எதுவும் படாம பாத்துக்கணும். மெயின் ரோட்ல ஒரு சின்ன போர்ஷன் பார்த்திருக்காங்க பசங்க... அதுல இருந்துக்கங்க...'' என்றான். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

குழந்தையை அறைக்குக் கொண்டு வந்தார்கள். கறுப்பு மலரைப் போல் இன்னமும் லேசான மயக்கத்தில் இருந்த குழந்தையை நெகிழ்ந்து போன பார்வையாகப் பார்த்துக் கொண்டு நின்றான் விக்ரமாதித்யன்.

அதை ஒரு வித ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள் அபிநயா.



''அம்மா... யாரு?'' என்றார்கள்.

''அம்மாதான்.. நம்ம பத்திரிகை ஆசிரியரின் பொண்ணு'' என்றான்.

அவளுக்கும் வெகுவாக நன்றி சொன்னார்கள். அவள் பதில் சொல்லத் தெரியாமல் நிறைவதை ஒருவித சுவாரசி யத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

திரும்ப வரும்போது அபிநயா ஆழ்ந்த மௌனத்தில் வந்தாள்.

''என்ன அபி... சத்தத்தையே காணோம்!'' என்றான்.

''இல்லே... பத்திரிகைத் தொழில்னா வெறும் சென் சேஷன் கிளப்பறது மட்டும்தான்னு நினைச்சுகிட்டிருந் தேன்'' என்றாள்.

அவன் சிரித்தான். ''அதுவும்தான் வேணும் ஏன்னா, மனுஷனுக்கு அடுத்தவங்களைப் பத்திப் பேசறதுலயும் கேட்கறதுலயும் ஒரு சுவாரசியம் இருக்கு. மனித இயற்கை தான். அதுக்கும் கொஞ்சம் தீனி குடுக்கலாம், தப்பில்லே!'' என்றான்.

அவள் திடீரென்று ''அது சரி! இவ்வளவு நல்லவரா இருக்கீங்க... உங்களைப் போய் அந்த நடிகர் ஏன் அப்படிச் சொன்னாரு'' என்றாள்.

''அது இன்னொரு நாளைக்கு சொல்றேன். வர்றியா... இங்க ஒரு கேண்டீன்ல உங்காத்து காபி மாதிரியே நல்ல காபி கிடைக்கும்'' என்றான்.

''ம்..!'' என்றாள் ஆர்வத்துடன்.

காபி குடித்துக் கொண்டிருந்தார்கள். அவன் காபியை துளித் துளியாக ரசித்துக் குடிப்பதை அவள் உற்றுக் கவனித்தாள்.

''என்ன பார்க்கறே! நேரம் கிடைச்சப்போ.. இப்படிக் கொஞ்சம் எல்லாத்தையும் ரசிக்கவும் வேணும். சுத்தியும்

பாரு. எத்தனை கண்கள்ல பொறாமை. இப்படி ஒரு அழகான பெண்ணோட உட்கார்ந்து காபி குடிக்க சான்ஸ் கிடைச்சிருக்கேன்னு'' என்றான் கண்களில் குறும்பு மின்னியது.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் திகைத்தாள். பிறகு சிரித்தாள்.

''ஜஸ்... ஜஸ்...!'' என்றாள்.

அவனும் இப்போது சிரித்தான். அவள் திடீரென்று நினைவு வந்தவள் போல் சொன்னாள்.

''சார்! அந்த நடிப்புக்கடல் இருக்காரே அவரோட கார வான் ரொம்ப சூப்பர் பாத்துகிட்டே இருங்க... அந்தாளை முழுக்காட்டி, ஒரு ரெண்டு நாளைக்காவது அந்த வண்டியை இரவல் வாங்கிடறேன் பாருங்க'' என்றாள் அபிநயா.

விக்ரம் குபீரென்று சிரித்தான். ''நீ செஞ்சாலும் செய்வே. உன்னோட பர்சனாலிட்டிக்காகவே அவர் குடுத்தாலும் குடுப்பாரு'' என்றான்.

''பாருங்க அவரோட பர்ஸனல் விசிட்டிங் கார்டு... குடுத்தாரு...'' என்றாள்.

அவன் வாங்கிப் பார்த்தான். ''இது அந்தக் காலத்துல இளவரசர்கள் முத்திரை மோதிரம் குடுக்கற... மாதிரியாச்சே. இது உன் கையில இருந்தா... அவர் இருக்கற இடத்துக்கு... நீ எப்ப வேண்ணா போலாம்...'' என்று புன்னகைத்தவன் உடனே எச்சரிக்கையான குரலில் ''எதுக்கும் ஜாக்கிரதை!'' என்றான்.

''ம்..!'' என்றாள். அடுத்த தன் திட்டத்தைச் சொன்னாள்.

''நல்லாத்தான்... இருக்கு.. ஆனா... ஜாக்கிரதை'' என்றான்.

மறுபடியும் அலுவலகம் வந்தவுடன் ''சரி... நீ உன் வீட்டுக்குப் போய்... உன்னோட ப்ராஜக்ட்டுக்கு ஏதாவது



விஷயம் தேடு'' என்று வேறு திசைக்கு நகர்ந்தான். நகர்ந்தவள் ஒரு நிமிடம் நின்றாள்.

''ஏன் அபி! நீ சொல்றதையெல்லாம் பாத்தா... காரவான் ரொம்ப சூப்பராத்தான் இருக்கும் போல இருக்கு. ''எனக்கு அதிலே லிஃப்ட் கிடைக்குமா?'' என்றான்.

''பார்க்கலாம்!'' என்றாள் கெத்தாக.

அவன் குறும்புப் புன்னகையுடன் ''அடேயப்பா! ரொம்பத்தான் பிகு பண்றே!'' என்றான்.

''பிகு பண்ணலே... முன்னெச்சரிக்கை. ஏன்னா.. நீங்க எப்ப கடிப்பீங்க... எப்ப சிரிப்பீங்கன்னு தெரியாதே!'' என்றவள் அவன் முகத்தைப் பார்க்காமல் சட்டென்று நகர்ந்து விட்டாள்.

ஒரு நிமிடம் நின்று அவள் போன திசையை வியப்பாகப் பார்த்தவன் மெல்லச் சிரித்துக் கொண்டு நகர்ந்தான்.



## 5

''ஏய்! போதும்டி... உன் பத்தினி வேஷமெல்லாம். போய் சைட் டிஷ் கொண்டு வா'' என்றான்.

ருக்மணி நகர்ந்தாள்.

''இத பார்றி! குடுத்தனுப்பற வேலையெல்லாம் வேண்டாம். நீயே கொண்டு வந்து சர்வ் பண்ணனும்'' என்றார் நடிப்புக்கடல் ரகுவீர்.

ருக்மணி தலையாட்டியபடி நகர்ந்தாள்.

வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் இருந்த குணங்கள் எல்லாம் புகழ் அதிகமாக ஆக... மாறிக் கொண்டே வந்தது. ருக்மணி கணவனின் மாற்றத்தைக் கவலையுடன் கவனித்துக் கொண்டே வந்தாள். ஆனால் நாற்பதைத் தாண்டியதும் வக்கிர குணம் அதிகமாகிவிட்டது.

குழந்தைகள் இதையெல்லாம் பார்க்க நேர்ந்தால் ஒன்று இவரைப் போலவே குணம் கெட்டுப் போய் விடுவார்கள். அல்லது மிகவும் வருத்தப்படுவார்கள் என்று நினைத்த ருக்மணி குழந்தைகளை ஹாஸ்டலில் விட்டு வைத்தாள்.

அவனும் குழந்தைகள் தங்கள் வீட்டுக்கு வரும்போது உருகி வழிந்து பாசத்தைக் கொட்டுவான். ருக்மணி கசப்புடன் சிரித்துக் கொள்வாள்.

இப்போதைய தனது தகுதிக்கும், வசதிக்கும் ருக்மணி ஏற்றவள் அல்ல என்பது அவன் எண்ணம். அந்தக் கோபத்தை அவளிடம் வித விதமாகக் காட்டுவான். அவமானப்படுத்துவான்.

போதும் போதாதற்கு அவனுடைய தங்கை வேறு ருக்மணியின் பொறுப்பிலே வந்து சேர்ந்தாள். தங்கையென்றால் தூரத்து உறவு. ஆதரவில்லாமல் வந்து நின்ற இந்தப் பெண்ணையும் அவர்களே கவனித்தார்கள். ஆரம்பத்தில் விகல்பமில்லாமல்தான் இருந்தான் ரகுவீர். ஆனால், வயதாக ஆகப் பார்வை மாறியது. ருக்மணி அவளையும் கல்லூரிப் படிப்பிற்கென்று ஹாஸ்டலில் சேர்த்து விட்டாள்.

தினம் ஒருத்தியை வீட்டிற்கு அழைத்து வருவான். ருக்மணிக்கும் பிறந்த வீட்டு ஆதரவு ஒன்றும் இல்லாததால் அவளாலும் எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லை.

வெளியில் யாரிடமும் சொல்லி அழக்கூட முடியாத நிலை. அப்படி ஒரு 'இமேஜ்' உருவாக்கி வைத்திருந்தான் ரகுவீர்.

ஏழைகளுக்கு உதவி செய்பவன் ஷூட்டிங்கிற்கு சரியாக நேரத்துக்கு வருபவன், எல்லாரிடமும் மரியாதையாய் நடந்து கொள்பவன், இரக்க மனம் படைத்தவன், ரசிகர்களை மதித்து நடத்துபவன் என்றெல்லாம் எல்லா விதத்திலும் நல்ல பெயர்தான்.



''அவரு ஒரு ஹோம் பர்டுடா! நேரம் கிடைச்சா வீட்டுக்குப் போயிருவாரு. பொண்டாட்டி மேல அவ்வளவு பிரியம்'' என்று டைரக்டர் கூட கலாட்டா செய்வார்.

சிரித்துக் கொள்வான்.

அரக்கத் தனமாகச் சிரித்தபடி சொல்வான். ''வெளிய போய் சொல்லிப் பாரு. ஒரு பய நம்ப மாட்டான்'' என்பான்.

ருக்மணி சிறைப்படுத்தப்பட்டாற் போல் வாழ்ந்தாலும் வசதியில்லாத காலத்தில் தன்னிடத்தில் எவ்வளவு அன்பாக இருந்தான் என்று எண்ணிக் கொள்வாள்.

குழந்தைகள் இருக்கிறார்களே, அவர்களைக் கரையேற்றவாவது சகித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று மனதுக்குள் அமிலக் கண்ணீர் வடித்தவளாய் வெந்து கொண்டிருந்தாள்.

ரகுவீரும் கவனமாக எல்லாச் சொத்துக்களையும் தன் பேரில்தான் வைத்துக் கொண்டானே தவிர. மனைவி பெயரில் சொத்துக்கள் இல்லாமல் பார்த்துக் கொண்டான்.

வாழ்க்கையே எனக்குத் தொலைந்து போய் விட்டது. இனி சொத்து எதற்கு என்று அவளும் விட்டேற்றியாகவே இருந்தாள்.

இன்றைக்கும் ஏதோ ஒரு பெண்ணை அழைத்து வந்திருந்தான்.

''பாத்தியா... இந்த இஷ்யூல அந்தப் பொண்ணுக்கு பணம் குடுத்தது வந்திருக்கு...'' என்று வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

அந்தப் பெண்ணும் சிரித்தாள். ''ஏங்க... ரகு! அந்தப் பொண்ணு அந்த எக்ஸ்டிரா நடிகை கதாவோட பொண்ணுதானே!'' என்றாள்.

''ஆமா! அவளும் நம்மளுக்கு எவ்வளவோ சர்வீஸ் பண்ணியிருக்கா....'' என்று விகாரமாகச் சிரித்தான்.

''சார்! நான் உங்களோட இப்படியெல்லாம் பழகறதுக்கு வாய்ப்புக் கிடைக்கும்னு நினைக்கவே இல்லை'' என்றாள் அந்தப் பெண்.

"நாமதான் சோஷியல் ஃபிகராயிட்டோம்... இல்லே... ரசிகைகளோட எதிர்பார்ப்புகளை எப்பவும் ஏமாத்தறது இல்லே. அப்புறம்.. உங்க வீட்டுக்காரன் எப்ப ஊர்ல இருந்து வரான்?" என்றான்.

"அது எப்பவோ வரட்டும்... அதென்ன எப்பப்பாரு பிஸினஸ்... பிஸினஸ்ன்னு போதும்பா. இருக்கற பணம்னு சொல்லிப் பாத்துட்டேன் கேக்க மாட்டேன்கறாப்ல" என்றாள் எரிச்சலாக.

"அந்த ஆள்... அப்படியே சுத்திகிட்டிருக்கட்டும் அப்பதான் நமக்கு நல்லது" என்று சிரித்தான் ரகுவீர்.

"என்ன சார்! நீங்க அடிக்கடி கிடைக்கவே மாட்டேங் கறீங்க" என்றாள்.

"ஆமா! உன்னை மாதிரி எத்தனை பேர் ரசிகர்கள் எனக்கு!" என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

ருக்மணி ஸ்நாக்ஸைக் கொண்டு வந்து வைத்தாள்.

"இந்தம்மா... ரொம்ப வசதியானவங்க... ஆனா, நம்ம ஃபேன்" என்று அறிமுகப்படுத்தினான்.

வணக்கம் சொன்னாள். "பேசிகிட்டிருங்க...!" என்று நகர்ந்தாள்.

"உங்க வைஃபே ரொம்ப அழகா இருக்காங்க" என்றாள் அந்தப் பெண்.

"அழகு இருந்து என்ன செய்ய? நாலு இடத்துல பழகத் தெரியணும் இல்லே!" என்றான்.

சற்று நேரம் அப்படியே பேசிக் கொண்டு கழித்தார்கள்.

தள்ளாடிக் கொண்டு எழுந்து சென்று அறைக் கதவை சாத்திக் கொள்கிற சத்தம் கேட்டு ருக்மணி வெறுமையாகச் சிரித்துக் கொண்டாள்.



சாதாரணமாக அவ்வளவு சீக்கிரம் யாருக்கும் கிடைக் காத புகழ் இந்த மனிதருக்குக் கிடைத்திருக்கிறது. ரசிகர்கள் இவரைத் தெய்வமாக நினைக்கிறார்கள். ஆனால், இங்கே மிருகம் போல் நடந்து கொள்கிறாரே என்று நொந்து கொண்டாள்.

ஒரே மணி நேரத்தில் அந்தப் பெண் வெகு அழகாக எதுவுமே நடக்காதது போல் அவனிடமும் விடைபெற்றுக் கொண்டு தனது காரில் கிளம்பிப் போவதை பி.ஏ. ஆழ்ந்த வருத்தத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார்.

பிறகு நடிகரிடம் போனில் தொடர்பு கொண்டார்.

"என்னய்யா! அந்தப் பொம்பளை போயிட்டாளா!" என்றான்.

"போயிட்டாங்க.. அய்யா... அப்புறம்..!" என்று நிறுத் தினான்.

"என்ன சொல்லு?" என்றான் ரகுவீர்.

"அய்யா! அந்தப் பத்திரிகைக்கார பொண்ணு அபிநயா... காலையில உங்களை வந்து பாக்கறதுக்கு அப்பாயின்ட் மென்ட் கேட்கறாப்ல" என்றான்.

"எத்தனை மணிக்காம்?"

"காலைல ஏழு மணிக்கு!"

"வரச்... சொல்லு...! வரச் சொல்லு!" என்றான் உற்சாகமாக.

அவன் குரலில் தெரிந்த உற்சாகம் கண்டு பி.ஏ. கவலையானார்.

"அய்யா!" என்றார் தயக்கமாக.

"சக்கரவர்த்தி சார் மக!" பாத்து நடந்துக்குங்கய்யா...!" என்றான்.

"எல்லாம் எனக்குத் தெரியும்... போய்யா. இப்ப வந் துட்டுப் போனாளே.. அவ கூட பெரிய இண்டஸ்ட்ரிய

லிஸ்ட் மருமக. எனக்குத் தெரியும். போனை வை'' என்றான்.

கனியமூர்த்தி போனை வைத்தார். எதற்கும் மறுநாள் காலையில் அந்தப் பெண் வரும்போது தானும் வந்துவிட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். ஆனால், மறுநாள் தனது எஜமானைப் பார்த்தவுடன் வாயைப் பிளந்து கொண்டு நின்றார்.

* * *

ஒரே வரியில் விபூதி. நடுவிலே குங்குமப் பொட்டு. மெல்லிய மல் துண்டை மேலே போர்த்திக் கொண்டு, ஏழு மணிக்குப் பூஜையறையில் இருந்து வெளியே வந்தான் ரகுவீர்.

அபிநயா பூஜையறையிலிருந்து அவன் வருவது தெரிகிறாற் போல் ஹால் சோபாவில் அமர வைக்கப்பட்டிருந்தாள்.

''வாங்க... வாங்க.. அபி! எப்பவும் ஆறரை மணிக்கே பூஜை முடிச்சுருவேன். இன்னைக்குக் கொஞ்சம் லேட்'' என்று வணக்கம் போட்டபடி வந்தான் ரகுவீர்.

மனைவியை அறிமுகப்படுத்தினான். ''ருக்மணி! இவங்கள்ளாம் ஃபில்டர் காபி சாப்பிட்டுப் பழக்கப்பட்டவங்க... நல்ல காபியாப் போடு'' என்றான்.

''வேண்டாம்... ஆன்ட்டி...! உட்காருங்க... பேசலாம்'' என்றாள் அபிநயா.

''இருக்கட்டும்மா..! இவர் சொன்னாரு. சக்கரவர்த்தி சாரோட பொண்ணாமே நீங்க!'' என்று புன்னகைத்த ருக்மணி கணவனின் பார்வையில் தெரிந்த எச்சரிக்கையைப் புரிந்து கொண்டு அறையை விட்டு நகர்ந்தாள்.

''அப்புறம்.. சார் அன்னைக்கு நான் எடுத்த போட்டோக்களில் ரெண்டு மட்டும்தானே... இஷ்யூவில போட்டாங்க... மத்த போட்டோக்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கேன். உங்களுக்குப் பிடிச்சதா... ஏதாவது இருந்தா... எடுத்துக்குங்க... உங்க பிரைவேட் கலெக்ஷனுக்கு யூஸ் ஆகுமில்லே'' என்றாள்.



அவன் அகவாரசியமாக எடுத்துப் பார்த்தான். கண்கள் விரிந்தன.

''சூப்பர்!'' என்று முணுமுணுத்தான். நான்கைந்து போட்டோக்களை எடுத்துக் கொண்டான்.

''பரவாயில்லையே'' நல்லா எடுத்திருக்கீங்க. ''ஆர்ட்டிகிள் கூட நீங்க எழுதினது நல்லா வந்திருந்தது'' என்றான்.

''ஆமா! சார், எழுதினது நான். சரிபாத்துக் குடுத்தது விக்ரம் சார்!'' என்றாள்.

ரகுவீர் ஆச்சரியமாகப் பார்த்தான்.

''ஆமா... சார்! நீங்கதான் அவரை தப்பாப் புரிஞ்சுருக்கீங்களோன்னு... நினைக்கறேன்'' என்றாள்.

''இருக்கலாம் ஒரு விஷயத்துல ரெண்டு பேருக்கும் கொஞ்சம் மோதலாயிருச்சு. நம்மைப் பத்தி தப்பா அவர்கிட்டே தகவல் சொல்லிட்டாங்க'' என்றான் ரகுவீர்.

''ரொம்ப அருமையான ஆர்ட்டிகிள் எழுதியிருக்கீங்க... ஒரு சின்ன டோக்கன்.. வாங்கிக்கணும்'' என்று பி.ஏ.வைப் பார்க்க, அவர் ஏதோ கிஃப்ட் பார்சலைத் தூக்கிக் கொண்டு வந்தார்.

''மன்னிக்கணும்... சார்! எங்க பத்திரிகையில யாரும் கிஃப்ட் வாங்கிக்கறதில்லே புறப்படும்போது ஆன்ட்டிகிட்டே மஞ்சள், குங்குமம் வாங்கிக்கறேன்... அது போதும்'' என்றாள்.

''ரொம்ப மாடர்னாயிருக்கேன்னு நினைச்சேன்'' என்றான் ரகுவீர்.

''நீங்க கூடத்தான்... படத்துல எப்படியெப்படியோ நடிக்கறீங்க...'' ஆனா, நிஜத்துல பக்திப் பழமா இருக்கீங்க'' என்றாள் அபிநயா.

பி.ஏ. கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டார்.

''சினிமாவில செய்யறது நடிப்பும்மா.. அது தொழில்'' என்றாள் வாஞ்சையான குரலில்.

ருக்மணி அதற்குள் காபி கொண்டு வந்தாள்.

''உட்காருங்க.. மேடம்!'' என்று அருகில் அமர்ந்து கொண்டாள்.

பெயருக்கு சற்று நேரம் அமர்ந்து விட்டு ''அவங்க கிளம் பறதுக்குள்ளே டிபன் ரெடியாகணும்'' என்று கிளம்பினாள் ருக்மணி.

சட்டென்று எழுந்தாள் அபிநயா.. ''ஆன்ட்டி நானும் வரேன்.. உங்களோட'' என்று கிச்சனுக்குப் போனாள்.

சமையலறை சுத்தமாக இருந்தது. ருக்மணி நேர்த்தியாக வேலை செய்வதைப் பார்த்த அபிநயா மகிழ்ந்தாள்.

''ஆன்ட்டி... வேலைக்கு ஆட்கள்.. இல்லையா?'' என்றாள்.

''இருக்காங்கம்மா! ஆனா, காலைல டிபன் அவரோட சாப்பாடு எல்லாம் நானேதான் தயாரிக்கறது'' என்றாள்.

''மேடம்! குழந்தைங்க. எல்லாம் ஹாஸ்டல்ல இருக்காங் களாமே'' என்று அபிநயா கேட்டுக் கொண்டிருந்த போதே சிரித்துக் கொண்டே அங்கே வந்தான் ரகுவீர்.

''ஆமாம்மா! இவரைப் பார்க்க யாரும் வந்துகிட்டும் போயிகிட்டும் இருப்பாங்க! அவங்களுக்குப் படிக்கிற துக்குப் பிரைவசி வேணும். அதுவுமில்லாம ஹாஸ்டல்ல இருந்தா ஒரு ஒழுங்கு வரும். அப்படீன்னு அவங்க ஃபீல் பண்றாங்க'' என்றாள் ருக்மணி.



தன் மனைவி சரியான முறையிலேயே பேசுகிறாள் என்று உணர்ந்த ரகுவீர் பி.ஏ.வைக் கண்ணைக் காட்டி சொல்லி விட்டு முன்னறைக்குப் போனான்.

முதன் முதலாகத் தன்னைத் தேடி வந்து ஒரு பெண் பேசுகிறாள் என்ற மகிழ்ச்சியில் ருக்மணியும் தன் கணவனை விட்டுக் கொடுக்காமலேயே பேசினாள்.

சற்று நேரம் இருந்து விட்டுப் புறப்பட்டாள் அபிநயா.

* * *

இடி இடியென்று சிரித்தான் விக்ரமாதித்யன்.

''ஒத்தைப் பட்டையா... மூணு பட்டையா?'' என்று கேட்டான்.

''ஒத்தைப் பட்டை. ரொம்ப அழகான பட்டை விபூதி. அதுக்கு நடுவில் சந்தனம். பாக்கவே ரொம்ப நல்லா இருந்துச்சு'' என்றாள் அபிநயா. அவனை விசித்திரமாகப் பார்த்தாள்.

''அதுக்கு எதுக்கு இப்படி சிரிக்கறீங்க'' என்றாள்.

அவன் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''சும்மாத்தான்'' என்றான்.

''அது மட்டுமில்ல! நான் அவரோட மிஸஸ். ருக்மணியை சமையல் ரூம்லயே போய்ப் பார்த்துப் பேசினேன்'' என்றாள்.

விக்ரமாதித்யனின் சிரிப்பு நின்றது. ''ரியலி?'' என்றான்.

''ஆமா!'' என்றாள்.

''தட்ஸ் ரியலி எ குட் திங்'' என்றான். அவன் முகத்தில் ஒரு கணம் அனுதாபம் மின்னி மறைந்தது.

''அபி! அந்த ஆளோட பி.ஏ. ரொம்ப நல்லவர். அந்த ருக்மணி மேடம் கூட நான் கேள்விப்பட்டது உண்மையா இருந்தா...'' என்றான் சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

"ம்.. சொல்லுங்க!" என்றாள் அபிநயா.

"வேண்டாம். உனக்கு நடிப்புக் கடலை ரொம்பப் பிடிக்குது. நான் எதுக்கு அதையும், இதையும் சொல்லணும். அப்பாயின்ட்மென்ட் வாங்கிட்டுப் போயித்தானே பட்டையோட இருக்கறதைப் பாத்திருக்கறே. அப்பாயின்ட்மென்ட் இல்லாமப் போயிப்பாரு" என்றான் கிண்டலாக.

"ஏன்! அப்பப் பட்டையில இருக்க மாட்டாரா?" என்றாள்.

"இருப்பாரு... பட்டையிலதான் இருப்பாரு" என்றான்.

அபிநயா முறைத்தாள்.

"மிஸ்டர் விக்ரம். நீங்க என்னை ரொம்பக் கிண்டல் செய்யறீங்கனோன்னு தோணுது" என்றாள்.

அவன் தீவிரமான முக பாவத்துடன் அவளைப் பார்த்தான்.

"ஹேய்! நான் ஒன்னும் உன்னைக் கிண்டல் பண்ணலை. இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிஸம்கறதுல இன்வெஸ்டிகேஷன் கறாங்களே. அதுல முதல் பாடம் சொல்லித் தரேன். நீ ஒரு விஷயத்துல இறங்கும்போது முன்கூட்டியே எந்த ஒபீனியனும் வச்சுகிட்டு இருக்கக்கூடாது. யு ஹேவ் டு பி இம்பார்ஷியல்... புரியுதா?" என்றான்.

அவள் சிந்தனையிலாழ்ந்தாள். விக்ரம் நேரடியாகவும், மறைமுகமாகவும் நீ நினைக்கற அளவுக்கு அந்த ஆள் இல்லே என்றே சொல்றாற்போல் தோன்றியது.

இதை விடக்கூடாது. நுணுகிப் பார்த்து விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

'இறங்கிப் பாக்கட்டும் அப்போதுதான் அவளுக்கும் விஷயங்கள் புரியும்' என்று எண்ணிக் கொண்டான் விக்ரமாதித்யன். ஆனால், இருவருமே எதையுமே நினைத்துப் பார்க்காத அளவுக்கு புயல் மழை 'சோ' வென்று கொட்டி சென்னையையே அசைத்துப் பார்த்தது.





# 6

வேளில் அலைந்தார்கள். மொத்தப் பத்திரிகை ஆட்களும் குப்பம் மாத்திக் குப்பம். வெறிச்சோடிய சாலைகள், குண்டும் குழியுமாக ஆறு போல் மழை நீர் ஓடிய சாலைகள் என்று செய்தி சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

"விவேக்! விக்ரம் சார் எங்கே?" என்றாள் அபிநயா.

"அவன் எங்கயோ துறைமுகத்துக்குப் பக்கத்துல இருக்கறதா சொன்னாங்க" என்றான் விவேக்.

வேறொரு வேனில் தொற்றிக் கொண்டாள் அபிநயா.

அந்தக் குப்பத்துக் காட்சியைப் பார்த்தவுடன் அவள் மனமெல்லாம் உருகிப் போனது.

மழை நீர் குடிசைகளுக்குள் எல்லாம் புகுந்துவிட்டது. மக்கள் பொருட்களைப் பாதுகாப்பதற்கு அலை பாய்ந்து கொண்டிருந்தார்கள்.

"டேய்! குழந்தை உள்ளாற மாட்டியிருக்கு. யாராச்சும் போங்க.." என்று கத்திக் கொண்டிருந்தான் ஒருவன்.

இடுப்பளவு தண்ணீரில் பொருட்களையும், ஆட்களையும் காப்பாற்ற போலீசும், தன்னார்வத் தொண்டர்களும் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த இடைவெளியில் விக்ரமாதித்யன் அந்தக் குடிசைக்குள் போனான். நீர் மட்டம் வளர்ந்து கொண்டே போனது.

கயிற்றுக் கட்டிலின் மேல் குழந்தை நின்று கொண்டு அழுது கொண்டிருந்தது. சட்டென்று தாவி அணைத்துக் கொண்டு தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு நீந்திக் கொண்டு வெளியே வந்தான்.

சற்றுத் தள்ளி மேடான பகுதியில் இடுப்பளவு தண்ணீருக்குள் வந்தவுடன் நீந்திக் கொண்டு வந்தவன் எழுந்து நின்றான்.

தலைக்கு மேல் குழந்தையை விளம்பரம் போல் தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்பதை அபிநயா சட்டென்று ஒரு போட்டோ எடுத்தாள்.

அவன் அதைக் கண்டுகொள்ளவேயில்லை. அதற்குள் குழந்தையின் தாய் குப்போ, முறையோ என்று கத்திக் கொண்டு வந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

"ஏம்மா... குழந்தையை விட்டுட்டு எங்க போன?"

"இந்தா... இந்தப் பெரியவனை இட்டாரப் போனேன்யா"

"இந்தா... இந்தப் பெரியவனை இட்டாரப் போனேன்யா..." என்று அவள் என்றாள். "அய்யா... ரொம்ப டாங்கஸ்ய்யா..." என்று அவள் ஆரம்பிக்க "அதெல்லாம் இன்னொரு நாளைக்கு வச்சுக் கலாம்" என்று அவன் நகர்ந்தான்.

"அபி! இந்த ஆங்கிள்ல எடு. அந்த ஆங்கிள்ல எடு" என்று அவன் ஐடியா கொடுக்க அவள் அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"போட்டோகிராஃபியில் இன்ட்ரஸ்ட் உண்டா?"

"ஹேய்! இந்தக் கேள்வி பதில் எல்லாம் அப்புறம் வச்சுக்கலாம். இப்ப நான் சொல்ற பாயின்ட்டை நோட் பண்ணிக்க" என்றான்.

குடையைப் பிடித்தபடி அவள் நடக்க அவன் நடந்து கொண்டே பாயின்ட்ஸ்கள் சொல்ல அவள் குறித்துக் கொண்டாள்.

"நிஜத்துக்கும், நிரந்தரத் தீர்வுகளுக்கும் இடையே ஏன் இத்தனை இடைவெளி?" என்று கட்டுரைக்கு அங்கேயே தலைப்புக் கொடுத்தான்.

'அவ்வப்போது குப்பங்களுக்கும் மழை நாளில் அவதிப் படுகிற சென்னைக்கும் எப்போது விடிவு?' என்று அவன் எழுப்பியிருந்த கேள்விகள் அவனது இதயத்தின் ஆழத்தி லிருந்து எழுந்த விவரங்கள் என்று அவளுக்குப் புரிந்தது.



'நமது நாட்டின் துரதிஷ்டம் தொலை நோக்குப் பார்வையைக் கையாண்டு தீர்வுகளை முன் வைக்கிற அலசுகிற தலைமகள் இல்லாமல் போனதுதான்...' என்று விவாதித்த அந்தக் கட்டுரையை விக்ரமாதித்யனின் கேள்வி கள். அரசுக்கு அரசியல் வாதிகளுக்கு, சமுதாய சிந்தனை யாளர்களுக்கு என்று தலைப்பிட்டார் சக்கரவர்த்தி.

அந்தக் கணத்தில் அபிநயாவுக்குப் புரிந்தது தன்னிடம் சர்வ சாதாரணமாகப் பழகிக் கொண்டிருக்கிற விக்ரமா தித்யன், மிகப் பெரிதும் மதிக்கப்படுகின்ற பத்திரிகையாளன் என்பது.

அன்றைக்கு அலுவலகம் பரபரப்பாக இயங்கியது. "ஏன் சார்! சின்னதா ஒரு இணைப்பு போட்டர்லாமா?" என்றான் விக்ரம்.

'வேண்டாம்... வேண்டும்' என்று சற்று நேரம் வாதப் பிரதிவாதம் நடந்தது. பிறகு 'கொட்டிய மழையின் கோரக் காட்சி' என்று தனியாக ஒரு இணைப்புப் போடுவதென்று முடிவாகியது.

மிகவும் சிந்தனை வயப்பட்டவனாக நின்று கொண்டிருந் தான் விக்ரமாதித்யன்.

"என்னப்பா? பாயிலாயிட்டிருக்கறே" என்றார் சக்கர வர்த்தி.

"சார்! அதென்ன சார்! குடிதண்ணீர் பிரச்சினை ஒவ் வொரு தடவையும் வருதுன்னு தெரியும். மழை வந்தப்ப இந்த மாதிரிப் பிரச்சினைகள் வருதுன்னு தெரியும். பிரச்சினை முடிச்சவுடனே தூக்கி தூர போட்டர்றாங்க. அதே கையோட அடுத்த முறை வராம இருக்கறதுன்னா என்ன செய்யணும்னு பர்மனன்ட் சல்யூஷன்ஸ் பத்தி ஏன் யோசிக்க மாட்டேன்கறாங்க?" என்று பொரிந்தான்.

அவன் கோபமாகப் பேசும்போது மறுபடியும் அபிநயா ஒரு போட்டோ எடுத்தாள். திரும்பியவன் முறைத்தான்.

''ஏய்... நீ வேற நேரம்காலம் தெரியாம விளையாடிட்டு!'' என்றான்.

சக்கரவர்த்தி அதைக் கண்டு கொள்ளாதவர் போல் அவனைத் திசை திருப்பினார்.

''இந்தக் கட்டுரையில் எல்லாத்தையும் கொண்டு வா, அப்புறமாவது டிஸ்கஷன் வரும்இல்ல...'' என்றார்.

மிகச் சுருக்கமாக, நறுக்குத் தெறித்தாற்போல் ஒரு மூன்று பக்கக் கட்டுரை கொடுத்தான். அதற்குப் பிறகுதான் கொஞ்சம் ரிலாக்ஸானான்.

சக்கரவர்த்தி அந்தப் பக்கம் போனவுடன் சான்ட்விச்சும், காபியும் வந்தது.

சான்ட்விச்சை வாயில் வைக்கையில் பெண் நிருபர் உமா அருகில் வந்து,

''சார்! அந்த ஸ்டுடியோவில செலவே பண்ணாம ஒரு ரேபட் சீன்... மழையில எடுத்து முடிச்சிட்டாங்க'' என்றாள்.

எல்லாரும் சிரித்தார்கள். அவன் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

''அப்புறம்.. அந்த ஹீரோயின் உங்களை ரொம்பக் கேட்டதாகச் சொன்னாங்க'' என்றாள்.

இளைஞர்கள் எல்லாரும் சிரித்தார்கள். அவன் முகம் லேசாகச் சிவந்தது.

''ஏய்... போ... நீ... உனக்கு வேலை இல்லாட்டி!'' என்றான்.

''அது ஏன்... சார்! அவங்க அடிக்கடி உங்களை விசாரிக்கறாங்க..''

''அது.. உன்கிட்ட இல்லாத விஷயம் ஒன்னு அவங்ககிட்டே இருக்கு... மூளை! மூளை!'' என்றான். மறுபடியும் இளைஞர்கள் 'ஹேய்!' என்று குரலெழுப்பினார்கள்.



''சே! உங்களுக்குப் போய் மெசேஜ் கொண்டு வந்தேன் பாருங்க!'' என்று கடுப்பானாள் உமா.

அவன் சிரித்தான். ''மெசேஜ் குடுக்கறதோட நிறுத்திக்கணும். அதுக்கு மேலே என்ன கேள்வி!'' என்று அவன் கலாய்க்க சக்கரவர்த்தி மறுபடியும் அந்த வழியாக வர எல்லாரும் அமைதியானார்கள்.

''ஏப்பா விக்ரம்!'' என்று அவர் ஏதோ கேட்க அவன் அவரோடு பேசிக் கொண்டே நகர்ந்தான்.

* * *

டைக்கை எடுக்க முடியாத சூழ்நிலை என்பதால் வேனிலேயே கொண்டு போய் டிராப் செய்தார்கள்.

''ஏம்மா... கார் அனுப்பவா?'' என்று சக்கரவர்த்தி கேட்டபொழுது ''இல்லே! நான் ஸ்டாஃப்ங்க வேன்லயே போறேன்'' என்று கிளம்பினாள் அபிநயா.

சக்கரவர்த்தி சிரித்துக் கொண்டார். மறுக்கவில்லை. அவரவர்கள் கண்ட காட்சியை சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

அடையாறில் அவள் இறங்கிக் கொண்ட போது உமா சொன்னாள்.

''அபி! நீயும் இங்கயே இறங்கி சாரோட அபார்ட்மென்ட்ல இரு. மத்தவங்களையெல்லாம் டிராப் பண்ணிட்டு வர எப்படியும் ஒன் அவர் ஆகும். மறுபடியும் இதே வழியில்தான் வரும்'' என்றாள்.

''வர்றியா அபி!'' என்றான் விக்ரமாதித்யன்.

''வொய் நாட்?'' என்று இறங்கினாள்.

முதல் தளத்தில் இருந்தது அவனது அபார்ட்மென்ட். நான்கு அறைகள் இருந்தன. ஒரு கிச்சன், ஒரு ஹால் இரண்டு பெட்ரூம்கள் என்று இருந்தன.

''அதில் ஒரு பெட்ரூம் மட்டும்தான் நான் யூஸ் பண்றது'' என்றான்.

'பேச்சலரோட ரூம்.. ஒரே களேபரமாக இருக்கும்' என்று எதிர்பார்த்து வந்தவளுக்கு ஒரே ஆச்சரியம்.

ஒழுங்காக இருந்தது. சமையலறையை எட்டிப் பார்த்தாள்.

''ஏதாவது சாப்பிடறயா.. அபி?'' என்றான்.

''இப்பத்தானே.. காபி சாப்பிட்டோம்!'' என்றாள்.

''இப்பவா.. ஒன் அவர் ஆச்சு.. இரு.. உனக்கு ஸ்நாக்ஸ் தரேன்'' என்று பொரியை வறுத்து காரசாரமாக எடுத்து வந்தான்.

''மழைக்கு சுகமா இருக்கும்'' என்று கொடுத்தான். அவளும் கொஞ்சமாகக் கொறித்தாள்.

''பேச்சலர் ரூம். ரொம்ப அன்டைடியா இருக்கும்னு... நினைச்சேன்'' என்றாள்.

''கொஞ்சமான பொருட்கள். அளவான யூஸ்'' என்று சிரித்தான்.

சி.டி. பிளேயரில் அருமையான பாடல்கள் நிறைந்த சி.டி.யைப் போட்டான்.

ஏதோ கனவுலகில் இருப்பது மாதிரி இருந்தது. ''கொஞ்ச நேரத்துக்கு முன்னால உலகத்துப் பிரச்சினையெல்லாம் பத்தி கவலைப்பட்ட ஆள் எங்கே போனாரு'' என்றாள் அபிநயா.

''அவரு பத்திரிகையாளர். இது வீடு... மை ஹோம் இங்கு... என் சக்திக்கு மீறின விஷயங்களை நான் யோசிக்கறதில்லே... ஐ ரிலாக்ஸ்'' என்றான்.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசிச் சிரித்தார்கள். காலிங் பெல் ஒலித்தது.



பக்கத்து அபார்ட்மெண்ட்ல இருந்த பெண்.

''என்ன இது ஆச்சரியம்? உன்னோட அபார்ட்மெண்ட்டில் பெண் குரல் கேட்டுதே'' என்று நின்றாள்.

''அக்கா... இது என் கலீக். மிஸ். அபிநயா. கூடுதலா ஒரு தகுதி எங்க பாஸோட பொண்ணு'' என்றான் விக்ரம். கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு எதுவும் பேசி விடாதீங்க என்ற எச்சரிக்கை தொனி அதில் ஒலித்தது.

''ஆனா, இப்போதைக்கு... விக்ரம் சாரோட அஸிஸ்டெண்ட்! அபிநயா.''

''வெளிய எங்கயும் போக முடியல. கரண்ட் வேற வந்து வந்து போகுதாம். மத்த ஏரியாவெல்லாம் ரொம்ப சஃபர் பண்றாங்க'' என்றாள் அந்த பெண்மணி. சற்று நேரம் பேசிவிட்டு ''சூடா சப்பாத்தி போடறேன் குடுத்தனுப்பட்டா?'' என்று எழுந்தாள்.

''வேண்டாங்க்கா. நான் தோசை வார்த்துக்கறேன். சட்டினி மட்டும் கொஞ்சம் குடுங்க'' என்றான்.

''நீங்க சமைப்பீங்களா?'' என்றாள் அபிநயா.

''ஏன்... நான் என்ன வேத்து கிராமத்து மனுஷனா, பேசுவேன் சமைப்பேன்... சாப்பிடுவேன், நடப்பேன்... உட்காருவேன்'' என்று அவன் ஆரம்பிக்க அவள் ''போதும் போதும்'' என்று சிரித்தாள்.

இருவரும் சிரித்தார்கள்.

சற்று நேரம் தங்கள் பத்திரிகை உலக அனுபவங்களெல்லாம் சொன்னான்.

நேரம் போனதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்து விட்டு வேனில் ஏற்றி விட்டு விட்டு வந்தான்.

''சார்! நான் உங்களுக்குச் சொல்லவேயில்லை.... இல்லை... ரகுவீர் சார்கிட்டே பேசிப் பேசியே காரவாளை ரெண்டு நாளைக்கு இரவல் தர ஒப்புக்க வச்சுட்டேன்'' என்றான்.

''ரொம்பப் பெரிய சாதனை போ. உங்கப்பாகிட்டே சொன்னா உனக்கு சொந்தமாவே ஒண்ணு வாங்கித் தருவாரு'' என்று சிரித்தான்.

''எதுக்கு? அப்படியே இருந்தாலும் நடிப்புக் கடல்கிட்டே ஒளி வாங்கற 'திரில்' இருக்குமா?'' என்றாள்.

''அதென்ன ஒளி வாங்கறதுல எப்பவுமே லேடீஸ்க்கு ஒரு திருப்தி'' என்று கேலி செய்தான்.

புன்னகையுடன் கையாட்டி வழியனுப்பிவிட்டு அறைக்குள் போனபோது கடந்த இரண்டு மூன்று நாட்களாகப் பார்த்த கோரக் காட்சியின் கனம் குறைந்து மனம் லேசானாற் போல் உணர்ந்தான்.

சூடான வெந்நீரில் குளித்து விட்டுப் படுக்க வேண்டும் என்று ஹீட்டரைப் போட்டான்.

* * *

அபிநயாவுக்கு உறக்கமே வரவில்லை.

ஒரு பெரிய வார இதழாசிரியரைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு இதுவரை ஏன் இந்தத் துறையில் ஆர்வம் காட்டவில்லை.

போர்ட்டிகோவில் சேரைப் போட்டுக் கொண்டு வானம் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

சக்கரவர்த்தி அன்றைக்கு வரும்போதே பதினொரு மணியாகிவிட்டது.

''என்னம்மா... தூங்கலையா!'' என்றார். அவள் கூடைச் சேரில் இரண்டு கால்களையும் மேலே தூக்கி வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

தந்தையை நிமிர்ந்து பார்த்தாள். ''அப்பா.. இந்த வானத்தைப் பார்த்தீங்களா! மூணு நாளா கொட்டோ கொட்டுன்னு கொட்டிட்டு இப்ப என்னைப் பார் என் அழகைப் பார்ன்னு சாதுவா நிக்கறது!'' என்றாள்.



அப்பா புன்னகைத்தார். பத்திரிகைத் தொழிலின் முதல் தாக்கம் மகளுக்குள் ஏற்பட்டிருக்கிறது என்பது புரிந்தது.

அவள் தலையை அன்புடன் வருடிக் கொடுத்தார். ''பாத்தியாம்மா! வாழ்க்கையோட நிதர்சனங்கள் எல்லாம் பாத்தியா?'' என்றார்.

''ஆமாப்பா!'' என்றாள்.

''நீ பாத்ததெல்லாம்.. ரொம்ப... சின்னப் பகுதிம்மா.. இன்னமும் எத்தனையோ இருக்கு. பயமா இருந்தா இந்தப் பாயிண்ட்ல விலகிடு. நிம்மதியாக வாழ்க்கைக்குப் போயிடு'' என்றார்.

அவள் புன்னகைத்தாள்.

''அப்பா... தீ எரியும்போது பாத்திருக்கிங்களா! அழகா இருக்கும். ஆனா, பயம்மாவும் இருக்கும். அது மாதிரி இந்தத் துறை என்னை இழுக்குதுப்பா..'' என்றாள்.

சற்று நேரம் தந்தையிடம் அமர்ந்து தான் கண்ட காட்சிகளையெல்லாம் சொன்னாள். அவரும் ஆழ்ந்து கேட்டுக் கொண்டார்.

''அப்பா! எனக்கு தூக்கம் வராது போல இருக்கு'' என்றாள்.

''எக்ஸைட்மெண்ட். தூக்கம் வரும்மா... போய்ப்படு. மழையோட இந்தப் பேயாட்டத்துல, நம்ம பங்கை நாம செஞ்சாச்சும்மா...'' என்றார்.

''ஆமாப்பா!'' என்று ஒத்துக் கொண்டாள். பிறகு.

''அப்பா! விக்ரம் சார், ஒரு குழந்தையை அலாக்காத் தூக்கிட்டு வந்து காப்பாத்தினாரு'' என்றாள்.

அப்பா சிரித்தார். ''ஆமா, அலட்சியமா நல்லது செஞ்சுகிட்டுத் திரிவான். அவன் ரொம்ப ஷார்ப்... நம்ம பத்திரிகையில அவனைத் தக்க வைக்கறதுக்குள்ளே எனக்குப் போதும்.. போதும்னு ஆயிடுத்து. மத்தப் போட்டி பத்திரிகைக்

காரங்கள்ளாம் அவனைக் கொத்திக் கிட்டுப் போகத் தயாரா இருக்காங்க..''

''சொன்னாருப்பா! உங்க அப்பாவோட அன்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இங்கே இருக்கேன் அப்படின்னாரு.''

''ரொம்ப ஷார்ப்பும்மா! அவன்கிட்டே நிறையத் தெரிஞ்சுக்கலாம்'' என்றார்.

''ஆமா!'' என்றவள் ''அப்பா! அந்த ரகுவீர் இல்லே! ரெண்டு நாளைக்குத் தன்னோட காரவானை நேக்குத் தர்றேன்னிருக்காரு'' என்று கலகலவெனச் சிரித்தாள்.

''போச்சுடா! இங்கயும் வந்து ஒசி வாங்க ஆரம்பிச்சுட்டியா!'' என்று சிரித்தார்.

அம்மா வந்து ''இந்தாத்துல ஏற்கனவே ரெண்டு ஜாமக் கோடங்கிதான் இருந்தாங்கன்னு நினைச்சேன். இப்ப நீயும் சேர்ந்துகிட்டியா?'' என்றார்.

''அப்பா! ஒன் ஃபார்ட்டி ஃபோர்... போட்டாச்சு போலாம்ப்பா'' என்று அப்பாவும், மகளும் அந்தக் குடும்பத் தலைவிக்குப் பயந்தாற் போல் நடித்துக் கொண்டு அவரவர் அறைகளுக்குப் போனார்கள்.



## 7

தியேட்டரை விட்டு வெளியே வந்தாள்.

ரகுவீரின் படம். ரசிகர்கள் முண்டியடித்துக் கொண்டு அடுத்த ஷோவுக்காக நிற்பதைப் பார்த்து அவளுக்கு சிரிப்பு.

யோசித்துப் பார்த்தாள். இந்தப் படத்தில் என்ன இருந்தது? நாலு ஃபைட். ரெண்டு மூணு கதாநாயகிகள், இரண்டு மூன்று பாட்டு. அப்புறம் துக்கினியூண்டு கதை! சிரிப்பாக வந்தது. மூன்று மணி நேரம் அலுப்பில்லாமல் போனது. ஆனால், லாஜிக்கை



மட்டும் மூட்டை கட்டி எங்காவது வீசி விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

பத்திரிகையாளர்களுக்கான கோட்டாவில் அவளுக்கு டிக்கெட் கிடைத்திருந்தது. அப்பாவிடம் சொன்னாள்.

''அப்பா! நான் ரகுவீர் சாரைப் பத்தின எல்லா விஷயங்களையும் திரட்டப் போறேன்'' என்று.

அவர் எதுவும் சொல்லவில்லை. புன்னகைத்தார்.

''அம்மா! ஒரு ஃபீச்சருக்காக இவ்வளவு மெனக்கெட வேண்டாம். ஆரம்ப காலப் படங்களைப் பாரு. அப்புறம் லேட்டஸ்ட் பாரு'' என்றார்.

''என்னைக் கேட்டா படங்களையெல்லாம் ஒரு பக்கம் விட்டு. அதைப்பத்தி நிறைய அலசல்கள் வந்துருச்சு. ஆஸ் ஏ பர்ஸன் அவரோட விருப்பு, வெறுப்புக்கள், பழக்க வழக்கங்கள் பத்தியெல்லாம் சுவாரசியமா ஏதாச்சும் விஷயங்கள் கலெக்ட் செய்யப் பாருங்கரார் விக்ரம்.''

''குட்! அதையே செய்'' என்று சொன்னார் அப்பாவும்.

இன்றைக்கென்னவோ விக்ரமும் அவள் கண்ணில் படவேயில்லை. அதனால் வசூலில் சாதனை படைக்கிற இந்தப் படத்தைப் பார்த்த மாதிரியும் ஆச்சு.. பொழுதும் போன மாதிரியும் ஆச்சு என்றெண்ணிக் கொண்டு வந்தாள்.

தியேட்டர் உரிமையாளரே வந்து அவளுக்கு அருமையான ஒரு இடம் ஒதுக்கினார். சக்கரவர்த்தியின் பழைய நண்பராம்.

பார்த்து முடித்து விட்டு வெளியே வந்தாள். டாக்ஸி பிடித்தாள். வரும்போது அவன் படத்தைப் பற்றிய எண்ணங்கள் அவள் மனதில் ஓடியது.

சண்டைக் காட்சிகளில் மட்டும் தனியாய் ஒரு மெருகு தெரிந்தது. அதிலும் குளோஸ் - அப் காட்சிகளில் கூட ஒரு

இளமை தெரிந்தது. அது பத்தி ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டது கூட நினைவுக்கு வந்தது.

சண்டைக் காட்சிகளுக்கு முன்பு தனது காரவானுக்குள் போய் சற்று நேரம் உடற்பயிற்சி யோகா என்று செய்வாராம். புதுக் கவர்ச்சியோடு வெளியே வருவாராம். சண்டைக் காட்சிகளின் இடையே அவ்வளவாகப் பேச மாட்டாராம். டைரக்டர் என்ன சொல்கிறாரோ அதை மனதில் வாங்கிக் கொண்டு செய்வாராம். பிறகு காரவானுக்குப் போய் விடுவாராம் அதிலும் முக்கியமாக சண்டைக் காட்சிகளின் போது நிறையக் கூட்டம் இருப்பதை விரும்புவதில்லையாம்.

ஒரு படத்திற்கான சண்டைக் காட்சிகளையெல்லாம் ஒரே ஷெட்யூலில் முடித்துக் கொடுப்பாராம். முன் கூட்டியே ஃபிக்ஸ் பண்ணி விட வேண்டுமாம். அதனாலோ என்னமோ சண்டைக் காட்சிகள் ஆக்ரோஷமாக இருந்தன. க்ளோஸ் - அப்பில் கண்கள் இரண்டும் ஏதோ புலியின் கண்களைப் போல் மின்னின.

'தலைவா! பின்னிட்டே தலைவா!' என்ற ரசிகர்கள் மாய்ந்து மாய்ந்து பிரசுரங்களை வீசினார்கள். புன்னகைத்துக் கொண்டாள்.

டாக்ஸி ஆபீசுக்கு வந்து நின்றது.

விவேக்கிடம் போனாள். ''என்ன பொறுப்பாசிரியர் அவர்களே! உங்க சப் - எடிட்டர் வர்லையா?'' என்றாள்.

விவேக் லேசான சிரிப்புடன் அவளைப் பார்த்தான். ''எங்கடி போயிட்டு வரே?'' என்றான்.

''ஹலோ இது ஆபீஸ். கிவ் ரெஸ்பெக்ட் அண்ட் டேக் ரெஸ்பெக்ட்'' என்றாள்.

''சரி... அலட்டாதே! இங்கதான் யாரும் இல்லையே'' சொல்லு'' என்றான் விவேக்.



''ரகுவீரோட 'தடியெடுடா தலைவா!' படத்துக்குப் போயிட்டு வர்றேன்'' என்றாள்.

''அது சரி! எதுக்கு ரகுவீர், ரகுவீர்ன்ட்டு அலையறே. வேற ஏதாச்சும் செய்யேன்'' என்றான் விவேக்.

''அண்ணா! உனக்கு விஷயமே புரியலே. அந்த மாதிரி பாப்புலரான ஆட்களைப் பத்தி ஒரு ஃபீச்சர் குடுத்தா... பத்திரிகையுலகமே திரும்பிப் பார்க்கும். அதையே வீடா வச்சுகிட்டு சினிமா உலகத்துள்ளே நுழைஞ்சு ஒரு அலம்பல் பண்ணலாம்னு ஐடியா'' என்றாள்.

''செய்! செய்!''

''அதுசரி.. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லலியே! விக்ரம் வர்லையா?'' என்றாள்.

''தெரியலை.. அபி! அபார்ட்மெண்ட்க்கு போன் அடிச்சேன். ரிங் போயிட்டே இருக்கு. எங்க இருந்தாலும் அப்பப்ப தகவல் குடுப்பான். அதான் புரியலை'' என்றான்.

''ஓஹோ! ஏதாவது ப்ராப்ளமா இருக்குமோ!''

''இப்ப உடம்பு கிடம்பு சரியில்லயோ என்னமோ... அவன்கிட்டே ஒரு மோசமான ஹாபிட் என்னன்னா... உடம்பு சரியில்லேன்னா மட்டும் சொல்ல மாட்டான். வந்ததுக்கப்புறம் சொல்வான்'' என்றான்.

''ஓஹ்! இருக்கலாம். மூணு நாளா எந்தெந்தக் குப்பத்துத் தண்ணீருக்குள்ளயோ நின்னுகிட்டிருந்தாரு'' என்றாள் கவலையாக.

''நா வேணுன்னா போய்ப் பார்க்கட்டா!''

''போய்ப் பாரேன்'' என்றான். அதற்குள் அப்பா அழைக்கவே எழுந்து போய்விட்டான்.

* * *

''அக்கா! ப்ளீஸ்... கதவு திறந்துதான் இருக்கு. உள்ள கொண்டு வந்து வச்சிருக்கேனேன்'' என்று தூக்கக் கலக்கத்தில் பேசுவது போல் விக்ரமின் குரல் ஒலித்தது.

அபிநயா ஒரு கணம் விழித்து விட்டு உள்ளே நுழைந்தாள்.

ஹாலைத் தாண்டி படுக்கையறைக்குள் தயக்கத்துடன் ''வர்லாமா.. சார்?'' என்று எட்டிப் பார்த்தாள்.

பனியனும், கைலியுமாகப் படுத்துக் கொண்டிருந்தான் விக்ரம்.

''ஓ... அபியா?'' என்று அவசரமாக எழ முயன்றான். கண்கள் சிவந்து கிடந்தன.

தலை கலைந்து கிடந்தது. மூக்கு நுனி சிவந்து கிடந்தது. கன்னங்கள் கனகனவென்று மின்னியது.

''என்ன சார் ஆச்சு?'' என்றாள்.

அவன் களைப்பில் படுத்துக் கொண்டான். அவள் சற்றும் தயங்காமல் போய் அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அனலாய்க் கொதித்தது.

''என்னிது.. இப்படிக் கொதிக்குது! தனியாவே சஃபர் பண்ணியிருக்கீங்க...?'' என்றாள் ஆதுரத்துடன்.

''நல்ல ஃபீவர்! எழுந்திருக்கவே முடியலை'' என்று முனுமுனுத்தான்.

''கன்டாமினேட்டட் வாட்டர்ல மூணு நாலு நாளா அலைஞ்சிருக்கீங்க. சோஷியல் சர்வீஸ் பண்ணலாம் சார். ஆனா, நம்மளையும் கவனிக்கக்கணும்'' என்றாள் படபடப்புடன்.

உடனே சகோதரனுக்கு போன் செய்து டாக்டரை வரவழைத்தான்.



டாக்டர் வந்து பார்த்து விட்டு ''நத்திங் டு வொர்ரி. கம்ப்ளீட் ரெஸ்ட் எடுங்க. காய்ச்சின தண்ணீர் குடிங்க...'' என்று ஒரு இன்ஜெக்ஷன் போட்டார். மாத்திரை மருந்துகள் கொடுத்தார்.

அதற்குள்ளாக விவேக்கும், சக்கரவர்த்தியும் வந்தார்கள். ''சார்! உங்க பொண்ணு இதைப் பெரிய விஷயமாய் பண்றாங்க... ஐ வில் மானேஜ்'' என்றான்.

''அது சரி... போ! இப்படிப் படுத்துக் கிடக்கேன்னு ஒரு போன் பண்ணினா என்ன?''

''இதுக்குத்தான். இப்படி எல்லாரும் படபடப்பாளீங்க... அதனாலதான் பண்ணலே'' என்றான்.

மெதுவாக ஒரு துண்டைப் போர்த்திக் கொண்டு எழுந்து அமர்ந்தான்.

''சார்...! நீங்க போய் உங்க வொர்க்கைப் பாருங்க!'' என்றான் சக்கரவர்த்தியிடம் சங்கடமாக.

''பரவால்லேப்பா... கொஞ்ச நேரம் உட்கார்றேன்! உங்க அப்பா... என்னை நம்பி அனுப்பியிருக்கார். நானும் உன்னைக் கவனிக்கணுமே'' என்றார்.

உட்கார முடியாமல் படுத்துக் கொண்டான். களைத்து உறங்கிவிட்டான்.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சக்கரவர்த்தி சொன்னார்.

''காய்ச்சல் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும்போல இருக்கு. எதுக்கும் யாராவது கூட இருக்கற மாதிரிப் பாத்துக்கணும்'' என்றார்.

''அப்பா... நீங்களும் விவேக்கும் இப்பப் போய்ட்டு ராத்திரி மட்டும் சார் கூட யாராவது இருக்கற மாதிரி ஏற்பாடு செய்ங்க. பகல்ல நான் பாத்துக்கறேன்'' என்றாள்.

''அப்பா, அப்துல் கிட்டே சொன்னா ஓடி வந்துடுவான்'' என்றான் விவேக்.

தந்தையும், மகனும் புறப்பட்டார்கள்.

''என்னப்பா... அதிசயம்? அபிநயா பாத்துக்கறேங்கறா, எப்படி அவன் ரூமில் தனியா விடறது?'' என்றான் விவேக் தயக்கமாய்.

''விவேக்! என்ன நேர்ஸ்னு பொறுப்பான அண்ணனா விட்டே! அவ வேலைக்குன்னு சேர்ந்த நாள்ல இருந்து அவன் கூடதான் சுத்திகிட்டிருக்கா. ரெண்டு பேரும் ஒண்ணும் குழந்தைங்க... இல்லே! கல்மிஷமில்லாம பழகறவாளைப் போய் நாமளே அதையும் இதையும் சொல்லி டிஸ்டர்ப் செய்யப்படாது'' என்றார்.

''சரிப்பா!'' என்றான் விவேக்.

* * *

இரண்டு, மூன்று ஃபைல்களை தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் அபிநயா.

''ஹலோ! குட்மார்னிங்!'' என்றாள்.

''குட்மார்னிங்'' என்று களைப்பாகப் புன்னகைத்தான்.

''என்ன சார், இன்னும் பல்லே தேய்க்கலை... போல இருக்கு'' என்றாள் அபிநயா.

''அப்துலை இப்பத்தான் ஒரு வழியா அனுப்பினேன். இப்ப நீங்களா? பல் தேய்ச்சா பசிக்கும். அதான் யோசனை யாலே உட்கார்ந்துட்டிருக்கேன்'' என்றான்.

அபிநயாவுக்குப் பின்னாலேயே டிரைவர் ஒரு கூடையைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனார்.

''டாக்டர் கிட்டே போன் பண்ணிக் கேட்டேன். பிரெட் குடுங்கோ இல்லே வாய்க்குப் பிடிச்சதுன்னா இட்லி குடுங்கோ...



ஆனா, தேங்காய்ச் சட்னி வேண்டாம்னார். ரொம்ப டைல்யூட்டடா சாம்பார் கொண்டு வந்திருக்கேன்'' என்றாள்.

''ஐயோ! உங்களுக்கெதுக்குங்க சிரமம்!'' என்றான். ஆனால் உற்சாகமாக எழுந்தான். பல் தேய்த்து விட்டு வந்தான்.

''வீட்டு இட்லியா... குடுங்க.. குடுங்க.'' என்றான். இரண்டு மூன்று இட்லிகள் சாப்பிட்டுவிட்டான். அதற்குப் பிறகு மாத்திரைகளைப் போட்டுக் கொண்டான்.

''சரி... நீங்க வேண்ணாக் கிளம்புங்க.. ஐ வில் மானேஜ்'' என்றான்.

''நத்திங் டூயிங். இன்னைக்கெல்லாம்.. நான் இங்கதான் இருக்கப் போறேன்...'' என்றாள்.

அவன் விழிகள் வியப்பால் விரிந்தன.

''அபி! ரொம்பப் பெரிசு பண்ணாதே! நீ ஏதாவது வேலை யிருந்தா போய்ப்பாரு'' என்றான்.

''வேலையெல்லாம் நான் இங்கயே கொண்டு வந்துட்டேன்'' என்றாள்.

''என்னது?'' என்றான் கேள்விக் குறியாய்.

''ரகுவீரோட பி.ஏ. இல்லே! அவர்கிட்டே மஸ்கா அடிச்சேன் சார், நான் நம்ம நடிப்புக்கடலைப் பத்தி ஒரு ஃபீச்சர் பண்ணப் போறேன். அவரைப் பத்தின விஷயங்கள்ளாம் வேணும்னேன். அவர் நடிச்ச படங்களோட லிஸ்ட், விமர்சனங்கள், வாழ்க்கைக் குறிப்புன்னு ரெண்டு மூணு ஃபைலே குடுத்துட்டாரு...'' என்றாள்.

''நான் இதையெல்லாம் இங்க வச்சு படிச்சுப் பாக்கப் போறேன். நீங்க நிம்மதியா ரெஸ்ட் எடுக்கறீங்க'' என்றாள்.

அவன் அப்படி இப்படியென்று அரைமணி நேரம் அமர்ந்து விட்டு உறங்க ஆரம்பித்தான். உறங்கு முன்,

''அபி! ஏதாவது முக்கியமான விஷயம் வேண்ணா... நோட் பண்ணி வை. டைப்பிங் தெரியுமா? தெரிஞ்சா அந்த ஸ்டடி ரூம்ல கம்ப்யூட்டர் இருக்கு. ஃபீட் பண்ணிக்கோ!'' என்றான்.

அக்கம், பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் வந்து பாத்து விட்டுப் போனார்கள். பக்கத்து வீட்டுப் பெண்மணி வந்து.

''அக்கா! எங்க ஆபீஸ்ல அபியென்று ஒரு புதுப்புயல் வந்துருக்குன்னாரே நீதானா?'' என்று அன்பாய் விசாரித்தாள்.

''லேடீஸ்னா அப்படி இருக்கணும். ஃபீல்டுக்கு வர்ற துக்கு முன்னாலயே ஸ்டடிபண்ணிட்டு வந்துருக்கு அந்தப் பொண்ணு. நீங்கள்ளாம் எப்பப் பாரு சீரியலே கதின்னு கிடக்கறீங்கன்னு... கேலி பண்ணிக்கிட்டிருந்தார்'' என்றாள்.

அபிநயாவுக்கு ஆச்சரியமாகப் போயிற்று. ''சரி.. நான் பகல் சாப்பாடு அனுப்பட்டுமா?'' என்று அவள் கேட்ட போது.

''வேண்டாங்க... மேடம்! நான் சாதம் வச்சு ரசம் பண்ணிடறேன்'' என்றாள்.

''அப்ப... உனக்கு பொரியலும், சாம்பாரும் குடுத்தனுப்ப றேன்'' என்று போனாள்.

அயர்ந்து உறங்கிய விக்ரமாதித்யனுக்கு குக்கர் விசில் சத்தம் எங்கோ கேட்கிற மாதிரி இருந்தது. கிட்டத்தட்ட ஒரு மணி வாக்கில் அவன் விழித்த போது அபிநயா ஹால் சோபா வில் அமர்ந்து ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஹோ! ஒரு மணி ஆயிருச்சா'' என்று எழுந்தான். இப்போது சற்றே தெம்பாகி இருந்தான்.

''அபி! நான் என்ன பச்சைக் குழந்தையா? டோன்ட் டிரபிள் யுவர் செல்ஃப்'' என்றான் சங்கடமாக.



''விக்ரம்... சார்! போதும்.. ஃபார்மாலிட்டீஸ் எல்லாம். ஹாட் வாட்டர் தயாராயிருக்கு. கை,கால் அலம்பிட்டு வாங்கோ சாப்பிடலாம்'' என்றாள்.

''யார் பக்கத்து வீட்டு தோக்கா... குடுத்தனுப்பிச்சாங் களா! இல்லே... ஆன்ட்டி குடுத்தனுப்பிச்சாங்களா!'' என்றான் டவலால் முகம் துடைத்துக் கொண்டே.

''ஏன்! நாங்க சமைக்க மாட்டமா!'' என்றாள்.

''வ்வாவ்!'' என்றான் அதிர்ந்து போய்.

''என்ன? என்ன? பெரிய அதிசயம் மாதிரிப் பாக்கறீங்க? யு ஆர் இன்சல்ட்டிங் மீ..'' என்றாள் கோபமாக.

அவன் சட்டென்று முக பாவத்தை மாற்றிக் கொண்டான். ''அது சரி! உன்னோட சமையல் ட்ரெயினிங்குக்கு பரிசோதனை எலியா நான்தான் கிடைச்சேனா?'' என்றான்.

''வேணும்.. எனக்கு.. நல்லா... வேணும்.. அம்மா... எத்தனை தரம் ஹெல்ப் பண்ணுடின்னு கேட்டிருப்பா. ஹெல்ப்பண்ணியிருப்பேனா.. இப்ப.. உங்களுக்குப் போய் சமைச்சேன் பாருங்கோ...'' என்றாள்.

''சரி.. சாப்பிட்டுப் பார்த்துட்டுப் பேசுங்க!'' என்றாள்.

சாதத்தை நன்றாகப் பிசைந்து ஒரு கிண்ணத்தில் போட்டு இரசம் ஊற்றி ஸ்பூன் போட்டுக் கொடுத்தாள்.

இரண்டு வாய் உள்ளே போனதும் அவன் முகம் மலர்ந்தது.

''ரியலி... குட்!'' என்றான்... அவன் மலர்ச்சியான முகத்துடன் சாப்பிட்டதைப் பார்த்து அவள் முகத்திலும் சிரிப்பு மலர்ந்தது.

பக்கத்து வீட்டிலிருந்து வந்த சாம்பாரை ஊற்றி பொரிய லோடு அவளும் சாப்பிட்டாள். மீண்டும் மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு அவன் சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

முகத்தில் நெகிழ்ச்சியான பாவம் தோன்றியிருந்தது.

"அபி! எனக்கு இப்படிக் காய்ச்சல் வந்து ரொம்ப நாளாச்சு. ஸ்கூல் டேஸ்ல வந்தது. அப்ப அம்மா இப்படித்தான் டேஸ்ட்டா ரசம் வச்சு... கிண்ணத்துல சாதம் பிசைந்து குடுப்பாங்க" என்றான்.

"நாஸ்டால்ஜியா?" என்றாள். பரிவாகச் சிரித்தாள்.

"ஐய்யோ! ஸ்கூல் பையனாட்டம் ஃபீல் பண்றீங்களே" என்று கலாட்டா செய்து கவனம் மாற்றினாள்.

அவனும் சிரித்தான்.

"தாங்க்ஸ்! அபி!" என்றான்.

"எப்பவும்.. உடம்பு சரியில்லாதப்ப யாராவது பக்கத்துல இருந்தா நல்லா இருக்கும்னு தோணும். ஆஃப்டர் ஆல் வி ஆர் ஹ்யூமன் பீயிங்ஸ்" என்றாள் அபிநயா பெரிய தத்துவ வாதியைப் போல.

அவன் சிரித்துக் கொண்டான்.

அன்றிரவு!

"ஏன்டி பொண்ணே! அந்த விக்ரம் பயலுக்கு அமர்க்களமா ரசம் வச்சுக் குடுத்தியாமே" என்று அம்மா கேட்க.

"ஆமா. இது பெரிய கம்ப சூத்திரமாக்கும்" என்றாள் அபிநயா அலட்சியமாக.

அம்மா கணவனைத் திரும்பி ஆச்சரியமாகப் பார்க்க அவர் புன்னகைத்தார்.



## 8

இந்தக் குழாயைப் பிடித்து ஏறலாமா? அந்தக் கம்பி வழியாக ஏறலாமா? இந்த மாடிப்படி வழியாகப் போகலாமா! என்று நின்று கொண்டு யோசித்துக் கொண்டிருந்தாள் அபிநயா.



ஒரு வழியாக முடிவு செய்து குழாயைப் பிடித்துக் கொண்டு ஏறிப் பின்கட்டுப் படிகளில் குதித்தாள். ஆனால் சத்தமே வராமல்.

அதிகாலை ஏழு மணிக்கு நடிகரின் பங்களாவுக்குள் நுழைந்து விட்டாள். கூர்க்கா இரண்டு மூன்று முறை அவள் பி.ஏ.வுடன் நின்று சிரித்துப் பேசுவதைப் பார்த்திருந்ததாலோ என்னவோ பெரிதாக ஒன்றும் தடுக்கவில்லை.

அபிநயாவுக்கு ஒருவிதமான குறுகுறுப்பு. சென்ற முறை காலையிலேயே வந்த போது மனிதர் வெண்ணீறும் வெள்ளை உடையுமாக இருந்தார் என்று விக்ரமிடம் சொன்னவுடன் அவன் இடிஇடியென்று சிரித்தது ஒரு பக்கம் உறுத்திக் கொண்டே இருந்தது.

'என்ன? ஒத்தைப் பட்டையா? மூணு பட்டையா? பட்டு மேல் வேட்டியா? பக்திப் பழமா வந்தாரா!' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டது நினைவுக்கு வந்தது.

கிண்டலாகவே சிரித்துக் கொண்டிருந்தான். அன்றைக்கெல்லாம் அப்போதே அவளுக்குத் தோன்றிவிட்டது நடிகர் தன் நிஜமுகத்தைத் தனக்கு காட்டவில்லை என்று.

கடந்த இரண்டு நாட்களாக விக்ரமின் வீட்டில் செலவழிக்க நேர்ந்த போது நடிகரைப் பற்றிய குறிப்புகள் முழுவதும் தெரிந்து கொண்டாள்.

மிகச் சாதாரண நிலையில் இருந்துதான் முன்னேறியிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. இப்போதும் கூடத் தொழில் ரீதியாக அவருக்கு நல்ல பெயர் இருந்தது.

தொழில் சுத்தம் இருந்தது.

ஆரம்ப காலத்தில் சிறிய பாத்திரங்களில் நடித்துப் பின் படிப்படியாக முன்னேறி இப்போது நல்ல படங்களைத் தேர்ந்தெடுத்து நடித்துக் கொண்டிருந்தார்.

ஆரம்பப் புள்ளிக்கும், இன்றைக்கு இருக்கிற நிலைமைக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் அபாரமாக இருந்தது.

பிரமித்துத்தான் போனாள்.

அருமையாக, சுவாரசியமான விஷயங்களைச் சேகரித்து ஒரு ஃபீச்சருக்குத் தேவையான அளவுக்கு கட்டுரையும் தயார் செய்தாள்.

விக்ரம் மூன்றாம் நாளே வீட்டில் எழுந்து நடமாட ஆரம்பித்தான். ஆனால் டாக்டர் ''இன்னும் ரெண்டு நாளாவது ரெஸ்ட் எடுத்துட்டு ஆபிஸ் போய்யா.. அப்புறம்.. மறுபடியும் படுத்துக்கப் போறே'' என்று கடுமையாக எச்சரிக்கவே கடுப்புடன் வீட்டில் இருந்தான்.

இரண்டு பேருமாக அமர்ந்து நடிகரைப் பற்றிய கட்டுரையை அலசினார்கள்.

''சார்! நீங்க இந்த நடிகர் விஷயத்துல ஒண்ணுமே கருத்தும் சொல்லறதில்லே!'' என்றாள் அபிநயா.

''அபி! நீ அவரைப் பத்தி எழுதும்போது எதுல கான்ஸன்ட்ரேட் பண்ணப் போறே. அவரோட தொழிலைப் பத்தியா, அவரோட வாழ்க்கையைப் பத்தியா?'' என்று கேட்டான்.

''ரெண்டையும்தான்'' என்றாள்.

''தனிப்பட்ட வாழ்க்கையைப் பத்தி என்கிட்டே கருத்துக் கேட்காதே! நான் சொல்ல மாட்டேன். ரொம்ப ஆர்வமா இருந்தா நீயாத் தெரிஞ்சுக்கோ. ஆனா, நடிப்புத் தொழில்ல அருமையான ஆள். கெட்டிக்காரர் சின்சியரிட்டி எல்லாம் இருக்கு'' என்றான்.

அவள் சுவாரசியமாகக் கதை கேட்டாள். இரண்டு பேருமாகத்தான் கட்டுரை மாதிரி ஃபீச்சர் தயாரித்தார்கள். அவன் சொல்லச் சொல்ல அவள் கம்ப்யூட்டரில் படுவேகமாக அடித்தாள்.



அவன் அதிசயித்தான். ''எனக்கு இவ்வளவு வேகமா அடிக்க வராது'' என்றான்.

அவள் புன்னகைத்தாள். ''எல்லாம் வரும். கொஞ்ச நாள்ல சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்னு சும்மாவா சொன்னாங்க. இப்ப உனக்கு ரசம் வைக்க வரும்னு யாருக்காவது தெரியுமா? கரெக்டா... எந்த ருசியும் வாய்க்குத் தெரியாத நேரமா ரசம் வச்சு...'' என்று அவன் முடிக்கு முன்னரே அவள் முறைத்தாள்.

''நன்றி கெட்டத் தனங்கறது நம்ம நாட்டோட சாபம்'' என்றாள்.

''ஹேய்.. ஹேய்! நான் என்ன சொல்ல வந்தேன்னா... எதிர்பாராத விதமா ரசம் நல்லா அமைஞ்சு போச்சுன்னு சொல்ல வந்தேன்'' என்றான். குபீரென்று சிரித்தான்.

இதை எதிர்பாராத அபிநயா அசடு வழிந்தாள்.

வேண்டுமட்டும் ஓய்வு எடுத்துக் கொண்டவன் இடையிடையே அவளோடும் சற்று நேரம் அரட்டை அடித்தான். நிறையச் சுவாரசியமான விஷயங்களைச் சொன்னான்.

பல்வேறு விஷயங்களுக்காக விவரம் சேகரிப்பதற்காகப் போய் ஆபத்துக்களைச் சந்தித்து மீண்டு வந்தது. என்று நிறைய... நிறைய்ய விஷயங்களைச் சொன்னான். ஆனாலும் நடிகரைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் ஒரு மர்மச் சிரிப்பு சிரித்தான்.

இந்த எண்ணங்களெல்லாம் மனதுக்குள் ஓட மெதுவாக வராண்டாவைச் சுற்றிச் சென்றவள் மறைந்திருந்து பார்த்தாள்; அதிர்ந்து போனாள்.

* * *

''என்னங்க...! காலையிலயே இதை ஆரம்பிச்சுட்டீங்களா?'' என்றாள் ருக்மணி.

ரகுவீர் திரும்பி முறைத்தான்.

"எத்தனை தடவை சொல்லியிருக்கேன். எனக்கு அட்வைஸ் பண்ணாதே! சோத்தை ஆக்கிப் போட்டுட்டு மூலையில முடங்கிக் கிடன்னு" என்றான் குரலெடுத்துக் கத்தினான்.

"என்னை எப்படி வேண்ணாலும் நடத்துங்க. அதுக்கு நான் கவலைப்படலை. இது உங்களுக்கு ஆகாததுங்க... இப்பவே கண்ணோரத்திலயெல்லாம் சுருக்கம் விழுதுங்க. குளோஸ் அப் சீன்ல நல்லாத் தெரியுங்க" என்றவள் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு கலங்கி நின்றாள்.

கதி கலங்கிப் போன மாதிரி இருந்தது.

"ஏண்டி! நிறுத்துங்கறேன்.. மறுபடியும், மறுபடியும் பேசிகிட்டே இருக்கே! எப்பெப்ப, எப்படியெப்படி நடந்துக்கணும்னு எங்களுக்குத் தெரியும்டி. இன்னைக்கு மத்தியானமா ஷூட்டிங் போனாப் போதும். கொஞ்சம் என்ஜாய் பண்ணலாம்னு உட்கார்ந்தா விட மாட்டேங்கறா" என்றான்.

ருக்மணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. முன்னாலேயிருந்த டீபாயில் மது வகையறாக்கள் நிறைந்திருக்க, தொட்டுக் கொள்ள காரமான ஐட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கொண்டு வந்து கொண்டிருந்தாள் ருக்மணி.

"உட்கார்றீ.. எதுக்கால உட்காரு.... நீரத் நீர எடுத்துக் குடு" என்றான்.

அவன் சோபாவில் அமரப் போனான். மறுபடியும் ஒரு அறை விழுந்தது.

"கீழே உட்கார்டி!" என்றான்.

கீழே அமர்ந்தாள். "நீ சனியன் பிடிச்சவடி. பேசாம செத்துத் தொலைடி. உடனே... நீ கஷ்டப்பட்ட காலத்துல கூட இருந்தவன்டாம்பே... ஆனா... இன்னைக்கு என்னை



பாக்க வர்ற ப்ரொட்யூஸர் எவங்கிட்டயாவது உன்னை என் பொண்டாட்டின்னு அறிமுகம் படுத்த முடியாது. அங்க போய்ப் பாரு. ஒவ்வொரு பார்ட்டியிலயும்... ஒவ்வொருத்தனும், வைஃப்பைக் கூட்டிகிட்டு... எப்படி வர்றானுங்கன்னு. நமக்கு மானக்கேடா இருக்கு" என்றான்.

மெல்லிய குரலில் "உங்க மனசுக்குப் பிடிச்ச பொண்ணாப் பாத்துக் கல்யாணம் பண்ணிக்குங்க" என்றாள்.

மறுபடியும் ஒரு உதை விழுந்தது. அவள் விழுந்தவள் மறுபடியும் கண்ணீர் வழிய எழுந்து தரையிலேயே அமர்ந்து கொண்டாள்.

"எங்கடி பண்றது? என்னோட ரசிகனுங்க இருக்கானுங்களே! தலைவா, தலைவான்னு இமேஜை ஏத்தி வச்சிருக்கானுங்க.. ரெண்டாம் கல்யாணமெல்லாம் செஞ்சா இமேஜ் போயிடுமாம்... சே... என்னடா பொழப்பு இது" என்றான்.

"நான்தான்... உங்களுக்குப் பிடிச்சவங்களோட தொடர்பு வச்சுக்குங்கங்கறனே" என்றாள் ருக்மணி.

"அது நீயென்னடி சொல்றது? அது தானா நடக்கும்" என்றான்.

"நான் என்னதான் செய்யட்டும்!" என்றாள்.

"ஒண்ணு செய்! உன்னோட தங்கச்சி அகிலா இருக்காளே. அவளை எனக்குக் கட்டி வை" என்றான்.

"ஐயோ! அவ உங்களை விட இருபது வயசு சின்னவங்க.. அது பாவங்க!" என்றாள்.

கண்ணீர் பெருக்கி அழுதாள்.

அபிநயாவுக்கு இரத்தம் கொதித்தது. பாட்டில் வகையறாவுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு அவன் தன்மனைவியை எட்டி உதைத்த அந்த முதல் உதையின்போதே அவள் கையடக்கமான ஹாண்டி கேமராவில் பதிவு செய்ய ஆரம்பித்தாள்.

அந்த டேபாரின் காமிரா சாதுவாக எல்லாவற்றையும் பதி[வு] செய்து கொண்டது.

"இத பார்றீ! இப்ப எனக்கு முப்பத்து அஞ்சு வயசுதான் ஆகுதுன்னு என் ரசிகனுங்களே ஒத்துக்கறானுங்க... பாரு எனக்கு என்ன குறைச்சல்'' என்று கைகளை உயர்த்தி பல[ம்] காட்டினான்.

சதை தொங்கியது!

அபிநயாவுக்கு கோபத்தோடு சிரிப்பும் வந்தது.

"பத்து நாள் டயம் தரேன்! ஒரு முடிவு சொல்லு!'' என்று அவன் மிரட்டுகிற வேளையிலேயே அபிநயாவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

வந்த வழியிலேயே போய் முன்பகுதிக்கு வந்தாள். நடிகரின் தனி செல்போனுக்கு அடித்தாள்.

"சார்! நான் இங்க உங்க வீட்டுக்கு முன்னாலே நிக்கறேன். உள்ள வரலாமா?'' என்றாள்.

அவன் எதிர்பார்க்கவில்லை. போலும். ஆனாலும் திறமையாக சமாளித்தான்.

"ஆமா.. நான் இப்பத்தான் பாத்ரூம்ல குளிக்கப் போயிட்டிருக்கேன். நீங்க ஒரு பத்து நிமிஷம் டிராயிங் ரூம்ல வெயிட் பண்ணுங்க'' என்றான்.

'பாத்ரூம்ல குளிக்காம எல்லாரும் வேற எங்க குளிப்பாங்க..! போய்யா!' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டாள்.

டிராயிங் ரூமில் காத்திருந்தாள். அவசரமாகப் பவுடர் போட்டு செயற்கையான புன்னகையுடன் ருக்மணி வந்து வரவேற்றாள்.

அபிநயாவுக்கு பாவமாக இருந்தது. இந்தப் பெண்மணி என்ன விதமான வாழ்க்கை வாழ்கிறாள் என்று அனுதாபம் பொங்கியது.



''அக்கா!'' என்று அன்புடன் கட்டிக் கொண்டாள். ருக்மணி இதை எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் திகைத்தாலும் இதமாக உபசரித்தாள்.

பத்தே நிமிடத்தில் குளித்து விட்டு செண்ட் மணக்க வந்தான் நடிகர். அப்படியும் மதுவாடை அடித்தது.

''அதும்மா! இப்பத்த செண்ட் எல்லாம் ரெண்டு தடவை யூஸ் பண்ணினாலே புளிச்ச நாத்தம் அடிக்க ஆரம்பிச்சுடுது'' என்றான் விளக்கம் போல.

''ஆமா.. சார்! ஹி... ஹி!'' என்றாள் அபிநயா.

''சொல்லுங்க.. அபிநயா!'' என்றான்.

தான் கொண்டு வந்திருந்த கட்டுரையைக் கையில் கொடுத்தாள்.

மேலோட்டமாகப் படித்தான். உச்சி குளிர்ந்து போனான்.

''ரொம்ப அருமை! அருமை!'' என்றான். மகிழ்ந்து போனான்.

''மேடம்! சக்கரவர்த்தி சாரோட மகளுக்கு என்மேல இவ்வளவு கருணை பிறந்தது என் பாக்கியம்'' என்றான்.

''அது அப்படி இல்லைங்க சார்! முதன் முதலா நான் செய்யற சப்ளிமெண்டரி உங்களைப் பத்தி இருக்கப் போகுதுங்கறதுல எனக்கு ரொம்ப சந்தோஷம் சார். அதுலயும், நீங்க என்னை உங்க வீட்டுப் பெண்ணா ஏத்துகிட்டதுல ரொம்ப சந்தோஷம்'' என்றாள்.

அவள் வீசிய வலையில் அவன் சரியாக விழுந்தான்.

''ஐயோ! அதிலென்ன சந்தேகம். எப்பவுமே இந்தக் கதவு திறந்துதான் இருக்கும்'' என்றான். இளித்தான்.

அவள் அப்பாவியாய்த் தொடர்ந்தாள்.

''அதிலயும் சார்! இந்த மேடத்தை ரொம்பவே எனக்குப் பிடிச்சுருச்சு.. அப்பப்ப இவங்களை வந்து பார்க்க அனுமதிச் சீங்கன்னா... போதும்'' என்றாள்.

"ஓ... ஷ்யூர்!" என்றான். பிறகு ஆவலாக.

"சப்ளிமெண்டரி எப்ப வரும்?" என்றான்.

"சார் இப்பத்தானே உங்க கட்டுரை வெளியாயிருக்கு. மறுபடியும் உடனே எனக்கு வாய்ப்புக் குடுத்தா ரொம்ப நாளா வொர்க் பண்றவங்களுக்குக் கஷ்டமாப் போயிடும். பாருங்களேன்... அந்த விக்ரமே ஏதாவது நினைச்சுக்குவாரு" என்றான்.

"அவன் கிடக்கிறான்!" என்றார் நடிகர்.

"நீ பாட்டுக்கு எப்ப வேண்ணா... வாம்மா!" என்றான்.

"சார் இப்ப மேடத்தையும், உங்களையும் போட்டோ எடுத்துக்கட்டுமா?" என்றாள்.

"ஓ... ஷ்யூர்! ருக்கு... ரெடியாகி வா!" என்றான்.

மனைவியைப் பார்த்து அன்பாகச் சிரித்துக் கொண்டு போஸ் கொடுத்தான்.

அபிநயா அவனது முக பாவத்தில் தெரிந்த மாற்றத்தைக் கண்டு நிஜமாகவே அசந்து போனாள்.

மனைவியின் தோள்மேல் கை போட்டுக் கொண்டு நெருக்கமாக நின்றான். என்ன முயன்றும் ருக்மணியின் முகத்தில் உண்மையான மகிழ்ச்சி தெரியவில்லை என்பதை உணர்ந்தவன் கெட்டிக்காரத்தனமாக ஒரு வேலை செய்தான்.

சட்டென்று குனிந்து ருக்மணியின் நெற்றியில் இதழ் பதித்தான். ருக்மணியின் முகம் சிவக்கத் தோளில் அழுத்தமாகக் கையைப் பதித்துக் கொண்டு "இப்ப எடுங்க!" என்றான்.

அபிநயாவும் சிரித்துக் கொண்டே பதிவு செய்தாள்.

"தாங்க்ஸ்... சார்!" என்றாள்.

அன்றைக்குப் போலவே "எனக்கு டிபன் தர மாட்டீங்களா?" என்று சமையலறைக்குப் போனாள்.



"வெண்பொங்கல் சாப்பிடறியாம்மா?" என்று ருக்மணி ஒரு கப்பில் வைத்துக் கொடுக்கவே ஸ்பூனால் எடுத்து சாப்பிட்டாள்.

அவனும் அன்றைக்குப் போலவே முன்னறையில் நின்றபடி கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுப்பில என்ன இருக்கு? என்று எட்டிப் பார்த்தவள் மெதுவான குரலில் சொன்னாள்.

"மேடம்! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நடந்ததெல்லாம் பாத்தேன். உங்களுக்கு யாருமில்லைன்னு நினைக்காதீங்க... நான் இருக்கேன். கப் அண்ட் ஸாஸருக்குக் கீழே என் செல்போன் நம்பர் எழுதியிருக்கேன். உதவி தேவைப்படறப்ப கூப்பிடுங்க" என்றாள்.

ருக்மணி திகைத்துப் போனாள்.

சட்டென்று விலகிக் கொண்டாள். அவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றபடி சொன்னதால் ரகுவீரால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

"வரேன்... சார்! வரேன் மேடம்!" என்று குளிர்ந்து சிரித்தபடி விடைபெற்றுக் கொண்டாள்.

* * *

'சே! ஏழு தரம் எட்டி உதைச்சுட்டு அப்புறம் கிஸ் பண்ணினா முகம் சிவந்து போயி நிக்கற - பொம்பளைங்களை என்ன பண்ணினாத் தகும்' என்று காட்டமாகப் பேசிக் கொண்டு தன் முன்னால் நிற்கிற அபிநயாவை ஆச்சரியமாய்ப் பார்த்தான் விக்ரம்.

"இந்த ஆளைப் பத்திக் கட்டுரை வேற. ஸ்கௌண்ட்ரல்" என்று அவன் கட்டுரையைக் கீழே போட அவன் ஆழமாகப் பார்த்தான்.

புறப்பட்டுக் கொண்டிருந்தான். முழுக்கை சட்டையின் கையை மடித்து விட்டுக் கொண்டிருந்தான்.

"யார் மேல கோபம்?" என்றான்.

அவள் அவனைக் கோபமாகப் பார்த்தாள்.

"அது சரி! இப்ப நீங்க எங்கே கிளம்பியாகறது. ஆபீசுக்கா... அப்பா என்கிட்டே சொல்லிட்டார். இன்னைக்கும் ரெஸ்ட் எடுத்துட்டு நாளைக்கு அவனை வரச் சொல்லு. இந்த வார மேட்டர் எல்லாம் ரெடியாயிருக்குன்னு சொல்லுன்னு சொன்னார். "பேசாம உட்காருங்க" என்றாள்.

"சரி.. உட்காரு! என்ன விஷயம்? வாட் மேக்ஸ் யூ சோ வொரீட்?" என்றான்.

அவள் அமர்ந்தாள்.

சொன்னாள்.

அவன் 'இதெல்லாம் எனக்குத் தெரியும்' என்கிற பாவனையில் கேட்டான். அவள் விவரிக்க, விவரிக்க அவனும் சற்றே கவலையில் ஆழ்ந்தான்.



## 9

சக்கரவர்த்தியும், விக்ரமும் இருவர் மட்டும் அமர்ந்து முழுவதையும் பார்த்தார்கள். அது ஒரு சவுண்ட் ப்ரூஃப் அறை.

விக்ரம் ஆஃப் செய்தான்.

சக்கரவர்த்தியும், அவனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சக்கரவர்த்தியின் முகமே வாடிப்போனது.

"இது என்னப்பா கொடுமை?" என்றார் சற்றே கலங்கிய குரலில்.

"சார்! அந்தம்மாவுக்கு யாரும் கிடையாது. இந்த ஆள் சும்மா சின்னச் சின்ன வேஷத்துல நடிச்சகிட்டிருந்தப்போ அந்தம்மா கிடைச்சதே இவருக்குப் பெரிய யோகமா



இருந்துச்சு போலே. இப்ப தன்னோட தகுதிக்குக் குறைவானவங்கன்னு நினைக்கறாரு. ஆதரவுக்கு யாரும் இல்லேங்கற துணிவுல அந்தம்மாவைக் கொடுமை செய்யறாரு" என்றான் வருத்தமான குரலில்.

சென்ற வருடத்தில் பெண்கள் தின விழாவில் ரகுவீர் ஆற்றிய உரை இப்போது சக்கரவர்த்திக்கு நினைவுக்கு வந்தது.

"எனது வெற்றிக்கெல்லாம் காரணம் என் மனைவிதான் என்று முதுகெலும்பே அவர்கள்தான். அவர்கள் அப்படி... இப்படி" என்ற புகழோ புகழ் என்று புகழ்ந்திருந்தார். அதை இப்போது சொல்லி,

"ஏம்ப்பா! அப்ப அப்படிப் பேசின ஆள்...!" என்று பெருமூச்செறிந்தார்.

"சார்! இவரைப் பத்தி ஏதாவது சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க... தன்னோட குழந்தைகள்கிட்டே கூட அப்படியொரு இமேஜை இந்தாள் உருவாக்கி இருக்காரு. எல்லாம் அவங்க பி.ஏ. மூலம் நான் தெரிஞ்சு வச்சருக்கேன். ஆனா, இவ்வளவு மோசமா நடந்துக்குவாருன்னு நான் எதிர்பார்க்கலை" என்றான்.

"சரி! இப்ப நாம என்ன செய்யறது? அந்த ஆளோட இமேஜை உடைக்கறதுக்கு இதைவிட நமக்குப் பெரிய வாய்ப்புக் கிடைக்காது." என்றார் சக்கரவர்த்தி.

"சார்! இது அவரோட பர்சனல் லைஃப். நாம சாதாரண பிளாக்மெயில் ஜர்னலிஸ்ட் இல்லையே ஒண்ணு வேணா செய்யலாம். நம்ம அபியை அந்தம்மாவோட பழக விடலாம். அவங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் ஆதரவு குடுத்தா... இந்தக் கஷ்டங்கள்ள இருந்து விடுவிக்க முடிஞ்சா... நல்லா இருக்கும்" என்றான் விக்ரம்.

மேலும் சற்று நேரம் பேசினார்கள். விக்ரம் விடைபெற்றுக் கொண்டான்.

* * *

''உங்களை யாரு அப்பாகிட்டே அதைக் கொண்டு போய்க் கொடுக்கச் சொன்னாங்க. இதை வச்சுகிட்டு நான் அந்தாளை ஒரு கலக்குக் கலக்கிரலாம்னு பாத்தேன்'' என்றாள் அபிநயா.

விக்ரம் அலட்டிக் கொள்ளாமல் சிரித்தான்.

''ரகுவீரோட இமேஜ் என்னங்கறது உனக்குத் தெரியலே. தப்பித் தவறி அந்தாள் புகழ்ல கையை வச்சே... உன்னைத் துணியாத் துவைச்சுடுவாளுங்க'' என்றான்.

''ஓ!'' என்று தொப்பென்று சோபாவில் சரிந்து உட்கார்ந்தாள்.

அவனது அபார்ட்மென்டில் இருந்தார்கள். அவனே காபி தயாரித்துக் கொடுத்தான்.

''டெலிஷியஸ்'' என்று ரசித்து குடித்து முடித்தாள்.

''அந்தம்மா.. இப்படி உதை வாங்கினா என்னத்துக்கு ஆகறது!'' என்றாள் அபிநயா.

விக்ரம் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

''நானும் உங்கப்பாவும் என்ன ஃபீல் பண்றோம்னா நீ இப்ப எப்படி அந்தாள்கிட்டே ஃபிரண்ட்லியா இருக்கியோ அப்படியே இருக்க வேண்டியது. அது மட்டுமில்லே. இந்த சப்ளிமென்டரியைக் கூட உங்கப்பா போடறதா இருக்கார். அப்ப அந்தாளுக்கு உன்மேல் இன்னும் நம்பிக்கையாகும். அப்புறம் மெதுவா உள்ளே இறங்கி அந்தம்மாவுக்கு ஹெல்ப் பண்ணலாம்'' என்றான்.

''என்ன ஹெல்ப் பண்ணப் போறீங்க?'' என்றாள்.

''பாக்கலாம். அட்லீஸ்ட் அவர்களை இவன் ரொம்ப டார்ச்சர் பண்ணாத அளவுக்கு பாத்துக்கலாம் இல்லே. அதுமட்டும் இல்லாம வேற ரெண்டு மூணு வழியும் உங்கப்பா யோசிச்சு வச்சிருக்காரு'' என்றான்.



''ஃபார் எக்ஸாம்பிள்?''

''ரகுவீர் ரொம்ப மதிக்கற டைரக்டர் ஒருத்தர் இருக்காரு. அவருகிட்டே பேசி, இந்த ஆளுக்கு ஏதாவது புத்தி சொல்லச் சொல்லலாமான்னு யோசிக்கறார்'' என்றான்.

''அப்படியெல்லாம் சொன்னா ரகுவீர் கேட்டுக்குவாரா.''

''கேட்டுக்கணும். ஏன்னா அந்த டைரக்டர் ஒரு டைப்பான ஆளு. பயப்பட மாட்டார். ஏதாவது மேடையில வச்சு நான்தான் அறிமுகப் படுத்தினேன். இப்ப இப்படியெல்லாம் கெட்டுப் போயிட்டான்னு போட்டு உடைச்சுருவாரு...'' என்று சிரித்தான்.

அவளும் கலகலவென்று சிரித்தாள். அவன் ஒரு நிமிடம் ஆழ்ந்து பார்த்தவன் பிறகு சொன்னான்.

''பரவால்லையே! இந்த அம்மாவுக்காக அவ்வளவு கவலைப்படறே?'' என்றான்.

''சார்! எட்டி எட்டி உதைக்கறப்ப அந்த ஆள் முகத்தில வக்கிரம் தெரிஞ்சதுன்னா. அவங்க ஹெல்ப்லெஸ்ஸா அந்த உதையை வாங்கிக்கறப்ப எனக்கு ரத்தமே கொதிச்சுப் போச்சு. கடைசிக்கு சக மனுஷியாவாவது மதிச்சிருக்கணும் இல்லே. ரொம்பப் பாத்தடிக் சீன் சார் அது.''

''நீங்க சொல்றீங்களே, அவரோட ரசிகர்கள் என்னைத் துணியாய் துவைச்சுப் போடுவாங்கன்னு. ஐ ம் லீஸ்ட் பாதர்ட் அபவுட் இட் ஆனா, எங்கப்பாவுக்கு ரொம்ப எம்பாரசிங்கா போயிடும். அதுக்குத்தான் பார்க்கறேன்'' என்றாள்.

கோபமாக ஆரம்பித்துக் கனிவான குரலில் அவள் முடிக்க அவன் முகத்திலும் அன்பான புன்னகை மலர்ந்தது.

''பிரேவ் அன்ட் சென்சிபிள் கர்ல்'' என்றான்.

''அப்பாடா! இப்பத்தான் நல்லதா ஒரு பாராட்டு கிடைச்சிருக்கு'' என்றாள்.

அவன் சற்றே பொறாமையாகப் பார்க்கிறாற்போல் நடித்தான்.

"ஆனாலும் உன்மேல் எனக்குப் பொறாமைதான் அபி. எடுத்தவுடனே நடிப்பரசர் கேஸை டீல் பண்றே. பெரிய பத்திரிகை பேக் கிரவுண்டோட களத்தில் குதிக்கறே. யு ஆர் வெரி லக்கி. நாங்கள்ளாம் படிப்படியாத் தட்டுத் தடுமாறித் தான் ஏறினோம்" என்றான்.

"ஆனா, எனக்கு உங்களை மாதிரி கிரவுண்ட் லெவல்ல இருந்து வர்றதுதான் இஷ்டம்" என்றாள்.

"அதிருக்கட்டும். நீ இந்த ரகுவீர் கேஸ்ல எவ்வளவுக் கெவ்வளவு செய்திகளை திரட்ட முடியுமோ திரட்டு. எதிர்காலத்துல யூஸ் ஆகும். ஆனா, இது ஒண்ணும் மட்டுமே கான்சன்ட்ரேட் ஆகாம வேற சுவாரசியமான விஷயங் களும் குடு" என்றான்.

"ஆமா... சார்! அப்படித்தான் செய்யணும்." என்றாள். அப்போது இருவருக்குமே தெரியவில்லை.

புலியின் காலை இடறியவர்கள் போல் மென்மேலும் பல பயங்கர உண்மைகள் அவர்கள் முகத்தின் மேல் வந்து மோதப் போகின்றன என்று.

* * *

"ஏய்.. ராணி! உன் பிரதர் எந்தக் காலேஜ்ல படிக்கறார்? நான் அவனைப் பாக்கணுமே" என்றாள் அபிநயா.

"யாரு...எங்கண்ணனைச் சொல்றியா? என் தம்பியைச் சொல்றியா? எங்கண்ணன் எங்கடி காலேஜ் போறான். அவன் நாலு கழுதை வயசை முழுங்கிட்டு பிஸினஸ் இல்லே பண்றான். சின்னதுதான் காலேஜ் போறேன்னு பைக்கில ஊரைச் சுத்திட்டு வருது" என்று வெகு அன்பாகத் தன் சகோதரச் செல்வங்களைப் பற்றிப் பேசினாள் ராணி.



அதே நேரம் பொடேர் என்று அவன் தலையிலே அடி விழுந்தது போலும்.

"டேய்.. சும்மாயிருடா" என்று ராணி போனில் சொல்வது கேட்டுச் சிரித்துக் கொண்டாள்.

"எனக்கு உன்னோட தம்பியைத்தான் பாக்கணும்" என்றாள்.

"எதுக்கு?"

"இப்படி நான் காலேஜ் பசங்களோட கடிஜோக்ஸ் துணுக்குகள். அவங்க குடுக்கற சுவாரசியமான விஷயங் கள்னு எங்க இஷ்யூவுக்குத் தர்லாம்னு இருக்கேன். அதான். அதெல்லாம் ஓசியில விளம்பரம்னா எங்கய்யா என்ன வேயா சொல்வாரு 'வந்து தொலை! எப்ப வரே! உனக்குப் பிடிச்ச கேரட் அல்வா செஞ்சு வக்கறேன்" என்று அதே 'அன்போடு' பேசி விட்டு போனை வைத்தாள் ராணி.

திரும்பிப் பார்த்தாள். தம்பி ராமு அவசரமாகப் புறப் படுவதைப் பார்த்தாள்.

"எங்கடா... போறே?" என்றாள்.

"இரு வந்தர்றேன், உன் பிரண்ட் அபிக்கா வேலை செய்யற பத்திரிகை பத்தித் தெரியுமா? ரொம்ப ஃபேமஸ் பத்திரிகை. என் ஃபிரண்ட்ஸ் ஒரு பத்து பேரை தேத்திர்றேன் பாரு" என்று வேகமாக ஓடினான்.

அடுத்த இரண்டு மணி நேரத்துக்குள்ளாகத் தனது டீமோடு வந்தாள் அபிநயா.

விக்ரமாதித்யனும் உடன் வந்தான். ஆனால், போட்டோ கிராஃபருடன் கூட அமர்ந்து கொண்டான்.

கல்லூரி மாணவர்களும், மாணவிகளுமாக ஒரு பத்துப் பேரைத் திரட்டி விட்டான் ராமு.

விடியோவை எடுத்தார்கள்.

''உங்க அம்மா, அப்பா... எத்தனை வயசு வரை உங்களுக்கு அட்வைஸ் பண்ணலாம்னு நினைக்கறீங்க?'' என்ற கேள்விக்கு.

''எப்பவுமே வேண்டாம்.''

அவர்களுக்கு எதுக்கு சிரமம்? எங்க பொழப்பை நாங்களே பாத்துக்கறோம்.

''கேட்டப்ப குடுத்தாப் போதும்'' என்று விதவிதமான பதில்கள்.

அதில் ஒரு பையன் மட்டும்.

''எப்ப வேண்ணா சொல்லலாம்'' என்றான் உடனே அவன் நண்பன்.

''த்தோடா! இன்னா அய்யா ரொம்ப நல்லவரா கீறானேன்னு பாத்தீங்களா! இவனுக்கு அம்மா, அப்பாவே இல்லை'' என்றார்கள்.

அபிநயா திடுக்கிட்டுப் போய் விக்ரமைப் பார்த்தாள். அவன் கண்ணமர்த்திப் புன்னகைத்தான். அந்தப் பையன் அலட்டிக் கொள்ளாமல் தொடர்ந்தான்.

''இல்லடா இல்லே உனக்கு ஒரு அம்மா.. அப்பா... எனக்கு... உங்க அம்மா, அப்பா எல்லாரும் அம்மா... அப்பாதான்டா!'' என்றான்.

''ஆமாடா ராஜா!'' என்று வருண் அவன் கன்னத்தை வழித்துக் கொஞ்ச எல்லாரும் சிரித்தார்கள்.

''சீ நாயே! கையை எடு. இதன் சாக்குன்னு தொடறான் பாரு'' என்று அவர்கள் பொய்ச் சண்டை போட ரணகளமாக இருந்தது.

''உங்களுக்கு உங்கள் வீட்டில் யாருடன் சண்டை போடப் பிடிக்கும்?'' என்று அடுத்த கேள்வியைப் போட்டான்.



''எல்லாத்து கூடயும்தான்.''

''எங்கண்ணன் கூட. பெரிய பிஸ்தான்னு நினைப்பு அவனுக்கு.''

''அப்பா... கூட... சரியான சர்வாதிகாரி'' என்று விதவிதமாக பதில்கள்.

''சட்டென்று யாராவது ஒருத்தர் கவிதை சொல்லுங்க'' ஒருவன் சொன்னான்.

'உன் விழிகளில் எத்தனை மொழிகள் என்னைப் பன்மொழிப் புலவனாக்கினாய்.'

''மேடம்! இது இவனோட கவிதை இல்லை. சும்மா விடறான். கவி ஒவியன்னு ஒருத்தரோட கவிதை'' என்று போட்டுக் கொடுத்தான் மற்றொருவன்.

''ம்ஹூம்... உன்னோட சொந்தக் கவிதைச் சொல்லனும்'' என்றாள் அபிநயா.

''இன்னடா! இது வம்பாப் போச்சு, கவிதை கேக்கறாங்க... எங்கடா கிடைக்கும்? நம்ம அண்ணாச்சி கடையில கிடைக்குமா?'' என்று கலாய்த்தான் ஒருவன்.

அபிநயா காத்திருந்தாள். அமைதியான ஒரு பையன் மெதுவாக முன்வந்து தயங்காமல் ஒரு கவிதை சொன்னான்.

''வானத்தின் உச்சி சென்றும்
பூமியிலே பூப்பறிப்பேன்
பூகோள பந்ததனை
பூப்பந்தாய் சுழற்றிடுவேன்.
வானவில் ஓவியத்தை
விளையாட்டாய் பரிசளிப்பேன்.
ஆகாய மேடை கட்டி
அரங்கேற்றம் செய்திடுவேன்.
ஆதரவாய் நீ எனக்கு
ஒரு வார்த்தை சொல்லி விட்டால்!'' என்றான்.

ஒரு கைதட்டல் எழும்பியது.

''ம்... கொஞ்சம் பெரிய கவிதை. போனாப் போகுது. போட்டுடுங்க... மேடம்'' என்று கிண்டல் செய்தான் ஒருவன்.

இளம் வயதுக்கேயுரிய கவலையற்ற மனப்பான்மையும், துறுதுறுப்பும் அவனுக்கு இதமாக இருந்தது.

அதற்கும் ஒருவன் ''மேடம்! இவரு போட்டோகிராஃபர், அவரு யாரு மேடம்?'' என்று கேட்டான்.

''அவரு.... யாரா? அவருதான் விக்ரமாதித்யன்'' என்று அபிநயா சொன்னதுதான் தாமதம்.

''டேய்! விக்ரமாதித்யன்டா!'' என்று அபிநயாவை ஓரங்கட்டி விட்டு அவனைச் சூழ்ந்தார்கள்.

''சார்! எங்கேயிருந்து சார்'' உங்களுக்கு ஸ்கூப் கிடைக்குது?''

''சார்! அந்த போலி மார்க் சர்ட்டிஃபிகேட்டு விவகாரம் நீங்க வெளியே கொண்டு வந்ததுதானே?''

''சார்! அந்தப் பொலிட்டீஷியன் ஸ்டுடன்ட்டை மிரட்டினது நீங்கதானே வெளியே கொண்டு வந்தீங்க'' என்று விதவிதமான கேள்விகள்.

''ஏன்... சார்? உங்க போட்டோ மட்டும் வரமாட்டேங்குது?'' என்றார்கள்.

''அது... உங்களுக்காகத்தான். நான் இன்னாரென்று வெளியே தெரிஞ்சா... எங்களுக்குத் தகவல் சேகரிக்கறத இடைஞ்சலாயிடும். அதனால்தான்'' என்றான் விக்ரம்.

''இப்பக் கூட உங்களோட கொஞ்சம் சுவாரசியமாய் பொழுது போக்கலாம்னு வந்தேன். அபிநயா மேடம் சொல்லிட்டாங்க ப்ளீஸ்! நீங்க நீங்களா இருங்க.. என்னைக் கண்டுக்காதீங்க'' என்றான்.



இருந்தாலும் அனைவரது பார்வையிலும் ஒரு மரியாதை தெரிந்ததைப் பார்த்து அபிநயாவுக்கு ஒரே ஆச்சரியம்.

''சார்! நீங்க அங்கங்கே குடுக்கற துணுக்குகள் எல்லாம் எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். சார் மண்டையில் அடிச்ச மாதிரி போட்டுத் தாக்கிடறீங்க.. சார்'' என்றார்கள்.

அப்போது இன்னொரு உண்மையும் சொன்னார்கள். ''சார், நாங்க பத்து பேர் ஃபிரண்ட்ஸ். இவனுக்கு நிஜமாவே அம்மா, அப்பா இல்லை. நாங்கதான் அவனை பத்திக் கேர் எடுத்துக்கறோம்'' என்றார்கள்.

அந்த மாணவன் சொன்னான். ''ஆமா, சார் இவங்க... என்னைத் தத்தெடுத்த மாதிரி எனக்கு எல்லா ஹெல்ப்பும் செய்யறாங்க. பத்தாவது முடிக்கற வரைக்கும் ஒரு ஆர்ஃபனேஜ்ல வளர்ந்தேன். அதுக்கப்புறம் பளஸ் டூ வந்தப்ப அங்க இருக்க முடியாத சூழ்நிலை. அப்ப இருந்து நாங்க ஃபிரண்ட்ஸ். இதோ இவன் வீட்டு மொட்டை மாடியில எனக்கு ரூம்... குடுத்திருக்காங்க.. எந்த வீட்ல வேண்ணாலும் நுழைஞ்சு சாப்பிட்டுக்குவேன்...'' என்றான் நெகிழ்ச்சியுடன்.

விக்ரமாதித்யன் மனம் நெகிழ்ந்தான். 'அபி...' என்று அருகில் அழைத்தான்.

''அபி! இதையே மெய்னா வச்சு, மத்த கலாட்டாக்களை மசாலா... மாதிரி கூடச் சேத்துக்கோ'' என்றான் ஆலோசனை போல்.

அதற்குப் பிறகு அந்த பேட்டி ஒரு சின்ன பார்ட்டி மாதிரி ஆகிப் போனது. புறப்படும்போது அந்தப் பையனை அழைத்து ''நீ எப்ப வேண்ணா என்னை வந்து பார்க்கலாம். ஏதாவது ஹெல்ப் வேண்ணாக் கேளு'' என்றான்.

''சரிங்க... சார்!'' என்றான்.

இளைஞர்களோடு அவனும் சமமாகச் செய்த கிண்டல். அள்ளி வீசிய ஜோக்குகள். இடையிடையே தனது அனுபவங்

களைச் சுவாரசியமாய் சொன்ன விதம் எல்லாமும் அபிநயாவின் கவனத்தை முழுவதுமாகக் கவர்ந்தது.

கடைசியிலே சொன்னான் ''ஆக்சுவலா... இது அபிநயா மேடத்தோட... டொமெய்ன். இதுக்குள்ளே என்னை நுழைச்சுட்டீங்க' என்றான்.

கதவுக்கருகில் போகிற போது ஒரு மாணவன் கேட்டான்.

''சார்! ரெண்டு வாக்கியத்துல வாழ்க்கை முழுக்க நினைச்சுக்கற மாதிரி கொஞ்சம் சீரியஸா ஏதாவது சொல்லுங்க.., சார்'' என்றார்கள்.

'வாழ்க்கையை அதன் போக்கில் அனுபவித்து வாழ்

வாழ்க்கை ஆனால் எதற்காகவென்றும் யோசி.'

'பிரில்லியன்ட் சார்!' என்றார்கள். யார் சொன்னது சார் இது.

''விக்ரமாதித்யன்'' என்றான்.

அதற்குள் அபிநயாவின் பக்கம் வந்து நின்ற ராணி சொன்னாள்.

''ஏய், உங்க சார், ரொம்ப ஸ்மார்ட்டா... டக்கரா இருக்காரு இல்லே!''

அபிநயா புன்னகைத்துக் கொண்டாள். இதுவரையில் தங்களது பத்திரிகை விஷயங்களையே யோசித்துக் கொண்டிருந்ததில் விக்ரமாதித்யன் நல்ல அழகு என்று ஏன் தான் கவனிக்கவே இல்லை என்று எண்ணிக் கொண்டாள்.

அதே நேரம் விக்ரமாதித்யன் குரல் சூடாக வந்தது.

''அபி! இந்த மாதிரி சில்லியான வேலையெல்லாம் செய்யாதே...'' என்று.

அபிநயா விழித்தாள். அவன் கண்களில் நிஜக் கோபம் தெரிந்தது.





10

''என்னம்மா... செஞ்சே! விக்ரம் ரெண்டு நாளா உன்கூட எங்கயும் போறதையே அவாய்ட் பண்ற மாதிரித் தெரியுது'' என்றார் சக்கரவர்த்தி.

''அப்பா! அந்த 'ஸ்டூடன்ட்ஸ் கவாட்டா'' என்று.

''ஒண்ணு நான் பண்ணினேன் இல்லே. அப்ப வச்ச ஸ்டூடன்ட்ஸ்க்கு விக்ரம் யாருன்னு சொல்லிட்டேன்னு கோபம்'' என்றாள்.

''ஓ! ஆமா, அது அவனுக்குப் பிடிக்காத விஷயம்'' என்றார்.

''என்னப்பா... இது? அவரு நமக்குக் கீழே வேலை செய்யறாரா.. இல்லே... நாம...'' என்னும் போதே.

''நீ அவனுக்குக் கீழேதான் வேலை செய்யறே!'' என்றார் அப்பா அலட்டிக் கொள்ளாமல்.

''சரி.. நான் இருக்கட்டும்... நீங்க?''

''இங்க... பாரும்மா'' விக்ரமைப் பொறுத்தவரை அவன் யாருக்கும் கீழே வேலை செய்யற ஆள் இல்லே. எனக்காகத்தான் இந்தப் பத்திரிகையில கமிட் ஆயிருக்கான்'' என்றார்.

''ஐயோ! பெரிய இது!'' என்றாள் அபிநயா.

''அம்மா! அவனைப் புரிஞ்சுக்கோ. அவனுக்கு நல்ல பத்திரிகை மூளை. எதிக்ஸ் இருக்கு. புகழ்மேல ஆசை கிடையாது... உனக்கும் நல்ல டேலண்ட் இருக்கு. அதனால நான் உன்னை ஸ்ட்ரீம் லைன் பண்றதுக்கு அவனுக்குக் கீழே போட்டிருக்கேன். கொஞ்சம் அடங்கி நடந்து அவன்கிட்டே நிறையக் கத்துக்கோ'' என்றார்.

''ஓ.கேப்பா! அது நான் மாட்டேன்னு சொல்லலியே ஆனா, அவருக்கு என்னப்பா... இப்படிக் கோபம் வருது.''

''ஆமா... உன்னை அவன் தலையில கட்டினதே அவனுக்குப் பிடிக்கலே. ஆனா, இதைவிட்டா.. உனக்கு பெட்டர் சான்ஸ் கிடையாது'' என்றார்.

''அப்ப.. சரி! நான் என்ன பண்ணட்டும்'' என்றாள்.

''நீ ஆபீசுக்கு வா. இப்ப இந்த இன்டர்வ்யூக்கு போயிட்டு வந்த மேட்டரை ட்ரிம் பண்ணி இஷ்யூவுக்கு ரெடி செஞ்சு பொறுப்பாளர்கிட்டே குடு. அதுக்குள்ளே அந்த ஆக்டரைப் பத்தி ஏதாவது கலெக்ட் பண்ண முடியுமான்னு பாரு. விக்ரம் உன்கிட்டே இருந்து தப்பிக்கறதுக்காகவே வேற ஒரு பொலிடிக்கல் இஷ்யூ எடுத்துக்கட்டிருக்கான்'' என்றார். ஆனால் கோபமில்லாமல் சிரித்தார்.

அபிநயா சிரித்துக் கொண்டே நகர்ந்தாள். அவர் கண்டு கொள்ளவில்லை.

* * *

''பி.ஏ. சார்! இன்னைக்கு ரகுவீர் சாருக்கு ஷூட்டிங் எங்க நடக்குது? நான் வந்து பாக்கலாமா?'' என்று கொஞ்சலாகக் கேட்டாள் அபிநயா.

''அபி... மேடம்! பொதுவா ஃபைட்டிங் சீன் எடுக்கும் போது பார்வையாளர்களையோ, விசிட்டர்களையோ அலோவ் பண்ண மாட்டார். எதுக்கும் கேட்கறேன்'' என்றான்.

''அதெல்லாம்... நான்னு சொன்னா.. பர்மிட் பண்ணுவார்'' என்றாள்.

அவள் சொன்னதே நடந்தது.

அபிநயாவை அனுமதித்தார் ரகுவீர்.

ஃபைட்டிங் சீன் எடுக்கப்படுகிற விதம் பார்த்து அவளுக்குப் போரடித்தது.

மெதுவாக பி.ஏ. விடம் பேச்சுக் கொடுத்தாள்.



''ஏன்... பி.ஏ. சார். நீங்க எத்தனை நாளா இவருக்கு பி.ஏ. வா இருக்கீங்க?'' என்றாள்.

''பதினைஞ்சு வருஷமா?'' என்றார் பி.ஏ.

''ருக்மணி மேடம். ரொம்ப அருமையானவங்க இல்லே!'' என்றாள்.

''ஆமா...!'' என்றார். முகத்தில் கனிவு ஏறியது. ரொம்ப நல்லவங்க... ஆனா. என்று நிறுத்தினார்.

அவள் ஆழமாக அவரைப் பார்த்தபடி சொன்னாள். ''சார்... என்னை நம்பலாம். நான் பத்திரிகைக்காரியா இருந்து பேசலை. ஒரு சக மனுஷியா பேசறேன். அவங்க சந்தோஷமா இல்லைன்னு எனக்குத் தோணுது'' என்றாள்.

பி.ஏ. பெருமூச்சு விட்டார். உடனே சிரித்துச் சமாளித்தார்.

''அம்மா! நீங்க எனக்கு வேலைக்கே வேட்டு வச்சிருவீங்க... போல இருக்கு'' என்று.

''இல்ல சார்'' உங்களைப் பத்தி விக்ரம் சார் சொன்னாரு. பி.ஏ. ரொம்ப நல்லவர். அவர்கிட்டே நீ எதுவும் பேசலாம்னு.. அதான் தைரியமா உங்கிட்டே பேசறேன்'' என்றாள்.

பி.ஏ. மறுபடியும் பெருமூச்சு விட்டார். ''அம்மா! நல்ல சம்பளம் குடுக்கறார். குடும்பத்தைக் கவலையில்லாமல் வச்சுக்க முடியாது. அதான் இருக்கறேன்.'' என்றவர் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தார். பிறகு சொன்னார்.

''ஆமா! ருக்மணியம்மா..பாவம்தான். இந்த ஆள்கிட்டே சிக்கிகிட்டு ரொம்ப அவஸ்தைப் படறாங்க... முதல்ல இவரு இப்படிவெல்லாம் இல்லம்மா. ஆரம்ப காலத்துல ரொம்ப கஷ்டப்பட்டிருந்தப்ப ருக்மணியம்மாதான் இவருக்கு சோறு போட்டாங்க. கொஞ்சம் வசதியானவங்கதான் வீட்டை விற்று, நகையை வித்துக் குடும்பம் நடத்தினாங்

நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாம சான்ஸ் தேடுங்க... உங்களுக்குத் திறமையிருக்கு. நல்லா வருவீங்கன்னு எல்லா விதத்துலயும் சப்போர்ட் குடுத்தாங்க. அவர்களுக்கு என்னைத் தெரியும். அப்ப நான் ஒரு பெரிய நடிகர்கிட்டே பி.ஏ. வா இருந்தேன். ரகுவீர் முதல்முதலா ஃபேமஸானாரே அந்தப் படத்துக்கு சான்ஸ் நான்தான் வாங்கிக் குடுத்தேன். ஆனா, சமீப காலமாக வயசு கிட்டத்தட்ட நாப்பது ஆனவுடனே மனுஷனுக்கு ரொம்பப் புத்தி மாறிப்போச்சு. கிறுக்குப் புத்தியாயிருச்சு..." என்றார்.

அபிநயா அப்போது சொன்னாள். "சார்! கொஞ்சம் கோபம், ஃபேம்னு இருக்கறதுதான். இவரு அந்தம்மாவை பண்றதுக்குப் பேரு டார்ச்சர்" என்றாள்.

"ஓ! நீங்க பார்த்தீங்களா?" என்றார்.

"ஆமா சார்! நீங்கள்ளாம் இதுக்கு ஒன்னும் பண்ண முடியாதா?"

"எங்கம்மா பண்றது? என்னத்தைப் பண்ண முடியும்! ஒவ்வொரு தேர்தல்லயும் இவரு ஆதரவு குடுக்கற கட்சிதான் ஜெயிக்குது. இளைஞர்கள் இவரு மேல அவ்வளவு பைத்தியமா இருக்காங்க. இவரு இப்படின்னு சொன்னாலே விவகாரமா ஆயிடும்" என்றார்.

"ஆனா, அப்பா... ஏதோ ஸ்டெப் எடுக்கறதா இருக்கார்" என்றாள். விவரம் சொன்னாள்.

"அம்மா.. அதைச் செய்யம்மா! அந்த டைரக்டர் சொன்னா இவரு நிச்சயம் கேப்பாரு. அப்படி மட்டும் நடந்துச்சன்னா, எங்கம்மாவுக்கு விடிவு காலம் பொறக்கும்" என்றார்.

கண்கள் கலங்கின. பிறகு தழுதழுத்த குரலில் சொன்னார்.

"ருக்மணி ஒரு விதத்துல எனக்கு சிஸ்டர் முறையா கணும். என்னால முடிஞ்சது. அப்பப்ப ஏதாவது செலவுக்



கணக்குக் காட்டிட்டு அவங்க கைச்செலவுக்குன்னு ஏதாவது பணம் குடுப்பேன். இந்த ஆள் எப்படின்னு... வீட்டு வேலைக்காரங்களுக்குக் கூடத் தெரியாது. அவங்க முன்னாடி என்னவோ ருக்மணிய ரொம்ப முக்கியத்துவம் குடுத்து வச்சிருக்கிற மாதிரிக் காட்டிக்குவாரு ஆனா, எல்லாமே ரெட்டை வேஷம்' என்றார்.

அதற்குள்ளாக ஷூட்டிங் இடைவேளை வந்தது. ரகுவீர் வேனை நோக்கிப் போனான்.

பி.ஏ. அவசரமாக நகர்ந்தார். "அம்மா! ஷூட்டிங்குக்கு பர்மிட் பண்ணினதே பெரிய விஷயம். காரவான் பக்கமாகப் போயிராதீங்க... பிடிக்காது" என்று சொல்லி விட்டுப் போனார்.

பேசாமல் போயிருந்தாலாவது அபிநயா அதைப் பத்தி யோசிக்காமல் இருந்திருப்பாள். ஆனால், பி.ஏ. இப்படி சொல்லி விட்டுப் போகவே அவளுக்குள் வழக்கமான த்ரில் கனலாக மூண்டது.

கண்டிப்பாக உள்ளே என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்காவது என்று முடிவு செய்து கொண்டாள்.

பெரியதொரு பூகம்பம்... காத்திருக்கிறது என்பதை அறியாமல்.

விக்ரமாதித்யன் லைப்ரரியில் பழைய பத்திரிகை ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தான். ஒரு முக்கியமான விஷயத்துக்காக.

கிடைத்தது. குறிப்புக்கள் எடுத்துக் கொண்டு. எழுந்து வெளியே வந்த போது அபிநயா வந்தாள்.

"குட் மார்னிங் சார்!" என்றாள்.

"குட் மார்னிங்" என்றான். "எங்கே லைப்ரரி பக்கமெல்லாம் வர ஆரம்பிச்சுட்டே" என்றான் லேசான புன்னகையுடன்.

''லைப்ரரியில நீங்க இருக்கறதாச் சொன்னாங்க. அதனால வந்தேன்'' என்றாள்.

குறிப்பு நோட்டைக் கையில் வைத்துக் கொண்டு தனது அழுத்தமான அலட்டிக் கொள்ளாத நடையுடன் வந்தான்.

அவளும் சேர்ந்து கொண்டாள்.

''என்ன சார்! என்னை இப்படி அவாய்ட் பண்ணிட்டீங்க. உங்க பாலிஸி எனக்குத் தெரியாமப் போச்சு'' என்றாள்.

அவன் கண்கள் சுருங்கி விரிந்தன. பிறகு முகம் மலர்ந்து சிரித்தான்.

''சேச்சே! அவாய்ட் பண்ணனும்னெல்லாம் நினைக்கலே. அப்படி அமைஞ்சு போச்சு'' என்றான்.

''சார்! ஒரு சுவாரசியமான விஷயம் நடந்துச்சு தெரியுமா? நான் நேத்து ரகுவீரோட ஃபைட்டிங் சீன். ஷூட்டிங் பார்த்தேன்'' என்றாள்.

''ரொம்ப நொந்து போயிருப்பியே. அடிக்கறதெல்லாம் வேற ஆளு. சும்மா கையைக் காலை ஆட்டறதுதான் இவரோட வேலைன்னு தெரிஞ்சுருக்குமே'' என்றான்.

''அதுதான்... இல்லை! ஃபைட்டிங் சீன்ல அவரு சும்மா அடி அடின்னு தாக்கறாரு... தெரியுமா?''

''ஏதாவது டூப்பைக் கீப்பைப் பார்த்து ஏமாந்துருப்பே.''

''இல்லை... விக்ரம் சார்! அவரேதான். இன்ட்ரஸ்டிங்கான விஷயம் என்னன்னா... ஃபைட்டிங் சீனுக்கு முன்னாலே கொஞ்ச நேரம் வேனுக்குள்ளே போய் ஏதோ எக்ஸர்சைஸ் எல்லாம் பண்றாராம். சும்மா... கும்முனு வர்றாரு. தெரியுமா?''

நடந்து கொண்டிருந்தவன் நின்று அவளைப் பார்த்தான்.

''ஹேய்!'' என்றான்.

''அது மட்டுமில்லே! ஃபைட்டிங் சீன்ல எல்லாம் மட்டும் ஒரே ஷெட்யூல்ல முடிப்பாராம். அதுக்கு மட்டும் முன்னா



டியே டைம் குடுத்து சொல்லணுமாம். ஏதோ தியானம். யோகா, எல்லாம் பண்ணிட்டு சும்மா இளமையாய் வந்தார். அந்தப் படம் எடுக்கும்போது மட்டும் யாருகிட்டயும் பேசறது கூட இல்லை. செம கான்ஸன்ட்ரேஷன்...'' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

''அபி! தொழில் சுத்தத்தில் அவரை அடிச்சுக்க ஆள் கிடையாது. வெரி ஸ்ட்ரிக்ட். ப்ராம்ப்ட்'' என்றான். ஆனால் மறுபடியும் சிந்தனையுடன் சொன்னான். ஆனால்,

''இதென்னவோ மேஜிக் மாதிரி இருக்கு'' என்றான்.

''சரி... இப்ப... இதையும் உன்னோட சப்ளிமென்ட்ல சேத்திக்கப் போறியா?''

''கண்டிப்பா!' ஆனா, பி.ஏ. சொல்றாரு. அம்மா இந்த மட்டும் பர்மிஷன் கொடுத்ததே பெரிய விஷயம். நீ பாட்டுக்கு இதையெல்லாம் போடாதே. ரொம்பக் கோபம் வந்துரும்''னு வேற சொல்றாரு.

''சரி விட்ரு''

''அதெப்படி விடறது?'' என்றாள் அபிநயா சீரியஸாக.

''அதானே... யாரும் ஏதாவது சொன்னால் அதை எடுத்து கிட்டு செய்யணும். மீறிகிட்டு செய்யணும். அப்பதானே உனக்கு மனசு நிம்மதியாகும்'' என்றான் சற்றே எரிச்சலுடன்.

அவள் பாவமாகப் பார்த்தாள். அதற்குள் அலுவலகம் வந்திருந்தார்கள்.

''சார்! காரவானுக்குள்ளே நம்ம நடிப்புக் கடல் எக்ஸர் சைஸ் செய்யும் போது நாலு ஆக்ஷன் ஷாட் எடுத்து போட்டா எப்படி 'கிளிக்' ஆகும்.''

அவன் சிரித்தான்.

'போட்டா 'கிளிக்' பண்ணி எதையாவது மேட்டர் கிளிக் பண்றேன்னாறேன். சரி... செய்... பட் பி கேர்ஃபுல்' என்னா,

நான் வரமாட்டேன். ''நீதான் தனியா ஹேண்டில் பண்ண ணும்'' என்றான்.

''ஏன், சார்!'' என்றாள் ஏமாற்றத்துடன்.

''ஒரு காரணம், நான் பொங்கலுக்காக ஊருக்குப் போறேன். இன்னொரு காரணம் நான் ஷூட்டிங்குக்கு வந்தா உங்க நடிப்புக் கடவுளுக்குப் பிடிக்காது'' என்றான்.

''அது ஏன் சார்... அப்படி?'' என்றாள்.

''ஏன்னா, அந்தாளோட வீக் பாயின்ட்ல அடிச்சிருக்கேன். ஒரு குடும்பத்துப் பொண்ணுகிட்டே கிராஸ் பண்ணப் பார்த்தான். சரியான ஆள் மூலமா மிரட்டிட்டேன். அந்தா ளோட தப்புக்களை சாட்சியங்கள் எல்லாம் என்கிட்டே பத்திரமா இருக்க. எப்ப வேண்ணா நான் அதை பெரி தாக்கிடுவேன்கற பயம் அந்த ஆளுக்கு இருக்கு'' என்றான்.

''ஓஹோ! அப்படியா விஷயம்?'' என்றாள்.

''மறுபடியும் சொல்றேன். இப்ப உன் மேல அவருக்கு ரொம்ப மதிப்பு இருக்கு. அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்க. அதுமட்டும் இல்லே. உங்கப்பாவுக்கும் உன்னைப் பத்தி ரொம்பக் கவலை இருக்கு. எடுத்தேன். கவிழ்த்தேன்னு ஏதாவது செஞ்சு வைக்காதே'' என்றான்.

''போங்க சார்! அந்தக் கிழவனைப் பத்திப் பேசாதிங்க'' என்றாள் கோபம் போல.

''ஏன்?'' என்றான் கண்களில் சிரிப்புடன். அவள் கிழவன் என்று குறிப்பிட்டது குறித்த சிரிப்பு.

''பின்னே! யாரோ விக்ரம்னு ஒரு ஆளாம். அந்த ஆள் என்கிட்டே சும்மா கோபிச்சுக்கறாரு. ரொம்ப மிரட்ட றாருன்னு கம்ப்ளெயின்ட் பண்றேன். கொஞ்சமாவது கன்சிடர் பண்ணனும் இல்லே அத வுட்டுட்டு அவனைப் பத்தியும் எனக்குத் தெரியும். உன்னைப் பத்தியும் எனக்குத்



தெரியும். அவன் இந்த அளவுக்கு உனக்கு ஹெல்ப் பண்றதே பெரிய விஷயம். ஒழுங்கா அவன்கிட்டே தொழில் கத்துக் கறதானா... இரு... இல்லேன்னா... போங்கறாரு. என்ன சார் அப்பா! இவரு!'' என்றாள் ரொம்பவும் சலித்தவள் போல.

விக்ரமாதித்யன் கலகலவென்று சிரித்தான்.

''புரிஞ்சுது இல்லே! பாத்து நடந்துக்க. இங்க பார் நான் என்ன சொல்றேன்னு அதைப் புரிஞ்சுக்க. நான் ரொம்ப ஆபத்தான விஷயங்களையெல்லாம் வெளியே கொண்டு வந்திருக்கேன்னு உனக்குத் தெரியாது! இன்னமும் அது மாதிரிக் கடமைகள்ளாம் எனக்கு இருக்கு. அதனால தனிப் பட்ட முறையில என்னோட புகழ் வெளியே வர்றதை விரும் பலை. அது எனக்கு இடைஞ்சலா இருக்கும். அதுமட்டு மில்லே. நீ எடுத்த அந்தப் பேட்டியை நான் ரொம்ப ரசிச்சுகிட்டிருந்தேன். ரொம்ப லைவ்லியா இருந்தது. திடீர்னு நீ எனக்குப் பிடிக்காத அந்தக் காரியத்தை செஞ்சிட்டே'' என்றான்.

''ஐ ம் சாரி! நான் அதை ஒரு பெருமையா நினைச்சுகிட்டு செஞ்சுட்டேன்'' என்றாள்.

''ஓ.கே.! ஓ.கே... ஃபர்கெட் இட். உனக்காக இல்லட் டாலும் நீ ஒரு நாளைக்கு ரசம் வச்சுக்குடுத்தியே. அந்த ரசத்துக்காக உன்னை மன்னிக்கறேன்'' என்றான்.

அவள் சிரித்தாள்.

அவன் திடீரென்று நினைவு வந்தவன் போல் ''அபி! பாரிஜாதம் ஆன்ட்டிக்கு. நீ ரசம் வச்சுக்குடுத்தே. ரொம்ப டேஸ்ட்டா இருந்தது. மறுநாள் சாம்பார் கூட வச்சேன்னு சொன்னா. நம்பிக்கையே வர்லை. விவேக் கிட்டே என் போன் நம்பர் வாங்கி பேசினாங்க. ''நிஜமா... தம்பி! என

மகளுக்கு சமைக்கவே வராதுன்னில்லே நான் கவலைப்பட்டுட்டிருக்கேன்னு ரொம்ப ஆச்சரியம்'' என்றார்.

''அது கிடக்குது. அது இன்னொரு கிழவி. என்னைக் கல்யாணம் கட்டி பேக் பண்றதிலேயே இருக்குது. சே... யாருக்குமே இங்கே என்னோட வால்யூவே புரிய மாட்டேங்குது'' என்று போலியாக அங்கலாய்த்தாள்.

உடனே விக்ரம் ''ஏம்மா... அப்படியெல்லாம் நினைக்கறே! உன்னோட வேல்யூவெல்லாம் புரிஞ்ச ஆளு நான் இருக்கேம்மா... நிஜம்மாத்தான் அபி. அந்தப் பேட்டி ரொம்ப அருமையா இருந்தது. நான் அப்பாகிட்டே கூட சொன்னேன். ஏதாவது ஒரு டெலிவிஷன் சானல்ல ஒரு ஸ்லாட் வாங்கி இந்த மாதிரி நிகழ்ச்சிகள் அப்பப்ப லைவ்வா டெலிகாஸ்ட் செய்யலாம்னு'' என்றான்.

அவள் நெகிழ்ந்து போனாள். ''தாங்க்ஸ். விக்ரம் சார்! ஆனா, நானும் உங்களோட பாணிக்கே வந்துட்டேன். செய்திதான் முக்கியம். செய்தியாளர் இல்லேன்னு'' என்றாள்.

''தட்ஸ் குட்'' என்றான்.

மறுபடியும் ஆவலாக நிமிர்ந்து.

''அதான் இப்பப் பாட்ச் அப் ஆயிருக்கில்லே. அப்புறம் என்ன? நீங்களும் ஷூட்டிங்குகளுக்கு வாங்களேன்?'' என்றாள்.

''இல்ல அபி! ஃபைட்டிங் ஷூட்டிங் நடக்கும் போது அவங்க யூனிட் ஆட்கள் மட்டும்தான் இருப்பாங்க. நான் வந்தாத் தெரிஞ்சுரும். அவசியம் ஏற்படும்போது கண்டிப்பா வருவேன். ஓ.கே.'' என்றான்.

''சரி'' என்றாள் அரைமனதாக. அடுத்த முறை வரும்போது அவன் எப்படி வரப் போகிறான் என்று தெரிந்திருந்தால் அவள் அப்போதே வாய்விட்டு சிரித்திருப்பாள்.





11

'சித்தப்பா... நீ ரொம்ப ஃபேமஸ் பத்திரிகையாளராம். ஆனா, உன் போட்டோ மட்டும் பத்திரிகையில வரமாட்டேங்கறது' என்றாள் சுரபி.

'போட்டோ எதுக்கும்மா வரணும்? விஷயம் வந்தாப் போதாதா?' என்றான் விக்ரமாதித்யன்.

''ஏன்டா! மாசத்துக்கொருநாள் வந்துட்டுப் போகப்படாதா?'' என்றார் அம்மா சரஸ்வதி.

''அம்மா வரணும்னுதான் நினைக்கிறேன். ஆனா டைம் கிடைக்கறதில்லே. ஏதாவது ஒருநாள் கிடைச்சாத் தூங்கத்தான் தோணுது. இங்கே வந்தாலும் அதைத்தான் செய்வேன். உங்களுக்கு வருத்தமாகும். வந்ததே ஒரு நாளைக்கு இங்க தூங்கிட்டுப் போறானேன்னு நினைப்பீங்க...'' என்றான்.

அம்மா. அவனை ஆதங்கத்துடன் பார்த்தார். ''சரி... அப்படியாவும் வந்துட்டுப் போடா. நாங்க கண்ல பாத்துக்குவோம். இல்லே, இன்னும் நான் இவரை விட்டுட்டுத் தனியா வந்ததில்லையேடா. இவரைக் கூப்பிட்டா இவரு விதை வாங்கணும். உரம் வாங்கணும் லொட்டு லொசுக்குன்னு ஏதாவது சொல்றாரு. என்னோட மனக்கஷ்டம் யாருக்கும் புரியமாட்டேங்குது'' என்றார்.

விக்ரமாதித்யனும் அவனது சகோதரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

''உங்களுக்கென்னடா, வாழ்க்கை லட்சியம்னு ஏதேதோ சொல்றீங்க... ஆனா, என்னோட கவலையெல்லாம் புரியலை. இந்நேரத்துக்கு வயித்துக்கு சாப்பிட்டானா! ங்கறது தான். ஹோட்டல்லே சாப்பிடறானே உடம்புக்கு ஒத்துக்குதோ. இல்லையோங்கறதுதான்'' என்றார் கண்களில் கண்ணீர் வழிந்தது.

விக்ரமாதித்யன் எழுந்து சட்டென்று அம்மாவைத் தோளோடு சேர்த்துக் கொண்டான்.

''என்னம்மா... நீ! இப்படி ஃபீல் பண்றே! எனக்கு சாப்பாட்டுக் கவலையெல்லாம் ஒண்ணுமேயில்லை. எங்க ஆபீஸ் கேண்டீன்ல வீட்டு சமையல் மாதிரியேதான் சமைக்கறாங்க. அதுவும் சுத்தமா... நான் வீட்ல இருக்கும்போது சாதம் மட்டும் வடிச்சுக்குவேன். அக்கம் பக்கத்துக்காரங்க எல்லாரும் குழம்பு, காய்ன்னு குடுத்துடுவாங்க. ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்'' என்று தேற்றினான்.

''அதெல்லாம்.... சரி... என்னைக்குடா உனக்குன்னு ஒருத்தி வர்றது?'' என்றார்.

''அம்மா... எனக்குன்னு ஒருத்தி பார்க்கறது அவ்வளவு சுலபமில்லேம்மா. நான் பத்திரிகைக்காரன். நினைச்சாப் போவேன் நினைச்சா வருவேன். சில நாளைக்கு ரெண்டு மூணு நாளைக்குக்கூட ரூமுக்குப் போக மாட்டேன். அப்படியிருக்கப்போ... ஒரு பெண்ணைக் கல்யாணம் செஞ்சு என்ன செய்யறது. அவளைக் கவனிக்க வேண்டாமா! கவலைப்படாதம்மா எனக்கேத்த மாதிரிப் பொண்ணு வந்தா கண்டிப்பாய் பண்ணிக்கறேன்'' என்று தேற்றினான்.

மேலும் அம்மாவிடம் வேடிக்கை பேசி அவர்கள் மனம் ஆறுதலடையச் செய்தான்.

விக்ரமாதித்யன் குடும்பத்தின் கடைசிப் பையன். சகோதரன் தஞ்சாவூரில் டாக்டராகப் பிராக்டீஸ் செய்து கொண்டிருந்தான். சகோதரனுக்கும் இவனுக்கும் இடையே பத்து வயது இடைவெளி. இடையில் சகோதரி. அவளது கணவன் மிராசுதார். அதோடு கூட உர வியாபாரமும் செய்தார்கள். தஞ்சாவூரில் இருந்து பத்து மைல் தொலைவில் இருந்தார்கள்.



டாக்டர் பிரகாஷ் பிராக்டீஸுக்கு வசதியாகத் தஞ்சாவூரில் இருந்தான்.

விக்ரமாதித்யனின் கிராமம் தஞ்சாவூரில் இருந்து பத்து மைல் தூரத்தில்தான் இருந்தது. மற்ற இருவரையும் அம்மா பார்க்க வேண்டுமென்று நினைத்தால் காரில் போய் வந்து விடுவார். அல்லது அவர்கள் வந்து விடுவார்கள்.

விக்ரமாதித்யனை மட்டும் அடிக்கடி பார்க்க முடியவில்லை என்பது அவருக்குப் பெரிய குறை... எந்தவிதமான உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் இந்த உரையாடலைப் பார்த்துக் கொண்டிருந்தார் நீலகண்டன். ஆனால் கண்களில் கனிவு தெரிந்தது.

''அம்மா! அப்பா விவசாயம் பாத்துக்கறாங்க... நான் கொஞ்ச நாள் வெளியுலகம் பாத்துட்டு அப்புறம் நம்ம ஊருக்கே வந்துடுவேன். இங்கதான் செட்டிலாவேன் போதுமா?'' என்றான்.

''ஆமா நாப்பத்தஞ்சு வயசுக்கு மேல'' என்றாள் சுரபி டாக்டரின் மகள்.

சூர்யகலா அவன் சகோதரி சிரித்தாள். பிறகு சொன்னாள்.

''அம்மா! நாமதான் இங்கயே குண்டு சட்டிக்குள்ளே குதிரை ஓட்டின மாதிரி இருக்கோம். அவனாவது உலகம் தெரிஞ்சுக்கட்டுமே'' என்றாள்.

''ஆமாடி... இவன் உலகம் தெரிஞ்சுக்கப் போயிருக்கானா? உலகத்துக்கு இவன் என்னன்னத்தைத் தெரிய வைக்கப் போறானோ... தெரியலை... இவனைப் பத்தி ஒவ்வொருத்தரும் சொல்றதைக் கேட்டா. வயிறே கலங்குது'' என்றாள் புஷ்பா.

''அம்மா! நீ பேசறதைத் தெரிஞ்சவங்க யாராவது கேட்டா... என்னைப் பேட்டை ரௌடின்னு முடிவு கட்டிடுவாங்க...'' என்று சிரித்தான் விக்ரமாதித்யன்.

"ஆமடா! பின்னே? உனக்கு எதுக்கு எந்த 'இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிஸம்' பேசாம இன்ஃபர்மேஷன் ஜர்னலிஸம்னு போயிரலாம் இல்லே!" என்றாள் அக்கா சூர்யகலா.

"அக்கா... கொஞ்ச நாள் இதுல இருப்பேன். சலிப்புத் தட்டினா... மாறிக்கறேன்" என்றான்.

விக்ரமாதித்யனின் தாத்தா ஜோதிலிங்கம் பிள்ளை, பெரிய சுதந்திரப் போராட்ட வீரர். அவர் சுதந்திரப் போராட்டத்தில் குதித்த போது அவருக்கு இருநூறு ஏக்கர் நிலத்துக்கு மேலே இருந்தது. ஆனால், வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலே தனிநபர் சத்தியாக்கிரகம் செய்தார்.

சுதந்திரப் போராட்ட இயக்கத்துக்காக நிறைய கைக்காசைச் செலவழித்தார். ஒரு வழியாக சுதந்திரம் கிடைத்தபோது அவருடைய குடும்பத்துக்கென்று மிஞ்சிய நிலம் ஒரு நாப்பது ஏக்கர் மட்டுமே.

போராட்ட காலத்தில் குடும்பத்தைக் கவனிக்காமலே விட்டு விட்டார். அதனால் மகன் நீலகண்டன் குடும்பப் பொறுப்பேற்க வேண்டி வந்தது... ஆனால், ஏனோ சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்பு மனம் தளர ஆரம்பித்து விட்டார்.

காந்தியடிகளின் மறைவு அவரது நெஞ்சில் கத்தி போல் பாய்ந்தது. அப்போது அவருக்கு அறுபது வயது. அதற்குப் பிறகு நாட்டில் படிப்படியாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் அவரைக் கவலைக்குள்ளாக்கியது.

மெல்ல உடல்நிலைக் குறைவு ஏற்பட்ட போதும் எண்பதாவது வயதில்தான் காலமானார். சுதந்திரப் போராட்டத்திலேயே கவனம் இருந்ததாலோ என்னவோ முப்பத்தேழு, முப்பத்தெட்டு வயதிலேதான் நீலகண்டன் பிறந்தார்.

நீலகண்டனின் தாயார் குடும்ப பாரம் சுமந்தாலும் அவருக்கு விவசாயம் செய்ய முடியவில்லை. நிலங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து நாற்பது ஏக்கர் என்கிற



அளவில் நிற்கிற போது நீலகண்டன் பொறுப்புக்கு வந்தார். ஆனால் அதற்குப் பிறகு அவர் குடும்பத்தின் நிலைமையை மெல்ல மெல்லச் சீர்படுத்தினார்.

இருபத்தி ஐந்து வயதிலே அவருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். பிரகாஷும் சூர்யகலாவும் படிப்பு, படிப்பு என்று இருந்தார்கள். ஆனால், விக்ரமாதித்யன் பத்து வயது வரை அவர் இருந்தார்.

சிறு வயதிலே அவனிடம் சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் சுவாரசியமாகச் சொல்வார்.

காந்தியடிகள் ஒரு சமயம் தமிழ்நாட்டுக்கு வந்தபோது நிதி திரட்டினாராம். அப்போது ஒரு மாநாட்டு முடிவிலே உண்டியலை எடுத்துப் பிரித்துப் பார்த்தார்கள். அதிலே ஒரு பெண்மணி தனது காதோலையைக் கழற்றிப் போட்டிருந்தாராம். அந்தக் காலத்திலே வசதியில்லாதவர்கள் ஒரு ஓலையைச் சுற்றி காது ஓட்டை அடையாமலிருக்க காதணி போலப் போட்டுக் கொள்வார்களாம். சில பேர் அந்த ஓலையைச் சுற்றி ஒரு கம்பியாக ஒரு வளையம் போட்டிருப்பார்கள். அதற்கு மிகச் சிறிய அளவே தங்கம் தேவைப்படுமாம். அப்படிச் சொற்பத் தங்கத்தாலான அந்தக் காதோலையையும் கூடக் கழற்றிக் கொடுத்திருந்ததைப் பார்த்த காந்தி அந்தக் காதோலையைக் கையில் வைத்துக் கொண்டு சொன்னாராம்.

"நமது சுதந்திரப் போராட்டம் வெற்றி பெறுமென்று எனக்கு இப்போது முழு நம்பிக்கை வந்துவிட்டது" என்று.

ஒன்பது வயதிருக்கும் இந்த விஷயம் கேட்கும் போது, கண்களை அகல விரித்துக் கொண்டு தாத்தா சொல்கிற விஷயங்களை ஒரு வித பரவசத்துடன் கேட்டுக் கொண்டிருப்பான் விக்ரமாதித்யன்.

ஒருநாள் நீலகண்டன் தந்தையிடம் சொன்னான்.

''அப்பா... போதும்ப்பா! இந்தக் குடும்பத்திலே இருந்து நீங்க நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையை செஞ்சுட்டீங்க. அவனை விட்டுடுங்கோ'' என்றார்.

தாத்தா அவரைப் பார்த்துக் கோபப்படாமல் சொன்னார்.

''டேய்! நீலகண்டன் ஒரு தகப்பனா நான் உனக்கு நியாயம் செய்யலே. அதனாலதான் நீ உன்னோட ரெண்டு குழந்தைகளையும் வளர்க்கற விதத்துல தலையிடலே. ஆனா, இந்தப் பையன் பாரதி சொன்னாரே அதுமாதிரி, அ... என்று இவனை என் பொறுப்பிலே விடு நான் உயிரோட இருக்கற வரைக்கும் நாயானைப் பத்தின அக்கறையை அவனுக்குள்ளே வளர்த்துக்கிட்டேதான் இருப்பேன்'' என்று சொல்லிவிட்டார்.

அதேபோல் சுதந்திரப் போராட்டம் என்ற பெயரில் இந்த நாட்டில் செய்யப்பட்ட தியாகங்களையெல்லாம் நெஞ்சுருகும் வகையிலே அவனுக்கு சொல்லுவார். அப்போதே அவனுக்குள் ஒரு வைராக்கியம் இருந்தது. அது மட்டுமல்லாமல் பத்திரிகைத் துறைக்கு போ என்று அறிவுறுத்தியவரும் அவர் தான்.

அந்தக் கனல் அவனுக்குள்ளே இருந்து கொண்டே இருந்தது. மேல் நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவுடன் சட்டம் படித்தான். சட்டப்படிப்பு முடிந்தவுடனே நேரடியாக சக்கரவர்த்தியைச் சந்தித்தான். ஜோதிலிங்கம் பிள்ளையின் பேரன் என்ற ஒரு வார்த்தை மந்திரம் போல வேலை செய்தது.

''ஏம்ப்பா... பேசாம லா பிராக்டீஸ் செய்யலாமே?'' என்றார் சக்கரவர்த்தி.

''கவுன்சில்ல ரெஜிஸ்டர் பண்ணிக்கறேன். பத்திரிகைத் தொழில் பிடிச்சவரைக்கும் செய்யறேன். அப்புறம்.. லீகல் அட்வைஸர் அப்படி இப்படின்னு போயிட வேண்டியதுதான்'' என்றான்.



ஒருமுறை சட்டப் பேரவை அடிதடிகளை அவன் சுவாரசியமாகவும், கிண்டலாகவும் எழுதிய விதம் பார்த்து சக்கரவர்த்தியே அசந்து போனார்.

''இதென்ன சட்டப் பேரவையா? சட்டை பிடிப்பேரவையா'' என்று கேள்வி வேறு எழுப்பியிருந்தான். சக்கரவர்த்தியிடம் விளையாட்டுப் போல் சொல்வான்.

''சார்! எங்கப்பாவுக்கு மூணு குழந்தைங்க. ஒருத்தன் டாக்டரா சர்வீஸ் பண்றான். அக்கா வீட்டுக்காரர் விவசாயியா தன்னோட கடமையைச் செய்யறார். நான் பத்திரிகையாளனாய்க் கொஞ்சம் த்ரில்லாய் இருக்கற வேலையைப் பார்க்கறனே!'' என்று.

சக்கரவர்த்திக்கு அவன் குடும்பப் பின்னணி காரணமாகவும், அவனது சமுதாயக் கவலை காரணமாகவும் அவனை மிகவும் பிடித்துப் போயிற்று. பத்திரிகைத் தொழில் அவன் உள்ளம் கவர்ந்த காதலி போல் ஆகி விட்டதால் அவனுக்கு வேறு நினைவுகளே இதுவரை தோன்றவில்லை. இந்த இருபத்தேழு வயது வரையிலும்கூட.

இந்த நினைவுகள் எல்லாம் உள்ளே ஓட அம்மாவைத் தேற்றினான் விக்ரமாதித்யன்.

''சித்தப்பா! என்னத்துக்குப் பாட்டி இப்படிக் கவலைப்படறாங்க...'' என்றான் சுரபி.

அவனுக்கு இணையாக அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு தொங்கியபடி.

''பாட்டியோட கவலையும் நியாயம்தாண்டா. சுரபி'' என்றான் விக்ரமாதித்யன்.

''அப்புறம்... ஏன் சித்தப்பா.... நீ இங்கே வந்துரு'' என்றான் சுரா.

''வந்தர்லாம்டா... ராஜா... ஆனா... எனக்கு அங்கே வேலை ரொம்பப் பிடிச்சிருக்கே'' என்றான் விக்ரமாதித்யன்.

''சரி... சித்தப்பா... அதை விடு. இப்ப ஏதாவது விளை யாடலாம் வா!'' என்று அழைத்தாள்.

''பொண்ணே! நான் பொங்கல் கொண்டாட வந்திருக் கேன். அதுக்கு ஏதாவது ஹெல்ப் கேளு... பாட்டியைக் கொஞ்சம் குஷிப் படுத்தலாம்... வா!'' என்றான்.

வீட்டின் உள்ளே நுழைந்த போது வீட்டு போன் ஒலித்தது.

''அபி!'' என்றான் புன்னகையுடன்.

அந்தப்புறம் அவள் பேசப் பேச அவன் நெற்றியில் முடிச்சுக்கள் விழுந்தன.

''அபி! ஜாக்கிரதை! பி.ஏ.கிட்டே ஹெல்ப் வாங்கிக்க... பி.கேர்ஃபுல்'' என்று திரும்பத் திரும்பச் சொல்லி விட்டு வைத்தான்.

''அது யார்ரா! அபி'' என்றாள் சூர்யகலா குறுகுறுப் பார்வை யுடன்.

சொன்னான்.

அபிநயா செய்கிற குறும்புகளை அவன் சுவாரசியமாகச் சொல்லக் கேட்டு எல்லாரும் கலகலப்பாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

''சித்தப்பா... நிஜமாவா சொல்றே! ரகுவீர் வைஃபை அடிப்பாரா?'' என்றாள் சுரபி. நம்ப முடியாதவளாக.

''அபி வீடியோவே எடுத்து வச்சிருக்கா... தெரியுமா!'' என்றான்.

''ஓ!'' என்றாள் சுரத்தே இல்லாமல்.

சூர்யகலா ஒருவிதக் கவலையான பார்வையுடன் அவனைப் பார்த்தாள்.

''ஏன் தம்பி! எல்லாருமே இப்படி இருப்பாங்களா!'' என்றாள்.



''ஐயய்யோ! அப்படியெல்லாம் இல்லக்கா. வெளிப்படை யான வாழ்க்கை வாழறவங்க எத்தனையோ பேர் இருக் காங்க. ஆனா, எனக்கென்ன எரிச்சல் தெரியுமா இவரு சினிமாவில பாத்தா ஒழுக்கத்தின் சிகரமா வருவாரு. பெரிய அளவில ஏழை பாழைங்களுக்கு உதவி செய்ற மாதிரிக் காட்டி பத்திரிகைகள்ல எல்லாம் வர்ற மாதிரிப் பாத்துக்கு வார்'' என்றான்.

சூர்யகலா... பெருமூச்சு விட்டாள். ''அது சரி! இதெல் லாம் கான்ஃபிடென்ஷியலா வச்சுக்க வேண்டிய விஷய மாச்சே. இதையெல்லாம் எங்கிட்டேயே சொல்லியிருக்கக் கூடாது'' என்றாள்.

''ஆமாக்கா. ஆனா சுரபியோட நோட்புக்ல எல்லாம் அந்த ரகுவீரோட படங்க ஒட்டி வச்சிருக்கா. நம்ம வீட்டுப் பொண்ணு அப்படி பொய்யை நம்பறதை நான் வேடிக்கை பாத்துகிட்டு இருக்க முடியாதில்லே'' என்றான்.

''அது அப்படித்தான்'' என்றாள் சூர்யகலா. பிறகு குபீரென்று சிரித்தாள்.

''பாவம் சுரபி! தம்பி. அவ முகத்தைப் பாத்தியா சுரத்தே இல்லே! அந்த நடிகர்ன்னா ரொம்பப் பிடிக்கும். தெய்வம் மாதிரி நினைச்சுகிட்டிருப்பா'' என்றாள்.

விக்ரம் அவள் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தான்.

''இப்பவும் சொல்றன்டா... சுரபி. நடிப்புல அவரு ரொம்ப கெட்டிக்காரர்தான். அவரு நடிப்பை நாம் எப்பவும் ரசிக்கலாம். தப்பில்லே. ஆனா, நம்ம வேலையை விட்டுட்டு யார் பின்னாடியும் போகத் தேவையில்லே'' என்றான்.

அவன் மறுபடியும் சொன்னான்.

''அக்கா! சுரபி! ரெண்டு பேரும் யாருகிட்டயும் இதைப் பத்திப் பேசறதில்லேன்னு எனக்கு பிராமிஸ் பண்ணுங்க''

செய்தார்கள். சுரபி அந்தப்புறம் எழுந்து போவதைப் பார்த்தவன் திடீரென்று சிரித்தான். ''அக்கா சுரபியை மிரட்டிட்டேன். ஆனா, அபி அந்தாள் பின்னேதான் சுத்திகிட்டிருக்கா. என்னென்ன விஷயத்தைக் கொண்டு வந்து என் தலையில கொட்டப் போறானோ'' என்றான்.

அப்போது அவனுக்குத் தெரியவில்லை. இரண்டே நாளில் பல அதிர்ச்சிகளை அவள் அவனுக்குத் தரப்போகிறாள் என்று.



## 12

''தம்பி நீ உன்னோட சோமுவை ரெடி பண்ணலையா?'' என்றாள் சூர்யகலா.

''ரெடி பண்ணிடுவோம்'' என்றான். முண்டாக ஒன்றைக் கட்டிக் கொண்டு இடுப்பு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு 'சோ' என்ற பெயரில் தங்கள் வீட்டில் வளர்ந்த அந்தக் காளையை விக்ரமாதித்யன் குளிக்கச் செய்தான்.

தேங்காய் நாரால் காளையின் உடம்பு முழுவதையும் தேய்த்து விட்டுப் பளிச்சென்று மின்னச் செய்தான். கொம்புகளையும் கழுவிப் பெயின்ட் அடித்து வைத்திருந்தான்.

கழுத்து மணி கணகணக்க அது தலையை ஆட்டிக் கொண்டு பார்ப்பதே கன கம்பீரமாக இருந்தது. மற்ற ஆட்கள் எல்லாரும் பசு மாடுகளைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

முதல் நாள் சூரியனுக்குப் பொங்கல் வைத்தாயிற்று. இன்றைக்கு மாட்டுப் பொங்கல் கொண்டாட்டம்.

வீட்டுக்கு முன்னால் சாணம் தெளித்து பெரிய பெரிய கோலங்கள் போட்டிருந்தார்கள்.



வீட்டின் உள்ளேயும் அந்தப் பெரிய பழைய காலத்து வீட்டின் முன்கட்டிலும், பின் கட்டிலும் அழகழகாக கோலங்கள் போட்டிருந்தாள் சூரியகலா.

வீட்டுக்கு முன்பாகத்தான் பொங்கல் வைத்தார்கள். நான்கு பக்கமும் சிறிய குழிகள் தோண்டி அதில் மஞ்சள் குங்குமம் உள்ளே வைத்து அவற்றை மூடி அதன் மேலே கல் வைத்து அடுப்புக் கூட்டிப் பொங்கல் செய்வதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் ஒரு கார் சர்ரென்று வந்து நிற்க அதில் இருந்து இறங்கிய ஆளைப் பார்த்து ஆச்சரியமானார்கள்.

''அபி! நீ எங்க இங்கே?'' என்றான் விக்ரமாதித்யன்.

''சே! இதுக்குப் பேருதான் தமிழ்ப் பண்பாடா? மாட்டுப் பொங்கல் அன்னைக்கு வந்திருக்கேன். வான்னு கூப்பிடாம எதுக்கு வந்துருக்கேன்னு கேக்கறீங்களே!'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

''ஓ...கே...! ஓ.கே...! யு ஆர் மோஸ்ட் வெல்கம்'' என்றான். ''இல்லே! எனக்கு கொஞ்சம் டவுட்டாப் போச்சு... மாட்டுப் பொங்கலன்னைக்கு கரெக்டா வர்றியே...''

''அதனால... மாடாயிட்டேன்னு சந்தேகமாக்கும். மிஸ்டர் சப் எடிட்டர்'' என்று அவள் ஏதோ ஆரம்பிக்க சுரபி வாயில் கை பொத்திக் கொண்டு சிரித்தாள்.

அதே நேரம்! நீலகண்டன் வந்தார்.

உடனே அபிநயா மிகவும் பவ்யமாகிவிட்டாள்.

''வாம்மா! நீ தான் அபிநயாவா? இப்பத்தான் சக்கரவர்த்தி சார் போன் பண்ணினார்'' என்று கூறி வரவேற்றார்.

விக்ரமாதித்யன் மற்றவர்களை அறிமுகப்படுத்தினான் அதற்குப் பிறகு தனியாக அழைத்துப் போய்,

''என்ன விஷயம்... அபி!'' என்றான்.

"இல்லே பெருசா... ஒரு விஷயம் கண்டுபிடிச்சிருக்கேன். பயங்கரமான விஷயம்" என்றான்.

'ரொம்ப அவசரமோ? ரெண்டு நாளைக்குத் தாங்காதா?' என்றாள். அவன் யோசித்தான்.

"தாங்கும்னுதான் நினைக்கறேன்" என்றான்.

"அபி... அப்புறம் பேசுவோம்" என்று அழைத்து வந்து விட்டாள்.

அப்போது அவனுக்குத் தெரியவில்லை அது எவ்வளவு சீரியஸான விஷயம் என்று.

அபிநயாவுக்கும் தெரியவில்லை. அது ஒரு முக்கியமான விஷயம் என்று. அபிநயாவுக்குக் குழப்பமாக இருந்தது தான் கண்டது உண்மையா என்று. தான் கண்டதைச் சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள் என்று கவலை வேறு. அதனால்தான் இரண்டு நாட்கள் கழித்துப் பேசுவோம் என்று விக்ரமாதித்யன் சொன்னபோது அவளும் சரியென்று ஒத்துக் கொண்டாள்.

விக்ரமாதித்யன் தனது தாயார் பொங்கல் வைக்கிற போது ஏவுகிற சின்னச் சின்ன வேலையை எல்லாம் தயங்காமல் செய்வதை ஒரு குறு குறுப் பார்வையோடு கவனித்துக் கொண்டாள் அபிநயா.

"ம்... பத்திரிகை ஆபீஸ்ல எல்லாத்தையும் மிரட்டற தாதா இங்கே பாருங்க... எப்படிப் பணிவா நிக்கறாரு" என்று சுரபி விடம் கலாட்டா செய்தான்.

அது அவன் காதில் விழுந்து விட்டது. இயல்பாக நகருகிறவன் போல் வந்து அவன் அருகில் வந்து "டில்லிக்கே ராஜான்னாலும்' தல்லிக்கு பிட்ட' என்று ஒரு பழமொழி இருக்கு. கேட்டிருக்கியா? அப்புறம், நம்ம ஆபீஸ்ல யாரையாவது நான் மிரட்டி நீ பாத்திருக்கியா. அவர்களா பயந்தாங்களா நா எப்படி பொறுப்பாக முடியும்!" என்றான்.



"ஐயோ! தப்பாச் சொல்லிட்டேம்பா. வாபஸ்... வாபஸ்" என்றாள் அபிநயா. சிரித்தான். "எதுக்கு இவ்வளவு சீரியஸா எடுத்துக்கறீங்க!" என்றாள் ஆச்சரியமாக.

"பின்னே? நியாயப்படி டெஃபர்மேஷன் சூட் போடணும். என் மகளிட்டே போய் என்னைத் தாதாங்கறே?" என்று சண்டை பிடித்தான்.

"அவங்க கிடக்கறாங்க... சித்தப்பா... எனக்கு உங்களைப் பத்தி தெரியுமில்லே" என்று ஆறுதல் அளித்தாள் சுரபி.

"தம்பி சோமு... எங்கே? கூட்டிட்டு வா" என்று பிரகாஷ் குரல் கொடுக்க விக்ரமாதித்யன் அவசரமாகப் போனான்.

யாரை இவ்வளவு பிரியமாக சோமு... சோமு என்றார்கள் என்று பார்த்தால் அது ஒரு காளை. அந்தக் காளையை அன்போடு தடவிக் கொடுத்தபடி அழைத்து வந்தான் விக்ரமாதித்யன்.

"அன்பான... என்னோட செல்ல நண்பன். இப்போ ரிடையர்ட் லைஃப்ல இருக்கார்" என்று கொஞ்சிக் கொண்டான்.

"ஆமா, எங்களையேதாவது சொன்னாக் கூட பேசாமப் போயிடுவான். ஆனா, சோமுவை யாரும் எதுவும் சொல்லிடக்கூடாது" என்று சிரித்தாள் சூரியகலா.

பொங்கல் பொங்கிய பின்பு மாடுகளுக்குப் படைத்த பின்பு ஓய்வாக ஒரு கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டு மற்றொரு கட்டிலில் எதிரில் அபிநயா அமர்ந்து கொள்ள நிறைய விஷயங்களைப் பகிர்ந்து கொண்டான்.

"எனக்கு ஒன்பதுவயசு இருக்கும்போது என் க்ளாஸ்ல சோமுன்னு ஒரு பையன் இருந்தான். ரொம்ப ரொம்ப வசதியான பையன். அவன் ரொம்ப அரகென்ட்டா நடந்துக்குவான். அதனால அவனைக் கடுப்பேத்தறதுக்கே என்னோட காளைக்கு சோமுன்னு பேரு வச்சேன்!" என்று நிறுத்தினான்.

அபிநயா சிரித்தாள். அவனும் அந்தப் பழைய நினைவுகளில் மூழ்கி சிரித்துக் கொண்டான். பிறகு தொடர்ந்தான்.

"வேணும்னே இளான்ல சோமு அப்படி செஞ்சான்டா. இப்படி செய்வான்டான்னு அவன் காது படப் பேசுவேன். அவனுக்குக் கோபம் வரும். என்னைப் பத்தி எதுக்குடா பேசறேன்னு சண்டைக்கு வருவான். நான் உடனே 'போடா... உன்னைப் பத்தியா பேசினேன்? என் காளையைப் பத்தியில்ல பேசினேன்...!' அப்படீம்பேன்... கட்டிப் புரண்டு சண்டை நடக்கும்" என்று சிரித்தான்.

ஒருநாள் அவன் ரொம்ப கடுப்பாகி, "இந்தப் பள்ளிக் கூடத்து இடமே எங்க தாத்தா குடுத்ததுதான்டா. நீ ஏன்டா இங்க வந்து படிக்கறே?" அப்படீம்பான். நான் உடனே "போடா! இந்த நாடே எங்க தாத்தாவதான் அவங்கதான் சுதந்திரமே உனக்குக் குடுத்தாங்க" அப்படீன்னேன்."

கேட்டுக் கொண்டிருந்த எல்லாரும் சிரித்தார்கள். அப்புறம் என்ன ஆச்சு?' என்றாள் அபிநயா.

"அப்ப ஒரு சுவாரசியமான விஷயம் நடந்துச்சு. அந்த வருஷம் சுதந்திர தின விழாவில கொடியேத்தறதுக்கு எங்க தாத்தாவும் வந்திருந்தார். அவன் தாத்தாவையும் கூப்பிட்டிருந் தாங்க. அந்த ஃபங்ஷன்ல அவங்க தாத்தா எனக்கும், சோமுவுக்கும் நடந்த வாக்குவாதத்தை மேடையிலயே சொல்லிட்டாரு. எல்லாரும் சிரிச்சாங்க. அப்ப சொன்னாரு, "சொன்னாலும் சொல்லாட்டியும் ஜோதிலிங்கம் மாதிரித் தியாகிகளுக்குத்தான் இந்தநாடே சொந்தம். அவங்கள்ளாம் மட்டும் இல்லேன்னா நாமள்ளாம் இன்னைக்கு இப்படி சுதந்திரமா இருக்க முடியுமா? அதனாலே இந்த நாடு, பள்ளிக்கூடம் அவங்களுக்குத்தான் சொந்தம்னு சொல்லிக் கறேன்" என்று சொல்லி விட்டு ஒரு பொன்னாடை போர்த்தி கௌரவம் வேறு பண்ணினாரு."



சற்று நேரம் மௌனம் சாதித்தான். அந்தப் பழைய நிகழ்வுகளில் மூழ்கினார்கள்.

அபிநயா கூட தனது குறுகுறுப் பார்வையைச் சுழற்றி வைத்துவிட்டு ஆர்வமாகக் கேட்டாள்.

"அப்புறம் ஃபங்ஷன் முடிஞ்சதுக்கப்புறம்... எங்க ரெண்டு பேரையும் ராசி பண்ணி வச்சாங்க... அப்புறம்... நானும், அவனும் ரொம்ப ஃப்ரெண்ட்ஸாயிட்டோம்" என்றான்.

"அந்தக் காளைதானா இது?" என்று கேட்டாள் அபிநயா.

"இல்லே அது செத்துப் போச்சு. இது அதுக்கு அடுத்த படியா நான் வளர்த்த காளை. இதுக்கும் பேரு சோமுதான்" என்றான்.

அபிநயாவை நன்கு உபசரித்தார்கள். பகல் உணவுக்குப் பிறகு.

"அபி! கொஞ்சம் ரெஸ்ட்... எடு! இங்க பக்கத்து கிராமத்துல ஒரு அருமையான பழைய காலத்துக் கோயில் இருக்கு. கூட்டிட்டுப் போறேன்" என்றான்.

"சரி... மூணுமணிக்கு ஷார்ப்பாய் புறப்படறேன்" என்றாள் அபிநயா.

* * *

அழகான கோயில்!

"அப்பப்பா! தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூருன்னு எங்க பாத்தாலும் கோயில் இல்லே!" என்றாள் அபிநயா.

"ஆமா. நாலு வீட்டுக்கு ஒரு குளம். கொஞ்சம் பார்வையை எட்டிப் போட்டா ஒரு கோயில்னு ரொம்ப கலையழகு நிறைந்த பகுதி இது" என்றான். குரலில் உடனே வருத்தமும் தோன்றியது.

"ஆமா! நிறைய கோயில்கள்ல வௌவால் தொங்கும். பராமரிக்க வசதி இல்லை. அரசாங்கம் மட்டும் கொஞ்சம் திட்டம் போட்டா டூரிஸ்ட் வருகையாவது அதிகப்படுத்தலாம்" என்றான்.

"அப்ப... இங்க சுற்றுப் பிரகாரம் எல்லாமே வாயைப் பிளக்க வைக்குது" என்றாள் அபிநயா. "அப்படி இப்படி வாயைப் பொளந்துராத. அந்த அழகில் மயங்கி உலகமே ஸ்தம்பிக்கப் போகும்" என்று கேலி செய்தான் விக்ரமாதித்யன்.

"விக்ரம்... சார்! என்னோட வேல்யூவே உங்களுக்குப் புரியலே..." என்றாள். சிணுங்கினாள். அவன் சிரித்துக் கொண்டான்.

உள் பிரகாரத்திலேயிருந்து கோபுரத்தைப் படமெடுத்தான். ஆனால் திருப்தியாக இல்லை என்றான்.

"என்ன பண்ணலாம்?" என்று பேசிக் கொண்டிருந்தபோது அங்கே இருந்த அர்ச்சகர் சொன்னார்.

"சார்! எதிர்ல ஒரு சத்திரம் இருக்கு. அங்கே மேலே மாடத்தில் கூண்டு மாதிரி இருக்கு பாருங்க. அங்க ஏறி நின்னு பாத்தா கோபுரம் ஃபுல் வ்யூ கிடைக்கும். ரொம்ப அழகா இருக்கும்" என்று அழைத்துப் போனார்.

அங்கே போனதற்குப் பிறகுதான் சொன்னார். "சார்! அதுல ஏறது கொஞ்சம் கஷ்டம். ஒருத்தர் மட்டுமே ஏற முடியும். சத்திரத்துக்காரர்கிட்டே விவரம் சொல்லிட்டு நான் வந்துடறேன். நேக்கு இங்கே தலைக்கு மேலே வேலை இருக்கு" என்றான்.

"சரி" என்று ஒத்துக் கொண்டார்கள்.

எங்கேயோ சுரங்கத்துக்குள் போகிற மாதிரி படி. ஆனால், ஏறுமுகமாக இருந்து ஏறினார்கள்.



மிக நெருக்கமாகத்தான் நிற்க வேண்டி வந்தது. அபிநயாவின் இடுப்பைப் பிடித்து ஏற்றிவிட்டான். அவள் உற்சாகத்தில் இருந்தாள்.

"சார்! ரொம்பத் திரில்லிங்கா இருக்கு!" என்று சிரித்தாள். மேலே ஏறினார்கள். மாடம் அழகாக இருந்தது. அரை வட்ட வடிவமாக இருந்தது.

"இன்னும் கொஞ்சம் உயரமாக நின்று போட்டோ எடுத்தால் நன்றாக இருக்கும் சார்! என்னைத் தூக்கிப் பிடிச்சுக்கோங்கோ' என்றாள்.

அவன் சற்றே தயங்கினான்.

"பரவால்லே... சார்! போட்டோ எவ்வளவு அருமையா அமையப் போகுது பாருங்க" என்றாள்.

அற்புதமான காட்சிகள். அந்தக் கோபுரத்திலே சிலை வடிவில் இருந்ததை ஸ்லாகித்துக் கொண்டே போட்டோக்கள் எடுத்து தள்ளினாள்.

மறுபடியும் இறங்கி ஒரு நிமிடம் ஓய்வெடுத்தாள். 'சார்! மறுபடியும்! என்று அவன் தூக்கிக் கொள்ள மறுபடியும் போட்டோக்கள் பிறகு இறங்கி ஹாண்டி காமிராவில் அவள் பதித்திருந்ததைக் காட்ட அவனே மயங்கிப் போனான்.

"சூப்பர்" என்றான்.

"இன்னும் நாலஞ்சு எடுத்துக்கட்டுமா!" என்றாள்.

"எடுத்துக்க... எடுத்துக்க!" என்று மறுபடியும் உதவி செய்தான். ஆனால், இந்த முறை இறங்கி வரும்போது அவன் கை சற்றே தவறி விட முற்றிலுமாக அவன் மேல் சாய்ந்தபடி மெல்ல இறங்கினாள்.

அரையிருட்டான அந்தச் சூழ்நிலையில் முதன் முதலாக அபிநயாவின் தொடுகை அவனைத் தாக்கியது. திகைத்துப்

போனவனாய் அவனை இறக்கிவிட்டான். அதற்கு முற்றிலும் மாறாக அவள் விளையாட்டுப் பிள்ளையைப் போல் கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தாள்.

பட்டுப் போன்ற மென்மையுடன் அந்த தொடுகை அவன் மனதில் பெரிய தாக்குதலை ஏற்படுத்தியிருந்தது என்பதால் இறங்கிவரும்போது நிலைமை அதை விடக் கஷ்டமாக இருந்தது.

ஒருவர் மட்டுமே இறங்கி வரக்கூடிய அறைக்குக் குறுகிய படிகள்.

“சார் விட்டுட்டு அவசரமாகப் போகாதீங்க. வௌவால் பறக்குது. ஒவ்வொரு படியிலும் இறங்கி நில்லுங்க... சார்” என்றாள்.

நின்றான். ஆனால் ஒவ்வொரு முறையும் கீழ்ப்படியில் அவன் நிற்க அவள் அடுத்த படியில் நிற்கும் போது அவள் மூச்சுக் காற்று அவன் கழுத்தில் பட்டது. மிகவும் தவித்துப் போனான். விக்ரமாதித்யன் கடைசிப் படிக்கு வரும்போது அவள் முகம் அவன் கழுத்தில் படிந்து நிமிர்ந்தது. எதேச்சையாகத்தான். ஆனாலும் மறுபடியும் தாக்குண்டவனாய் விதிர் விதிர்த்துப் போனான்.

வரும்போது மௌனமாகவே காரோட்டினான்.

“சார்! ரொம்ப நல்ல அனுபவம். சார்! அந்தத் தடியன் ரகுவீர் பின்னாலேயே சுத்திகிட்டிருந்தது. இது நல்ல சேன்ஜ். எப்படித்தான் இந்த மாதிரிக் கோயிலெல்லாம் கட்டியிருக்காங்க... அந்தக்காலத்துல என்ன உழைப்பு? துல்லியம்! ஆமா... சார். நம்ம கிட்டே இருந்த விஷயங்களை நமக்கு வெளிச்சம் போடத் தெரியலே” என்றாள்.

சளசளவென்று பேசிக் கொண்டு வந்தாள். அவன் புன்னகையுடன் லேசாக ஆமோதிக்கிறவன் போல் வந்தான்.



“அபி! நீ இனிமே தனியாப் போய் உன்னோட வொர்க்கை ஆரம்பிச்சர்லாம்னு நினைக்கறேன்” என்றான் ஆழ்ந்த குரலில்.

தான் அவன் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறோம் என்பதை அறியாத அவள், “போங்க... சார்! எப்பப் பார் என்னைக் கழற்றி விடறதுலயே இருக்கீங்க... அப்படியெல்லாம் நான் உங்களை விடறதா இல்லை சார்” என்றாள்.

அவன் கலக்கத்தில் ஆழ்ந்தான். சென்னை போனவுடன் சக்கரவர்த்தியிடம் பேச வேண்டும். ஒத்து வரவில்லை யென்றால் பத்திரிகையை விட்டு விலகி விட வேண்டும்.

‘இந்தக் கட்டத்தில் இந்தப் பெண்ணிடம் இருந்து விலகி விடு. இது நடக்கப் போறதில்லை. இந்த மாதிரி சூழ்நிலை களில் எவருக்கும் ஏற்படக்கூடிய இயல்பான தாக்கம்தான். மீண்டு விடு’ என்று அவனது அறிவு ஓலமிட்டு எச்சரித்தது. அன்றிரவு!

வெகு நேரம் உறக்கம் வரவில்லை. அபியின் தொடுகையின் இனிமையே அவனுக்குள் பரவியிருந்தது.

இதுநாள் வரையிலும் எத்தனையோ பெண்களுடன் பழகியிருக்கிறான். குழுக்களாகச் செயல்பட்டிருக்கிறார் கள். இது மாதிரி சூழ்நிலையில் தனியாக பெண்களுடன் இருந்திருக்கிறான். எப்போதும் இது மாதிரிப் பாதிப்பு இருந்ததில்லை. இது அவன் எதிர்பாராதது.

இதனால் தனக்கும், சக்கரவர்த்திக்கும் இடையே இருக்கிற உறவு எப்படிப் பாதிக்கும் என்று எத்தனையோ கேள்விகள் அவன் மனதில்.

முதல் முறையாக எதிர்காலம் குறித்த சிந்தனையும், குழப்பமும் அவன் மனதில் தோன்றியது.



13

சிராபியும் அபியும் சிறந்த தோழிகளாகி விட்டார்கள். அதனால் அவன் மறுநாள் முதல் குடும்பத்தார் பொறுப்பில் அவளை விட்டு விட்டுத் தான் சகோதரருடனும், தந்தையிடமும் பேச வேண்டிய விஷயங்களைப் பேசி முடித்தான்.

அடுத்த நாள் ஓரளவுக்குத் தேறிக் கொண்டான். எதையும் இப்போது யோசிக்க வேண்டாம் என்று முடிவு செய்து கொண்டான்.

எப்போதும் போல் நட்புடன் இருக்க ஆரம்பித்தான்.

''சார்! லைஃப் வாங்கா... பத்திரிகைத் தொழிலா?'' என்று கேட்டபோது,

''இப்போதைக்கு பத்திரிகைத் தொழில். ஆனா, எப்படியும் ஐம்பது வயசுக்கு இங்க வந்து விவசாயத்துல உட்கார்ந்துடுவேன்'' என்றான்.

''ஆஹா! இது ஆச்சரியமாயில்லே!'' என்றாள் அபிநயா.

''என்ன ஆச்சரியம்?'' ஐம்பதுக்கு மேலே இப்படி ஓடியாட முடியுமா என்ன? நான் என்ன ரகுவீரா ஐம்பது வயசானாக் கூட சாயம் பூசிகிட்டு இளைஞர் மாதிரிக் காட்டிக்கறதுக்கு. அந்த அவசியமே இல்லையே'' என்றான்.

அப்போது அபிநயா பரபரப்பாகக் குறுக்கிட்டாள். ''சார் இனிமேலயும் சொல்லலேன்னா, எனக்குத் தலையே வெடிச்சுடும் போல இருக்கு'' என்றாள்.

''சரி... சொல்லு!'' என்றான்.

சொன்னாள்.

ஒரு நிமிடம் மௌனமாக அமர்ந்திருந்தான். பிறகு இடி இடியென்று சிரித்தான்.



''ஹேய்! நீ என்னமோ நல்ல கனவு கண்டிருக்கறே!'' என்றான்.

''இல்ல... சார்! நிஜமா! நீங்களே வந்து பாருங்க'' என்றாள். அவன் சிரிப்பு நின்றது.

''நீ சொல்றதைப் பாத்தா வந்து நேர்ல பார்க்கத்தான் வேணும்.''

''ஒரு தடவைக்கு ரெண்டு தடவையா நான் செக் பண்ணினேன்'' என்றாள்.

அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

''இன்ட்ரஸ்டிங்!'' என்றான்.

''எனக்கென்னவோ ஏதோ விபரீதம் மாதிரிப் படுது'' என்றாள்.

அன்றைக்குப் படுக்கையில் படுத்துக் கொண்டவுடனே தான் பார்க்க நேர்ந்த விஷயமே அவள் மனதுக்குள் ஓடியது.

* * *

''பி.ஏ. சார்! என்ன இருந்தாலும் ரகுவீர் சாரோட இந்த வேனே சூப்பர் ஹீரோ மாதிரித்தான் இருக்கு'' என்றாள் அபிநயா.

பி.ஏ. புன்னகைத்தார். ''அம்மா, ரகுவீர் அய்யா கூடச் சொன்னாரு. அந்த அபிப்பொண்ணுக்கு இந்த வேன் ரொம்பப் பிடிச்சுருச்சு. போட்டோ கூட எடுத்து வச்சிருக்கு. ஏதோ ரெண்டு நாளைக்கு இரவல் கூடக் கேட்டுதுன்னு'' என்று சிரித்தார்.

அவள் அதைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அப்போது பி.ஏ. அவளை அழைத்து சொன்னாரு.

''அபிம்மா! இந்த ஃபைட்டிங் ஷெட்யூல் நடக்கும் போது மட்டும் வேன் கிட்டே போயிராதீங்க. அப்புறம் ரகுவீர்

அய்யா ருத்ர தாண்டவம் ஆடிடுவாரு. எனக்கு வேலைக்கே வேட்டு வச்சிருவாரு'' என்றார்.

''சரிங்க சார்'' என்று பவ்யமாக இந்தப்புறம் வந்தான். ஆனால், குறுகுறுப்பு அவளைப் பிடுங்கித் தின்றது.

''இது என்ன? ஃபைட்டிங் ஷெட்யூலில் மட்டும் அப்படி என்ன நடக்குது? கம்மா சொல்லக் கூடாது. உள்ளே போய் என்ன எக்ஸர்சைஸ் செஞ்சுட்டு வந்தாரோ தெரியலை. கம்மா... ஜும்ஜும்னு சின்னப் பையனாட்டமா வர்றாரு'' என்று எண்ணிக் கொண்டாள். பி.ஏ.வைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

''பி.ஏ. சார் இன்னைக்கு விடறதில்லே. காரவானுக்குள்ள எப்படியும் ஊடுருவல் செஞ்சே தீர்றது'' என்று எண்ணிக் கொண்டாள்.

காரவானின் டிரைவர் சீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற சீட்டைக் குறி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எல்லாரும் அசந்த சமயத்தில், டிரைவர் சாப்பாட்டுக்குப் போயிருந்த நேரத்தில் உள்ளே நுழைந்து கொண்டாள். 'ஃபைட்டிங் ஷெட்யூல் முடியப் போகிறது' என்று பேசிக் கொண்டிருந்த அந்த இடைவெளியில் உள்ளே நுழைந்து கொண்டாள்.

'என்ன செய்யப் போகிறார்? உடற்பயிற்சி செய்யப் போகிறாரோ? இல்ல வேற ஏதாவது தப்புத் தண்டா நடக்குமோ?' என்று ஒரு விதமான 'த்ரில்' மனதில் நிறைய உள்ளே கவனித்தாள் அப்போதுதான் புரிந்து கொண்டாள்.

டிரைவர் சீட் பகுதிக்கும் பின் பகுதிக்கும் நடுவே ஒரு தடுப்புக் கண்ணாடி இருந்தது. உடையாத வகையாக இருந்தது. ஆனால், அந்தப் புறம் இருந்து எதுவும் பார்க்க முடியாமல் இருந்தது. எதுவும் தெரியவில்லை.



திகைத்தாள்.

சட்டென்று இரண்டு சீட்டுக்கும் மத்தியில் இந்த இடத்தில் தன்னைத் திணித்துக் கொண்டு கீழே இருந்த ஒரே இடைவெளியில் பார்த்தாள்.

திகைத்துப் போனாள்!

உள்ளே ரகுவீர் இருந்தார்!

வசதியாக இருக்கையில் அமர்ந்து கொண்டு எதையோ கொறித்துக் கொண்டு எதிரே டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அபிநயா அதிர்ந்து போனாள்!

மெதுவாகத் தலையை நீட்டி வெளியே பார்த்தாள். அங்கே ஒரு ரகுவீர் சண்டை போட்டு கொண்டிருந்தான்.

அச்சு அசலாக ரகுவீர்!

இங்கே உள்ளே ஒரு ரகுவீர் சுகமாக இளைப்பாறிக் கொண்டிருந்தார்.

படபடப்பாகி விட்டது. தலை கிறுகிறுவென்று சுற்றுகிறாற் போல் உணர்ந்தாள்.

எப்படியோ சாகசமாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். யாரிடமும் எதுவும் பேசவில்லை. அப்பாவிடம் நேராகப் போனாள் சொன்னாள்.

தந்தை அவளைக் கேலியாகப் பார்க்கவில்லை. ஆனால் அதற்காக முற்றிலும் நம்பி விடவும் இல்லை.

''ஏம்மா! இந்த ரகுவீர் பின்னாலயே சுத்திக் கொஞ்சம் கற்பனை ஜாஸ்தியாப் போச்சோ?'' என்றார்.

''இல்லப்பா... ஐ அம் வெரி ஷ்யூர்!'' என்றாள்.

''சரி... எதுக்கும் உனக்கும் ஒரு சேன்ஜ் வேணும். பேசாம விக்ரமாதித்யன் ஊருக்கு ஒரு நடை போயிட்டு வா

நீலகண்டன் வருஷா வருஷம் நம்மைக் கூப்பிடறாரு. இந்தத் தடவை வேண்ணா நீ போயிட்டு வா. அங்க வச்சு விக்ரம்கிட்டே பேசு'' என்று அனுப்பி வைத்தார்.

''என்ன சார்! நீங்களும் அப்பா மாதிரியே சிரிக்கறேள். ஐ அம் ஹண்ட்ரட் பர்ஸன்ட் ஷ்யூர்'' என்றாள் ஆதங்கத்துடன்.

''ஓ.கே.! ஓ.கே! அது என்னன்னு பார்க்கலாம்.''

அவள் உடனே ஆவலாகச் சொன்னாள்.

''ஏன்... சார் இப்படியிருக்குமோ!''

''பாதுகாப்புக் காரணங்களுக்காக இட்டத்தட்ட பிரபலமானவங்க தோற்றத்துல இருக்கறவங்களை வச்சுப்பாங்களாமே இப்ப பிரிட்டிஷ் ராணி புறப்படறாங்கன்னா, அவங்க போற உண்மையான ரூட்டைச் சொல்ல மாட்டாங்களாம். இட்டத்தட்ட அவங்களை மாதிரியே இருக்கிறவங்களை ரெண்டு பக்கம் மூணு பக்கமாவது கார்ல அனுப்பிட்டு அப்புறமா அவங்க வெளியே வருவாங்களாம்'' என்றாள்.

''இருக்கலாம்... இருக்கலாம்...!'' என்றான். மெல்லிய குரலில் தனக்குத் தானே பேசிக் கொள்வது போல்.

''சரி... எதுக்கும் நீ முன்னாடி கிளம்பிப் போ. நாளைக்கு வர்றேன். உங்கப்பா உன்னை அனுப்பச் சொல்லிட்டாரு'' என்றான்.

''என்னோட கார்லயே வர்லாம் இல்லே!'' என்றாள்.

''இல்லே! நான் பஸ்ல வந்தர்றேன்!'' என்றான்.

வழக்கம் போல் கழட்டி விடறதுலயே இருப்பீங்க!' என்று முணங்கியபடி கிளம்பிப் போனாள்.

* * *

''இத பார்றி! சாமிக்கு நேந்துகிட்ட ஆடுன்னு பாத்துப் பாத்து வளர்த்தறமே எதுக்கு? சான்ஸ் கிடைச்சப்ப வெட்



டறதுக்குத்தான். அப்படித்தான். உன் தங்கச்சியையும் வளர்த்திருக்கு. எதுக்குக் கான்வெட்டில் படிக்க வச்சேன். உன்னை மாதிரி தற்குறியா இல்லாம... என் பக்கத்துல நிற்கற அளவுக்குத் தகுதியாக்கத்தான்'' என்றான் ரகுவீர்.

ருக்மணி பரிதாபமாகப் பார்த்தாள்.

''வேண்டாங்க... உங்க இமேஜ் போயிடும்'' என்றாள்.

''இமேஜை நான் பாத்துக்கறேன். அதைப் பத்தி உனக்கென்ன கவலை. ஒண்ணு உனக்கு உடம்பு சரியில்லாமல் போகப் போகுது. இல்லே... நீயே இல்லாமப் போகப் போறே... குழந்தைகளைப் பாத்துக்கறதுக்காக நான் தியாகம் பண்ணப் போறேன்... தெரிஞ்சதா?'' என்றான்.

அவள் வறட்சியாகப் புன்னகைத்தாள்.

''பேசாமல் என்னையே இல்லாமப் பண்ணிடுவாங்க. தினம் தினம் செத்துப் பொழக்கறதுக்குப் பதிலா நான் இல்லாமயே போயிடறேன்'' என்றாள்.

''நீ இப்படியே பிடிவாதம் பிடிச்சே. அப்படித்தான் ஆகப் போகுது'' என்றவன் மறுயோசனை செய்தவன் போல் சொன்னான்.

''இல்லல்லே இப்படியெல்லாம் உன்னைக் கொஞ்சிகிட்டிருந்தா சரிவரப் போறதில்லே இந்தப் பிளானுக்கு ஒத்து வந்தா. நீயும் இருக்கலாம். உன் தங்கையும் இருக்கலாம் இல்லே... உன் தங்கையை முடிச்சர்றேன். எனக்கில்லாதது எதுக்கு உசிரோட?''

அவள் வெடித்து அழுதாள். ''அதுக்கு நீங்க முன்னாடி சொன்ன திட்டமே நல்லாருக்கு. என்னையே முடிச்சிருங்க.''

''முடிச்சிருவேன்டி. ஏற்கெனவே என் கேரக்டர் தெரிஞ்ச விக்ரம் மாதிரிப் பத்திரிகைக்காரனுங்க இருக்காங்க. விக்ரமுக்குத் தெரிஞ்சிருந்தா அந்த சக்கரவர்த்திக்கு சொல்லி

விரும்பான். அதனாலதான் பாக்கறேன். அந்தப் பிரச்னையைக் கப்புறம் நான் திருத்திட்டேன்னு நம்பிகிட்டிருக்காங்க. அந்த நம்பிக்கைதான் எனக்கு பலம். அதான் பாக்கறேன். இல்லைன்னா உன்னை முடிக்கறதென்ன பெரிய விஷயமா?'' என்றான்.

அவள் அழுது கொண்டே சொன்னாள் ''சரிங்க! கொஞ்சம் டைம் குடுங்க! நான் என் தங்கைகிட்டே பேசறேன். இந்த வருஷப் படிப்பு முடிய இன்னும் ரெண்டு மாசம்தானே இருக்கு'' என்றாள்.

''ஆமா! ரெண்டு மாசம்கறதுனால்தான் பொறுத்துக் கறேன்'' என்றான்.

அவள் எழுந்து நடந்தவள் திரும்பவும் வந்து நின்றாள்.

''இந்த வாரம் குழந்தைங்க வர்ராங்க'' என்றாள்.

''ஆமா...! பொங்கலுக்குத்தானே! வரட்டும். அந்தச் சனியன்க வேறே! அதுக முன்னாடி இந்த நீலிக் கண்ணீர்எல்லாம் வேண்டாம் என்ன?'' என்று ஏதோ ஜாலிக்காக அடிப்பவன் போல் மனைவியின் தலையை சுவற்றில் ஒரு முட்டு முட்டி விட்டு அனுப்பினான்.

ஊமையாய் துடித்தபோதும் அவன் முன்னால் காட்டிக் கொள்ளாமல் இறங்கிப் போனாள்.

ருக்மணியின் மனம் மரத்துப் போனாற் போல் இருந்தது. அவனுடைய அப்பா ஒரு ஸ்டண்ட் மாஸ்டர். அந்தக் காலத்தில் குடும்பத்தை நன்றாகவே வைத்திருக்கிற அளவுக்கு அவருக்கு வருவாய் கிடைத்தது. பெரிய ஹீரோக்களின் படத்தில் தொடர்ந்து அவருக்கு வாய்ப்பு இருந்தது.

நடிகர் ஜஸ்டின் மாதிரி ஆஜானுபாகுவான தோற்றம். ஆனால் அத்தனைக்கும் மாறாக குழந்தை உள்ளம் இருக்கற சுபாவம்.



சின்னச் சின்ன வேஷங்களில் தலைகாட்டிக் கொண்டிருந் தான் ரகுவீர். அப்போது அவன் பெயர் மாரியப்பன்.

ஷூட்டிங் ஸ்பாட்டில் வைத்து எல்லாரிடமும் பணிவாக இருப்பான். ருக்மணியின் அப்பா பூமிநாதனுக்கு அவனை ரொம்பவும் பிடிக்கும்.

''எப்ப வேலை கிடைக்கலேன்னாலும் வந்து வீட்ல சாப்பிடுப்பா...'' என்பார்.

அவனும் கையில் காசு இல்லாத போது அவர்கள் வீட்டில் போய் சாப்பிடுவான். கொஞ்சம் பெரிய ரோல்கள் கிடைக்க ஆரம்பித்த போது பூமிநாதனிடம் அவன்தான் பெண் கேட்டான்.

அவரும் சந்தோஷமாக சம்மதிச்சார். மிகவும் எளிய முறையில் திருமணம் நடந்தது.

ரகுவீர் சில நாட்கள் வேலையில்லாமல் இருந்தபோது கூட அவள் தனது நகைகளையெல்லாம் விற்றுக் குடும்பம் நடத்தினாள். கொஞ்ச நாளைக்குக் குழந்தை வேண்டாம் என்று முடிவு செய்தார்கள். கிட்டத்தட்ட ஆறேழு வருடத் திற்குப் பிறகுதான் ருக்மணி உண்டானாள். ஆனால் முதல் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறக்கவும், அதிர்ஷ்ட தேவதை அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டவும் சரியாக இருந்தது போலும். முப்பத்து மூணு முப்பத்து நாலு வயதில் பிரபலமாக ஆரம் பித்தவன் இப்போது நடிப்புக் கடலாகப் பெயர் பெற்றிருந் தான்.

வாழ்க்கை நிலை உயர உயரப் பெரிய மனிதர்களிடம் பழகப் பழக அவர்கள் வீட்டுப் பெண்கள் ஆங்கிலத்தை அரைத்தெடுப்பதையும், வெகு நாகரீகமாக நடமாடுவதை யும் பார்த்த அவனுக்கு ருக்மணி தனக்குத் தகுதியில்லாதவள் என்று தோன்ற ஆரம்பித்திருந்தது.

அடுத்தடுத்து அவள் தந்தையும், தாயும் போனவுடன் அவனுக்கு இன்னும் வசதியாகப் போயிற்று. அளவு மீறிய புகழ் அவனை சுதந்திரமாக நடமாட விடாமல் செய்தது என்றால் எல்லாருமே தன்னிடத்தில் ஆதாயத்திற்காகத்தான் வருகிறார்கள் என்ற எண்ணம் யாரையும் நம்ப விடாமல் செய்தது.

உள்ளே ஒரு வக்கிரம் புகுந்தது. வீட்டு எலி போல் தாக்குதலுக்கு எந்த எதிர்ப்பும் காட்டாமல் அச்சப் பார்வை பார்க்கிற ருக்மணி அவனுக்கு விளையாட்டுப் பொருளாகப் போனாள்.

ரசிகர்கள், இமேஜ் என்கிற பெயரில் தன் வாழ்க்கை சுதந்திரம் பறி போகிறது என்ற கோபம். பொதுவான ஆரோக்கிய மனப்பான்மையை இழக்கச் செய்தது.

கிட்டத்தட்ட மிருகமாகிப் போனான்.

ருக்மணி கீழே தனக்கென்று கொடுக்கப்பட்ட அறைக்குள் போனாள்.

பீரோவைத் திறந்து பார்த்தாள். ஏராளமான பட்டுப் புடவைகள், நகைகள் மட்டும் அளவாகத்தான் கொடுத்திருப்பான். நகையை விற்று எங்கயாவது தப்பித்துபோய் விடுவாளோ என்று.

தன் தலையெழுத்தை நினைத்துக்கொண்டே சுமந்து கொண்டிருந்தாள். ஆனால், எக்காரணம் கொண்டும் அந்தச் சின்னப் பெண்ணை மட்டும் இந்த வக்கிரம் பிடித்த ஆளிடம் காவு கொடுக்கக் கூடாது என்று முடிவு கட்டிக் கொண்டாள் ருக்மணி.

ஒரு நேரம் கோபமும் வரும். பேசாமல் விஷம் வைத்துக் கொன்று விடலாமா என்று தோன்றும். ஆனால், அதற்குப் பிறகு நேரப்போகிற அவமானங்கள் குழந்தைகளின்



எதிர்காலம் என்பதையெல்லாம் யோசித்துப் பேசாமல் இருந்தாள். அப்படி ஏதாவது நிகழ்ந்தால்,

'இந்த ஆள் இவ்வளவு கொடுமைக்காரர்' என்று சொன்னால்கூட யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதையும் யோசித்து அடங்கியிருந்தாள்.

அப்போதுதான் அந்தப் பெண்ணின் நினைவு வந்தது. அந்தப் பத்திரிகைக்காரப் பெண் தன் நிலைமையை முழுமையாக உணர்ந்தவள் போல் பேசினாலே ஆமாம்... அவளை நம்பலாம். அவள் அப்பா வேறு மிகப் பிரபலமான பத்திரிகைக்காரர். எப்படியும் அவர்களைத் தெரிந்திருப்பார். செல்வாக்கு உள்ளவராகத்தான் இருப்பார். என்றெண்ணிக் கொண்டாள். பொறுக்க முடியாத ஒரு நிலைமை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு தனக்கும் ஏதோ பற்றுக்கோடு கிடைக்கிற மாதிரி ஒரு உணர்வு ஏற்பட்டது.

'பி.ஏ.வுக்கும் தன் மேல் அனுதாபம் உண்டு என்பது தெரியும். அவரிடமும் எதற்கும் ஆலோசனை கேட்கலாம் என்று எண்ணினாள். கேட்டாள் பி.ஏ. சொன்னார்.

''அம்மா... கவலைப்படாதீங்க... கடவுள் ஒருநாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் நல்ல வழி விடுவார்... இப்பத்திக்கு உங்க விஷயத்துல என்னால ஒண்ணும் செய்ய முடியலே... ஆனா... உங்க தங்கைக்கு இனி ஏதாவது கெடுதல் செய்யற மாதிரி சூழ்நிலை வந்தா நான் காப்பாத்தறேம்மா...'' என்று உறுதியளித்தார்.

ஒருவாறு நிம்மதி ஏற்பட தினமும் போல் இன்றைக்கும் பூஜையில் அமர்ந்தாள் ருக்மணி.

தனக்குப் பின்னாலே ஒரு படையே உருவாகிறது என்பதை அறியாமல் ரகுவீர் முந்திரிப் பருப்பைக் கொறித்துக்

கொண்டு மது அருந்தி மங்கையா தேடி இன்பம் நாடிக் கொண்டு மயக்கத்தில் திளைத்திருந்தான்.



14

விக்ரமாதித்யனின் அறைக்குள் நுழைந்தாள் அபிநயா.

சீட்டில் அவனைக் காணவில்லை. ஆனால் அந்தப் பக்கம் புத்தக ராக்குக்குப் பக்கத்திலே ஒரு சர்தார்ஜி நின்று கொண்டிருந்தார்.

"ஹலோ! இங்கே கெத்தா... மிதப்பா ஒரு ஆள் இருப்பாரே. அவரு எங்கே!" என்றாள்.

"வோ... சைத்தான் கீ பச்சா... வோ... ஆல் பால் பிரஹேகா" என்றான் நின்று கொண்டிருந்த ஆள்.

"க்யா? சைத்தான். நீ பச்சா!" என்றாள் சற்றே புன்சிரிப்புடன்.

"ஹாம்! ஆப் கோன் ஹை!" என்றான் அந்த ஆள்.

"நானா? நான்" என்று பதில் சொல்ல ஆரம்பித்தவள் சட்டென்று நிறுத்தினாள்.

"அது... சரி? நீங்க யாரு?" என்றாள்.

"ஹரே! நம்பள்கி பாத்து யாருன்னு கேட்குது. நானு யாரு தெரியுமா?" என்று அந்த ஆள் குரலெழுப்ப.

"ஹலோ! ஹலோ! இந்த ரவுண்டு கட்டற வேலையெல்லாம் வேண்டாம். நீங்க யாருன்னு சொல்லுங்க" என்றாள்.

"நானா? இங்கே கெத்தா... மிதப்பா... இருக்கற ஆளைத் தேடிட்டு வந்தியில்ல அந்த ஆள் நான்தான்" என்றான்.



இதுவரையிலும் கரகரவென்று ஒலித்த குரல் மாறி இப்போது விக்ரமின் குரலாக ஒலிக்க திகைத்தாள். ஒரு நிமிடம். பிறகு கலகலவென்று சிரித்தாள்.

"விக்ரம்... சார்! நீங்களா? அடையாளமே தெரியலே!" என்றாள்.

"அமெரிக்காவுல போய் மேக்கப் கத்துகிட்டு வந்தேன்... அபி" என்றான் விக்ரம்.

"சரி... சரி ஓவரா... அளக்காதிங்க... சார்!" என்றாள்.

"பாத்தியா...! இதையே நடிகர் சொன்னா ஒத்துப்பீங்க.. நான் சொன்னா ஒத்துக்கமாட்டீங்க" என்றான் சோகமாக.

அவன் நடிப்பைப் பார்த்து அவள் சிரித்தாள்.

"விக்ரம் சார்! எதுக்காக இந்த வேஷம்?" என்றாள்.

"எல்லாம் உன்கூட வர்றதுக்குத்தான்" என்றான்.

"ஓ...!"

"ஆமா! நீ அந்த ரகுவீர் பத்தின விஷயம் சொன்னதி லேயிருந்து என்னால நம்பவும் முடியலே. நம்பாம இருக் கவும் முடியலே. அதான்... எதுக்கும் நேர்ல பாத்தர்லாம்னு" என்றான்.

"ஆமா... சார்! இந்த வாரத்தில ஃபைட்டிங் ஷெட்யூ சமயத்திலதான் இந்த மாதிரித் தில்லுமுல்லு நடக்குதுன் தோணுது" என்றாள்.

"எதை வச்சுச் சொல்றே?"

"இல்லை சார்! ஃபைட்டிங் ஷெட்யூல் சமயத் மட்டும்தான் இந்தக் கெடுபிடியெல்லாம் செய்யறா பப்ளிக்கை பாக்க அனுமதிக்கறதில்லே. பத்திரிகைக்கா களைத் துரத்தியடிக்கறாங்க... சம்திங் ஃபிஷி" என்றா

விக்ரமாதித்யன் சிந்தனையில் ஆழ்ந்தான். ''சம்திங் சீரியஸ்னு எனக்குப் படுது'' என்றான்.

''ஒருவேளை டூப்பா இருக்குமோ!'' என்றாள் அபிநயா.

''டூப்பா இருந்தா... இப்படி ஒளிச்சு மறைச்சு நடத்த வேண்டிய அவசியம் இல்லையே?'' என்றான்.

''ஆமா!' என்றாள் அபிநயா.

''சரி... விடு... பார்த்தர்லாம்... நேர்லயே'' என்றான் பார்த்தான்.

அந்தப் பட டைரக்டரிடம் என்னவோ பேசிப் பர்மிஷன் வாங்கி விட்டானாம் விக்ரமாதித்யன்.

''நீ தனியாய் போ... நான் பின்னாலே வர்றேன்'' என்றான்.

வந்தான் ''அவனும் பார்த்தான். காரவானுக்குள் ஒரு ரகுவீர்! வெளியே ஒரு ரகுவீர்!''

பிற்பகலில் அலுவலகம் வந்தார்கள். சக்கரவர்த்தியிடம் பேசினார்கள்.

அவரும் யோசனையிலாழ்ந்தார். பிறகு அபிநயாவிடம் திரும்பி.

''அபி! நீ தொடர்ந்து அங்கயே இரு. தகவல் குடு. ஷூட்டிங் குக்கு அப்புறமா என்ன நடக்குதுன்னு பாப்போம்'' என்றார்.

''அவள் தலையசைத்தாள்.''

''சரி... போய் சாப்பிடு... போ!'' என்று அனுப்பி வைத்தார்.

திரும்பி விக்ரமாதித்யனைப் பார்த்தார். ''ஏம்ப்பா! நீ என்னோட சாப்பிட்டேன்!'' என்றார். அவன் முகத்தில் சங்கடம் தெரிந்தது.

''சார்! நான் சொன்னதை யோசிச்சீங்களா!'' என்றான்.

''பாருப்பா! அதைப் பத்தி நான் அன்னைக்கே உன் கிட்டே சொன்னேன்'' என்றார்.



''இல்ல... சார்! நான் வேற ஏதாவது ஃபீச்சர் பண்றேனே?'' என்றான் தயக்கத்துடன்.

''இல்லப்பா... இந்த விஷயத்துக்குத்தான் இனி நீ ரொம்பத் தேவை. எனக்கென்னமோ அபி எதிர்பாராம ஒரு பெரிய விஷயத்தைக் கிளறியிருக்கான்னு மனதுக்குப் படுது. அதுக்கு அவ கூட இருந்து வழிநடத்த வேண்டியது உன்னோட பொறுப்பு'' என்றார்.

''ஐ கேன் அன்டர்ஸ்டான்ட்'' என்றான் முணுமுணுப்பாக.

''யு ஹேவ் டு'' என்று சிரித்தார்.

''சரி... எதிர்காலத்துல எதுவும் சங்கடம் வந்தா?'' என்று அவர் இழுத்து நிறுத்துகையிலேயே ''அதை அன்னைக்கு சூழ்நிலையில பாத்துக்கலாம்ப்பா'' என்றார்.

அவன் வேறு வழியின்றி எழுந்தான். மனம் குழப்பத்தி லேயே இருந்தது. ஆனால், அதை எப்படி வெளிப்படை யாகச் சொல்லி வைப்பது என்று தெரியவில்லை. இன் னொரு சந்தேகமும் தோன்றியது. வேண்டுமென்றே தெரிந்தும், தெரியாதது போல் நடக்கிறதோ என்றும் தோன்றியது. உடனே இன்னொரு மனது சொன்னது.

''சே... சே! அப்படியெல்லாம் நினைக்கக் கூடாது. அவர் எத்தனை பெரியவர். எத்தனை அனுபவஸ்தர். உலகம் தெரிந் தவர். அவர் சொன்னால் காரணம் இருக்கும். சரி... எதற்கும் இந்த விஷயம் முடியட்டும் என்று எண்ணிக் கொண்டான்.

அப்போது அவனுக்குப் புரியவில்லை. சக்கரவர்த்தி சொன்னது போல் அபிநயா பெரியதொரு விஷயத்தின் மேல இடறி விழ்ந்து விட்டாள். புலிவாலைப் பிடித்த கதையாக அது ஆகப் போகிறது என்றும் அப்போது புரியவில்லை.

புரிய ஆரம்பித்தபோது திகைப்பு. மலைப்பு அச்சம் எல் லாமும் தோன்றியது. ஆனால் விஷயம் கைமீறிப் போயிருந்தது

* * *

''விக்ரம்... சார்! காரவான் ரகுவீர் பங்களாவுக்குள்தான் போகுது. வித்தியாசமாக எதுவும் தெரியலே!'' என்றாள்.

''சரி, நீ புறப்பட்டு வந்துரு'' என்றான் விக்ரம். ஆனால், சக்கரவர்த்தியிடம் பேசி ரகுவீர் பங்களாவிற்கு அருகிலேயே அவர்கள் ஆட்களை இருக்கச் செய்தான்.

கார் அன்றிரவெல்லாம் வெளியே வரவில்லை. மறுநாள்!

ஷூட்டிங்கில் பார்த்தால் அதேபோல் இரண்டு ரகுவீர்கள்!

அதற்குப் பிறகு அபியிடம் சொன்னான்.

''அபி! உன்னோட வழக்கமாக திறமையெல்லாம் பயன்படுத்தி இன்னைக்கு நைட் ஒரு எட்டு மணிவாக்கில் ரகுவீரோட பங்களாவுக்குப் போற மாதிரிப் போ...'' என்றான்.

''போய்?''

''ஐ ம் யுவர் டிரைவர். உன்ன கார் போனதற்குப் பிறகு நான் மிஸ்ட் கால் குடுக்கற வரைக்கும் அந்தாள் கிட்டே எதையாவது பேசி நேரத்தைக் கடத்து'' என்றான்.

''ஓ.கே.! சார்!'' என்றாள். போனார்கள்!

* * *

''சார்! எப்படி சார் பாய்ஞ்சு, பாய்ஞ்சு ஃபைட் செய் தீங்க... சொல்லப் போனா... இப்பத்தான் இன்ட்ரொட்யூஸ் ஆன ஹீரோ மாதிரி இருந்தீங்க'' என்று மாற்றி மாற்றிப் புகழ்ந்து தள்ளினாள் அபிநயா.

ரகுவீர் குளிர்ந்து போனான்.

''தாங்க்ஸ்... அபி...!'' என்றான்.

அபிநயா மேலும் சீரியஸாக முகம் வைத்துக் கொண்டு சொன்னாள்.



''சார்! நீங்க ஒரு தடவை ஃபாரின் போய் ஹேர் டிரான்ஸ்பிளான்டேஷன் பண்ணிட்டு வாங்க... அப்புறம் எப்பவும் யங் லுக்கிங்தான். அதுமட்டும் இல்ல சார்! யோகா செஞ்சீங்கன்னா... தோற்றம் இளமையாகும். இல்லேன்னா ஆயுர்வேதத்துல பிழிஞ்சல் கிழிஞ்சல்ன்னு ஏதாவது செய்ங்க'' என்றாள்.

''ஆமா! அபி! செய்யணும். அதான் இந்தப் படம் முடிஞ்ச வுடனே வெளிநாட்டுக்கு ஒரு ட்ரிப் போயிட்டு வரலாம்னு இருக்கேன்'' என்றான்.

''ஆமா... சார்! அப்படி நீங்க போயிட்டு வரும்போது முதல் ஆளா நான் ஏர் போர்ட்ல வந்து நிப்பேன்'' என்றாள்.

''நீ... வரலாம் ஆனா. நான் இந்த மாதிரி ட்ரிப் எல்லாம் ரகசியமாத்தான் வச்சுக்கணும்'' என்றான்.

''அதுவும் கரெக்ட்தான்!'' என்றாள்.

அதேநேரம்!

கறுப்பு நிற உடையில் இருந்த விக்ரம் காரில் இருந்து இறங்கி மெதுவாக ரகுவீரின் அந்தப் பெரிய பங்களாவின் இருக் கிற மூலைகளில் எல்லாம் புகுந்து தேடிக் கொண்டிருந்தான்.

நிறைய மரங்களும், செடிகளும் இருந்த அந்த பங்களா வின் சுற்றிலும் நிறைய இடம் இருந்தது. அதுவே ஒரு பெரிய பண்ணை வீட்டைப் போல் இருந்தது.

சிமெண்டால் ஆன அந்தப் பாதையைத் தாண்டி அவன் எதிர்ப்பகுதிக்கு நுழைய முயற்சிக்கையில் கூர்க்கா வந்தான்.

''யோவ்! இன்னாய்யா செய்யறே?'' என்றான் உடைந்த தமிழில்.

''அய்யே! இன்னாத்துக்கு கூவுறே! அப்படியே கொஞ்சம் ஒதுங்கலாம்னு இடம் தேடிக்கினு கிறேன்'' என்றான் விக்ரம் சேக்க் குரலில்.

''இன்னாது, ஒதுங்கறதுக்கு இடம் பாக்கறியா? இந்தா... அந்தாலே டாய்லெட் கீது... போய்யா'' என்று சொல்லி விட்டு அவன் நகர்ந்தான்.

பொதுவாக அந்த பங்களாவில் உள்ளே நுழைவதுதான் கடினம் என்பதையும், உள்ளே நுழைந்து விட்டால் பெரிதும் விசாரணைகள் இல்லை என்பதைப் புரிந்து கொண்டான் விக்ரம்.

''இதுதான் சான்ஸ்'' என்று அந்தப் பக்கம் போய் உண்மையாகவே டாய்லெட்டுக்குள் நுழைந்து விட்டு வந்தான்.

பிறகு பதுங்கிப் பதுங்கி முன்னேறினான். இன்னும் ஒரு நூறடி தொலைவுக்குப் போன பின்புதான் பார்த்தான்.

பின்னாலேயும் ஒரு பெரிய ஏரியா இருந்தது. அங்கே ஒரு புறமாக இரண்டு மூன்று கார்கள் இருந்தன. ஆனால் நிக்கிற விதத்திலேயே உள்ளே யாரும் இருக்க முடியாது என்பது புரிந்தது.

இன்னும் சற்று இடது புறமாக வந்தான். ரகுவீர் பங்களாவில் நுழைவுப் பகுதியிலேயே வலது ஓரத்தில் ஒரு பெரிய ஆபீஸ் மாதிரி இருந்தது.

அங்கேதான் ரகுவீர் ரசிகர்களை சந்திப்பது. அதற்கென்று நேரம் ஒதுக்கியிருந்தான். அந்தக் குட்டி பங்களாவைப் போலவே ஒரு சின்ன பங்களா அந்தப் பெரிய ஏரியாவின் தென்கிழக்கு மூலையில் இருந்தது.

அந்தக் குட்டி பங்களாவும் ஏ.சி. செய்யப்பட்டு இருந்தது போலும். எல்லா ஜன்னல்களும் மூடியிருந்தன. கதவும் கண்ணாடிக் கதவு. ஆனால், வெளியே இருந்து பார்த்தால் உள்ளே தெரியாத வண்ணம் கதவு.

விக்ரம் சற்று நேரம் நின்று பார்த்தான். பிறகு இன்றைக்கு ரொம்பவும் இறை வேண்டாம் என்று எண்ணிக் கொண்டு



பின்புறமாக காருக்கு வந்தவன் அபிநயாவுக்கு மெசேஜ் கொடுத்தான்.

அவளும் ரகுவீரிடம் இருந்து கழன்று கொண்டு வந்தாள்.

இதற்கிடையில் விக்ரம் ஒரு காரியம் செய்தான்.

காரவான் பங்களாவை விட்டு வெளியே போகிறதா என்று பார்த்துக் கொண்டு உடனே தகவல் கொடுக்குமாறு ஆட்களை நியமித்தான்.

காரை ஓட்டிக் கொண்டே அபிநயாவிடம் கேட்டான்.

''ஃபைட்டிங் சீன்ஸ்ல மட்டும்தான் இந்த மாதிரி ஏதோ நடக்கற மாதிரித் தெரியுது!'' என்றான்.

''ஆமா! அப்படித்தான் எனக்கும் தோணுது!'' என்றாள்.

''அது சரி! ஃபைட்டிங் ஷெட்யூல் முடிஞ்சதா?'' அந்த ஆள் கிட்டே விசாரிச்சியா?'' என்றான்.

''இன்னையோட இந்த ஷெட்யூல் முடிஞ்சதாம். பத்து நாளைக்குள்ள மறுபடியும் ஒரு ஷெட்யூல் இருக்காம்'' என்றாள் அபிநயா.

''ஓ...!'' என்றான்.

அதற்குள் அபிநயா. குபீரென்று சிரித்தாள்.

''நம்ம ஃபேவரிட் நடிகருக்கு நிறைய நிறைய ஐடியாஸ் எல்லாம் குடுத்துட்டு வந்துருக்கேன்!'' என்றாள்.

''நீயா! விடிஞ்சது போ!'' என்றான் விக்ரம்.

''ஏன்! ஏன்! நாங்க நல்ல ஐடியாஸ் எல்லாம் குடுக்க மாட்டமா?'' என்றாள்.

''என்ன ஐடியா குடுத்திருக்கேன்னு சொல்லு. அப்புறம் சொல்றேன்'' என்றான்.

"அதான் ஹேர் டிரான்ஸ்பிளான்டேஷன்... பிளீச்சல், ஃபேஷியல்... அப்படி இப்படின்னு" என்று விளக்கினான்.

இருவரும் சிரித்தார்கள்.

"அபி! முதுமையும் அழகான ஒரு விஷயம்தான். ஆனா, சில பேர்தான் முதுமையில் கூட அழகைக் காப்பாத்திக் கறாங்க."

"ஆனா, நம்ம ரகுவீர் அவர்களுக்குத்தான்... எல்லா பலவீனமும் இருக்கே!" என்றாள் அபிநயா.

"அபி! ஜாக்கிரதை! அப்புறம் அந்த ஆள் ரொம்ப இளமை உணர்வோட உன்னையே வளைச்சுப் போடப் பாக்கப் போறாரு..." என்றான் விக்ரம்.

"ஆமா! அப்புறம் நீங்க ரொம்ப ஏமாந்துடுவீங்க!" என்றாள் அபிநயா.

அவன் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான். அவள் சிரித்தாள்.

"ஆமா! கொஞ்ச நாளா மட்டும் தட்டறதுக்கு வசதியா ஒரு ஆள் கூடவே இருந்தேன். அப்ப அது இல்லாம ஏமாந்து போயிடுவீங்க... இல்லே" என்றாள். சிரித்தாள்.

"நீ..... வேற! நீ வரப்போய் என்னோட சுதந்திரம் பறி போன மாதிரி நான் ஃபீல் பண்றேன்" என்றான் விக்ரம்.

கேலி போலவே பேசினாலும் அவன் தன் மனத்தில் புதைந்திருக்கிற உண்மையைத்தான் சொன்னான். ஆனால் அபிநயா அதைப் புரிந்து கொள்ளவில்லை.

அபிநயாவை அவள் பங்களாவில் முன் இறக்கி விட்டு அவன் கிளம்பினான்.

"சரி... இன்னைக்காவது நிம்மதியாத் தூங்குவோம்" என்றாள் அபிநயா. உள்ளே போனாள்.



விக்ரம் அவள் போவதைப் பார்த்துக் கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

"பெண்ணே! நீ என் வாழ்க்கையில வந்ததில் இருந்து எனக்கு ஆழ்ந்த தூக்கமே போச்சு..." என்று எண்ணிக் கொண்டான்.

காரை நகர்த்தினான்.

அவன் நினைத்தது போல் அன்றிரவு நிம்மதியாகத் தூங்கப் போவதில்லை என்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

* * *

திடீரென செல்போன் ஒலித்தது!

"சே! தூங்க விடமாட்டாறுங்கப்பா!" என்று முணுமுணுத்துக் கொண்டே புரண்டு படுத்த விக்ரமாதித்யன் செல்போனை எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

"ஹலோ!" என்றான்.

அந்தப் பக்கம் செய்தி கேட்டதும் தூக்கம் பஞ்சாய்ப் பறந்தது.

"ஓஹ்ஹோ! சரி... சரி... இப்ப வரேன். தொடர்ந்து எனக்கு இன்ஃபர்மேஷன் குடு" என்றான் ஆஃப் செய்தான்.

பறந்து கட்டிக் கொண்டு புறப்பட்டான். புறப்படுவதற்கு முன்பாக அபிநயாவை அழைத்தான். அவள் உடனே,

"நானும் வரேன்!" என்றாள்.

"வேண்டாம்... அபி! டேன்ஜரஸ்!" என்றான் விக்ரமாதித்யன்.

"நோ! நான் வருவேன்!" என்றாள்.

விக்ரமாதித்யனுக்கு ஒரு மனது "வேண்டாம். இந்தப் பிரச்சினையில் அவளை இழுக்காதே" என்றது. ஆனால் இன்னொரு மனது அவளது அருகாமையை நாடியது. கடைசியில் இரண்டாவது மனதே ஜெயித்தது.

''சரி! வந்து தொலை!'' என்றான்.

அவன் அந்தப் பக்கம் சிரித்தான்.

பிக்கப் செய்து கொண்டான்.



## 15

''நல்லவேளையாக இந்த இடம் கிடைத்தது'' என்றான் விக்ரமாதித்யன்.

அப்போது அவர்கள் மகாபலிபுரம் ரோட்டில் கடற்கரையோரத்தில் இருந்த ஒரு பங்களாவில் கடலை நோக்கியிருந்த ஒரு சிட் அவுட்டில் இருந்து சற்றே உள்ளே தள்ளி ஒரு சோபாவில் அமர்ந்து இருந்தார்கள்.

காரவான் மகாபலிபுரம் ரோட்டில் போய்க் கொண்டிருக்கிறது என்றவுடனே அடித்துப் பிடித்துக் கொண்டு போய் பின் தொடர்ந்தார்கள்.

விக்ரமாதித்யனுக்கு நிறைய குறுக்கு வழிகள் தெரிந்திருக்கிறதாலோ என்னவோ விரைவில் போய் விட்டார்கள்.

இரவின் நிசப்தம் அருமையாகவும் இருந்தது. பயங்கரமாகவும் இருந்தது.

மகாபலிபுரம் ரோட்டில் எப்போதும் கார்கள் போய் வந்து கொண்டிருந்தன என்பதாலோ என்னவோ அவர்கள் பின் தொடர்வதை காரவான்காரர்கள் கவனிக்கவும் இல்லை. அறியவும் இல்லை

வசதியாகப் பின் தொடர்ந்தார்கள்.

சற்றுத் தொலைவு சென்றதும் காரவான் இடதுபுறம் திரும்பியது.

சற்று இடைவெளி விட்டுத் தொடர்ந்தார்கள். கடற்கரைப் பகுதி நெருங்கியதும் அவர்கள் கிட்டத்தட்ட கடற்கரை



வரைக்கும் நெருங்கிய பின் காரை ஒரு ஓரமாக நிறுத்தினார்கள்.

கட்டிடங்களின் ஓரமாக நடந்தார்கள்.

காரவான் கடற்கரையோரம் நின்றிருந்தது.

கடைசியாக இந்த கட்டிடத்தின் மறைவில் நின்றபடி பார்த்தார்கள்.

காரவானிலிருந்து இரண்டு பேர் இறங்கியது தெரிந்தது.

அதேசமயம் ஒரு படகு அவர்களை நெருங்கியது. அதில் ஏறினார்கள். சற்றுத் தொலைவில் ஒரு ஸ்டீமர் நின்று கொண்டிருந்தது. ஏறினார்கள்.

காரவான் கிளம்பிப் போய்விட்டது.

விக்ரமாதித்யனும், அபிநயாவும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்கள்.

''இப்ப என்ன செய்யறது?'' என்றாள் அபிநயா.

அவன் கையை அகல விரித்து, மேலே காண்பித்து விட்டு சிரித்தான். ''ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்'' என்று சிரித்தான்.

இப்போதுதான் களைப்புத் தெரிந்தது.

சுற்று முற்றும் பார்த்தான். அவன் முகம் மலர்ந்தது. ''அபி! இது உங்கப்பாவுக்கு தெரிந்தவர் கெஸ்ட் ஹவுஸ்! என்று பக்கத்திலே ஒரு கட்டிடத்தைக் காட்டினான். அவனை நோக்கிப் புன்னகைத்தான்.

செல்போனை எடுத்து சக்கரவர்த்தியிடம் பேசினான். ''இன்னும் பத்தே நிமிஷம் நமக்கு ஒண்டிக்கறதுக்கு ஒரு இடம் கிடைக்கும்'' என்றான்.

கட்டிடம் நோக்கிப் போனார்கள். பத்து நிமிடம் கழித்து சக்கரவர்த்தியிடம் இருந்து போன் வந்தது.

அதற்குப் பிறகு கதவைத் தட்டினார்கள். உள்ளே இடம் கிடைத்தது.

அந்த நேரத்தில் அங்கே இரண்டு வேலையாட்கள் மட்டுமே இருந்தார்கள். ஆனாலும் நல்ல உபசரிப்பும் கிடைத்தது.

சூடான பால் கொடுத்தார்கள். சாப்பிட்ட பின்பு வேலையாளிடம் சொல்லி சோபாவைக் கடலை நோக்கிப் போட்டபடி அமர்ந்தார்கள்.

அபிநயா திரும்பி விக்ரமாதித்யனைப் பார்த்தாள். ''என்ன ஐடியா?'' என்றாள்.

அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

''அபி! இப்படிக் கடலுக்குள்ளே போவாங்கன்னு நமக்குத் தெரியலே. இல்லே! நான் இப்படி யோசிக்கலே. ஏதாவது வேற இடத்துல பங்களா கிங்களான்னு கொண்டு போய் இறக்குவானுங்கன்னு நெனச்சேன். ஆனா, இது என்னமோ மர்ம நாவல் மாதிரிப் போகுது'' என்றான்.

அபிநயா அவனைக் கவனமாகப் பார்த்தாள். அவன் திடீரென்று நினைவு வந்தவன் போல் கேட்டான்.

''ஏன்... அபி! இறங்கிப் போனது யார்... யாரு?'' என்று.

''ஒன்னு பி.ஏ. சார். இன்னொன்னு ரகுவீர் மாதிரித்தான் தெரிந்தது'' என்றாள்.

''அசல் ரகுவீரா, நகல் ரகுவீரா?'' என்று கேட்டான்.

''தெரியலியே!'' என்றாள்.

''சரி! அபி இன்னைக்கு நாம செய்யக் கூடியதெல்லாம் ஒன்னுதான். போனவங்க எப்ப வர்றாங்களோன்னு காத்திருக்க வேண்டியதுதான்.''

''சப்போஸ் வர்றதுக்கு மூனு நாளாச்சுன்னா!'' என்றாள்.



''என்னோட கணக்கு... அவ்வளவு ஆகாதுன்னு அப்படியே இருந்தாலும் நாம டர்ன் போட்டுக்கிட்டுக் காத்திருக்க வேண்டியதுதான்!'' என்றான்.

அதற்காகத்தான் காத்திருந்தார்கள்.

ஒரு மணி நேரம் போயிருக்கும். பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அபிநயா கொட்டாவி விட்டாள். அவள் கொட்டாவி விடுவதே பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

அவன் கண்கள் அவள் முகத்தில் மேல் படிந்து மீண்டன.

''என்ன அபி! தூக்கம் வருதா? தூங்கு!'' என்று சோபாவின் அந்த ஓரத்திற்கு நகர்ந்து அமர்ந்தான்.

அவள் படுத்துக் கொண்டாள். அவனும் அமர்ந்தபடியே சற்றே கண்ணை மூடிக் கொண்டான்.

அடுத்த அரைமணி நேரத்திற்கு எந்த அசைவும் இருக்கவில்லை.

கண்களை மூடி அமர்ந்திருந்த நேரத்தில் அபிநயா ஒரு காரியம் செய்தாள்.

எழுந்து தூக்கக் கலக்கத்தில் சுற்று முற்றும் பார்த்தவள் நகர்ந்து விக்ரமாதித்யனின் மடி மேல் தலைவைத்துப் படுத்துக் கொண்டாள்.

தூக்கி வாரிப் போட்டாற்போல் விழித்தான் விக்ரமாதித்யன்.

''ஹேய்! அபி! என்ன இது'' என்று உலுக்கினான்.

''சும்மாயிருங்க... விக்ரம்!'' என்று முணுமுணுத்துக் கொண்டே படுத்து விட்டாள்.

செய்வதறியாமல் விழித்த விக்ரமாதித்யன் மெதுவாக ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

நிர்மலமான முகத்துடன் உறங்குகிற அபிநயாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே விசித்திரமான புன்னகையுடன் அமர்ந்து கொண்டான்.

மகிழ்வும், சங்கடமும், வேதனையும் நிறைந்த அந்த உணர்வு அவனுக்குப் புதியதாக இருந்தது. இரண்டே மாதத்தில் இந்தப் பெண்ணின் மேல் தனக்கு ஆர்வம் வந்ததற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்தான்.

துறுதுறுப்பு, அறிவு... "என்ன ஆகி விடும் பார்க்கலாம்" என்ற துணிச்சல் அதே சமயம் முரட்டுத்தனமான துணிச்சலும் அல்ல.

நேர்த்தியாகவும், உடை அணிந்து கொண்டு ஆண், பெண் உறவுகளை இயல்பாக ஏற்றுக் கொண்டு கலகலப்பாக இருக்கிறாள்.

முதன் முதலாக ரகுவீரைப் பற்றி ஒரு ஃபீச்சர் செய்கிறேன் என்று ஆரம்பித்தபோது, விக்ரமாதித்யனுக்குள் இளப்பமாக ஒரு எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது. 'சக்கரவர்த்திக்காக இந்த 'ப்ராடிகல் டாட்டர்' என்கிற சுமையைக் கொஞ்ச நாள் சுமந்து விட்டுக் கழட்டி விட்டுவிட வேண்டியதுதான்' என்று தீர்மானித்திருந்தான். ஆனால், பத்திரிகைக்காரர்கள் பற்றி ஓரளவு விஷயம் தெரிந்து கொண்டுதான் உள்ளே நுழைந்திருக்கிறாள் என்பது தெரிந்ததும் சுவாரசியம் இளம்பியது.

தங்கள் இராமத்துக்கு வந்த போது தன்னுடைய தாத்தாவைப் பற்றி அவள் மரியாதை மிகுந்த பார்வையோடும், ஆழ்ந்த சிந்தனையோடும் கேட்டுக் கொண்டது இப்போது நினைவிற்கு வந்தது.

அப்போது சொன்னாள். "நம்ம நாட்டில் எல்லோரும் ரத்தம் சிந்தாமல் அஹிம்சை முறையிலே சுதந்திரம் வாங்கினதா நாம ஒரு தப்பான கருத்துக் கொடுத்துகிட்டிருக்கோம், விக்ரம் சார்! யுத்தம்னு ஒன்று நடக்கலையே



தவிர நிறையப் பேர் ரத்தம் சிந்தியிருக்காங்க... தங்களோட வாழ்க்கையையே தொலைச்சிருக்காங்க... ஒரு பக்கம் சுபாஷ் சந்திரபோஸ் படை திரட்டியிருக்காரு. ஆனா, ஒரு தப்பு நடந்து போச்சு. என்னன்னா சுதந்திரப் போராட்டத் தியாகிகள் வீட்ல மட்டும் நாட்டுப் பற்றோட தாக்கம் இருந்திருக்கு. பாதிக்கப்படாத குடும்பங்கள்ல பெரிய அளவில் தாக்கம் இல்லே. நம்ம கிட்டே ஒரு மெத்தனம் இருக்கு. பொய்களின் வெளித் தோற்றத்தை உண்மைன்னு நம்பி... சர்வ சௌகரியமா வாழ்ந்துகிட்டிருக்கோம்" என்று பொரிந்து தள்ளிவிட்டாள்.

அப்போதுதான் விக்ரமாதித்யனுக்குள் தோன்றியது. இந்தப் பெண் மேலோட்டமாகப் பார்த்தால் விளையாட்டுப் பெண்ணைப் போல இருந்தாலும் ஆழ்ந்து சிந்திக்கிற பெண் என்று.

அவனிடம் ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தவள் சற்றுக் கழித்துப் பார்த்தால் ஓட்டுச் சிப்பியை நெற்றியின் மேல் வைத்துக் கொண்டு,

"ரைட்டா? ராங்கா?" என்று நொண்டியடித்துக் கொண்டிருந்தாள்.

சிரிப்பாக வந்தது. அதை நினைக்க இப்போதும் சிரிப்பாக வந்தது.

மெல்லச் சிரித்துக் கொள்கையிலேயே புரண்டு படுத்தாள். அவள் முகத்தில் சங்கடமானதொரு மாற்றம் தோன்றியது.

மெல்லத் தலையைக் கோதிக் கொண்டான். தலையைக் கீழே சாய்த்து அபிநயாவின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே அமர்ந்து விட்டான்.

தலையைக் கோதிக் கொடுக்க வேண்டுமென்று கைகள் பரபரத்தன. 'தவறு! மகாத் தவறு!' அவள் மனதில் என்ன

இருக்கிறதென்று தெரியாமல் அந்த மாதிரி எதுவும் செய்துவிடக்கூடாது' என்று எண்ணிக் கொண்டான்.

யோசித்துக் கொண்டே இருந்தவன் தன்னை மறந்து சோபாவின் மேல் தலையைச் சாய்த்தபடி உறங்கி விட்டான்.

ஒரு மணி நேரம் போயிருக்கும்.

திடுக்கிட்டு விழித்தான்.

அபிநயா எழுந்து சோபாவில் காலைக் குறுக்காகக் கட்டியபடி அமர்ந்து கொண்டிருந்தாள்!

'நான் சடனா முழிச்சுப் பாத்தேன். நீங்க தூங்கிட்டீங்க. அதனால நான் எழுந்து உட்கார்ந்துட்டேன்' என்றாள்.

"ஓஹ்! தாங்க்ஸ்!" என்றான்.

"பரவால்ல... பரவால்ல... இன்னும் ஒரு மணி நேரம் நீங்க தூங்கலாம்" என்றாள்.

"இல்ல... அபி! ஒன் அவர் தூக்கமே போதும். இனி நான் அலர்ட் ஆயிடுவேன்" என்றான்.

எழுந்து முகம் கழுவிக் கொண்டு வந்தான். அதற்குள்ளாக அபிநயா சமையலறையில் போய் ஒரு கப் சூடான காபி போட்டு எடுத்துக் கொண்டு வந்தாள்.

"என்னஇது! ஒரு கப் மட்டும் கொண்டு வர்றே!" என்றான் கேள்விக் குறியாக.

அவள் 'களுக்'கென்று சிரித்தாள். "காபி உங்களுக்குத் தான். நான்தான் மறுபடியும் தூங்கப் போறேனே..." என்றாள்.

அவன் கோபம் போல் முறைத்தான். "இப்படி ஒரு அஸிஸ்டெண்ட் எனக்குத் தேவையா?" என்றான்.

அவள் யோசிப்பது போல் நடித்தாள்.



"நியாயப்படி பாத்தா... நீங்கதான் இந்தப் புராஜக்ட்ல அஸிஸ்ட் பண்றீங்கன்னு நினைக்கறேன்" என்றாள்.

"கொழுப்புத்தானே!" என்றான்.

"ஐயோ! அது நிறைய இருக்கு."

"ஹேய்! கரெக்ஷன்... நான் உனக்கு கைட் பண்றேன். தெரிஞ்சுக்க. நீ சொன்ன ஸ்டேட்மெண்ட்டை மாத்தலேன்னா... இப்பவே கிளம்பிப் போயிடுவேன்" என்றான்.

"போயி! எங்கப்பாகிட்டே என்ன சொல்வீங்க?"

"என்ன சொல்வேன்? மிஸ்டர் சக்கரவர்த்தி நான் உங்களுக்குக் கீழே வேலை பாக்கறேன். ஆனா, அதுக்காக நான் உங்க அடிமையில்லே... புரியுதாம்பேன்" என்றான்.

அவள் ஒரு நிமிடம் வெறித்துப் பார்த்தாள். அவன் எதிர்ப்பார்வையும் கூர்மையாகத்தான் இருந்தது. சட்டென்று அபிநயா அவன் எதிர்பாராத விதமாக இரண்டு கைகளாலும் இரண்டு காதுகளையும் மாறிப் பிடித்தவள் நின்று கொண்டு தோப்புக் கரணம் போடப் போனாள்.

"சாரி! தப்பு!" என்றாள்.

அவன் சட்டென்று சிரித்து விட்டான்.

"ஓ.கே...! ஓ.கே...! விடு!" என்றான் "உட்காரு" என்று சோபாவைத் தட்டிக் காட்டினான்.

"அபி! நாம இடையில ஏதாவது மிஸ் பண்ணியிருப்போமா?" என்றான்.

"சான்ஸே இல்லை! ஏன்னா, அந்த ஸ்டீமர் நம்ம கண்ணுல இருந்து மறையறதுக்கே இருபது நிமிஷத்துக்கு மேலே ஆச்சு" என்றாள்.

அவன் காபியை ரசித்துக் குடித்தான். "டெலிஷியஸ்! டைம்லி ஹெல்ப்" என்றான். அவள் புன்னகைத்தாள்.

''என்ன சார்! என்னதான் நடக்குது?'' என்றாள்.

''தெரியலியே! அடுத்த ஃபைட்டிங் ஷெட்யூல் எப்பன்னு விசாரிச்சியா?'' என்றான்.

''பத்து நாள் கழிச்சாம்!'' என்றாள்.

''ஃபைட்டிங் ஷெட்யூல் சமயத்துல மட்டும்தான் ஏதோ நடக்கற மாதிரித் தோணுது'' என்றாள் அபிநயா.

''ஆமா... எனக்கும்தான்!'' என்றான் விக்ரம்.

''விஷயம்... நியாயமானதா இருந்தா இந்த மூடு மந்திரம் எல்லாம் தேவையில்லையே!'' என்றான் விக்ரம்.

''ஆமா!'' என்றவள் மறுபடியும் கொட்டாவி விட்டாள்.

அவன் புன்னகையுடன் பார்த்தான். கிட்டத்தட்ட அவனைப் போலவே சட்டை போட்டிருந்தாள்; பாண்ட் அணிந்திருந்தாள்.

ஒற்றைப் பின்னல் இறுக்கமாகப் பின்னியிருந்தாள். இந்த மாதிரி அலைவதற்கு வசதியாக உடுத்துக் கொண்டு வந்திருக்கிறாள் என்று தோன்றியது.

வழக்கமாகச் சுடிதாரில் அலைவாள். சில சமயங்களில் ஜீன்ஸ் கூட அணிந்து வருவாள். ஆனால், கண்ணை உறுத்துகிறமாதிரி அணிவதில்லை.

சற்று நேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் சொன்னான்.

''அபி! பிரமனுக்கு உன்னைப் படைக்கிற நேரத்துல ஏதோ ஒரு கன்ஃப்யூஷன் வந்துருச்சு... போல இருக்கு!'' என்றான்.

''ஏன்?'' என்றாள் கேள்விப் பார்வையுடன்.

''இல்லே! ஆணாப் படைக்கலாமா? பெண்ணாப் படைக்கலாமான்னு ஒரு சின்ன கன்ஃப்யூஷன். அப்புறம் ஆண்



மாதிரியான பொண்ணைப் படைச்சா எப்படியிருக்கும்னு அவனுக்குத் தோணியிருக்கும் போல இருக்கு. உன்னைப் படைச்சுட்டான்'' என்றான்.

''சே! இப்படிக் கமெண்ட் வாங்கறதுக்கா... நான் காபி போட்டுக் குடுத்தேன்'' என்றாள்.

''நீ போட்ட காபியைக் குடிச்சுட்டுதான் என் மூளை சுறுக்கா வேலை செய்றது போல இருக்கு.''

''சார்! என்னவோ சொல்லிட்டுப் போங்க... ஐ வாண்ட் டு ஸ்லீப்.''

அவன் காபியைக் குடித்து முடித்து விட்டு சோபாவில் அருகில் இருந்த டீபாயின் மேல் வைத்துவிட்டுத் திரும்புகிற நேரத்தில் காலை நீட்டிக் கொண்டு மறுபடியும் அவன் மடிமேல் தலைவைத்துக் கொள்ள வந்தாள்.

அவன் விலகிக் கொண்டான். ''ஹேய்! என்ன இது! கடைசிக்கு என்னைத் தலையணை லெவலுக்கு இறக்கிடுவே போல இருக்கு...'' என்று புன்னகைத்தான்.

அவள் எழுந்து அருகில் வந்து அவனது இரண்டு கன்னங்களையும் தன் கைகளால் தடவிக் கொள்கிறாற் போல் சொன்னாள்.

''சார்! சார்!'' ப்ளீஸ் என்று.

''சார்! ஆண், பெண் வித்தியாசமெல்லாம் மலையேறி போச்சு... சார். கொஞ்சம் தூங்கிக்கறனே... டோண்ட் ஃபீ அன் ஈஸி'' என்று நைஸாகப் பேசவும் அவன் கலகலவென் சிரித்தான்.

''பயங்கரமான காக்கா... பார்ட்டி நீ! சரி... ச படுத்துக்க...'' என்றான்.

இடம் கொடுத்தான்.

படுத்த மாத்திரத்தில் உறங்கி விட்டான். மறுபடியும் தனக்குள் சிரித்துக் கொண்டு இறங்கிப் போனவனாய் அமர்ந்து கொண்டிருந்தான்.

அவன் புரண்டு, புரண்டு படுக்கிற ஒவ்வொரு முறையும் தன் உணர்வுகளுடன் போராடிக் கொண்டு ஒரு மணி நேரம் வரை கழித்தான்.

இட்டத்தட்ட நள்ளிரவு மூன்று மணி வாக்கில் தூரத்தில் ஒரு புள்ளியாக அந்த ஸ்டீமர் தெரிந்தது.

அருகில் வரும் வரை பார்த்துக் கொண்டிருந்தவன் "அபி, அபி!" என்று லேசாகத் தட்ட அவள் சட்டென்று விழித்தாள்.

"போட் வருது!" என்றான்.

அவள் சுறுசுறுப்பானாள்.



# 16

"ஏன்னா! என்னதிது. இன்னும் இந்தப் பொண்ணைக் காணலே. நேக்கு அடி வயித்தைக் கலக்கறது" என்றார் பாரிஜாதம்.

"சித்த என்னைத் தூங்க விடு பாரி! அந்தப் புள்ளையாண்டான் பதினோரு மணிக்கு எழுப்பி விட்டுட்டான். ஒரு வழியா இப்பத்தான் கண்ணயர்றேன். அதுக்குள்ள உன்னோட தொல்லை" என்று எரிந்து விழுந்தார் சக்கரவர்த்தி.

"என்ன பேசறேள்? கொஞ்சமாவது பயமிருக்கா! இப்ப மணி என்ன தெரியுமா? மூணு. இத்தனை நேரத்துக்கு ஒரு வயசுப் பையனோட அனுப்பி வச்சுட்டு நிச்சிந்தையாத் தூங்கறேளே... இது எந்த விதத்துல நியாயம்" என்று பொரிந்தார் பாரிஜாதம்.

சக்கரவர்த்தி சலிப்புடன் எழுந்து அமர்ந்தார்.



"பாரி! அவா ரெண்டு பேரும் ஜர்னலிஸ்ட்ஸ். தெரியுமா? நம்ம குழந்தைங்க மேலே நமக்கு நம்பிக்கை வேணும்" என்றார்.

"இத பாருங்கோ! நம்பிக்கை வேறே. நிதர்சனம் வேறே. நாளைக்கே நான் அந்தப் பையனைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு வந்து நின்னா என்ன செய்வேள்?" என்றார்.

"உன் பொண்ணு வாழ்க்கையிலேயே செஞ்ச உத்தமமான காரியம் அதுவாத்தான் இருக்கும். சித்த படுத்துத் தொலை" என்றார். படுத்துவிட்டார்.

பாரிஜாதம் செய்வதறியாது திகைத்து விட்டார். "இது என்ன? இந்தப் பிராம்மணர் இப்படி உளறிக் கொட்டிட்டுத் தூங்கறார்" என்று கவலையுடன் போய் மகனை எழுப்பினார்.

"டேய்! விவேக் என்னடா இது? உன் தங்கை இன்னும் வந்து சேரலை. இவரானா பத்திரிகைத் தொழில்னா அப்படித்தான் இருக்கும்னு ரொம்ப லேசாச் சொல்றார்."

"அம்மா! நீ எதுக்குக் கவலைப்படறே? என்றான் விக்ரம் கூட இருக்கானே!" என்றான் விவேக்.

கொட்டாவி விட்டபடி படுக்கையை நோக்கிப் போனவன் அம்மாவின் வார்த்தையைக் கேட்டு நின்றான்.

"அவன் கூட இருக்கறதுதான் நேக்குக் கவலையா இருக்கு..." என்றார்.

"அம்மா! அவன் ரொம்ப டீசன்டான பையன். அப்படி மட்டும் உன் பொண்ணுக்கு அந்தப் பையனைப் பிடிச்சுப் போச்சுனு வை அதைவிட அதிர்ஷ்டம் அவளுக்கு வேற இல்லை" என்றான்.

"என்னடா பேசறே! உங்கப்பாவும் இதையே உளர்றாரு" என்றார் பாரிஜாதம் மறுபடியும் அதேகவலை தொனிக்கும் குரலில்.

விவேக் அம்மாவை ஆறுதல் படுத்த வேண்டியது அவசியம் என்று உணர்ந்தான். முகம் கழுவிக் கொண்டு அமர்ந்தான். அம்மாவை அருகில் அமர்த்திக் கொண்டான்.

"அம்மா! அவா ரெண்டு பேரும் இயற்கையாப் பழகறா. சும்மா இருக்கற குளத்துல நாமே கல்லைப்போட்டா மாதிக் குழப்படி பண்ணப்படாது" என்றான்.

"ஓ! அப்ப அவாளே அப்படி ஒரு முடிவுக்கு வந்தா... சிம்பேளா" என்றாள்.

"அம்மா... அப்படி ஒரு நிலைமை வந்தா பாத்துக்கலாம்மா..." என்றான். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பாரிஜாதம் ஒருவழியாக மனம் தேறி அறைக்குள் போகிற அதே நேரத்தில் அபிநயாவைக் காரில் திரும்ப அழைத்துக் கொண்டு வந்த விக்ரமாதித்யன் மனத்திலும் அதே குழப்பம்தான் தோன்றிக் கொண்டிருந்தது.

* * *

"நாம நினைக்கற அளவுக்கு இல்லாம இது ஒரு சின்ன விஷயமாக் கூட இருக்கலாம்" என்றான் விக்ரம்.

எப்படியும் பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறையாவது இணையாசிரியர்கள், துணையாசிரியர்கள் என்று எல்லோரையும் இணைத்து ஒரு கூட்டம் போடுவது சக்கரவர்த்தியின் வழக்கம்.

எப்போதும் காலை பதினோரு மணியளவில் நடக்கும் கூட்டம் இன்று பிற்பகல் நடந்தது.

அப்துலும், விக்டரும் முணுமுணுப்பாகப் பேசிக் கொண்டார்கள்.

"விக்டர்! பெரியவர் இதுவரை இல்லாத வழக்கமா ஆஃப்டர் நூன் மீட்டிங் போட்டிருக்காரு" என்றான்.



"அநேகமா விக்ரமும் வந்து கலந்துக்கணும்கறதுக்காகப் போட்டிருப்பாருன்னு நினைக்கறேன்" என்றான்.

அதில் கொஞ்சம் உண்மையிருந்தது!

முதல் நாளிரவு உறக்கம் கெட்டிருந்தான் விக்ரம். பிற்பகலில் வருகிறேன் என்று அனுமதி கேட்டிருந்தான்.

அதற்காகவே அவரும் கூட்ட நேரத்தை மாற்றி அமைத்தார். அமைத்ததோடு மட்டுமல்லாமல்,

"விக்ரம் நேற்றைய விஷயங்களை டிஸ்கஸ் பண்ண வேண்டியிருக்கு மத்தியானம் வந்துரு" என்றார்.

"சரிங்க... சார்!" என்று சொல்லியிருந்தான்.

சரியாக ஒரு மணி ஐம்பது நிமிடங்களுக்கு அவன் பைக் அலுவலக வளாகத்துக்குள் நுழைவதை சக்கரவர்த்தி தனது அறையிலிருந்து பார்த்தார்.

புன்னகைத்துக் கொண்டார். அனுமதி கேட்டு வீட்டில் குப்புறப்படுத்து உறங்கிக் கொண்டிருக்கிற மகனை நினைத்துக் கொண்டார்.

"கண்டிப்பா... நாலு மணிக்கு வந்து சேரு. டிஸ்கஷன் இருக்கு" என்று மிரட்டி விட்டு வந்திருந்தார். வழக்கம் போல அடுத்த இஷ்யூவுக்கான லே அவுட், பொதுவான விஷயங்கள் பற்றி விவாதித்து முடிவெடுத்துக் கொள்வார்கள்.

ஆண்டாண்டு காலமாக வழக்கத்தில் இருந்த கேள்வி பதில், கார்ட்டூன், இளைஞர்களுக்கான விஷயங்கள், தொடர் கதை, கட்டுரை பற்றியெல்லாம் பேசி முடித்தார்கள்.

கூட்டம் முடிய மூன்றரை மணியாகியிருந்தது. அதற்குப் பிறகு சக்கரவர்த்தி, விக்ரமாதித்யன், விவேக் மூவரும் மட்டும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் அந்தக் கருத்தைச் சொன்னான் விக்ரமாதித்யன்.

"எந்த விதத்துல ஒப்பிளா இருக்கும்னு சொல்றே!" என்றார் சக்கரவர்த்தி.

"தன்னைப் போலவே இருக்கிற யாரோ ஒரு ஆள் ரகுவீருக்குக் கிடைச்சிருக்காரு. ஃபைட்டிங் சீன்ல நடிக்கறதுக்கு மட்டும் அவரை டூப்பா பயன்படுத்திக்கறாருன்னு நினைக்கறேன்" என்றாள்.

"அப்ப எதுக்கு இத்தனை மூடு மந்திரம்!" என்றாள் அபிநயா. இந்தக் கூட்டத்திற்கு மட்டும் வந்து இணைந்து கொண்டாள்.

"இது ஒன்னும் விடை கிடைக்காத கேள்வி இல்லே. பொதுவா புகழ் பெற்ற நடிகர்கள் தங்களைப் பற்றிய இது மாதிரியான விஷயங்களை மறைவா வச்சுக்கறது இயற்கை தான்" என்றான் விக்ரமாதித்யன்.

"அப்படியும் இருக்கலாம்" என்றார் சக்கரவர்த்தி மேலும் சொன்னார்.

"ஆனா, அபிநயா கேட்கறதும் நியாயம்தான். என்னவோ ஒரு ராத்திரியில போயிக் காரவான்ல இறங்கி கடத்துன்னே... போயி... சம்திங்... ஃபிஷி!" என்றார்.

விக்ரமாதித்யன் குறும்பாகச் சிரித்தான். "நீங்க சொல்றதைப்பாத்தா... அப்படியும் இருக்கலாமோன்னு... தோணுது" என்றான்.

"என்னப்பா... நீ... அப்படியும் இருக்கலாம்.... இப்படியும் இருக்கலாம்னு... ரெண்டு பக்கமாவும்... பேசறே" என்றான் விவேக்.

"அப்ஜெக்டிவ்வா சிந்திக்கறேன். விஷயம் எப்படி வேண்ணா இருக்கலாம். இதுவரை நாம சிந்திக்கற கோணங்கள்லே இல்லாம பூதாகாரமாகக் கிளம்பலாம். இல்லே புஸ்வாணம் மாதிரிப் போகக்குன்னும் போயிரலாம்.



பத்திரிகைக்காரனா நாம எல்லாத்தையும் அலசணும். எதுக்கும் தயாரா இருக்கணும்" என்றான்.

எல்லாரும் ஏற்றுக் கொண்டார்கள். விக்ரமாதித்யன் மேலும் சொன்னான்.

"முழு உண்மையையும் தெரிஞ்ச ஒரே ஆள் பி.ஏ. கலிய மூர்த்திதான். அவர்கிட்டே இருந்து ஏதாவது விஷயம் கறந்தா மேற்கொண்டு தொடர்றது சுலபமாக இருக்கும்" என்றான்.

"யார் செய்யறது?" என்றான் விவேக்.

"மிஸ். அபிநயா!" என்று சிரித்தான் விக்ரம். இப்பத்திக்கு அவங்கதான் ரகுவீருக்கும் அவரு பி.ஏ.வுக்கும் ஃபிரண்ட்" என்றான்.

மேலும் சற்று நேரம் திட்டம் போட்டுக் கொண்டார்கள்.

இறுதியில் விக்ரம் சொன்னான். "அவசியப்பட்டா ஒரு டீமா வொர்க் பண்ண வேண்டிவிருக்கும். அப்பத் தேவைப் பட்டா அப்துலையும், விக்டரையும் இன்வால்வ் பண்ணிக் கலாம்" என்றான்.

"டன்!" என்றார் சக்கரவர்த்தி.

கான்ஃபரன்ஸ் ஹாலிலிருந்து வெளியே வந்தான் விக்ரமாதித்யன்.

அலுவலகத்தில் அவனோடு இணைந்து கொண்ட அப்துலும், விக்டரும் கேலிச் சிரிப்புடன் அணுகினான்.

"என்னங்க சார்! லேடி அசிஸ்டென்ட்னாலே வேண் டாம்ப்பா...ன்னு தூரம் ஓடுவீங்க.. இப்ப... என்ன, அசிஸ் டென்டும், ஆசிரியரும் இணை பிரியாம இருக்கீங்க" என் றார்கள்.

அவன் புன்னகைத்தான். "என்ன செய்யறது தலைவரே கேட்கும்போது மறுக்க முடியலே. ஆனா, எனக்கொன்றும் அவ்வளவு கஷ்டமா இல்லே!" என்றான்.

"ஏன், மேடம் ரொம்ப அழகா இருக்காங்களே... அதனாலயா..." என்றான் அப்துல்.

"போடா! ஜொள்ளுப்பார்ட்டி" என்றான் விக்டர்.

விக்ரமாதித்யன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல் "ஷி இஸ் ஓ.கே! நம்மளைப் போலவே டெம்பரமென்ட் இருக்கறதுனால சேர்ந்து வொர்க் பண்றது ஒண்ணும் கஷ்டமா இல்லே!" என்றான்.

"என்ன... விக்ரம்! பெரிய விஷயமா ஏதோ இடைச்சிருக்கும் போல இருக்கே" என்று விஷயம் கறக்கப் பார்த்தான் அப்துல்.

"என்கிட்டயே இன்வெஸ்டிகேஷனா?" என்று சிரித்தான் விக்ரம்.

"போறங்க.. எப்படியிருந்தாலும் தெரியத்தானே போகுது. அவசியம் வரும்போது உங்களையும் கூப்பிட வேண்டிவரும்" என்றான்.

"நீ சொல்றதைப் பாத்தா... ஏதோ மீன் மாட்டியிருக்குன்னு நினைச்சேன். ஆனா, பெரிய சைஸ் திமிங்கலமா சிக்கியிருக்கும் போல இருக்கு" என்றான் விக்டர்.

"தெரியலே! இனிமேத்தான் தெரியும்" என்று நழுவலாகச் சொல்லி விக்ரமாதித்யன் விடுவித்துக் கொண்டான்.

அன்றைக்கெல்லாம் பி.ஏ.வை எப்படி வசப்படுத்துவது என்ற யோசனையிலேயே கழிந்தது. ஆனால், அதற்கும் ஒரு வாய்ப்பு வந்தது.

* * *

"யோவ்! நீ கலியமூர்த்தி இல்லய்யா. என்னோட கலிகாலம்" என்றான் ரகுவீர் கடுப்பாக.

கலியமூர்த்தி என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தான்.



கடந்த நான்கு நாட்களாகக் குழந்தைகள் இருந்தார்கள். அவர்கள் முன்னே பாசமழை பொழிந்து நடந்து கொண்டான் ரகுவீர். மகனுக்கு ரதிஷ் என்றும், மகளுக்கு சுவாதி என்றும் பெயர் வைத்திருந்தான்.

"என்னத் தங்கங்களா? தங்க மயிலுங்களா" என்று கொஞ்சிக் கொஞ்சி அப்பா என்றாலே அவர்களுக்கும் பாசம் பொங்குகிற மாதிரி நடித்து வசப்படுத்தியிருந்தான்.

ருக்மணி உயிரே இல்லாத புன்னகையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

"ஏன்... ருக்கு இந்த ரதிஷ் பய பாத்தியா... ஹாஸ்டல் போனவுடனே எவ்வளவு பிரில்லியன்டா எவ்வளவு அழகாயிட்டான்" என்றெல்லாம் அவளிடமும் இயல்பாகப் பேசுவது போல் பேசுவான்.

அந்த நான்கு நாட்களும் அடி உதை இல்லாமல் கொஞ்சம் நிம்மதியாக உறங்கினாள். அதேபோல் வெளியூர் ஷூட்டிங் போனால் கொஞ்சம் நிம்மதி கிடைக்கும்.

நான்கு நாட்களுக்குப் பிறகு அடுத்து வரப்போகிற நாட்களை ஒருவித விரக்தி மனப்பான்மையோடு எதிர்கொள்ளக் காத்திருந்தாள் ருக்மணி.

அப்போது தான் அவளே எதிர்பாராத விதமாக அன்றைக்கு அன்பாகப் பேசினான் ரகுவீர்.

"சாரி! ருக்கு... எனக்குப் புகழ் நிறைய இருக்குங்கறதுனாலயே வெளிய நடிச்சுகிட்டே இருக்க வேண்டியிருக்கு. அந்தக் கோபத்தையெல்லாம் இங்க கொட்டு என்று கொட்டிடறேன். உன்கிட்டே நீயும் பாவம்தான்... ஐ ம் சாரி!" என்றான்.

"இது எதற்கு இந்தப் புது நாடகம்!" என்று சந்தேகம் எழுந்தாலும் ருக்மணி எதையும் காட்டிக் கொள்ளாமல் "பரவால்லைங்க!" என்றாள்.

"என்... ருக்கு! உனக்கும்தான் ஒரு நாலு நாள் சேஞ்சு இருக்கட்டுமே... என்னமோ நவக்கிரகக் கோயிலுக்கெல்லாம் போகணும்னியே போயிட்டு வாயேன். அப்படியே வேளாங்கண்ணி போறதுன்னா போயிட்டு வாயேன்" என்றான்.

அவள் உற்சாகமானாள். உடனே சந்தேகமும் எழுந்தது ஏதோ திட்டம் போடுகிறார் போல் இருக்கிறது என்று.

அதற்குள் ரகுவீர் சிரித்தான். "சந்தேகப்படாதே! ருக்மணி" என்றான்.

ருக்மணி அகப்பட்டவள் போல் விழித்துக் கொண்டு "இல்லலே... அப்படியெல்லாம் இல்லே" என்று உளறினாள்.

"ஓ.கே...! உனக்கு ரெண்டு நாள் டைம் தர்றேன். யோசிச்சு முடிவு சொல்லு" என்று சொல்லியிருந்தான்.

அதற்கு இன்றைக்குப் பதில் தெரிய வேண்டும் என்று காத்திருந்தான். இதுவரை பதில் வரவில்லை. இப்போது கவியமூர்த்தியிடம் சொன்னான்.

"யோவ்... பி.ஏ.! உனக்கு நம்ம வைஃப் மேலே ஒரு அனுதாபம் இருக்குன்னு எனக்குத் தெரியும். ஒரு நாலு நாள் அவளை எங்காவது அனுப்பிட்டுக் கொஞ்சம் ஃப்ரீயா இருக்கலாம்னு நினைக்கறேன். புரிஞ்சுக்க மாட்டேங்கறியே.." என்றான்.

கவியமூர்த்திக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"என்ன இருந்தாலும் அவ என் வைஃப்ய்யா. அவளுக்கும் என்னோட எதிர்பார்ப்புக்கள் புரியலை. அவளை வீட்ல வச்சிட்டு தப்பு செய்றப் போதெல்லாம் எனக்கும் உறுத்தலா இருக்கு. எதுக்கும் ஒரு நாலு நாள் வெளியூர் போகட்டும்யா... சொல்லியனுப்பு" என்றான்.

"ட்ரை பண்றேன் சார்!" என்றான் பி.ஏ.



"ட்ரையாவது... மண்ணாவது... அனுப்பறே!" என்றான்.

பி.ஏ.வுக்கும் வேறு வழியின்றி... ருக்மணியிடம் போய்,

"மேடம்! சார் சீரியஸாத்தான் சொல்றாரு போல இருக்கு. பாவம் ருக்மணியை நான் ரொம்ப வேதனைப்படுத்தறேன். என்ன பண்றது? இந்த பாழாப் போன தண்ணியை போட்டா உள்ள இருக்கற மிருகம் வெளிய வந்துருது. பாவம்யா... அவளும், ஏதோ கோயில், கீயில்னு போய்டு வரட்டும்கறார். ஒரு வேளை கடவுள் கண் திறந்துட்டான் போல இருக்கு" என்றார்.

அவ்வளவு உருக்கமாகப் பேசியிருந்தான் ரகுவீர். ருக்மணிக்கு நம்ப முடியவில்லை. ஆனால், ஒருவேளை நிஜமாகவே மாறியிருந்தால் என்ற லேசான நம்பிக்கை ரேகையும் உள்ளே ஓடியது.

உற்சாகமாகப் புறப்பட்டாள்.

கார், கூட டிரைவர், உதவிக்குப் பெண்கள் தங்குவதற்கு வசதி, என்று எல்லா ஏற்பாடுகளையும் செய்தான் பி.ஏ.

எப்போதும் போல் வெளியுலகத்துக்கு மிகப் பாக்கியம் செய்த பெண்மணியாகத் தோற்றமளித்துக் கொண்டு புறப்பட்டாள் ருக்மணி.

ருக்மணியை வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு வந்தான் ரகுவீர்.

"யோவ்! அடுத்த ஃபைட்டிங்... ஷெட்யூல்... எப்ப?" என்றான்.

"சார்... அடுத்த வாரம்!" என்றான் பி.ஏ. "அப்ப சரி! அதுவரைக்கும் என்ஜாய்மென்ட்தான்" என்று பகபகவென்று சிரித்தான்.

"என்னய்யா... உனக்கேதாவது லீவ் வேணுமா" என்றான் ரகுவீர்.

"இல்ல சார்! அம்மாவும் இல்லே. உங்களுக்கு இதுக்கு ஏதாவது தேவைன்னா... என்ன செய்வீங்க... நான் வர்றேன்" என்றான். ஆனால், அடுத்த நாள் மாலை வலுக்கட்டாயமாகத் தனக்கு விடுமுறை கொடுக்கவே சந்தேகம் ஏற்பட்டது.

வீட்டுக்குள் போகிறாற் போல் ரசிகர்களைப் பார்க்கும் அந்தக் கட்டடத்தில் இருந்தபடி வருவோர் போவோர் யார் என்று கவனித்துக் கொண்டிருந்தான் கவியமூர்த்தி.

சந்தேகப் பட்டாற் போலவே அந்தக் காரில் அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்ததுமே அவரது முகத்தில் பீதி அலையடித்தது.

கையைப் பிசைந்து கொண்டு செய்வதறியாமல் சற்று நேரம் கழித்த பி.ஏ.வுக்கு புறப்படும் முன்பு ருக்மணி தன்னிடம் சொல்லி விட்டுப் போன விஷயம் நினைவுக்கு வந்தது.

உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டார்.



17

"இத பாத்தியா... அகிலா! எத்தனை நகைங்க!" என்று எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தான் ரகுவீர்.

அகிலா நிஜமாகவே மலைத்துப் போனாள். கல்செட் என்ன? முத்து செட் என்ன! பவளம் என்ன? என்று அத்தனை நகைகளையும் ஒரு பெரிய எவர்சில்வர் பேஸினில் குமித்தாற் போல் காட்டினான் ரகுவீர்.

"ஐயோ! ரொம்ப நல்லாயிருக்குது அத்தான்!" என்று குதூகலித்தாள் அந்த இளம்பெண்.

நகைகளை எடுத்து அவள் ஆசையுடன் பார்ப்பதைப் பார்த்து கவனித்துக் கொண்டு அமர்ந்திருந்தான் ரகுவீர்.



"இத்தனையும் அக்காவுக்கும், சுவாதிக்குமா அத்தான்?" என்றாள் யதார்த்தமாக.

"இல்லை... உனக்கு!" என்றான்.

"எனக்கா?" என்று மலைத்தாள். "அப்ப அவங்களுக்கு?" என்றாள்.

"அவங்களுக்கும் வேண்டப்பட்டது இருக்கு. நீ உனக்குப் பிடிச்சிருக்கா... சொல்லு!" என்றான்.

"பிடிச்சிருக்கு. அத்தான். ஆனா, வேண்டாம்!" என்றாள் அகிலா.

ரகுவீரின் கண்கள் சுருங்கின. "ஏன்?" என்றான்.

"அத்தான்! என்னைப் படிக்க வச்சிருக்கீங்க... அடைக்கலம் கொடுத்தீங்க... அதுவே போதும். உங்க அன்பு என்னைக்கும் இருந்தா அதுவே போதும் அத்தான்" என்றாள்.

"மக்கு! அது என்னைக்கும் இருக்கும். இங்க... வா" என்றான் பக்கத்தில் உட்கார் என்பது போல் சோபாவைத் தட்டிக் காட்டினான். வாஞ்சையாகப் புன்னகைத்தான். அவளும் யதார்த்தமாகப் போய் அருகில் அமர்ந்தாள்.

"அகிலா... நமக்குள்ளே அன்பு எப்பவும் நிலைச்சிருக்கணும்னு நானும்தான் நினைக்கறேன். இப்ப... உன் அக்காவை பாரு. நல்லவதான். ஆனா, நாலு இடம் கூட்டிட்டுப் போற மாதிரி அவளுக்கு நாகரிகம் தெரியாது படிப்பில்லே!"

"ஏன்... அத்தான்! அப்படிச் சொல்றீங்க! அந்தக் காலத்துல பி.யூ.சி. தெரியுமா?"

"படிச்சு என்ன செய்ய? மடமடன்னு இங்கிலீஷ்ல பேச வேண்டாமா!"

அவள் அவன் உள்ளம் தெரியாமல் "அதென்ன... மாமா பிரமாதம்? யாராவது ஒரு ஆங்கிலோ இண்டியனை வச்சுச்

சொல்லிக் குடுக்கச் சொன்னாப் போச்சு. சினி ஃபீல்டுல படிப்பறிவே இல்லாம வந்தவங்க... எத்தனை பேரு இன்னைக்கு இங்லீஷ் பொளந்து கட்றாங்க'' என்றான்.

அவன் பொறுமையின்றிச் சிரித்தான். ''அகிலா... அதில்லை விஷயம். நான் எப்பவும் உன்னை என் கூட வச்சுக்க லாம்னு... இருக்கேன்'' என்றான்.

''உங்க... பி.ஏ. மாதிரியா! படிச்சு முடிச்சவுடனே வந்தர்றேன் அத்தான்'' என்றாள்.

அவன் கண்களில் சற்றே கோபம் ஏறினாற் போல் தோன்றியது. திரும்பி அவளை முறைத்தான்.

''ஏய். நான் சொல்றது புரியலையா...! இல்லே... புரியாத மாதிரி நடிக்கறியா?'' என்றவன் கோபம் நிறைந்த குரலில்.

அப்போதுதான் அவளுக்கு மெல்ல விஷயம் புரிய ஆரம்பித்தது போலும்.

''அத்தான்!'' என்றாள் பீதியடைந்த குரலில். சட்டென்று எழுந்து எதிர் சுவருக்கருகில் சாய்ந்து கொண்டாள்.

''அத்தான்! நீங்க ரொம்பப் பெரியவங்க... இது நியாயமில்லே... இது அக்காவுக்கு துரோகம்'' என்றாள்.

''என்னடி பெரிய துரோகம்? வெளியில இருந்து யாரை யாவது கொண்டு வந்தாத்தான் அவளுக்குக் கஷ்டம். நீயானா அவளையும் நல்லா வச்சுக்குவே இல்லே? அவளுக்கு நல்லது தான் செய்யறேன்'' என்றான்.

''அத்தான்! நீங்க நினைச்சா எத்தனையோ பொண்ணுங்க உங்களுக்குக் கிடைப்பாங்க...'' என்றாள் கண்களில் கண்ணீருடன்.

''அதைத்தான் சொல்றேன்'' எனக்கு எத்தனையோ பேரு கிடைப்பாங்க... ஆனா, நான் நீ வேணும்னு நினைக்



கிறேன். உனக்கு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் பாத்தியா!' என்றான்.

கபகபவென்று சிரித்தான்.

''அத்தான்! ப்ளீஸ் என்னை விட்டுடுங்க!'' என்று இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு கதறுகிற மைத்துனியைப் பார்த்தான்.

''ஹேய்! நீ இப்படிக் கெஞ்சும்போதுதான் எனக்கு மூடே வருது'' என்று நெருங்கி அவள் தோள் மேல் கைவைக்க முயன்றபோது அவள் சட்டென்று விலகினாள்.

''என்ன அகிலா... நீ? இத்தனை சொத்து, நகைன்னு உனக்கு வாரித் தரேன்... எவ்வளவு திட்டம் போட்டு உங்கக் காவை வெளியூர் அனுப்பியிருக்கேன். நீ புரிஞ்சுக்கவே மாட்டேங்கறே'' என்று அவள் தோள்களை அழுத்திப் பிடித்த போது அவள் வெறி பிடித்தாற் போல் கதறினாள்.

''இதுதான் நாம் உள்ளே நுழைவதற்குச் சரியான நேரம்'' என்று முடிவெடுத்தாள் அபிநயா.

ரகுவீரின் தனிப்பட்ட செல்போனை ஒலிக்கச் செய்தாள்.

ரகுவீர் சலிப்புடன் செல்போனை எடுத்தான். ''ஹலோ!'' என்றான்.

''சார்!' நான் எங்க இருக்கேன் தெரியுமா?'' என்றாள் உற்சாகக் குரலில்.

அவன் எரிச்சலை மறைத்துக் கொண்டு ''ஹலோ!' அபிநயா... எங்கயிருந்து பேசறீங்க...'' என்றான்.

''இங்கே! உங்க வீட்ல இருந்து!'' என்றாள். அவன் திடுக்கிட்டான்.

சட்டென்று அகிலாவிடமிருந்து விலகி நின்றான்.

''வந்துட்டேன்! இதோ உள்ளே வர்றேன் பாருங்க!'' என்று அறைக்குள் நுழைந்தாள்.

அவன் சட்டென்று முகபாவத்தை மறைத்துக் கொண்டு,

"வாங்க... வாங்க... அபிநயா!" என்று வரவேற்றான். அவள் யதேச்சையாக உள்ளே நுழைபவள் போல நுழைந்தாள்.

"சார்! என்னதிது... இத்தனை நகைங்களை இப்படி அலட்சியமாகப் போட்டு வச்சிருக்கீங்க...!" என்றாள்.

அவன் அசடு வழிந்தபடி "இது... அகிலா! என் வைஃப்போட ஸிஸ்டர்" என்று அறிமுகப்படுத்தினான்.

"ஹலோ! மிஸ். அகிலா!" என்று அவள் கையைப் பற்றிக் குலுக்கினாள். குலுக்கும்போதே தன் செல்போனை அவள் கையில் வைத்து அழுத்திக் கொடுத்தாள்.

"என்ன சார்! இந்த நகையெல்லாம் பாக்கலாமா?" என்று எதிர் சோபாவில் அமர்ந்தாள். வேறு வழியில்லாமல் எதிர்ப்புறம் ரகுவீர் அமர்ந்தான்.

'இது என்ன? இந்த நேரத்துல இந்தப் பொண்ணு நந்தி மாதிரி வந்திருக்கா' என்று எரிச்சல் பட்டாலும் எரிச்சலைக் காட்ட முடியாமல் அமர்ந்து கொண்டான்.

"அகிலா... மேடம்! எனக்கு ஒரு டம்ளர் காபி கிடைக்குமா?" என்றாள்.

கோழிக்குஞ்சு போல் நடுங்கிக் கொண்டிருந்த அகிலா மெல்ல சரிபடுத்துக் கொள்கையிலேயே ரகுவீர் திரும்பியும் பார்க்காமல்,

"போ! அகிலா... காபி கொண்டுவந்து குடு" என்றான்.

ஏதோ வில்லிருந்து விடுபட்ட அம்பு போல் ஓடினாள் அகிலா.

"அது... அபிநயா... மேடம்! கொஞ்சம் பிராப்பர்ட்டீஸ் பத்தியெல்லாம் டிஸ்கஸ் பண்ணிகிட்டிருந்தோம். என் வைஃப்க்கு அவ்வளவு அதிலயெல்லாம் விவரம் பத்தாது.



அகிலா கொஞ்சம் படிச்ச பொண்ணு அதான் டிஸ்கஸ் பண்ணிகிட்டிருந்தேன்" என்றான்.

'அடப்பாவி!' என்று உள்ளே சீற்றம் பொங்கிய போதும் அபிநயா அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

"ஓ... ஓ... அப்படியா சார்!" என்றாள்.

அதே சமயம் கீழே சென்ற அகிலா செல்போன் ஒலிக்க எடுத்தாள்.

'மேடம்... அகிலாதானே!' என்றது ஆண்குரல்.

"ம்...!" என்றாள் அகிலா.

அவளுக்கு நடப்பதெல்லாம் ஏதோ மர்ம நாவல் போல் இருந்தது. மிகவும் அச்சமாகவும் இருந்தது.

"மேடம்! நான் விக்ரம் பேசறேன். கொஞ்ச நேரத்துக்கு அபிநயா அங்க இருப்பாங்க. அதுக்குள்ள. நீங்க எப்படியாவது வெளியே வந்தீங்கன்னா... எங்க கார் நிக்குது. நம்பர் நோட் பண்ணிக்குங்க..." என்று நம்பரைச் சொன்னான்.

"வெளியே வந்துடுங்க. நாங்க காப்பாத்திடறோம்" என்றான்.

ஆஃப் செய்து விட்டான்.

அகிலா டக்கென்று புரிந்து கொண்டாள். அபிநயாவுக்கு காபி கொண்டு போய்க் கொடுத்தாள். ரகுவீரை நோக்கிச் சிரித்த முகத்துடன்.

"அத்தான்! உங்களுக்குக் காபி!" என்றாள். இதை எதிர் பார்க்காத ரகுவீர் "இல்லம்மா... வேண்டாம்!" என்றான். அன்பொழுகும் குரலில். பிறகு அபிநயாவிடம் திரும்பி.

"எக்ஸ்யூஸ்... மி...!" என்று சொன்னான். அகிலாவை உள்ளே அழைத்து போனான்.

"அகிலா...!" என்று ஆரம்பிக்கும்போதே "கவலைப்படாதீங்கத்தான்... வெளியாட்களுக்கெல்லாம் காட்டிக் கொடுக்க மாட்டேன்" என்றாள்.

அவன் முகம் மலர்ந்தது. "தேங்க்ஸ்" என்றான். அவள் உடனே அவன் நம்பும் விதமாக "அத்தான்! எனக்கு ஒரு ரெண்டு மாசம் டைம் குடுங்க... அதுக்குள்ளே... நான் என் மனசைத் தயாராக்கிக்கறேன். இத்தனை வசதியான வாழ்க்கை எனக்கு வேற எங்கே கிடைக்கப் போகுது" என்றாள்.

ரகுவீர் மகிழ்ந்து போனான்.

"குட்.. குட்!" என்றான்.

வெளியே வந்தார்கள். "அத்தான்! நான் மேலே அக்கா ரூம்லஇருக்கேன். அவங்க போனதுக்கப்பறம் வர்றேன்" என்றாள்.

ஆரம்ப கட்ட அதிர்ச்சி சரியானவுடன் மனம் தேறி விட்டாள் என்று முடிவு செய்து கொண்டான். ரிலாக்ஸாக ஹாலில் வந்து சற்று நேரம் அபிநயாவுடன் அரட்டை அடித்தான்.

"என்ன சார்! ருக்மணி மேடத்தைக் காணோம்" என்றாள் அபிநயா.

"அவங்க... நவக்கிரகக் கோயிலுக்குப் போயிருக்காங்க" என்றான் ரகுவீர்.

"ஓ... பரவால்லே... சார்! உங்களுக்காகவே எப்பவும் வேண்டிக்குவாங்க... போல இருக்கு.." என்றாள்.

"ஆமாமா... ஹி... ஹி!" என்று கஷ்டப்பட்டுச் சிரித்தான்.

அந்த இடைவெளியில்!

மேலே போன அகிலா மெல்ல வெளியே வந்தாள்.

காருக்கருகில் வழக்கம் போல அழுக்குக் கலரில் சட்டையும், தொப்பியுமாக விக்ரம் நின்றான்.

விக்ரம் யார் என்று அவள் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் காரை நோக்கிப் போனாள்.



அவன் கதவை திறந்தான்.

"மேடம்... உள்ளே நுழைஞ்சு... சீட்ல படுத்துக்குங்க" என்றான்.

அவளும் அதே போலப் படுத்துக் கொண்டாள். அதற்குள் பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஓட்டிய அபிநயா மெது வாகக் கிளம்பினாள்.

"அப்புறம்... சார்! நான் கிளம்பட்டுமா?" என்றாள்.

"சரிங்க... மேடம்!" என்றான்.

புறப்படுவதற்கு முன் அவள் அவனை உற்சாகப்படுத்தும் விதமாக ஒரு ஆலோசனையும் சொன்னாள்.

"சார்! இப்பல்லாம்... இயற்கை முடி மாதிரியே ஹேர் பிளான்டேஷன் செய்யறாங்க... இல்லே... சார் அது செஞ்சுக்குங்களேன்" என்றாள்.

"ஆமா... செய்யணும்" என்றவன் ரகுவீர் "அப்புறம் நீங்க சொன்ன மாதிரி ஆயுர்வேத சிகிச்சை ஏதாவது எடுத்துக் கணும்" என்றான்.

"ஓ.கே... சார்! பை... சார்!" என்றாள்.

கார் கிளம்பும் வரை அவன் போர்ட்டிகோவில் நின்றான்.

கார் நகர்ந்தது. அதற்குப் பிறகு தான் விக்ரமுக்கும் அவளுக்கும் உயிர் வந்தது.

"அகிலா... அப்படியே படுத்துக்குங்க... எழுந்திருக்கா தீங்க... நாங்க சொல்ற வரைக்கும்" என்றாள் அபிநயா.

அதேசமயம் பங்களாவில் கூர்க்காவுக்கு பி.ஏ. போனில் "ரகுவீர் அய்யா! ஏதாவது பொண்ணு நடந்து போச்சா... அப்படீன்னு கேட்டா ஆமான்னு சொல்லு" என்று இன்ஸ்ட் ரக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சற்றும் சுழித்து ருக்மணியின் அறைக்குப் போன ரகுவீர் அங்கே அகிலாவைக் காணாமல் திகைத்தான்.

பங்களா முழுதும் தேடினான். அகிலாவைக் காண வில்லை என்றதும் கூர்க்காவைக் கூப்பிட்டு அழைத்துக் காரில் அகிலா போனாளா என்று கேட்டான்.

"இல்லைங்கோ... சார்... அந்த அபிநயா அம்மாவும்... டிரைவரும்தான் இருந்தாங்கோ" என்றான்.

"அப்ப... அகிலா... எங்கே போனா?" என்று கேட்டான்.

"சார்! ஒரு பொண்ணு வெளியே நடந்து போச்சு" என்றான்.

"நீ எதுவும் விசாரிக்கலையா!" என்றார்.

"சாப் நம்பள்க்கு என்னா... தெரியும்? உங்களைப் பாத்துட்டு வெளியே போறாங்கோன்னு நினைச்சேன்" என்றான்.

ரகுவீர் வெகுவான கோபத்துடன் அவனது அறைக்கு வந்தான்.

அகிலாவை எப்படியும் மடக்கி விடவேண்டும் என்ற எண்ணத்துடன் வேலையாட்களையெல்லாம் வெளியே அனுப்பியிருந்தார்.

குறைந்தது இரண்டு மணி நேரமாவது இல்லாமல் யாரும் வரமாட்டார்கள் என்ற எரிச்சலில் கோபத்துடன் தனிமையில் சோபாவில் அமர்ந்தான்.

"இந்த அகிலா... எங்கே... போனாளோ!" என்ற நிகிலும் உள்ளே வெம்பியது.

* * *

கோவிலுக்குப் புறப்படுவதற்கு முன்பாகவே ருக்மணி சுவியமூர்த்திவிடம் வேண்டுகோள் வைத்திருந்தாள்.



"பி.ஏ... சார்! என்னை வெளியே அனுப்பறதுலயே இருக்காரு. என்ன விபரீதம் செய்யப் போறாரோ... தெரியலை. எதுக்கும் எந்தப் பெரிய பாவ காரியத்துலயும் மாட்டிக்காம பாத்துக்குங்க..." என்று சொல்லி விட்டுப் போயிருந்தாள்.

அடுத்த கட்டமாகத் தனக்கும் விடுமுறை கொடுக்கவே சுவியமூர்த்திக்கே சந்தேகம் வந்தது. அதனால்தான் வெளியே இருந்து கண்காணித்தான்.

அகிலா அழைத்து வரப்பட்டிருக்கிற விஷயம் அறிந்தவுடனே அந்தப் பெண்ணின் மேல் பரிதாபம் பொங்கியது. உடனே ருக்மணியுடன் செல்போனில் தொடர்பு கொண்டான்.

"ஐயோ! எப்படியாவது அவளைக் காப்பாத்துங்க..." என்று கதற ஆரம்பித்தார்.

"அம்மா... கவலைப்படாதீங்க... நான் ஏதாவது செய்ய றேன்" என்றான். மறுபடியும் எனக்கே... ஒண்ணும் புரியலம்மா..." என்றார் புலம்பலாக.

அப்போதுதான் ருக்மணிக்கு பளிச்சென்று அந்த ஞாபகம் வந்தது.

"பி.ஏ..., சார்! அந்த அபிநயாப் பொண்ணுக்கு... என் கஷ்டமெல்லாம் தெரியும். எப்ப வேண்ணா... ஏதாவது ஹெல்ப் வேண்ணாக் கேளுங்கன்னு சொல்லியிருக்காப்ல..." என்றான்.

"சரி... அவங்ககிட்டே.... நான் ஹெல்ப் வாங்கிக்கறேன்..." என்றான். உடனே விக்ரமையும், அபிநயாவையும் தொடர்பு கொண்டான்.

வழக்கம் போல் ஐந்தே நிமிடத்தில் டிரைவர் வேஷத்தில் தயாரானான் விக்ரம். அபிநயாவும் அவனும் கிளம்பி வந்தார்கள்.

இப்போது அதையெல்லாம் அகிலாவிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

"ஏன்... மேடம்! நீங்க நல்லா விசாரிச்சுதானே வேலைக்கு வச்சிருக்கணும்" என்றாள் அபிநயா சற்றே கோபத்துடன்.

"இல்ல மேடம்! இதுநாள் வரைக்கும் அத்தானுக்கு இப்படி ஒரு ஐடியா இருக்குன்னே எனக்குத் தெரியாது. அதுவும் இன்னைக்கு எனக்கு போன் செய்யும் போது உங்கக்காவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லே. உடனே கிளம்பி வான்னாரு. வந்ததுக்கப்புறம், டாக்டர் கிட்டே போயிருக்கா... வந்துடுவான்னு சொல்றாரு. அதான் நானும் நம்பிட்டேன்" என்றாள்.

அபிநயாவின் அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

முதன் முதலாக அபிநயாவின் அறைக்கே வந்திருந்தான் விக்ரம்.

அறையை அழகாக வைத்திருந்தாள். புத்தக ராக் இரண்டு இருந்தது.

அவன் அதை ஆர்வமாகப் பார்க்க இதெல்லாம் என்னோட கலெக்ஷன்... அப்பா... கீழே ஒரு லைப்ரரியே வச்சிருக்கார் என்றாள்.

"ஓ...!" என்றான் திரும்பி, "இப்ப... மேற்கொண்டு என்ன செய்யறது!" என்றான்.

"அகிலா... என்னோட ரூம்லயே இருக்கட்டும். அப்பா வந்ததுக்கப்புறம் என்ன செய்யறதுன்னு யோசிக்கலாம்" என்றாள்.

விடைபெற்றுக் கொண்டான்.

கீழே வந்து பாரிஜாதத்திடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

சக்கரவர்த்தி இப்படியொரு நல்ல காரியம் செய்ததற்கு மகிழ்ச்சியடைவார் என்று பார்த்தால் அபிநயா அவரிடம் சொன்னவுடனே அவரது முகம் இறுகிப் போனது.



"உங்களை... யார் என்னைக் கேட்காம இதெல்லாம்... செய்யச் சொன்னது..." என்றார்.

"அப்பா!" என்றாள் அதிர்ச்சியாக.

"அம்மா! நீங்க மோதியிருக்கிறது சாதாரண ஆள் இல்லே... தமிழ்நாட்டே பெரிய பாதுகாவலன்னு நம்பிட்டிருக்கிற ஆளோட தனிப்பட்ட எல்லைக்குள்ளே நுழைஞ்சிருக்கீங்க..." என்றார் கவலையுடன்.

"அப்பா... என்னப்பா... பேசறீங்க! புகழும் பணமும் இருக்கறதுனால இஷ்டத்துக்கு பொம்பளைகளை எக்ஸ்பிளாயிட் செய்யறாரு ஒருத்தர். தன் மகளைப் போல வயசான ஒரு பெண்ணை மோசமாக் கையாளப் பாக்கறாரு. பாத்துக்கிட்டிருக்கச் சொல்றீங்களா? நம்ம கிட்டயும் பவர் இருக்குப்பா... இதுக்கெல்லாம் பயன்படாத ஒரு ஊடகம் இருந்து என்னத்துக்கு ஆகப் போகுதப்பா..." என்றாள்.

ஆவேசமாகப் போகிற மகளைப் பார்த்தார் சக்கரவர்த்தி. பின்னாலே பயந்து நடுங்கியபடி நிற்கிற அந்தப் பெண்ணைப் பார்த்தார். அவர் மனம் உருகியது.

அடிக்கடி மகளின் அறைக்குள் நுழைய மாட்டார். இன்றைக்கு அதிசயமாய் உள்ளே நுழைந்திருந்தார்.

"அவன் எங்கே?" என்றார்.

"எவன்?" என்றாள் அபிநயா.

"விக்ரம்!" என்றார்.

"அவர் அப்பவே போயிட்டாரே!" என்றாள். "பிரைவேட் மேட்டர்ல எப்பவும் நேரடியா நுழைய மாட்டான். இப்ப... என்ன? நீ சொன்னபடியெல்லாம் கேட்கறான்" என்றார்.

சிரித்து விட்டார்.

"சரி! எதுக்கும் ஜாக்கிரதையாக இருங்க... பாரும்மா... அபி! இந்த அகிலாப் பொண்ணு இங்க இருக்கறது யாருக்கும்

தெரியக் கூடாது. ஒன்று ரெண்டு நாள்லயே மாத்து ஏற்பாடு செய்யணும்'' என்றார்.

செய்தார்கள்!



## 18

''யோவ்... பி.ஏ! இந்த அகிலாப் பொண்ணை நேத்து வரவழைச்சேன். என்னமோ ஒத்து வந்த மாதிரித்தான் பேசினா. ஆனா, எங்கயோ ஓடிப் போயிட்டா! இப்ப என்ன செய்யலாம்?'' என்றான் ரகுவீர்.

''சார்! போனாப் போகட்டும். இப்ப இதைச் செறாதீங்க... விட்டுப் பிடிங்க... எங்க சுத்தினாலும் நான் பாத்துக்கறேன்'' என்றார் பி.ஏ.

''என்னமோ.. இனிமேலாவது நிம்மதியா இருக்கலாம்னு ஆசையா இருந்தேன்'' என்று முணுமுணுத்துக் கொண்டே மாடி ஏறிப் போகிற ரகுவீரரின் முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்.

''உனக்கென்னப்பா... நிம்மதிக்கும் குறைச்சல். உனக்கு வேணுங்கற எல்லாமும் கிடைக்குது. பணம் இருக்கு. புகழ் இருக்கு வேணுங்கற விதத்துல என்ஜாய் பண்றே. மத்தவங்க நிம்மதியைக் கெடுத்துக்கிட்டுத் திரியற உனக்கு நிம்மதிக்கு என்ன குறைச்சல்'' என்று மனம் பொரிந்தாலும் முகத்தில் காட்டிக் கொள்ளவில்லை.

* * *

''இது அத்தானோட பங்களாதானே!'' என்றாள் அகிலா அச்சத்துடன்.

''ஆமா.. எப்பவாவதுதான் இந்தப் பங்களாவுக்கு வருவாரு. அதுவும் இல்லாம கண்டிப்பா நீ இங்கே இருப்பேங்கற



சந்தேகம் அவருக்கு வராது. இதைக் காட்டிலும் சேஃப் ப்ளேஸ் வேற எதுவும் இல்லே!'' என்றான் பி.ஏ.

அகிலா பயத்துடன்தான் அங்கே தங்க சம்மதித்தாள்.

''கொஞ்சம் பொறும்மா! வேற ஏதாவது ஏற்பாடு செய்வோம்'' என்றாள் அபிநயா.

பக்கத்திலேயே பி.ஏ.வுக்கு வீடு கொடுத்திருந்தார் ரகுவீர். இந்த பங்களா மிகவும் சிறிதாக உள்ளடங்கி இருந்தது. அக்கம், பக்கத்தவர்கள் பார்வைக்குத் தப்புகிற விதமாகவும் இருந்தது.

''சரி... இருந்துக்கறேன். ஆனா, சீக்கிரமா அக்கம் பக்கத்துல மனுஷங்க இருக்கற இடமா மாத்திருங்க'' என்றாள் அகிலா.

''சரி'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்கள் பி.ஏ.வும் அபிநயாவும்.

இந்த முறை விக்ரம் கூட வரவில்லை.

அபிநயா பி.ஏ.விடம் சொன்னாள். ''சார்! ருக்மணி மேடம் காண்டாக்ட் பண்ணிச் சொன்னவுடனே எனக்கே என்ன செய்யறதுன்னே தெரியலே. உடனே விக்ரம் சார் கிட்டே சொன்னேன். பத்தே நிமிஷத்துல ஸ்பாட்டுக்குக் கொண்டு வந்து சேத்துட்டார். டிரைவர் வேஷம் பாத்தீங்களா!'' என்று சிரித்தாள்.

''ஆமா! கெட்டிக்காரர்'' என்றார் பி.ஏ.

''அதுசரி... ஏன் ரகுவீருக்கும், அவருக்கும் ஆகமாட்டேங்குது!'' என்றாள் அபிநயா ஆர்வமாக.

''இதே விவகாரம்தாம்மா... ஒரு குடும்பப் பொண்ணு கிட்டே இப்படித்தான் ரொம்ப டார்ச்சர் குடுத்துட்டாரு. நம்ம சாரு அவங்க வீட்டுக்காரரு இவருக்கும் கொஞ்சம் பணம் குடுக்க வேண்டியிருந்தது. அதுக்காக அந்தம்மாவுக்கு போன் செய்யறது வரச் சொல்றது. ''ஒத்துக்கோ ஒத்துக்கோ''

என்று பிளாக்மெயில் பண்றது; எல்லாம் செய்தாரு. எனக்கு பொறுக்கலை. நான்தான் விக்ரம் சார்கிட்டே கெஞ்சிக் கேட்டேன். ஒரே வாரத்துல பிரச்சினை முடிச்சாரு. இத்தனைக்கும் நேர்ல வர்லை. போன் பேசியே முடிச்சாரு. அப்ப இருந்து விக்ரம் மேலே இவருக்குக் கடுப்பு'' என்றார் பி.ஏ.

''இருந்தா இருக்கட்டும். விக்ரம் நல்ல காரியம்தானே செஞ்சிருக்காரு. இப்ப ரகுவீர் சாருக்கு என்ன குறை! நிம்மதியா இருக்க வேண்டியதுதானே'' என்றாள் அபிநயா.

''எல்லாம் பணமும், செல்வாக்கும், பண்ற வேலையம்மா...!'' என்றார் பி.ஏ.

''எதுக்கும் நீங்க ஜாக்கிரதையாயிருங்க ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு, கடைசில மனுஷனையே கடிக்கற மாதிரி... உங்க குடும்பத்து மேலேயே கை வக்கப் போறாரு'' என்று விளையாட்டாய்ச் சொன்னாள் அபிநயா.

விளையாட்டாய்ச் சொன்னதே வினையாய் ஆகப் போகிறதென்று அப்போது அவர்கள் இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

* * *

முகத்தில் லேசான ஒரு சிரிப்புடன் சேமியா கிச்சடி செய்து கொண்டிருந்தான் விக்ரம்.

இரவு நேரங்களில் கொஞ்சமாக இப்படி ஏதாவது சூடாக செய்து சாப்பிடுவது அவனுக்குப் பிடித்தமான விஷயம்.

சி.டி. பிளேயரில் பழைய பாடல்களைப் போட்டு விட்டுக் கேட்பது சுகம் என்று நினைப்பான் அமைதியான இரவில்.

''பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால்
புன்னகை என்றே பேராகும்''

என்று பாடல் ஓடிக் கொண்டிருந்தது.



அன்றைக்குத் தஞ்சாவூரிலும், போட்டுக்காகக் காத்திருக்கும் போதும் அபிநயாவுடன் அரட்டை அடித்ததும் நினைவுக்கு வந்தது?

எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் டி.எம்.எஸ்ஸும் சுசிலாவும் பாடிய பாட்டுகள் தனியாக மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டு கேட்பது சுகம் என்று அவன் சொன்னவுடனே ''ஐயே தாத்தா! எனக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் வேகமாகப் பாடற பாட்டுக்கள் ரொம்பப்பிடிக்கும்'' என்று சீண்டினாள்.

சற்று நேரம் சண்டைபோட்டார்கள்! அதேபோல தஞ்சாவூரில் வைத்து சுரபியின் பாவாடை தாவணியை இரவல் வாங்கி அணிந்து கொண்டு அலைந்து கொண்டிருந்தாள்.

தட்டில் சேமியாவை எடுத்து வைத்துக் கொண்டு டைனிங் டேபிளில் சாப்பிட அமர்ந்தவன் தான் காய்ச்சலில் படுத்திருந்த போது வந்து தனக்காக சமைத்துக் கொடுத்தது நினைவுக்கு வந்தது சிரித்துக் கொண்டான்.

அவனுக்காக அவள் கொடுத்திருந்த ஊறுகாய் நினைவு வர எடுத்துக் கொஞ்சம் தொட்டுக் கொள்ள வைத்துக் கொண்டான்.

எப்போதும் ஏதாவது ஒன்று நினைவுபடுத்துவதை உணர்ந்தான். ஒரு இனிமையான சலனம் தன் மனதில் விழுந்து விட்டதை முற்றிலும் தெளிவாக அறிந்து கொண்டான். அதைத் தடுக்க எவ்வளவோ முயற்சித்தும் இயலவில்லை.

முதல் முதலாகத் தஞ்சாவூரில் இருந்து வந்தவுடனே அவனுக்குப் புரிந்து போயிற்று அபிநயாவைத் தனக்கு மிகவும் பிடிச்சிருக்கிறது என்று. ஆனால், கூடவே ஒரு அச்சமும் தோன்றியது.

சக்ரவர்த்தி தன்னை மிகவும் மதித்து நடத்துகிறார். பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து வைத்திருக்கிறார். அப்படியிருக்கும்போது அவர் மகளிடம் தனது மனம் சென்றிருப்பதை அறிந்தால் எப்படி எடுத்துக் கொள்வாரோ. பல சமயங்களில் ஊருக்கெல்லாம் உபதேசம் செய்பவர்கள் சொந்தக் குடும்பத்தில் காதல் என்று வரும்போது கம்பு சுத்தாத குறையாகச் சண்டை இடுவதை அறிந்திருக்கிறான்.

பத்திரிகை உலகில் இருந்ததாலோ என்னவோ மனிதர்களின் அந்தரங்கங்களை அதன் அழுக்குகளை, உன்னதங்களை என்று எல்லாவற்றையும் பார்த்திருக்கிறான். முதலில் அதிர்ச்சியாகி இப்போதுதான் ஓரளவு தெளிந்திருந்தான். அதனால் அதே உணர்வுகளை வெளிப்படுத்துகிற நிலையைத் தான் கடந்து விட்டதாகத்தான் அவன் இதுவரை நம்பிக் கொண்டிருந்தான்.

நண்பர்கள் காதல் வசப்பட்டதைப் பார்த்த போதெல்லாம் சிரிப்பான். "டேய்! பைத்தியம் பிடிச்சு அலையறீங்கடா!" என்று கேலி செய்வான்.

"உனக்கெங்கடா அதெல்லாம் புரியப் போகுது. நீ உணர்ச்சியே இல்லாத ஆளாச்சு" என்று அவர்கள் கேலி செய்தால் அதைப் பெருமையாக எடுத்துக் கொள்வான்.

"டேய்! இந்த மாதிரி விஷயங்களும் தேவைதான்டா. ஆனா அதே வேலையாய் அலையக் கூடாதுடா!" என்பான்.

அவன் நண்பன் கேசவன். ஒரு முறை சொன்னது நினைவுக்கு வந்தது.

"டேய்! யாரும் வேணும் வேணும்னு அப்படியெல்லாம் வேலையை விட்டுட்டு அலையறதில்லே. அதிலும் நம்ம மாதிரிப் பொறுப்பான வேலையில இருக்காங்க... இந்த மாதிரி உணர்வுகள் வரும்போது அது மனசை ஆக்கிரமிக்கறதுங்கறது இயற்கையோட நியதி" என்று.



அப்போது தோளைக் குலுக்கிக் கொண்டு நகர்ந்து விட்டான். இப்போது லேசாகப் புரிய ஆரம்பித்தது.

நண்பன் ஒருவன் சொல்லக் கேட்ட கவிதை நினைவுக்கு வந்தது.

"என் இதயமே!
எனக்கே ஏன்
துரோகம் செய்கிறாய்!
என்னுடையதாக இருந்து கொண்டு
அவளையே நினைக்கிறாய்"

என்ற கவிதை.

சிரித்துக் கொண்டான்.

ஒருவேளை அவளிடம் இருந்து பிரதிபலிப்பு இல்லையென்றால்...! இருந்தால் என்ன? இப்போதைய என்னுடைய உணர்வுகள் எனக்குச் சொந்தம். அந்த உணர்வின் வலியையும், சுகத்தையும் நான் அனுபவித்தே திருவேன் என்று எண்ணிக் கொண்டான்.

என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், அவள் நினைவு உள்ளே ஓடிக் கொண்டேயிருந்தது. அந்த நினைவுகளை அவன் தடுப்பதற்கு முயற்சி செய்யவில்லை. சிரித்துக் கொண்டான்.

தனிமையான நேரங்களில் எல்லாம் முகத்தில் ஒரு புன்னகை ஓடிக் கொண்டேயிருந்தது.

அபிநயாவுடன் கழிக்கிற ஒவ்வொரு நொடியையும் தனியாக இருக்கும்போது திரும்ப நினைத்துக் கொண்டு ரசித்துக் கொண்டான்.

தஞ்சாவூர் பகுதியில் "காணும் பொங்கல்" சமயத்தில் எல்லாருமே காவேரிக் கரைக்கு செல்வதை ஒரு கடமையாக

வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஒரு நாளில் குடும்பம் முழுவதும் ஒன்றாக இருப்பார்கள் என்ற ஒரே காரணத்துக் காகவே அவனும் எப்படியாவது பொங்கல் சமயத்தில் ஊருக்குச் செல்வான்.

இந்த முறை அவனுக்கு அது மறக்க முடியாத அனுபவ மாக இருந்தது.

முதலில் மரியாதை காரணமாக அப்பாவிடமிருந்து ஒதுங்கி நின்றாள். பிறகு அவரையும் கூடத் தன் அரட்டைக்கு உள்ளே இழுத்து விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தனது டாக்டர் சகோதரரிடம் ''வரவர டாக்டர்ஸ் எல்லாம் ரொம்ப மணி மைன்டட் ஆயிட்டேள் என்று பொய்ச் சண்டை போட்டது. சகோதரிக்கேற்ப அவளிடம் நடந்து கொண்டதும், கலவை சாதம் செய்கிற போது நானும் செய்கிறேன் என்று கூடக் கலந்து கொண்டது என்று எல்லாரிடத்திலும் இயற்கையாக இருந்தாள்.

''அபி! இப்பெல்லாம் காவேரி ஓடறதில்லே தெரியுமா! நடக்குது'' என்று வருத்தப்பட்டபோது.

''அதான்! நடந்தாய் வாழி காவேரின்னு'' அந்தக் காலத்துலயே பாடிட்டாங்க என்று சிரித்தாள்.

''அபி! வடநாட்ல வற்றாத ஜீவ நதிகள் இருக்கு. தென்நாட்டு நதிகளையும், வடநாட்டு நதிகளையும் இணைக்க ஒரு மாலை வடிவத்தில 'கார்லண்ட் கனால்'ன்னு தஸ்தூர்ன்னு ஒருத்தர் ரொம்ப காலத்துக்கு முன்னாலயே ஒரு பிளான் குடுத்தாரு. அதை மட்டும் செஞ்சிருந்தாங் கன்னா, மொத்த இந்தியாவிலயும் தண்ணி எப்பவும் ஓடி கிட்டிருக்கும். இந்த மாதிரி மாநிலங்கள் எல்லாம் அடிச்சுக்க வேண்டிய அவசியமே இருக்காது'' என்று அவர் தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட போது அதையெல்லாம் அதே அளவு கவலையுடன் அவன் கேட்டுக் கொண்டான்.



தனக்கேற்ற ஆத்மார்த்தமான ஒரு தோழமை கிடைத்தது போல அன்றைக்கே உணர்ந்தான்.

வந்த மறுநாளே சக்கரவர்த்தி சாரிடம் பேச வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

போனான்.

வேறு ஏதேதோ விஷயங்களை பேசி விட்டு ''சார்! ஒரு சின்ன ஆலோசனை!'' என்றான்.

''என்னப்பா!'' என்றார்.

''இல்லே! அபி கூட வேற யாராவதை செலக்ட் பண்ணி அனுப்புங்களேன். ரெண்டு பேருமே ஒரே விஷயத்துக்காக அலைஞ்சுட்டிருந்தோம்னா... நேரம் காலம் வீணாப் போயிடறமாதிரி எனக்கு ஒரு ஃபீலிங்'' என்றான்.

சக்கரவர்த்தி அவனை உற்றுப் பார்த்தார். ''ஏம்ப்பா! அவ உனக்கு ஏதாவது தொல்லை தர்றாளா?'' என்றார்.

''ஐயய்யோ! அப்படியெல்லாம்... இல்லே! ஸ்மார்ட்... ஓவர் ஸ்மார்ட்... ரசிக்கற மாதிரித்தான் இருக்கு'' என்றான் தயக்கத்துடன்.

''உங்கள் பெண் என்னை ரொம்பவும்தான் தொல்லைப் படுத்துறாள்'' என்று நினைத்துக் கொண்டான் மனத்துக்குள்.

பிறகு அதை விட்டு விட்டுப் பேச்சை மாற்றினான். பேச்சுக்கு நடுவே சிரித்துக் கொண்டே ''சார்! நான் இப்ப உங்களைப் பர்ஸனலா ஒரு கேள்வி கேக்கப் போறேன்'' என்றான்.

''சொல்லுப்பா!'' என்றார்.

''சார்! உங்க டாட்டர் ரொம்ப ஸ்மார்ட்டா இருக்காங்க... இவங்களுக்கு நீங்க எப்படிப்பட்ட மாப்பிள்ளை பாக்கறதா இருக்கீங்க!'' என்றான்.

அவர் முகத்தில் மறுபடியும் சிந்தனை ரேகைகள் படிந்தன.

''அதுதான்ப்பா! எனக்கே புரியலை. குணத்துல அவ என்னைக் கொண்டு பிறந்திருக்கா. புயல்மாதிரி இருக்கா. வெறும் வரதட்சணை செய்ய ட்யூட்டின்னு நினைக்கிற வரன் அவளுக்குச் சரிவராது. அறிவுப் பூர்வமா அவளைப் புரிஞ்சுக்கறவன்கிட்டேதான் ஒப்படைக்கணும். பேசாம அவளே 'லவ்' பண்ணி ஒருத்தரைக் கொண்டு வந்து நிறுத்தினால் கூடப் பரவால்லைன்னு தோணுது'' என்று சிரித்தார்.

''சார்!'' என்றான் ஆச்சரியமாக.

''ஆமாப்பா! விவேக் பத்தி எனக்குப் பிரச்சினையில்லே. ஆனா, ஆள் என்னவோ தாட்பூட்னாலும் உள்ளே ரொம்ப அன்பானவப்பா'' என்றார்.

''தெரியும்!'' என்றான். சிரித்தான். ''நான்தான் கூடவே இருக்கேனே'' என்றான். ''ரொம்ப இன்டலிஜென்டாய் பேசுவாங்க...

சமுதாயக் கவலைகள் இருக்கு. அதுக்குத் தன்னோட பங்கைச் செய்யணும்னு நினைக்கறாங்க. அதெல்லாம் வர்றவன் புரிஞ்சுக்கணும்'' என்றான்.

''ஆமாப்பா!'' என்று சொன்னார் கவலையுடன்.

''இப்பத்திக்கு... உன்கூட பத்திரிகையில வேலை செய்யறதுல நல்ல விதமான ''எக்ஸ்பிரியன்ஸ் கிடைக்கும்னு நினைக்கறேன். கொஞ்ச நாள் டாலரேட் பண்ணிக்கப்பா...'' என்றார் வேண்டுகோள் போல்.

''ஐயய்யோ! அபி கூட வேலை செய்யறது ரொம்பப் பிடிச்சுத்தான் இருக்கு. நான் அதுக்குச் சொல்லலே. நான் ஆண்பிள்ளை. ஆனா, அவங்களைப் பத்தி எதுவும் ஸ்கேண்டல் மாதிரி வந்துச்சுன்னா!'' என்றான் தயக்கத்துடன்.



''நான் லேட் பண்ணிக்கமாட்டேன். அவனும் பண்ணிக்கப் போறதில்லே. அப்புறம் எதுக்கு நீ கவலைப்படறே! எனக்கென்னவோ அவனும் அப்படி லேக பாசான ஆளை செலக்ட் பண்ணிடமாட்டா. உன்னோட வேலையெல்லாம் செய்யறதுல அவளுக்கும் ரொம்ப சந்தோஷம்தான். ரெண்டு பேரும் இப்போதைக்கு இப்படியே கன்டினியூ பண்ணுங்க... அப்புறம் பாத்துக்கலாம்'' என்றார்.

''தாங்க்ஸ்... சார்!'' என்றான். விடைபெற்றுக் கொண்டான்.

அப்போதே அவரிடம் ''இப்படி உங்கள் மகள் என்னை டிஸ்டர்ப் செய்கிறாள்'' என்று அப்போதே ஏன் அவரிடம் சொல்லவில்லை என்று எண்ணிக் கொண்டான்.

சக்கரவர்த்தி தந்தை என்ற முறையிலும், பத்திரிகையாளர் என்ற முறையிலும் விக்ரமாதித்யன் தன்னிடம் வந்து பேசி விட்டுப் போனவுடனே விஷயங்களை ஆராய ஆரம்பித்து விட்டார் என்று அவனுக்கு அப்போது புரியவில்லை.

''இனியொரு வாய்ப்புக் கிடைத்தால் பேசி விட வேண்டும்'' என்று விக்ரமாதித்யன் மனது சொன்னது.

இன்னொரு மனது முதலில் ''அபிநயாவிடம் தெரிவித்து விடு'' என்றது.

''தெரிவிக்கலாம். அவள் 'ஐம் சாரி!' என்று ஒரே வார்த்தையில் முடிக்கலாம். கடைசியில் நீயும் ஒரு சராசரி ஆண் பிள்ளைதானா!'' என்று தன்னைக் கேவலமாக நினைக்கலாம்.

''வேண்டாம்! எதுவுமே இப்போது வேண்டாம். இந்த ரகுவீர் விவகாரம் முடியட்டும் என்று எண்ணிக் கொண்டான். உடனே அபிநயாவை செல்லில் அழைத்தான்.

''அபி! இப்ப ரகுவீர் எங்கே இருக்காரு! அவரோட அடுத்த புரோகிராம் என்னென்னு விசாரி. முடிஞ்சா... பி.ஏ.கிட்டே காரவான்ல இன்னொருத்தரைப் பாத்தோம்னு

இல்லல்லே. நான் பாத்ததைச் சொல்லாதே. நீ பாத்ததை மட்டும் சொல்லு. அந்த விஷயத்தைக் கண்டு பிடிக்கறதுக்கு அவரோட கோ-ஆப்ரேஷன் கிடைக்குமான்னு பாரு'' என்றான்.

''சார்! அதான் நானும் முயற்சி செய்யறேன். ஆனா, ரகுவீர் செய்யற பல காரியங்கள் அவருக்குப் பிடிக்கலேன்னா கூட இன்னமும் வாயலாத்தான் இருக்காரு. அவ்வளவு சீக்கிரம் அந்த விஷயத்தைப் பத்தி நம்மகிட்டே பேச மாட்டார்ன்னு நினைக்கறேன். ரொம்ப அதிகமான கோபம் அவருக்கு ரகுவீர் மேல வர்ற மாதிரி ஏதாவது நடந்தாத்தான் நமக்கு அந்த லாபம் கிடைக்கும். நாமளே ஏதாவது செய்வோமா!'' என்றான்.

'வேண்டாம்! வேண்டாம்! அந்த மாதிரி சீப் டெக்னிக் எல்லாம் வேண்டாம் யோசிப்போம். அப்புறம் அகிலா தங்கறதுக்கு வேற இடம் ஏற்பாடு செஞ்சிட்டு. நாளைக்குப் பத்து மணிக்கு வர்றேன். மாத்திரலாம்'' என்றான்.

''அதென்ன, அகிலா மேல மட்டும் இத்தனை கரிசனம். அகிலா... சாப்பிட்டாளா, வசதியெல்லாம் சரியா இருக்கான்னு எத்தனை தடவை விசாரிக்கறீங்க... நான் எத்தனை நாளா கூடவே பேய் மாதிரி அலைஞ்சுகிட்டிருப்பேன்; நீ சாப்பிட்டியான்னு ஒரு தடவையாவது கேட்டிருப்பீங்களா?'' என்றாள் கோபம் போல்.

இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத விக்ரமாதித்யன் ஒரு நிமிடம் திகைத்து விட்டான். பிறகு சிரித்தான்.

''ஹேய்! அபி! நீ யாரு. பத்திரிகை உலகின் சக்கரவர்த்தியோட 'ப்ராடிகல் டாட்டர்' உன்னை உயிரா நேசிக்கறதுக்கு ஒரு குடும்பமே இருக்கு. நான் இருக்கேன். ஆனா, அந்தப் பொண்ணு பாவப்பட்ட பொண்ணு. அதைப் பத்தி விசாரிக்கறதைப் போய் பொறாமையா எடுத்துக்கறியே'' என்றான்.



''ம்... அதானே... பாத்தேன்!'' என்றாள் பெருமையாக. மறுபடியும் வேடிக்கையாகப் பேசி விட்டு போனை வைத்தாள்.

வைத்ததற்குப் பிறகுதான் யோசித்தாள். ''உன்னை உயிரா நேசிக்கறதுக்கு ஒரு குடும்பம் இருக்கு. நான் இருக்கேன்'' என்றாரே என்ன பொருள்.

''சே... சே... சே! விக்ரம் சார் அறிவு ஜீவி! கொஞ்ச நாள் ஒரு பொண்ணோட வேலை செஞ்சவுடனே 'ஐ லவ் யூ' சொல்ற சராசரி மனுஷன் இல்லே'' என்று எண்ணிக் கொண்டாள். ஆனாலும் மனதுக்குள் முதல் முறையாக ஒரு புள்ளி விழுந்தது.

அவன் கேட்டதையே சாக்காக வைத்துக் கொண்டு விக்ரம் மறுநாளில் இருந்து தன் விளையாட்டை ஆரம்பித்தான்.



## 19

காலையில் ஆறு மணிக்கே அபிநயாவின் செல்போன் ஒலித்தது.

தூக்கக் கலக்கத்தில் எடுத்து ''ஹலோ!'' என்றாள்.

''ஹலோ! விக்ரம் ஹியர்! எழுந்திருந்தாச்சா... பெட் காபி குடிச்சாச்சா?'' என்றான். அவள் விழித்தவள், ''இல்லல்லே! இப்பத்தான் முழிக்கறேன்'' என்றாள்.

''சரி! எழுந்து நல்ல பொண்ணா, பெட்காபி குடி என்ன!'' என்று சிரித்துவிட்டு ஆஃப் செய்தான்.

அபிநயாவுக்கு அதோடு தூக்கம் போய் விட்டது. நிஜமாகவே எழுந்தாள்.

சரியாக எட்டரை மணிக்கு ஒரு போன், ''ஹலோ! டிபன் சாப்பிட்டாச்சா!'' என்று.

"இப்பத்தான்... சாப்பிடறேன்!" என்றாள்.

"ஆபீசுக்கு எப்ப வரே!" என்றான்.

"வந்துர்றேன்! ஒன்பதரை மணிக்கு வந்துர்றேன்" என்றாள்.

"குட்!" என்று ஆஃப் செய்தான். ஆனால் ஆபீஸில் அதைப் பற்றி எதுவுமே பேசவில்லை அவளும் மறந்துவிட்டாள்.

பிற்பகல் உணவுக்கு அவள் பெரும்பாலும் அப்பாவுடன் சாப்பிடப் போய் விடுவாள். அவன் கேண்டீனுக்குப் போய் விடுவான்.

திரும்ப வந்ததும் "சாப்பிட்டாச்சா!" என்றான். அவளும் யதார்த்தமாக 'ம்' என்றாள்.

"சரி! இந்த ரகுவீர் விஷயத்துலயே நம்ம நேரம் செல வழிச்சா... மத்த விஷயம் பாக்க வேண்டாமா?" என்றான்.

அதற்குள் அவ குபீர் என்று சிரித்தாள். "விக்ரம்... சார்! நான் அவரை ஒரு மாதிரியா உசுப்பி வச்சருக்கேன்... பாருங்க!" என்றாள்.

அவன் லேசான சிரிப்புடன் "என்ன செஞ்சே!" என்றான்.

"சார்! ஹேர் டிரான்ஸ்பிளான்டேஷன் பண்ணிக்குங்க... ஆயுர்வேதிக் ட்ரீட்மென்ட் எடுத்துக்குங்க. யோகா செய்ங்க. ஏன்னா ஃபைட்டிங் சீன்ல மட்டும் இளமையா இருக்கீங் களாம். மத்த சமயத்துல கொஞ்சம் இளமை மட்டாத் தெரியற மாதிரிப் பேசிக்கறாங்க... சார்! என்று கொஞ்சம் கவலைப்படற மாதிரிப் பேசிருக்கேன்."

"அதனாலே?"

"அதனாலே... நெக்ஸ்ட் வீக் ஆஸ்திரேலியா அமெரிக் கான்னு போய் பியூட்டி கிட்டின்னு எல்லாம் தெரிஞ்சுட்டு வரப்போராறாம். பாருங்க. திரும்பி வரும்போது சில்



வஸ்டர் ஸ்டாலோன் மாதிரி, இல்லேன்னா அர்னால்டு மாதிரி வரப் போறார் பாருங்க" என்றாள்.

சிரித்தான்! 'சரி' என்னை ஆளை விடு. ஒரு பொலிடிகல் மேட்டர் ஒன்னு சீரியஸாப் போயிட்டிருக்கு. சட்டசபை மேட்டர்' என்றான்.

"என்ன விஷயம்?"

"என்ன விஷயம்! அடிதடி...." என்று நகர்ந்தான்.

அவளும் அன்றைக்குத் தொடர்ந்து மேட்டர் கிடைக்குமா என்று மற்றவர்களிடம் பேசிப் பார்க்கலாம் என்று நகர்ந்தாள்.

"அம்மா... இந்த போட்டோப் பாருங்க... எங்க வீட்டு விசேஷத்துல எடுத்தது. நீங்களும் கூட வருவீங்கன்னு ரொம்ப ஆசையா இருந்தோம். வர்லே. சாரும் வர்லே! என்றான். பி.ஏ. கலியமூர்த்தி ருக்மணியிடம்.

கலியமூர்த்தி ருக்மணி மேல் ஒரு சகோதரியைப் போல் பாசம். ஆனால் அவள் படும் கஷ்டத்துக்குத் தன்னால் ஏதும் செய்ய முடியவில்லையே என்று உள்ளூர வருத்தம்.

"பரவால்லே... விடுங்க... பி.ஏ... சார்! என்னோட தலையெழுத்து! நல்லவேளை அகிலாவைக் காப்பாத்தினீங் களே... அதுவே பெரிய விஷயம் எப்படியிருக்கா?" என்று விசாரித்துக் கொண்டாள் ருக்மணி.

"அதெல்லாம் பாதுகாப்பான இடத்துல நிம்மதியா இருக் காப்ல..." என்றார் பி.ஏ.

ரகுவீர் பங்களாவில் பின்புறத்திலேயே இருந்த தோட் டத்தில் வாக்கிங் போவதற்காகப் போயிருந்தான். எப்படியும் வருவதற்கு அரை மணி நேரம் ஆகும் என்ற துணிவில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ருக்மணி அகிலா வந்ததும், அதற்குப் பிறகு நடந்த விஷயங் களும் எதுவும் தெரியாதது போலவே இருந்து கொண்டாள்.

பி.ஏ.வும் ருக்மணியிடம் எதுவும் சொல்லவில்லை என்று தலையடித்துச் சத்தியம் செய்யாத குறையாக ரகுவீரிடம் சொல்லிவிட்டான். ஆனாலும் ரகுவீருக்கு ஒரு குறுகுறுப்பு இருந்து கொண்டே இருந்தது.

சில நேரங்களில் ''அம்மா, ஒரு டம்ளர் காபி கிடைக்குமா?'' என்று ருக்மணியிடம் போய்க் கேட்டு பி.ஏ. வாங்கிக் குடிப்பார். அதையெல்லாம் ரகுவீர் கண்டு கொள்ள மாட்டான்.

ருக்மணிக்கும் உண்பதில், துணிமணிகள் வாங்கிக் கொடுப்பதில், நகைகள் வாங்கிக் கொடுப்பதில் கணக்கம் காட்ட மாட்டான். ஆனால், எல்லாவற்றுக்கும் அவனிடம் கணக்கு கரெக்டாகக் காட்ட வேண்டும்.

ருக்மணி தனக்கென்று தனியாகத் தேவைகள் வைத்துக் கொள்ளாததால் இதுவரை பணம் தனியாகச் சேமிப்பதையோ வீட்டுச் செலவுகளில் கை வைக்க வேண்டுமென்றோ நினைத்ததில்லை. ஆனால், அகிலாவுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்தாள். எப்படிச் செய்வது என்பதுதான் புரியவில்லை. அதைப் பற்றிப் பேசுவதற்கு இன்றைக்கு வாய்ப்புக் கிடைக்குமா? பேசலாமா என்று யோசிக்கையிலேயே இருவரும் சற்றும் எதிர்பாராத விதமாக ரகுவீர் உள்ளே நுழைந்தார்.

''என்னது கையிலே! போட்டோஸ். பாக்கலாமா?'' என்று கேட்கவும் பி.ஏ. அசடு வழிந்தபடி.

''உங்களுக்குக் காட்டறதுக்குத்தான் வச்சிருந்தேன். சார்!'' என்று சமாளித்தார்.

"ம். இது யாரு உன் வைஃப்பா? இது யாரு உன் டாட்டர்ஸா... பரவால்லையே... இவ்வளவு பெரியவங்களா...'' என்றான்.

''ஆமா... சார்! இது பெரிய பொண்ணு. இப்பத்தான் டிகிரி முடிச்சுட்டு மேல் படிப்புக்கு அப்ளை பண்ணியிருக்கு. இது



ரெண்டாவது பொண்ணு பிளஸ் டூ படிக்கிறா. இது பையன் பத்தாவது படிக்கிறான்'' என்றான்.

''ம்...!'' என்று இயல்பாய் பார்ப்பது போல் பார்த்து விட்டு பி.ஏ. கையிலேயே கொடுத்து விட்டு மேலே போய் விட்டான்.

'அப்பாடா' என்று விடுதலைப் பெருமூச்சு விட்டான் பி.ஏ. அந்த நிம்மதிப் பெருமூச்சு தற்காலிகமானதே என்று அவருக்குப் பாவம் அப்போது புரியவில்லை.

* * *

''ஹலோ! இப்ப நைட் எட்டரை மணி! சாப்பிட்டாச்சா?'' என்று விக்ரமிடம் இருந்து போன் வரவும் அபிக்கு ஒரு மாதிரியாக விஷயம் புரிய ஆரம்பித்தது.

''ஹலோ விக்ரம்! சார் வாட்ஸ் கோயிங் ஆன்?'' என்றாள்.

''இல்லே! அகிலாவை மட்டும் சாப்பிட்டாச்சா... நல்ல இருக்காப்லயான்னு அடிக்கடி விசாரிக்கறியேன்னு குறைப் பட்டுக்கிட்டியே. அதுதான் உன்னையும் திருப்திப்படுத்திர லாம்னு பாத்தேன்'' என்றான்.

''ஓஹோ! அப்ப சரி... பரவால்லே. இது நல்லாருக்கு. கீப் இட் அப்'' என்றாள் கெத்தாக.

''நேரம் தாண்டா!'' என்று சிரித்து விட்டு வைத்தான்.

அன்று பிற்பகல்!

சக்கரவர்த்தியின் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு இருந்தாள் அபிநயா.

சரியாக ஒன்பதரை மணிக்கு போன் அடித்தான். ''ஹலோ!'' என்று அவன் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அவள் ''இல்லை... சார்! இன்னும் சாப்பிடலை'' என்றாள்.

சக்கரவர்த்தி வியப்பாய்ப் பார்க்க, பிறகு சொன்னான்.

''அப்பா! விக்ரம் சார், பாருங்கப்பா அந்த அகிலாப் பொண்ணைப் பத்தி மட்டும் இத்தனை கவலைப்படறீங்களே என்னைப் பத்தி மட்டும் கவலைப்பட மாட்டேங்கறீங்கன்னு கேட்டேன். அதுக்காக ஒரு நாளைக்கு அஞ்சாறு தடவை போன் பண்ணித் தொல்லை தராருப்பா...'' என்று சிரித்தான்.

அவர் புன்னகைத்துக் கொண்டார். வேறு விஷயத்துக்குத் தாவினார்.

அதே நேரம்!

வேறொரு இடத்தில் இதுவரை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாய்ப்பு ஒன்று வேகமாக வடிவம் எடுத்துக் கொண்டிருந்தது.

* * *

''பி.ஏ. இன்னைக்கு பகல் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போயிடலாம்னு நினைக்கறேன்'' என்றான் ரகுவீர் ஷூட்டிங்குக்கு நடுவில்.

''சரிங்க... சார்!'' என்றார் பி.ஏ.

''அம்மாவுக்குத் தகவல் குடுத்துடு'' என்றான் மறுபடியும்.

''சரிங்க சார்!'' என்றான் மறுபடியும்.

''நீயும் வேண்ணா உங்க வீட்டுக்குப் போறதுன்னாப் போயிட்டு வா. நான் இனி சவ்விங்தான் வருவேன்னு டைரக்டர்கிட்டே சொல்லிட்டேன்!'' என்றார்.

''சரிங்க... சார்!'' என்றான் மறுபடியும்.

''டிரைவர்... பி.ஏ. வீட்டுக்கு வண்டியைத் திருப்பு!'' என்று ரகுவீர் சொன்னதை மட்டும் பி.ஏ. எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் கவலை.



வண்டி அவர்கள் வீட்டை நெருங்கியதுமே ''உள்ளே கூப்பிட மாட்டியாப்பா!'' என்றார்.

''ஐயய்யோ! எனக்குக் கூப்பிடணும்னுதான் ஆசை. நீங்க வருவீங்களோ இல்லையோன்னு'' என்று சமாளிக்கும் போதே பட்டென்று காரைத் திறந்து கொண்டு இறங்கினான்.

பின்னாலே டிரைவரிடம் கண்ணைக் காட்ட கிஃப்ட் பார்சல் ஒன்றும் இறங்கியது.

''பி.ஏ. உள்ளே அழைத்துப் போனான். அன்றைக்கு அவருடைய இரண்டு பெண்களும் வீட்டில் இருந்தார்கள். பி.ஏ.வின் மனைவி பதட்டமும், பணிவுமாக வரவேற்றார்.

''மேடம்! கொலுவுக்குப் கூப்பிட்டீங்களாம். ருக்மணிக்கு வரமுடியலேன்னு சொல்லிச்சு. அதான் வந்தேன்'' என்றான்.

கிஃப்ட் பார்சலை நீட்டினான். தயக்கத்துடன் வாங்கிக் கொண்டாள்.

''திறந்து பாருங்க!'' என்றான்.

தயக்கத்துடன் திறந்து பார்த்தாள். நகைப்பெட்டி. உங்களுக்கு. உங்க ரெண்டு பொண்ணுங்களுக்கு. எல்லாருக்கும்'' என்றான்.

ரகுவீரின் திமர் தாராளம் பி.ஏ.வின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

அவருடைய சின்ன மகளிடம் வாஞ்சையாய் விசாரித்தான்.

''என்னம்மா! நல்லாப் படிக்கறியா? எவ்வளவு வேண்ணாலும் படி. அங்கிள்... இருக்கறேன்... இல்லே!'' என்றான்.

அவள் பவ்யமாகத் தலையாட்டினாள்.

பெரிய மகளிடம் அதிகம் பேசவில்லை. ஆனால் கவனித்துப் பார்த்துக் கொண்டார்.

''இவங்கதான். மேல்படிப்புப் படிக்கப் போறவங்களா?'' என்றார்.

''ஆமாங்க!'' என்றார். அந்த அம்மா.

''அதிகபட்சம் பத்து நிமிடம் கூட இருந்திருக்கமாட்டான். ஜெம்பி விட்டான்.

அவன் அந்தப் பக்கம் போனவுடனே ''ஏண்டி, வந்தவன் போறவன் கண்ணிலே எல்லாம் உன்னோட பொண்ணுங்களைக் காட்டலேன்னா... என்ன?'' என்று எரிந்து விழவும் அந்த அம்மா திகைத்துப் போனார்.

''என்னங்க... இப்படிச் சொல்றீங்க? அவரு நமக்குப் படியளக்கறவருங்க'' என்றார்.

''அது நான் செய்யற வேலைக்கு... ஐயோ... ஆண்டவா'' என்று தலையில் கையை வைத்துக் கொண்டு அமர்ந்து சொன்னார்.

பொண்ணுகளை அந்தப்புறம் அனுப்பிவிட்டு அவர் மனைவி கேட்டார்.

''என்னங்க விஷயம்?'' என்று.

அப்போதுதான் தனது முதலாளியின் பலவீனங்களைச் சொன்னான். முழுவதும் சொல்லவில்லை என்ற போதும் மனைவி கேட்டார்.

''ஏங்க.. இப்படி ஆளுகிட்டே நீங்க வேலை பாக்கணுமா!'' என்று.

''இந்த ஐம்பது வயசுல எனக்கு எவண்டி வேலை தருவான். இனிமே அந்த ஆள் எனக்குத் தெரியாம இங்க வந்தாலோ வேற எந்த விதத்துலேயாவது கான்டாக்ட் செய்தாலோ உடனே கண்டிப்பா... எனக்கு சொல்லிடணும்... புரியுதா?'' என்றார்.

''சரிங்க...'' என்றான் பவ்யமாக.

''கலியமூர்த்தியின் மனத்தில் திகில் கூடிக் கொண்டே போனது.



ஒரு வழியாக ரகுவீரை ஃபாரின் அனுப்பிவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

* * *

இரண்டு நாட்கள்!

தொடர்ந்து சளைக்காமல் விக்ரம் போன் செய்யவும் அபிநயா ஒரு வகையில் மகிழ்ந்து போனாள்.

எங்கே இருந்தாலும் சரி, என்ன வேலையிருந்தாலும் சரி... கூப்பிடத் தவறவேயில்லை.

மூன்றாம் நாள் காலை!

''ஹலோ! இன்னும் அஞ்சு நிமிஷத்திலே நான் பெட் காபி சாப்பிடப்போறேன்'' என்று அறிவித்தான். போனை ஆஃப் செய்தான்.

இதை எதிர்பார்க்காத விக்ரமாதித்யன் போனை ஆஃப் செய்து விட்டு இடிஇடியென்று சிரித்தான்.

அடுத்த இரண்டு நாட்களுக்கு அபிநயா சரியாகத் தன் வேலையைச் செய்தாள்.

நான்காம் நாள் மாலை!

ஆபீஸிலிருந்து வெளியே வந்தவுடன் இந்தப் பேச்சு வரவே இருவரும் சிரித்து விட்டார்கள்.

''ஓ.கே.! வி ஸ்டாப் தி கேம்!'' என்றாள் அபிநயா.

''குட்...! இனிமே இந்த மாதிரி எக்குத் தப்பா கேள்வியெல்லாம் கேக்காதே...'' என்றான். தன்னை மறந்து. எப்பவும் கூடவே இருக்கறவங்களை அடிக்கடி நினைவு படுத்திக்க வேண்டிய அவசியம் இல்லே!'' என்றான்.

''தட்ஸ் ரைட்!'' என்று அவன் இயல்பாக எடுத்து கொண்டான்.

அப்துல், விக்டர் இருவருமாகச் சேர்ந்து ஒரு பேட்டி எடுத்து வைத்திருந்தார்கள்.

''விக்ரம்... இதை ட்ரிம் பண்ணி குடு'' என்று அவனிடத்திலே கேட்டிருந்தார்கள்.

அந்த வேலை நடக்கும் போதுதான் இந்தப் பேச்சு முடித்து விட்டு வெளியே வந்தார்கள்.

''அபி! உன் போட்டோஸ் கொஞ்சம் என்கிட்டே இருக்கு... வந்து கலெக்ட் பண்ணிக்க'' என்று அழைத்து போனான்.

தஞ்சாவூரில் எடுத்த போட்டோக்கள் அதில் பாவாடை தாவணியில் நின்ற போட்டோவை மட்டும் கேட்டான்.

''குடு! என்று ஆல்பத்துல வச்சுக்கறேன்'' என்றான். அவளும் கொடுத்தாள்.

''நாளைக்கு உங்க வைஃப் வந்து எதுக்கு அந்தப் பொண்ணு போட்டோவெல்லாம் வச்சிருக்கீங்கன்னு சண்டை போடப் போறா... என்றாள்.

''நோ சான்ஸ்! என் வைஃப் கண்டிப்பா அந்த மாதிரிச் சண்டை போட மாட்டா'' என்றான் விக்ரம்.

அவளது யதார்த்தமாக அந்த பதிலைக் கேட்டுக் கொண்டாள். ஆனால் அது பற்றி அவளை மேலே யோசிக்க விடாமல் அதைக் கேள்வியை கேட்டான்.

''அபி...! அந்த டூப்ளிகேட் ரகுவீர் விவகாரம் அப்படியே இருக்கே... எப்ப முடிக்கறதா உத்தேசம். அது என்னன்னு பாத்துட்டு அடுத்த வேலைக்குப் போலாமே?'' என்றான்.

''விக்ரம்... சார்! பி.ஏ. ரொம்ப நல்லாப் பழகறார். ஆனா, அந்த விஷயம் பத்தி மட்டும் பேச மாட்டேங்கறார். அப்படியெல்லாம் இல்லவே இல்லே. ரெண்டு ஆளெல்லாம் கிடையாது. ஒரே ஆள்தான்னு அடிச்சுச் சொல்றாரு'' என்றாள்.



''நீ... நாம பின் தொடர்ந்து போனதைச் சொல்லலையா?''

''சொல்லல... சமயம் வரும்போதுதான் அதைச் சொல்லணும். அப்புறம் நம்மை உள்ளேயே விடமாட்டேங்கற நிலைமை வந்தா என்ன செய்யறது?'' என்றாள்.

''அதுவும் கரெக்ட்டுத்தான்'' என்றான்.

இரண்டே நாளில் அதுவும் விக்ரம் அருகில் இருக்கும் போதே அந்த போன் வந்தது.

அப்போது கிடைத்த வாய்ப்பை அபிநயா பக்கென்று பிடித்துக் கொண்டாள்.

''பி.ஏ... சார்! நாங்க கண்டிப்பா ஹெல்ப் பண்றோம். ஆனா, நீங்களும் கண்டிப்பா எங்களுக்கு ஒரு உதவி செய்யணும். கண்டிப்பா நாங்க காட்டிக் குடுக்கமாட்டோம். ஆனா, எங்களுக்கு உண்மை தெரிஞ்சுக்கணும்'' என்றாள்.

விக்ரம் அவள் மேலும் பேசி ஒரு முடிவுக்கு வருவதை அமைதியாகப் பார்த்தபடி நின்றான். பிறகு கேட்டான்.

''என்ன அபி!''

''ம்... ஆட்டைக் கடிச்சு... மாட்டைக் கடிச்சு கடைசியில மனுஷனையே கடிச்சாச்சு''.

''சரி! நீ விஷயத்தை சொல்லு!'' என்றான்.

சொன்னாள்.

''குட்... வெரிகுட்!'' என்றான்.



## 20

ரகுவீர் ஊரில் இல்லையென்பதால் பி.ஏ. கொஞ்சம் ரிலாக்ஸ்டாக இருந்தார். ஆனால், அந்த சமயத்தையும் வீணாக்காமல் கணக்கு வழக்குகள் பார்த்து முடித்தார்.

அப்படி அவர் வெளியூர் ஷூட்டிங் போகும்போதோ அல்லது வெளிநாடு போகும் போதோதான் ருக்மணிக்கு கொஞ்சம் நிம்மதி கிடைக்கும்.

எப்போதும் ரகுவீர் இருந்தால் ஏழு மணி எட்டு மணி நெ நேரம் வெகு நேரம் கழித்துக் கூட வீடு செல்வார். இன்றைக்கு ரகுவீரிடம் இருந்து ஏனோ போன் வரவில்லை. எந்த வித இன்ஸ்ட்ரக்ஷனும் வரவில்லையே என்று நினைத்துக் கொண்டு ஆறு மணிக்கே வீட்டுக்குக் கிளம்பினார்.

வீட்டிற்குள் நுழையும்போதே அவர் மனைவி பரபரப் பாகக் காத்திருந்தது தெரிந்தது.

''என்ன சரசு!'' என்றார்.

அந்த அம்மாவின் முகத்தில் கலவரம் தெரிந்தது. ''வந்து.. வந்து!'' என்று தயங்கினார். சொல்லும்மா!'' என்றார்.

கொஞ்சநேரத்துக்கு முன்னாடி உங்க பாஸ் போன் பண்ணினார் என்றார்.

''ஓஹ்! ஃபாரின்ல இருந்து உங்ககிட்டப் பேசினாரா?'' என்றார்.

''ஆமா!''

''என்னவாம்?''

''வந்து... வந்து...!''

''சொல்லு...!''

அந்த அம்மாள் ரகுவீர் பேசியதை விரிவாகச் சொன்னார்.

''ஏம்மா... நான் குடுத்த நகையெல்லாம் பிடிச்சதா?''

''ரொம்பப் பிடிச்சதுங்கய்யா!''

''அது மாதிரி நிறைய உங்களுக்குச் செய்யணும்னு ஆசைப்படறேன்ம்மா.''

''அதெல்லாம்... வேண்டாங்கய்யா... எப்பவும் உங்க அன்பு இருந்தா போதும்'' என்றார் பணிவாக.



''அன்பு! அதுதான்ம்மா சொல்றேன். உங்க குடும்பத்தை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. பி.ஏ.வும் நமக்காக ரொம்ப நாளா நிறைய சர்வீஸ் பண்ணியிருக்கார்'' என்றார்.

''சரிங்கய்யா!''

''அதனாலே நானும் உங்க குடும்பத்துல ஒரு மெம்பர் ஆயிடலாம்னு பாக்கறேன்'' என்றார். சிரித்தார்.

''புரியலிங்கய்யா?'' என்றார்.

''அம்மா! உங்களுக்குத் தெரியும். நான் எவ்வளவு பிரபல மானவன்னு. ஆனா, உங்களுக்குத் தெரியாதது எவ்வளவு கோடி சொத்து என்கிட்டே இருக்குன்னு. ஆனா, எனக்குப் பொருத்தமான மனைவி அமையலே. ருக்மணி நல்லவ தான். ஆனா, இப்ப இருக்கிற சிட்சுவேஷன்ல நாலு இடம் கூட்டிப் போய் வர்ற மாதிரி இல்லை. அதனால... உங்க பெரிய பொண்ணு மாதிரி எனக்கு ஒரு வைஃப் இருந்தா... சௌகரியமா இருக்கும்'' என்றார்.

.... .....!

ஏதோ கறிகாய்க் கடையில் கத்தரிக்காய் வாங்குவது போல் அவர் இலகுவாகப் பேசுவது கண்டு சரசு திகைத்துப் போனாள்.

''அம்மா!'' உங்க வீட்டுக்காரரை கேட்டீங்கன்னா... நான் ரொம்ப பலவீனங்கள் உள்ள ஆளுன்னு சொல்லுவாரு. ஆனா அந்தப் பலவீனங்கள் எல்லாம் ஏன்... வருது...? எனக்கு மனசுல திருப்தியில்லாததுனாலதான் மனசுல திருப்தி வந்துட்டா அதுக்கப்புறம் பாட்டிலும், பொண்ணும் எதுக்கு?'' என்றான்.

சரசு அதற்குள் ஒரு மாதிரியாக சமாளித்துக் கொண்டார்.

''ஐயா! கொஞ்சம் யோசிக்கறதுக்கு டைம் குடுங்க'' என்றார்.

''யோசிங்க...! நல்லா யோசிங்க! பணம் இங்கே வாழ்க்கை யில எவ்வளவு முக்கியமான விஷயம்னு யோசிங்க...

ஏதாவது ஒன்னை விட்டுக் கொடுத்தாத்தான், இன்னொன்னு கிடைக்கும். எவ்வளவு நாள் உழைச்சாலும் ஒரு பி.ஏ.ங்கற முறையில உங்க வீட்டுக்காரருக்கு நான் சம்பளம்தான் கொடுப்பேன். கொஞ்ச நாள் கழிந்து வீட்டுக்கு அனுப்பும் போது ஒரு தொகை கையில குடுப்பேன். ஆனா, நீங்களே உறவுக்காரங்கன்னு ஆகும் போது... என் சொத்துல ஒரு பங்கு குடுப்பேன். ரெண்டுக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம்னு உங்க வீட்டுக்காரரைக் கேளுங்க... சொல்வாரு'' என்றார்.

அந்த அம்மாவுக்கு பேசுவதுக்கு வாயே எழவில்லை. இப்போது அதைச் சொன்னவுடனே பி.ஏ. முகத்தில் கடுப்பேறியது.

''சரக! அதெல்லாம் அந்த ஆள் வித்தாரமாப் பேசுவான். இப்ப அந்த ஆளுக்கு வயசு என்ன தெரியுமா? கிட்டத்தட்ட ஐம்பது வயசு. இப்பத்திக்கு நாப்பத்தெட்டு வயசு. நம்ம பொண்ணை விட ஒரு மடங்கு வயசு. அவனுக்குக் கல்யாணம் ஆனவுடனே குழந்தை பிறந்திருந்தா நம்ம மக வயசு. அதனாலதான் பணத்தை வச்சு ஆசை காட்டறான்'' என்று பொரிந்தார்.

சரசு கவலையோடு அமர்ந்து கொண்டார். ''இது எதில் போய் முடியுமோ தெரியலையே'' என்று புலம்பினார்.

''விடு சரசு. நான் பாத்துக்கறேன். அந்தாளோட எல்லா ரகசியமும் என்கிட்ட இருக்கு. நான் பாத்துக்கறேன்'' என்று மனைவியைத் தேற்றினார்.

சற்று நேரத்தில் ரகுவீர் நேரடியாக பி.ஏ.விடமே பேசினார்.

''என்னய்யா... பி.ஏ!. உன் வைஃப் விஷயம் சொன்னாங்களா! எப்படிப்பட்ட ஆஃபர் குடுத்திருக்கேன் பாத்தியா... நீ நமக்கு மாமனார்'' என்று வெடிச்சிரிப்பு சிரித்தான்.

''சார்!'' என்று பி.ஏ. முணுமுணுத்தார். அப்போது மறுபடியும் சொன்னார்.



''இதோ பாருப்பா! அகிலாவைத் தேடிக் கண்டுபிடிக்கறதுல உனக்கு ஆர்வமே இல்லைன்னு எனக்குத் தெரியும்'' ஒன்னு... அதைச் செய்! இல்லேன்னா, இதை நடத்திக்குடு. அகிலாவைக் கொண்டு வர்றதைக் காட்டிலும் இது இன்னும் லாபகரமான விஷயம்... புரியுதா!'' என்றான்.

இடிஇடியென்று சிரித்தான். போன் ஆஃப் செய்தான். பி.ஏ. பேசுவதற்கே இடம் கொடுக்கவில்லை.

பி.ஏ.வுக்கும் புரிந்தது. ரகுவீர் ஒன்றும் அகிலா விஷயத்தில் தான் சொன்னதை முழுமையாக நம்பி விடவில்லை. எப்போது வேண்டுமானாலும் தன் மகளுக்கும், அவன் மானத்துக்கும் ஆபத்து என்பது புரிந்தது. அதற்காக அகிலாவை பலி கொடுப்பதா... அதுவும் பாவம் நல்ல பெண் என்ற அனுதாபம் தோன்றியது. என்ன செய்வதென்றே தெரியவில்லை.

உள்ளத்தில் எரிமலை வெடித்தாற்போல் கோபம் பொங்கியது. ஆழ்ந்த வருத்தத்துடனும் கோபத்துடனும் விஷயத்தை அபிநயாவிடம் சொன்னார்.

அபிநயா விக்ரமிடம் சொன்னாள். விக்ரம் ஒருவிதமாகப் புன்னகைத்தான்.

''இதுதான் சான்ஸ். 'கப்'புன்னு நீங்கதான் லாயல்டி லாயல்னு வளைந்து கொடுக்கறீங்க... ஆனா, அவரு உங்க குடும்பத்துக்கே வேட்டு வைக்கறாருன்னு பேசு. அந்த டூப்ளிகேட் மர்மம் என்னன்னு கண்டுபிடிச்சுடுவோம்'' என்றான்.

அவளும் இதுவே வாய்ப்பு என்று பேசினாள். ஒரு பக்கம் அபிநயா சொன்னது ஆறுதலாக இருந்தது.

''பாருங்க... சார்! அகிலாவோட பாதுகாப்புக்கும் சரி, உங்க பொண்ணோட பாதுகாப்புக்கும் சரி நாங்க பொறுப்பு. ஆனா, நீங்க எனக்கு ஒரு பிரதியுபகாரம் செய்யணும்.

''என்னன்னு சொல்லுங்க.''

''சொன்னாள். என்ன இருந்தாலும் மனசாட்சியுள்ள அந்த மனிதருக்குத் தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட ஒரு ரகசியத்தை வெளியிடத் துணிவு வரவில்லை.

தயக்கத்துடன் சொன்னார்.

''அம்மா! நான் நேரடியாகச் சொல்லமாட்டேன். வழி சொல்றேன் கண்டுபிடிங்க'' என்றார்.

அவள் விக்ரமிடம் அதை ரிலே செய்தாள்.

அவன் சிரித்துக் கொண்டே ''சொல்ற மட்டும் விஷயத்தை வாங்கிக்க... நூல் பிடிச்சுகிட்டே போயிரலாம்'' என்றான்.

அப்படித்தான் ஆரம்பித்தார்கள். ஆனால் அதற்கு உலக உருண்டை போல பெரியதொரு நூல் கண்டே தேவைப் படும் நிலை ஏற்பட்ட போது திகைத்தார்கள்.

* * *

பார்க்கும் இடமெல்லாம் நீலக்கடலே தெரிந்தது. மூன்று மணி நேரமாகச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களால் எதையும் தெளிவாகக் கண்டு பிடிக்க முடிய வில்லை.

சற்றுத் தொலைவில் திட்டுகள் மாதிரி மரங்கள் நிறைந்த நிலப்பகுதிகளாக சிறிய தீவுகள் ஒன்றிரண்டு தெரிந்தனவே ஒழிய வேறு எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

சக்கரவர்த்தியும் விக்ரமும், அபிநயாவும் ஒரு ஸ்டீமரில் அலைந்து கொண்டிருந்தார்கள். ஆனால், எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

சலிப்புடன் திரும்பி விட்டார்கள்.

அபிநயா பி.ஏ.விடம் பேசினாள்.

''மேடம்! நான் இதுல நேரடியா இறங்க முடியாது. ஆனா, அடுத்த வாரம் மறுபடியும் ஷூட்டிங் ஷெட்யூல் ஆரம்பிக்குது. அந்த சமயம் போய் பேசணும் அவ்வளவுதான் சொல்வேன்'' என்றார்.



விக்ரமும், அபிநயாவும் அந்த நாளை டக்கென்று பிடித்துக் கொண்டார்கள்.

* * *

இரவு பதினோரு மணியிருக்கும். அந்த மீன்பிடி படகி லிருந்து பாந்தமாக ஸ்டீமரில் தொற்றினார்கள்.

பி.ஏ. சுற்று முற்றும் பார்த்தபடி 'சீக்கிரம் சீக்கிரம்' என்று சைகை செய்தார்.

யாரும் கண்டுபிடிக்க முடியாத ஒரு மூலையாக அமர்ந்து கொண்டார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு மூன்று மணி நேரத்துக்குப் பிறகு ஒரு நிலத்திட்டை படகு நெருங்கியது. அப்போது விக்ர முக்குப் புரிந்தது.

போன வாரத்தில் ஒரு நாள் இந்தத் தீவு அருகில் தாங்கள் வந்தும்கூட இடத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பது.

இடத்தை நன்றாகக் கவனித்துக் கொண்டான். இறங்கிய பி.ஏ. விக்ரம் ''நீங்களும் அபிநயாவும் வாங்க. இங்கே அடையாளக் கார்டு இல்லைன்னா விட மாட்டாங்க. உங்களுக்கு நான் வேற ஒரு ஏற்பாடு பண்றேன்'' என்றான்.

இறங்கினார்கள். முதலில் இறங்கிய விக்ரமின் தோளைப் பிடித்து அபிநயா இறங்கினாள். அந்தப் பரபரப்பிலும் அபிநயாவின் தொடுகையினால் ஒரு சிலிர்ப்பு அவனுக்குள் ஓடி மறைந்தது. உடனே தன்னை மீட்டுக் கொண்டான்.

தீவுக்கு உள்ளே நுழைந்த விக்ரமும், அபிநயாவும் பெரிதாக மலைத்துப் போனார்கள். வெளியிலிருந்து பார்த் தால் ஏதோ மரக்கூட்டம் அடர்ந்திருக்கிற மாதிரியான தீவாகத் தெரிந்தது. வெளித் தோற்றத்தை அப்படியே வைத்துக் கொண்டு உள்ளே குடைந்து பாதை ஏற்படுத்தி இருந்தார்கள்.

கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டர் நடந்தவுடன் வெட்ட வெளி தெரிந்தது. அதில் ஒரு புறத்திலும் வெளியே இருந்து

பார்த்தால் என்ன என்கிறதே தெரியாத வண்ணம் பிரிவு பிரிவாக பச்சை நிறத்தடுப்புகளால் மறைத்திருந்தார்கள்.

அதில் ஒரு இடத்துக்கு உள்ளே அழைத்துப் போனார்.

குகை மாதிரியாக பகுதிக்குள்ளேயே அடையாள அட்டை காட்டித்தான் நுழைந்தார்கள். இப்போதும் மெட்டல் டிடெக்டர் பரிசோதனைக்குப் பின்புதான் உள்ளே அனுமதித்தார்கள்.

நடுத்தர அளவில் ஒரு அலுவலக அறை இருந்தது.

பி.ஏ. விக்ரமாதித்யனை அறிமுகப்படுத்தினார். ''இவர் பெரிய பத்திரிகையாளர். இவர்கள் பாஸுக்கு உங்க சர்வீஸ் தேவை இருக்கு. ஆனா, ஒரு முக்கியமான விஷயம் நான் தான் இந்தக் கிளையண்ட்டை அறிமுகப்படுத்தினேங்கறது எங்க பாஸுக்குத் தெரியக்கூடாது'' என்றார்.

அவர்கள் பக்கென்று புரிந்து கொண்டார்கள். ''எதிர்பாக்கிற அளவு செய்வாங்களா?'' என்றார்கள்.

''அதெல்லாம்... செய்வாங்க! அதுக்கு முதல்ல நம்ம ரகுவீரு சாருக்கு நீங்க செய்திருக்கிற சர்வீஸைப் பாக்கணுங்கறாங்க... அதுக்கப்புறம் முடிவு செய்வாங்க. ரொம்ப செல்வாக்குள்ள பார்ட்டி. சக்கரவர்த்தி சாருக்கு உங்க சர்வீஸ் பிடிச்சதுன்னா. இவருக்கே கூடத் தேவைப்படும். ரெண்டு பேரும் அப்படிப் பாப்புலரானவங்க'' என்றார்.

அவரது பேச்சில் மயங்கிய அந்த நிர்வாகி அவர்களை உள்ளே அழைத்துப் போக எழுந்தார் அபிநயாவும் எழுந்தாள்.

''மேடம்! நீங்க இப்ப வர வேண்டாம். சார், முதல்ல பாக்கட்டும். அப்புறம் மேற்கொண்டு பேசிக்கலாம்'' என்றார்கள்.

விக்ரமாதித்யனுக்கு உள்ளே த்ரில் மிகுந்தது. ஆனாலும் காட்டிக் கொள்ளாமல் நுழைந்தான். அந்தப் பகுதி முழுவதையும் சுற்றிக் காட்டினார்கள்.



மொத்தமாகவே நாலைந்து பிரிவுகள்தான் இருந்தன. ஒவ்வொரு பிரிவுக்கும் உள்ளே என்ன நடக்கிறதென்று பார்த்தவன் அதிர்ந்து போனான்.

பேச்செழாமல் சுற்றிவந்தான். கடைசியாக ரகுவீருக்கென்று என்ன பகுதிகள் என்றான். அரை மணி நேரம் நேரடியாக நடப்பதைப் பார்த்தான்.

வெளியே வந்தார்கள்.

ஏதோ மோகினியால் வசியம் செய்யப்பட்டவன் போல் வருகிற விக்ரமாதித்யனைப் பார்த்தாள். பரபரப்பாக நடந்து கொண்டிருந்தவள் நின்றாள்.

''என்ன விக்ரம்... சார்!'' என்றாள்.

''ஷ்!'' என்று வாயில் விரல் வைத்து கை காட்டினான். பி.ஏ.வுடனும் அவர் அழைத்து வந்த அந்த ஆளுக்குப் பின்னாலும் நடந்தான்.

பி.ஏ. கொடுத்த எச்சரிக்கை படியே நடந்து கொண்டார்கள்.

மீண்டும் அந்தப் படகுக்குள் ஏறிக் கொண்டார்கள். இப்போதும் மறைவானதொரு பகுதியில் இருவரும் நெருக்கமாக அமர்ந்து கொள்ள வேண்டிவந்தது.

சற்றுக் கழிந்தவுடனே விக்ரமாதித்யன் ஆரம்ப கட்ட அதிர்ச்சியில் இருந்து விடுபட்டான். சிந்தனையிலாழ்ந்தான். அதற்குள் கடற்காற்றில் குளிரில் அபிநயா நடுங்குவதைப் பார்த்தான். தனது கெட்டிச் சட்டையைக் கழற்றி மாட்டி விட்டான்.

அவள் ஒட்டிக் கொண்டாள்!

''அபி, என்ன விஷயம்!'' என்றான்.

கடற்காற்றோட குளிர் தாங்கலே!'' என்றாள்.

''என்ன செய்யறது. வேண்ணா என்கிட்டே நெருங்கி உட்காந்துக்க'' என்றான். அவன் தோளில் கை போட்டுக் கொண்டு அமர்ந்து கொண்டாள்.

ஏதாவது பேசிக் கொண்டே வந்தாலும் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அமைதியாக வர வேண்டியிருந்ததாலோ என்னவோ இருவருக்கும் தங்கள் அருகாமை புரிந்தது. சற்றே அசௌகரியமாக உணர்ந்தாள் அபிநயா. அது மட்டுமில்லாமல் முதன் முறையாக இப்படி ஒரு ஆண் மகனுடன் தனியாகவும், நெருக்கமாகவும் அமர்ந்திருக்கற உணர்வும் அவளைத் தாக்கியது.

மௌனமாக அமர்ந்துவிட்டாள். அதே நேரம் பி.ஏ. படகை ஓட்டியவர் கவனிக்காத வண்ணம் திருட்டுத்தனமாக இரண்டு டிஸ்போஸல் கப்புக்களில் சூடான டீ கொண்டு வந்து தந்தார்.

தேவாமிர்தமாக இனித்த அந்தத் தேனீரை ருசித்தும், சத்தமின்றியும் பருகினார்கள். பிறகு கொஞ்சம் தெம்பானாலும் விலகிக் கொள்ளவில்லை.

இப்போது மெல்லிய குரலில் சிரித்தான். முணுமுணுப்பாக "அபி!" என்றான்.

"ம்! என்ன?"

"இல்லே! த்ரில்லர் மாதிரிக் கதை போகுது. இதுவே சினிமாக் கதையா இருந்தா... இப்ப இங்கே என்ன நடக்கணும் தெரியுமா?

"சொல்லுங்க" என்றாள்.

"நான் இப்ப உன்கிட்டே ஐ லவ் யூ சொல்லணும்" என்றான். சிரித்தான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக அமர்ந்திருந்தாள்.

அவன் இழை விட்டுப் பார்ப்பதை அவள் புரிந்து கொள்ளவில்லையோ அல்லது புரிந்து கொள்ளாத மாதிரியோ அமர்ந்து கொண்டிருந்தாள்.

"என்ன அபி...! பேச்சைக் காணோம்!" என்றான்.

அவள் அதற்கும் ஒன்றும் பேசவில்லை. அவனே தொடர்ந்தான்.



"அப்படி ஒரு வேளை சொன்னேன்னு வச்சுக்க... நீ உங்கப்பா கிட்டே போய் ரிப்போர்ட் பண்ணுவே. அப்புறம் நாளைக்கே" ஊருக்குப் போய்ச் சேருடா... அம்பி"ன்னு என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிடுவாரு" என்றான் சிரித்தான்.

அவள் அவனைப் போலவே கெக்கெட்டான குரலில் சொன்னாள்.

"வேற மாதிரியாவும் நடக்கலாம். நீ இனிமே ஆபீசுக்கு வர வேண்டாம்டி தங்கம்னு என்னை ஹவுஸ் அரெஸ்ட் செஞ்சாலும் செய்வாரு" என்றாள். அவளும் லேசாகச் சிரித்தாள்.

அவனும் விளையாட்டாகவே எடுத்துக் கொண்டதாகவே அவள் நினைத்தாள். அவள் மேலும் தொடர்ந்தாள்.

"எதுக்கும் இந்தப் புராஜக்ட் முடிஞ்சதுக்கப்புறம் சொல்லுங்க... என்ன செய்யறதுன்னு பாக்கலாம்" என்றாள்.

இதை எதிர்பார்க்காத விக்ரமாதித்யன் "அபி! நான் சும்மா... தமாஷுக்கு" என்று.

"ஓ.கே...! ஓ.கே! அதை விடுங்க... நீங்க போன இடத்துல என்ன நடந்துச்சு எதுக்கு அப்படி அதிர்ச்சியா வந்தீங்க?" என்றாள்.

"அபி! தெரிஞ்சோ... தெரியாமலோ நீ புலி வாலைப் பிடிச்சு இழுத்துட்டேன்னு நினைக்கறேன். இனி நடக்கப் போறதை நினைச்சா எனக்கே த்ரில்லாவும் இருக்கு... கவலையாவும் இருக்கு" என்றான்.

அவள் இப்போது சிரித்தாள். "அதோட எனக்கு இன்னொரு கவலையும் சேர்ந்துருச்சு" என்றாள்.

"என்ன?" என்றான்.

"அதுக்கப்புறம் நீங்க வேற 'ஐ லவ் யூ'னு சொல்லப் போறீங்க. அது எனக்குப் பெரிய அதிர்ச்சியா இருக்கு" என்றாள்.

"அதுசரி! ஒருவேளை நான் நிஜமாவே அப்படி ஆயிட்டேன்னு வை. அதை நினைக்க இப்பவே எனக்குப் பெரிய அதிர்ச்சியா இருக்கு" என்று சிரித்தான்.

இருவரும் பெரிய வேடிக்கையைக் காண்பவர்கள் போல் சிரித்துக் கொண்டார்கள்.



21

சக்கரவர்த்தி, விவேக், விக்ரமாதித்யன் மூவரும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு வெகு நேரமாகியது சக்கரவர்த்திக்கு.

''ஆமா... சார்! என்னாலயும்தான் நம்ப முடியலே. அபியைக் கேளுங்க... எப்படி பேய் அறைஞ்ச மாதிரி வெளியே வந்தேன்னு. நானும் என்னோட தொழில்ல எத்தனையோ அதிர்ச்சிகளைப் பார்த்திருக்கேன். ஆனா, இப்படிப் பாத்ததில்லே. சிம்ப்ளி அன்பிலீவபிள்'' என்றான்.

சக்கரவர்த்தி முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

''அது மட்டுமில்லே. நாங்க அவங்ககிட்டே என்ன சொல்லிட்டு வந்திருக்கோம்னா, நீங்க அவங்களோட கிளையண்ட் ஆகப் போறீங்கன்னு சொல்லிட்டு வச்சிருக்கோம். நீங்க கிளையண்ட் ஆகறமாதிரி கண்டிஷன்ல இந்த அடையாள அட்டை குடுத்துருக்காங்க... வேற வழியில்லே. கடல்ல குதிச்ச நீந்திப் பாத்துற வேண்டியதுதான்'' என்றான் விக்ரம்.

சக்கரவர்த்தி பத்து நிமிஷத்துக்கு மேல் மௌனம் சாதித்தார். அது அவரது வழக்கம். விஷயங்களை ஆராய்ந்து முடித்தவுடன் முடிவெடுப்பதற்கு முன் சற்று நேரம் யோசிப்பார். அதற்குப் பிறகு எடுக்கிற முடிவுகளில் எப்போதும் பின்வாங்க மாட்டார்.

விக்ரமுக்கு அது தெரியும் என்பதால் அந்த மாதிரி நேரங்களில் குறுக்கிட மாட்டான். இன்றைக்கும் அதேபோல் ஒரு பத்திரிகையை எடுத்து வைத்து படித்து முடித்தான்.



சக்கரவர்த்தி தொண்டையைச் செருமிக் கொண்டு, பிறகு சொன்னார். ''சரி...! நானே வரேன் இறங்கிப் பாத்துருவோம்'' என்றார்.

மேலும் சற்று நேரம் விவாதித்தார்கள். அப்போது பிற்பகல் நேரம்.

விக்ரமாதித்யன் ''சார் ஐ நீட் ரெஸ்ட். நேத்து நைட்டெல்லாம் தூக்கம் இல்லே. யு மஸ்ட் பர்மிட் மீ'' என்றான்.

''ஓகே...! ஓ.கே...! நீபோய் ரெஸ்ட் எடு'' என்று அனுப்பி வைத்தார்.

* * *

தலைக்கு மேல் ஒரு பெரிய பிரச்சினை கத்தி மாதிரித் தொங்கிக் கொண்டிருக்கும்போது கூட இந்தப் பெண்ணின் நினைப்பு என்னைப் பாடாப் படுத்துகிறதே என்று கோபமும் கூட வந்தது விக்ரமாதித்யனுக்கு.

அன்றைக்கொரு நாள் மடியில் படுத்துக் கொண்டு உறங்கியது. முந்தைய நாள் ஒரு மூலையில் இருவரும் நெருங்கியபடி அமர்ந்து கொண்டு பயணம் செய்தது. தொடுகையின் மென்மை, சிரிக்கும்போதும், திரும்பும் போதும் மூச்சுக் காற்று படுகிற அளவு நெருக்கத்தில் இருந்த வாய்ப்பு எல்லாமும் இப்போது நினைக்கையில் சுகமாக இருந்தது.

கட்டிலில் படுத்துக் கொண்டு விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். முகத்தில் புன்னகை படிந்திருந்தது. ஒரு விதமான பரவசம் உள்ளே ஓடிக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் எந்த விதமான கற்பனைகளையும் அவன் வைத்துக் கொள்ளவில்லை. அவள் சம்பந்தப் பட்டவர்களின் அனுமதியில்லாமல் அப்படிக் கற்பனைகளுக்கும் போகக் கூடாது என்பது அவன் எண்ணம்.

தஞ்சாவூரில் எடுத்த போட்டோக்களை அவளது சகோதரி அனுப்பி வைத்திருந்தார். அதைக் கொடுப்பதற்கு மனமில்லாமல் தானே வைத்துக் கொண்டிருந்தான். பிறகு மறுபடியும் பிரதிகள் போட்டு வைத்துக் கொண்டான்.

நாளைக்கு அபார்ட்மெண்ட்டுக்கு வரச் சொல்லி கொடுத்து விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தான். நல்ல பாடல்களை ஒலிக்க விட்டுக் கேட்டுக் கொண்டு உறங்கி விட்டான்.

பத்து மணியிருக்கும்!

காலிங் பெல் திரும்பத் திரும்ப ஒலிக்க திடுக்கிட்டு விழித்தான். கதவைத் திறந்தான்.

அபிநயா நின்று கொண்டிருந்தாள்.

புயல் மாதிரி உள்ளே வந்தாள்!

''அதென்ன, நான் நேற்றையிலிருந்து கேட்டுக்கிட்டே இருக்கேன். சொல்லவே மாட்டேங்கறீங்க. என்னதான் நடக்குது அந்தத் தீவுக்குள்ளே!'' என்று பொரிந்தாள் அபிநயா.

தூக்கம் கலைந்து போனது விக்ரமாதித்யனுக்கு முகமெல்லாம் சிரிப்பாய் மிறியது.

''அபி! நானே இப்ப உன்னை பத்தித்தான் நினைச்சுட்டிருந்தேன்'' என்றான்.

''மிஸ்டர். விக்ரம். நீங்க என்னை எப்பெப்பெல்லாம் நினைச்சுகிட்டிருக்கீங்கன்னு நா உங்களைப் பேட்டி காண வரலை. நானும் நீங்களுமாய் ஒரு ப்ராஜக்டில் இறங்கினோம். அதில பாதியில என்னைக் கழட்டிவிட்டுட்டு நீங்க டீல் பண்ணிக்கிட்டிருக்கீங்க.. என்ன நடக்குதுன்னு தகவல் தெரிஞ்சுக்கற உரிமை எனக்கிருக்கு'' என்று பொரிந்தாள்.

அவன் சுவாரசியமாக அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு,

''உட்காரு... அபி! முதல்ல உங்கப்பாகிட்டே பேச வேண்டியிருக்குது. உனக்கு சொல்லாம யாருக்கு சொல்லப் போறேன்.'' என்றான் தயவான குரலில்.



''ம்.. அந்த பயம் இருந்தாச் சரி'' என்றாள் கம்பீரமான குரலில். அவன் ரசனையுடன் சிரித்துக் கொண்டான்.

''உனக்கும் சொல்ல வேண்டியதுதான் அதுக்காக இந்த நேரத்துலையா! அபி. என்ன அபி. இப்படித் தொல்லை பண்றே!'' என்றான்.

''அதெல்லாம் முடியாது. எனக்குத் தூக்கமே வரமாட்டேங்குது. நீங்க சொல்லித்தான் ஆகணும். நான் அப்பா கிட்டே சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்'' என்றாள்.

விக்ரமாதித்யனுக்கு இனிமேலும் காரணங்கள் சொல்ல வழியிருக்கவில்லை.

சொல்ல ஆரம்பித்தான்!

நொடிக்கு நொடி மாறுகிற அவளது முகபாவங்களை ரசித்தபடியே சொல்லி முடித்தான்.

* * *

மனைவியிடமிருந்து செல்போனில் வந்த தகவல் பி.ஏ.வைக் கவலைக்குள்ளாக்கியது.

''என்னங்க... நம்ம பொண்ணு இன்னும் வந்து சேரலே'' என்றார் படபடப்பாக.

''ஏதாவது ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போயிருப்பா விடு.'' என்றார் பி.ஏ.

''இல்லைங்க... இப்ப மணி பத்து இப்படியெல்லாம் வராம இருந்ததில்லே!'' என்றார் அந்த அம்மா.

பி.ஏ.வுக்கு பகீர் என்றது.

இன்றோடு நடித்துக் கொண்டிருந்த படத்தின் ஷெட்யூல் முடித்துவிட்டான். ரகுவீர் வருஷத்துக்கு இரண்டு படம் என்பது மூன்று படம்தான் நடிப்பது. இன்னும் கொஞ்ச நாளைக்கு வேலை இருக்காது.

உடனேயே தன் விளையாட்டை ஆரம்பித்து விட்டார் என்று தோன்றியது.

யோசிக்க ஆரம்பித்தார்.

இந்த மாதிரி விஷயங்களை ரகுவீர் எங்கெங்கே வைத்துக் கொள்வார் என்பது அவருக்குத் தெரியும். அந்தந்த இடங்களுக்கு போன் செய்து விசாரித்தார். ரகுவீர் எங்கேயும் வரவில்லை என்பதும், அங்கே அந்த மாதிரிப் பெண்கள் யாரும் வரவில்லை என்பதும் தெரிந்தது.

பத்து நிமிடத்திற்கொரு முறை போன் செய்து பார்த்துக் கொண்டிருந்தார். மகள் வரவில்லை என்பது புரிந்தது. ஆனால் அந்த நிமிடம் வரை ரகுவீர் மேலே தன் அறையில் இருக்கிறார் என்பது தெரிந்தது.

மிகவும் யோசித்து விட்டு தன்னுடைய அலுவலக அறையில் அல்லாமல் வேறொரு பக்கமாக அமர்ந்து, ஒரே பக்கத்தில் தன் மகள் ரமாவைக் கல்யாணம் செய்து கொடு என்று ரகுவீர் கேட்பது. இல்லாவிட்டால் அகிலாவைக் கண்டு பிடித்துக் கொடு என்று நிபந்தனை விதித்தது இப்போது தன் மகளைக் காணவில்லை என்பது எல்லாவற்றையும் ஒரே பக்கத்தில் எழுதி ருக்மணியம்மாவின் கையில் சேர்த்தார்.

ருக்மணி அதைப் படித்துப் பார்த்து விட்டுக் கையோடு எரித்து விட்டார்.

பத்தரை மணியிருக்கும். ரகுவீர் கீழே இறங்கி வந்தார்.

''பி.ஏ. இன்னைக்கு நீ போகலாம். ரெண்டு நாள் கழிச்சு வந்தால் போதும்' என்றார். முகத்தில் இருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

பி.ஏ. கவலையுடன் புறப்பட்டார். ஆனால், பின்னாலே கட்டிடத்தை பார்க்கவில்லை. முன்னாலே இருக்கிற அலுவலகத்தின் மறைவாக இருந்து கொண்டு கண்காணிக்க ஆரம்பித்தார்.

அரைமணி நேரம் ஆகியது. மனைவியிடம் இருந்து பெண் இன்னும் வரவில்லை என்று மேசேஜ் வந்து கொண்டே இருந்தது.

என்ன செய்வதென்றே தெரியவில்லை.



அப்போதுதான் ருக்மணியிடம் இருந்து ஒரு மெசேஜ் வந்தது. பங்களா வளாகத்திலேயே பின்னாலே இருக்கிற அந்த கெஸ்ட் ஹவுஸுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.

''அம்மா, நீங்களும் அங்கே வாங்க!'' என்று பதற்றமான குரலில் சொல்லிக் கொண்டே ஓடினார். அதற்குள் ரகுவீர் உள்ளே நுழைந்து விட்டான்.

பி.ஏ.வும் ருக்மணியும் பின்கட்டு வழியாக உள்ளே நுழைந்தார்கள்.

ஹாலில் ரகுவீர் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டே மது அருந்துவதைப் பார்த்துக் கொண்டு ஒதுங்கி நின்றார்கள்.

சற்றுக் கழித்து எழுந்து ஒரு கதவைத் திறந்தான்.

''ஏய்... வெளியே வா!'' என்று ரமா நடுங்கிக் கொண்டே வெளியே வருவதையும் கவனித்த பி.ஏ.வுக்கு ரத்தமெல்லாம் கொதித்தது.

எதிரிலேயே மறைவாக நின்ற ருக்மணியைப் பார்த்தார்.

''கொஞ்சம் பொறுங்க!'' என்று அவன் சைகை காட்ட படபடக்கும் இதயத்தோடு நின்று கொண்டார்.

''பெண்ணே! இங்க பாரு! எத்தனை பெரிய பங்களா, எத்தனை சொத்து... எல்லாம் உனக்குத்தான். பாரு... என்னைப் பாரு... ஏதாவது வயசு கண்டு பிடிக்க முடியுமா? இளமையாத்தான் இருக்கேன். உனக்கு ஒரு குறையும் இல்லாமப் பாத்துக்கிறேன்'' என்று விகாரமாக இளித்தான்.

''அய்யா! என்னை விட்டுடுங்கய்யா!'' என்று ரமா அழுதாள். இரு கைகளையும் கூப்பிக் கொண்டு.

ரகுவீர் அலட்டிக் கொள்ளாமல் சொன்னான்.

''இங்க... பாரும்மா! இந்த கெஸ்ட் ஹவுஸ் சவுண்ட் ப்ரூஃப் பண்ணி வச்சிருக்கேன். வேற ஒரு காரணத்துக்காகப் பண்ணினேன். இப்ப ரொம்ப யூஸ் ஆகுது. உங்கப்பன் என்னைக் காதுல பூ வச்ச ஆளுன்னு நினைச்சுட்டான். பேசாம என் கொழுந்தியை செட் பண்றதுக்கு விட்டுருந்

தான்னா உனக்கு இப்ப இந்தத் தொல்லை வந்திருக்காது. இனி வேற வழியில்லே. நீ ஒத்துகிட்டுத்தான் ஆகணும். இல்லேன்னாலும் நான் விடப் போறதில்லை'' என்றான்.

நெருங்கினான்.

ரமா ஓவென்று பெருங்குரலெடுத்து அழுதாள். பி.ஏ.வுக்கு அதற்கு மேலும் பொறுக்கவில்லை. சட்டென்று ஹாலுக்கும் வந்து ஆங்காரமாகப் பார்த்துக் கொண்டு நின்றார்.

''அப்பா'' என்று ஓடிப்போய் அவர் அருகில் நிற்கிற அதே நேரம், ருக்மணியும் வெளியே வந்தாள்.

ஒரு நிமிடம் திகைத்து நின்ற ரகுவீர், சுதாரித்துக் கொண்டார். பிறகு சொன்னார்.

''ஓ! ரெண்டு பேரும் வந்திருக்கீங்களா? ஏண்டி ருக்கு, உன் மேலே இந்தாளுக்கென்ன இவ்வளவு கரிசனம்...'' என்றான் நக்கலாய்.

''ஏன்னா, அவரு மனுஷன்'' என்றாள் ருக்மணி அழுத்தமான குரலில்.

''ஓ. ஹ்ஹோ! அப்ப நாங்கள்ளாம்!'' என்றான் அதே கேலிக் குரலில்.

''நீ மிருகம்'' என்றாள்.

அந்த குரலில் தெரிந்த மாறுபாடு பார்த்து அவனுக்கும் கோபம் பொங்கியது. அருகில் நெருங்கி வழக்கம் போல் அடிக்க ஆரம்பித்தான்.

நாலைந்து அடிகள் வாங்கிக் கொண்ட ருக்மணி அதற்குப் பிறகு நிமிர்ந்து நின்றார்.

''இப்ப வரைக்கும் நான் வாங்கின அடி... உன் பொண்டாட்டியா இருந்த பாவத்துக்காக. இப்ப நான் குடுக்கற அடி... பிராயச்சித்தம் செய்யறதுக்காக'' என்று ஆங்காரமாகச் சொன்னவர் தன் பலத்தையெல்லாம் திரட்டி ஓங்கி ஒரு அறை விட்டார்.



இதை எதிர்பார்க்காத ரகுவீர், போதையில் இருந்தாலோ என்னவோ... தட்டுத் தடுமாறி சோபாவில் விழுந்தான்.

''மனுஷன்னா... வளர்ந்து வந்த பாதையை நினைக்கணும். கொஞ்சமாவது ஈவு, இரக்கம் இருக்கணும்... இந்தப் பொண்ணை பொண்டாட்டியா நினைக்கறியே நீ ஒரு மனுஷனா? அகிலா உனக்கு மக மாதிரியில்லே! இந்த மாதிரி சின்னப் பொண்ணுகளை சேரழிக்கணும்னு நினைக்கறியே... நீ இருந்த என்ன போனா என்ன?'' என்று தலையில் அடித்து கொண்டு அழுதார்.

ரகுவீரையும் மாறி மாறி அடித்தார். ரகுவீர் துவண்டு போய் அமர்ந்து விட்டான்.

ஆவேசமாகத் திரும்பிய ருக்மணி பி.ஏ.விடம் சொன்னார்.

''சுவியமூர்த்தி... சார்! நீங்க என்னைச் சகோதரியா நினைக்கறது உண்மைன்னா... எனக்கு உதவி பண்ணுங்க... இந்த ஆள் கூட எனக்கு வாழ்க்கையே வேண்டாம்'' என்று கூறினார்.

அப்போதுதான் பி.ஏவுக்கு அந்த எண்ணம் தோன்றியது. பழி வாங்கும் எண்ணம்.

''அம்மா! இவரை இங்கயே கட்டிப் போடுங்க... அப்புறம் என்ன செய்யறதுன்னு பார்க்கலாம். முதல்ல மகளை வீட்லே சேத்துட்டு வர்றேன்'' என்று ரகுவீரைக் கட்டிப் போட்டார்கள்.

வெளியே வந்து எதுவுமே நடக்காதது போல் காரில் மகளை அழைத்துக் கொண்டு போனார் பி.ஏ.

ருக்மணி தூக்கமில்லாமல் அந்த இரவைக் கழித்தார்.

* * *

ரமாவைக் கண்டபிறகுதான் சரசுவுக்கு உயிர் வந்தது.

முழுமையாக இப்போதைக்கு சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்து கொண்டார். பி.ஏ. மனைவியிடம் சொல்லி விட்டார்.

"இத பாரு! அவளே ஏற்கனவே பயந்து போயிருக்கா. அவளை குடைஞ்சு, குடைஞ்சு கேள்விகள் கேட்காதே" என்று அடக்கி வைத்து விட்டார்.

தூக்கத்தில் கூடத் தேம்புகிற மகளைக் கவலையுடன் பார்த்தவர் உடனே ஒரு காரியம் செய்தார்.

விக்ரமாதித்யனுக்கு போன் செய்தார்... உடனே சந்திக்க வேண்டுமென்றார்.

விக்ரமாதித்யன் தனது அபார்ட்மென்டுக்கே வரச் சொன்னார்.

"விக்ரம்... சார்! விஷயம் புரிஞ்சுக்குங்க... இது பெரிய எரிமலையா வெடிக்கும் போல இருக்கு. நான் எத்தனை நாளைக்கு அந்த ஆளை அங்க கட்டிப் போட முடியும்? அவரை வெளியில விட்டா... அவருக்கு இருக்கிற செல்வாக்குக்கு, பணபலத்துக்கு... என்னையும், ருக்மணியம்மாவையும் மண்ணோட மண்ணா புதைச்சுடுவாரு. அதுக்கப்புறம் எத்தனை அலொக்களை வேண்டுமானாலும், ரமாக்களை வேணும்னாலும் சேரழிச்சுகிட்டுத் திரிவாரு" என்றார்.

விக்ரமாதித்யன் யோசனையில் ஆழ்ந்தான். பி.ஏ. கதறி அழுதார்.

"சார்! தெய்வம்தான் இன்னைக்கு எனக்குத் துணையா இருந்திருக்கு. என் மக தப்பிச்சா. இல்லேன்னா!" என்று அழுகிற பி.ஏ.வை விக்ரமாதித்யன் முதலில் கோபமாகப் பார்த்தவன் பிறகு கோபமாக சொன்னான்.

"நீங்க அந்தாளோட எல்லாத் தப்புக்கும் துணை போயிருக்கீங்க..." என்று.

"இல்லைங்கய்யா... அவரோட சொந்த வாழ்க்கையில நான் எப்படித் தலையிட முடியும்! இதுவரைக்கும் ஒரு மாதிரிப் பட்ட லேடீஸ் இஷ்டப்பட்டுத் தேடி வந்தவங்கன்னு மட்டும்தான் இருந்தாரு. ஆனா, இப்ப வெறி பிடிச்ச மாதிரி அலைய ஆரம்பிச்சுட்டாரு!" என்றார்.



விக்ரமாதித்யன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

"அது ஒரு விதமான காம்ப்ளெக்ஸ். தனக்கு வயசாயிட்டு வருதுங்கறதை ஒத்துக்க முடியலே. இன்னும் இளவயசுன்னு நிரூபிக்கறதுக்காக என்னென்னவோ செய்யறாரு. அதுல உச்சகட்டமா அந்தத் தப்பு பண்ணியிருக்காரு" என்று சொன்னவன், அந்தச் செயலின் விபரீதத்தை எடுத்துச் சொன்னான்.

பி.ஏ. இன்னும் பயந்து போனார்.

"அப்ப... இனி என்ன நடக்குங்க சார்!" என்று கேட்டார் பீதியுடன்.

"இனிமேல் கொண்டு என்ன நடக்கும்னு எனக்குத் தெரியலே. ஆனா, இப்பத்திக்கு என்ன நடக்கும்னு என்னால கெஸ் பண்ண முடியுது" என்றவன் தன் சந்தேகத்தைச் சொன்னான்.

இருவரும் பதறிக் கொண்டு புறப்பட்டார்கள்.



## 22

ருக்மணிக்கு மனது அமைதியாகவே இல்லை. என்ன இருந்தாலும் ரகுவீரைக் கட்டிப் போட்டு வைத்திருப்பது என்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

சாப்பிடுவதற்கென்று சூடாக டிபன் செய்து எடுத்துக் கொண்டு பனிரெண்டு மணி வாக்கில் அவர் அந்த கெஸ்ட் ஹவுஸை நோக்கிச் சென்றார்.

தெய்வாதீனமாகவோ என்னவோ அதே நேரம் காரில் உள்ளே நுழைந்தார்கள் விக்ரமாதித்யனும், பி.ஏ.வும்.

"ரெண்டு சாவி... இருக்கு. அம்மா கிட்டே ஒண்ணு இருக்கு. இன்னொன்று ஆபீஸ் பீரோவில இருக்கு. எடுத்திட்டு வரேன்" என்று பி.ஏ. போய் எடுத்து வந்தார்.

அவர்கள் வெளியே வரவும் அபிநயா காரில் வந்து இறங்கினாள்.

முன்பு போலவே ஹாலில் நேரடியாக நுழையாமல் கிட் அவுட்டிலிருந்து பக்க வாட்டில் பிரிந்து செல்கிற வராண் டாவில் நடந்து சென்று ஹாலின் பின்பக்கத்து பகுதியில் எப்போது வேண்டுமானாலும் நுழைவதற்கு தயாராய் நின்றார்கள்.

கண்களில் கண்ணீர் வழிய ட்ரேயை எடுத்துக் கொண்டு போனார் ருக்மணி. இதற்கிடையே சற்றே போதை தெளிந் திருந்தது ரகுவீருக்கு.

நடந்த எல்லாமும் நினைவுக்கு வந்தது ரகுவீருக்கு. எல்லாவற்றைக் காட்டிலும் மனைவி அடித்த அடிதான் நினைவுக்கு வந்தது.

ருக்மணி அவருக்கு முன்பாக டிரேயை வைத்து விட்டுச் சொன்னார். அதற்குள் வழக்கம் போல் அபிநயா எல்லா வற்றையும் காமிராவில் பதிக்கத் தொடங்கினாள்.

''எங்க உங்களுக்கு என்ன இல்லாமல் இருக்கு. நான்தான் உங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படி இருங்கன்னுதானே சொல்றேன். அப்படி உங்களுக்கு சின்ன வயசுப் பொண்ணுக தான் வேணும்னா உங்க ரசிகைகள் எத்தனையோ பேர் உங்களுக்குக் கிடைப்பாங்க. அப்படி விரும்பி வர்றவங் களைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா?'' என்றார் தன்மையாக.

அவன் ஒன்றும் பேசவில்லை.

''சாப்பிடுங்க'' என்றாள்.

''கட்டைப் பிரிச்சு விடு'' என்றான்.

கட்டைப் பிரித்து விட்டாள். சூடாக இருந்த டிபனை அள்ளி அள்ளி வாயில் போட்டுக் கொண்டான் தெம்பாகி விட்டான்.



ருக்மணி தொடர்ந்து ''எங்க நமக்கு ரெண்டு குழந்தைங்க இருக்காங்க இல்லே'' என்றாள் குழந்தைக்குச் சொல்வது போல.

ரகுவீர் சற்று நேரம் மௌனமாக இருந்தான். பிறகு சொன்னான் ''இப்ப என்ன செய்யலாங்கறே?''

''நான் உங்களுக்கு ஒத்துழைக்கறேன். இப்படி அகிலா ராமான்னு தெரிஞ்ச பொண்ணுங்களையெல்லாம் தொந்தரவு செய்யாம வேற யாரையாவது பண்ணிக்குங்க. நானே சம்மதப் பத்திரம் தர்றேன். எல்லாம் சட்டப்படி பண்ணிக் குங்க'' என்றாள்.

ரகுவீரின் முகம் மென்மையாக மாறியது. எழுந்து ருக்மணிக்கு முகம் காட்டாமல் நின்று பேசினான். ஆனால் அபிநயாவின் காமிராவிற்கு நேராக நிற்கிறோம் என்பது தெரியவில்லை.

ருக்மணிக்கு முகம் காட்டாது நின்ற போது முகத்தில் முழு குரூரமும் தெரிந்தது.

''முதல் முதலா என்னை அடிச்சிருக்கே. கட்டிப் போட் டிருக்கே. அதிலிருந்தெல்லாம் கூட நான் பாடம் கத்துக்க லேன்னா நான் மனுஷனே இல்லையே!'' என்றான்.

''அதையெல்லாம் மறுபடியும் ஞாபகப் படுத்தாதீங்க'' என்று கதறினார் ருக்மணி.

''சரி. விடு! என்றான் திரும்பும்போது முகம் மென்மை யாக மாறியது. ஸ்விட்ச் போட்டால் உணர்ச்சி பாவங்களை அவன் மாற்றுவதைக் கண்டு அபிநயாவுக்கு ஒரே ஆச்சரியம். கண்ணாலேயே அதை வெளிப்படுத்தினாள்.

ரகுவீர் சோபாவில் அமர்ந்தான் ருக்மணியும் கண்களைத் துடைத்துக் கொண்டு எதிரில் அமர்ந்தாள். அவன் அருகில் இருந்த தம்ளரில் இருந்து தண்ணீர் குடிப்பவன் போல் இயல்பாக எடுத்தான்' ''ருக்கு... இந்த டம்ளரைக் கழுவு'' என்று கொடுத்தான்.

ருக்மணி அதை வாங்கிக் கொண்டு வாஷ்பேசினை நெருங்க அந்த நேரத்தில் சிறியதாகவும் அழகாகவும் இருந்த அந்த ஸ்டூல் டீபாயை எடுத்துக் கொண்டு நெருங்கினான்.

ருக்மணியின் தலையில் ஒரு அடியும் வைத்து விட்டான். மறுபடியும் விக்ரமாதித்யன் பின்னாலிருந்து பிடித்துக் கொண்டான். அதைக் கவனியாமல் மேலும் பேசினான் ரகுவீர். ''ஆமாடி. இனிமேல் எல்லாமே சட்ட பூர்வமாத் தான் பண்ணனும். நீ இருந்தாத்தானே எவனையும் கல்யாணம் செய்ய முடியாது. உன்னையே இல்லாமப் பண்ணிட்டா. எதைச் செஞ்சாலும் சட்ட பூர்வமா ஆயிடும் இல்லே?'' என்று வெறி பிடித்தாற் போல் கத்திக் கொண்டிருந்தவன் பிறகுதான் கவனித்தான். தன் கையை யாரோ இறுக்கிப் பிடித்திருப்பது தெரியத் திரும்பிப் பார்த்தான். வெகு கோபத்துடன் கேட்டான்.

''யாருய்யா, நீ?'' என்று.

''உங்கள் அன்புக்குரிய நண்பன் விக்ரமாதித்யன்'' என்றான் விக்ரமாதித்யன் நக்கலாக.

அவன் கையிலிருந்து பிடுங்கிய டீபாயைத் தூக்கித் தூரப் போட்டான்.

அதற்குள்ளாக அபிநயா ருக்மணியின் காயத்தைக் கவனித்தாள்.

பி.ஏ.வின் கையில் இருந்த காமிராவை ஆஃப் செய்யச் சொன்னான். அந்தக் கணத்தில் விக்ரமாதித்யன் யாரும் எதிர்பார்க்காத அந்தக் காரியத்தைச் செய்தான்.

ஓங்கி ரகுவீரின் தலையில் அடித்தான். ரகுவீர் மயங்கிச் சாய்ந்தான்.

''இவங்கள்ளாம் டூப் போட்டு ஃபைட் பண்ற ஆளுங்க. நாங்கள்ளாம் நிஜமாவே ஃபைட் கத்துகிட்டு ஃபீல்டுக்கு வந்தவங்க. எப்படியும் இந்த அடி நாலைஞ்சு மணி நேரம் தாங்கும்'' என்றான்.



அதற்குள்ளாக அபிநயா ருக்மணியிடம் கேட்டாள்.

''ஏம்மா இப்பவும் இப்படிப் புருஷன் உங்களுக்கு வேணுமா?'' என்று.

ருக்மணிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அழுதார். சற்று நேரம் அழவிட்டார்கள். பிறகு பேசினார்கள்.

ஒரு முடிவுக்கு வந்தார்கள். அப்போதும் கூட ருக்மணிக்கு முழுமையாக விஷயங்களைச் சொல்லவில்லை.

* * *

''என்னப்பா இது! துணியாட்டமாக் கிடக்கறாரு.. உசிரு இருக்கா?'' என்றார் பி.ஏ. கவலையாக.

விக்ரமாதித்யன் புன்னகைத்தான் ''சார். அது வர்மக் கலை. எங்க தாத்தாவுக்கு வேண்டிய ஒருத்தர் எனக்கு இதை சொல்லிக் கொடுத்தார். அவசியமானப்ப தற்காப்புக்காக மட்டுமே இதைப் பயன்படுத்தணும்னு சொல்லியிருக்காரு. ஆனா இன்னைக்கு ருக்மணியம்மாவைக் காப்பாத்தறதுக்காக இதைப் பயன்படுத்த வேண்டியதாப் போச்சு'' என்றான்.

''நான் கூட கராத்தேல பிளாக்பெல்ட்'' என்றாள் அபிநயா.

''அப்ப இதையெல்லாம் சொல்லித்தான் மாப்பிள்ளை தேடணும்'' என்றான் விக்ரமாதித்யன்.

''என்னைக் கேட்டா எல்லாப் பெண்களும் இதெல்லாம் கத்துக்கணும். ருக்மணியம்மாவுக்கு மட்டும் இதெல்லாம் கொஞ்சம் தெரிஞ்சுருந்தா இந்த ஆள் வாலாட்டியிருக்க முடியுமா? எத்தனை சித்திரவதை தெரியுமா? உண்மையாவே அந்த அம்மாங்கறதுனால இத்தனையும் தாங்கினாங்க. தெரியுமா?''

''ஆமா. ருக்மணியம்மாவுக்குக் குழந்தைகள் மேல ரொம்பப் பிரியம் பாவம். குழந்தைகளுக்காக குழந்தைகளுக்காக அப்படீன்னே எல்லாத்தையும் தாங்கினாங்க. தெரியுமா?'' என்றார் பி.ஏ. வேதனையோடு.

''அத்தம்மாவையே கொல்லப் பார்த்தானே'' என்றார் மறுபடியும்.

தாங்கள் செல்ல வேண்டிய இடம் வந்ததும் காரை நிறுத்தினார்கள்.

ரகுவீரை மூவருமாகத் தூக்கிக் கொண்டு போய் ஒரு அறையில் போட்டார்கள். சக்கரவர்த்தியிடம் பேசினான்.

அவரே நேரில் வந்தார். வெகு நேரம் விவாதித்தார்கள். ''என்னப்பா விஷயம் ரொம்ப சீரியஸாப் போகுதே'' என்று சற்றுக் கவலையானார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அன்றிரவே தீவுக்குப் போனார்கள். இந்த முறை பி.ஏ.வும் உடன் வந்தார்...

முழுப்பகுதியையும் சுற்றிப் பார்த்தார் சக்கரவர்த்தி. ஏற்கனவே விஷயங்களை அறிந்திருந்தாலும் கூட நேரில் பார்க்கும் போது அதிர்ச்சிகரமாக இருந்தது.

ஆழ்ந்த யோசனையுடனே திரும்பி வந்தார்.

* * *

அபிநயாவுக்குத் தூக்கமே வரவில்லை.

இப்படியெல்லாம் நிஜவாழ்க்கையில் நடக்குமா என்ன? பொதுவாக சமுதாயத்தில் புகழ் பெற்றவர்கள் சிறந்த குடும்பத் தலைவர்களாக இருக்க முடியாது என்பது இயற்கை தான். ஆனால் இப்படி இரட்டை வேடம் போடுவார்களா என்ன? இரக்கமே இல்லாதவர்களாக நடந்து கொள்வார்களா என்ன? இப்படியொரு இரட்டை வேடத்தை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. அதிலும் ரகுவீரின் வாழ்க்கை கொடூரமான வில்லனின் வாழ்க்கையைப் போல இருந்தது.

அன்றிரவு.

பத்து மணிக்கு விக்ரமாதித்யனிடம் அவளது அபார்ட்மெண்ட்டுக்குப் போய் சண்டை போட்டபோதுதான் அவன் விஷயங்களைச் சொன்னான். அந்த விஷயங்களும்



அவற்றின் தொடர்ச்சியும் தான் அவளை அதிர்ச்சிக்குள் ளாக்கியுள்ளன.

விக்ரம் விவரித்தது நினைவுக்கு வந்தது.

* * *

சிறிய தீவு அது.

தனியாருக்கு சொந்தமானது. பெரிய ஏரியா அல்ல. ஆனால் அங்கே ஒவ்வொரு கிளையண்டுக்கும் ஒரு ஏரியா இருந்தது.

மொத்தமே ஐந்து கிளையண்டுகள் தான். அவர்கள் அத்தனை பேருக்கும் தேவையான சேவையை அந்த அமைப்பு செய்து கொண்டிருந்தது.

''சேவை, சேவைங்கறீங்களே என்ன சேவை அது. அதைச் சொல்லுங்க'' என்றாள் படபடப்பாக.

''வர்றேன். அதுக்குக் கடைசியா வர்றேன். அதுக்கு முன்னாடி அந்த அஞ்சு பேரைப் பத்தித் தெரிஞ்சுக்க. அஞ்சு பேருமே ஒவ்வொரு விதத்துல பிரபலமானவங்க. ஒருத்தர் வடமாநிலத்துல பெரிய பணக்காரர். ஒருத்தர் பெரிய விஞ்ஞானி. ஒருத்தர் சீக்கிரமே ஆட்சியைப் பிடிக்கிற நிலைமையிலே இருக்கிற அரசியல்வாதி. இன்னொருத்தர் உலக அளவிலான தீவிரவாத அமைப்புத் தலைவர். அப்புறம் ரகுவீர்.

''ஓ! ..............''

''ஆமா. இவங்க யாருக்குமே பணம் ஒரு பெருசு இல்லே. கொட்டிக் கிடக்கு. சமூகத்திலயும் அரசியல்லயும் ரொம்ப செல்வாக்குள்ளவங்க. இதில அரசியல்வாதிக்கு விஷயமே தெரியாது''

''புரியலை.''

அதுதான் சஸ்பென்ஸ். ரகுவீர் தானே இந்த சேவை வேணும்னு போயிருக்காரு. ஆனால் அரசியல்வாதிங்க இந்த அமைப்போட சேவை வேணும்னு போயிருக்காங்க. ரொம்ப பயங்கரமான விஷயம் இது'' என்றான் விக்ரம்.

''எப்படி?''

''ஆமா. என் எதிரில உட்கார்ந்து பேசிட்டிருக்கறது அபிநயான்னு நான் நம்பறேன். ஆனா அது அபிநயா இல்லேன்னு வச்சுக்க. எப்படியிருக்கும்.''

''விக்ரம். விளையாடாதீங்க.''

''இத பார்றா பத்து மணிக்கு வந்து உட்கார்ந்துகிட்டு தூக்கத்தைக் கெடுத்துகிட்டு இருக்கிறா. இவகிட்டே நான் விளையாடறேனாம்'' என்றான் எரிச்சலாக.

''பின்னே என்ன விக்ரம் சார்! எவ்வளவு சீரியஸாக் கேட்டுகிட்டிருக்கேன். நீங்க விளையாடறீங்க'' என்றாள்.

''விளையாடலை. அபி நிஜமாவே சொல்றேன்.''

''சரி. நீங்க நிஜமாவே கேட்கறதா நினைச்சு நானும் சொல்றேன். நிச்சயமா ரொம்ப அதிர்ச்சியா இருக்கும்.''

''விஷயம் என்னவா இருக்கும். யோசியேன்.''

''நான் நினைக்கிறேன் இந்தப் பெரிய ஆளுங்க எல்லாரும் தங்களைப் போலவே இருக்கிற ஆளுங்களைக் கண்டு பிடிச்சுக் கூட்டிட்டு வந்து பராமரிக்கறாங்கன்னு நினைக்கிறேன்.''

''ரகசியமா வைச்சுப் பாதுகாக்கறது வரை சரி. அதாவது பாதி சரி.''

அவள் முகத்தில் கோபம் ஏறியது. அந்தக் கோபத்தில் அவள் முகம் சிவப்பதைப் பார்த்தவுடன் அவனுக்கு அவளைச் சீண்டிப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது.

''ப்ளீஸ். இன்னைக்கு போதுமே!'' என்றான்.

அவள் பாணியை மாற்றினாள் சிணுங்கினாள்.

''விக்ரம் சார்! எனக்குத் தூக்கமே வராது'' என்றாள்.

''எனக்கு வருதே.''

''ப்ளீஸ். நான் காபி போட்டுத் தரேன் இதை மட்டும் சொல்லிட்டுத் தூங்குவீங்களாம்'' என்றாள்.



''காபி குடிச்சா ராத்திரி முழுக்கத் தூக்கம் வராதே!'' என்றான்.

அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. முறைத்தாள். அவன் சிரித்தான்.

''சரி. சரி. உன் கையாலே காபி கிடைக்கறப்ப ஏன் வேண்டாங்கணும்'' என்றான்.

அவளும் பரபரப்பாக எழுந்து காபி போட்டாள். அவன் அருகில் வந்து நின்று கொண்டான்.

குபீரென்று சிரித்தான். ''அபி உங்கப்பா என்ன மாதிரி ஆளு?'' என்றான்.

''ஏன்?'' என்றாள்.

''இல்லே. பத்து மணிக்கு ஒரு பேச்சிலரோட அபார்ட்மென்டுக்குப் போகணும்னு வந்திருக்கறே. உன்னை அனுப்பி வச்சிருக்கறாரு'' என்றான்.

அவளும் அவனைப் பார்த்து சிரித்தாள். ''ஒரு வேளை உங்க மேலே அவ்வளவு நம்பிக்கையோ என்னமோ!'' என்றாள்.

''ஒரு வேளை இப்படி இருக்குமோ? இவன் எதுக்கும் தைரியம் இல்லாதவன். இவனை நம்பித் தன் பொண்ணு போகலாம்னு நினைச்சாரோ என்னவோ?'' என்றான் விக்ரமாதித்யன்.

அவள் படபடமானாள்.

''சேச்சே! நிச்சயமா அப்படி இல்லே! உங்களோட துணிச்சலைப் பற்றி எங்கப்பாவுக்கு ரொம்பப் பெருமை. நல்ல அபிப்பிராயம்'' என்றாள்.

'காபியை ரசித்துக் குடித்தார்கள்.

''அபி! இது நிஜம்மாவே நல்ல காபி'' என்றான். அவள் அதைக் கவனியாதவள் போலப் பேசினாள்.

''நீங்க கேட்ட கேள்விக்கு ஒரு வேளை இது பதிலாக இருக்குமோ!'' என்றாள்.

''...................'' .

''உங்களை நம்பி அனுப்பறதுங்கறது ஒரு சான்ஸ். ஒரு வேளை ஏதாவது நடந்தாக் கூடத் தப்பில்லேன்னு நினைக்கறாரோ என்னமோ?'' என்றாள்.

அவள் பார்வை அவள் முகத்தின் மேல் நிலை குத்தி நின்றது. அவள் தயங்காமல் எதிர்ப் பார்வை பார்த்தாள்.

''அபி!'' என்றான் கரகரத்த குரலில்.

அவள் வேறு பக்கம் பாத்தபடி சொன்னாள். பின்னே சீண்டிகிட்டே இருக்கீங்க'' என்றாள்.

''ஐ ம் சாரி'' என்றான் முணுமுணுப்பாக. பார்வையை அவள் முகத்திலிருந்து நீக்கியபடி. எழுந்து ஜன்னலைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அதேசமயம் அபிநயாவுக்கே தான் பேசுகிற விதம் குறித்து ஆச்சரியமாக இருந்தது. தன்னை மீறி வார்த்தைகள் விழுவது குறித்து அதிர்ச்சி தோன்றியது.

அவள் பார்வை தன் முதுகைத் துளைப்பது தெரிந்தும் அவன் அமைதியாக நின்றான். பிறகு மெதுவாக நிலைப் படுத்திக் கொண்டு திரும்பினான்.

''சரி விஷயத்துக்கு வருவோமா?'' என்றான்.

அவள் மௌனம் காலைக்காமலே அவனைப் பார்த்தாள்.

''அவங்க மாதிரியேன்னு சொன்னயே! மாதிரியில்லே! அவங்களேதான்.''

''அதெப்படின்னா.? அந்தக் காலனியிலே இருக்கிறவங்க எல்லாரும் குளோன்கள்.''

''யு மீன் அங்க நடக்கறது குளோனிங்?''

''யா!..'' என்றான் அதே பாணியில்.

''மை காட்'' என்று நிஜமாகவே அதிர்ந்து போனாள்.





23

''ஒரு கருமுட்டையோட நியூக்ளியஸ்ல இருந்து டி.என்.ஏ வைப் பிரித்தெடுத்து ஆணோ பெண்ணோ ஒருத்தரோட செல்லில இணைச்சு சாதாரண எம்பிரியோ மாதிரி பிரியச் செய்றது. அப்புறமா அந்த கருவைத் தாங்கற பெண்ணோட கருவில வைத்து வளர்க்கறது. இதுதான் இன் ஷார்ட் குளோனிங்குக்கான முறை'' என்று ஆரம்பித்தான் விக்ரமாதித்யன்.

''ஆரம்பமே தலை சுத்துது'' என்றாள் அபிநயா.

''அவனவன் தலையைக் குடைஞ்சு புதுசு புதுசாக் கண்டுபிடிக்கறான். உனக்கு அதைக் கேட்டு என்னன்னு புரிஞ்சுக்கறது கூடக் கஷ்டமா இருக்கா?'' என்றான்.

''ஐயோ போதும் அட்வைஸ். கேக்கறேன் கேக்கறேன்'' என்றாள்.

''முத முதல்ல டாலின்னு ஒரு ஆட்டைக் குளோனிங் செஞ்சாங்க. முத முதல்ன்னு சொல்ல முடியாது. 276 முறை முயற்சி செஞ்சதுக்கப்புறம் தான் அது சக்ஸஸ் ஆச்சு. ஒரு முயற்சி ஜெயிச்சுது. இயான் வில்மட்ங்கறவர் தன்னோட குழுவோட ரோஸ்லின் இன்ஸ்ட்டியூட்ல அதைக் கண்டு பிடிச்சாங்க. எடின்பர்க்ல வச்சு இதைக் கண்டு பிடிச்சாங்க'' என்றான்.

சக்கரவர்த்தி, விவேக், அபிநயா, அப்துல், விக்டர் என்று இவர்கள் எல்லாரும் ஒரு குழுவாக அமர்ந்து அவன் சொல்வதைத் தீவிரமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு வகுப்பே எடுத்தான் விக்ரமாதித்யன்.

''டாலியை உருவாக்கினது 1997ல். அதுக்கப்புறம் 2001ல் ''கார்'ங்கற ஒரு காட்டெருமையை உருவாக்கினாங்க' அதுக்கு 'நோவா'ன்னு பேர் வச்சாங்க. ஆனா நோவா இன்ஃபெக்ஷனால இறந்து போச்சு. ஆனா டாலி ஆறு

குட்டிகள் வரை போட்டு அதுக்கப்புறம் நோயினால இறந்து போச்சு''

எல்லாரும் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவன் தொடர்ந்தான். ''இந்த மாதிரி குளோனிங் முறையில உருவாக்கின உயிர்களை ''அசெக்ஷுவல் ப்ரொடக்ஷன்'' அப்படீங்கறாங்க. அதாவது செக்ஸ் இல்லாம உருவாக்கப்பட்ட உயிரினங்கள் அப்படீங்கறாங்க.''

''அப்படீன்னா டெஸ்ட் ட்யூப் பேபி கூட அப்படித்தான் இல்லே!'' என்றான் அப்துல்.

''ஆமா. அவ்வளவுக்கு ஏன் போறீங்க? ட்வின்ஸ் பொறக்கறது கூட இயற்கையா நடக்கற குளோனிங் அப்படீங்கறாங்க. குளோனிங்ல மூணு வகை இருக்கு. ஒண்ணு டி.என்.ஏ. குளோனிங். இரண்டாவது ரீ ப்ரொடக்டிவ் குளோனிங். மூணாவது தெரப்யூடிக் குளோனிங்.''

''ஹலோ! ஹலோ! இந்த டீடெய்ல்ஸ்க்கெல்லாம் போகணுமா?'' என்றான் விவேக்.

''இல்ல. சும்மா கொஞ்சம் தெரிஞ்சுக்கலாமே? என்ற விக்ரமாதித்யன் தொடர்ந்தான் ''மனிதர்களை க்ளோனிங் செய்யறதும் விரைவில் நடக்கும்னு அப்பவே பேச ஆரம்பிச்சுட்டாங்க. ஆனா இது தேவையா இல்லையாங்கற சர்ச்சையும் அப்பவே ஆரம்பிச்சுடுச்சு. ஏன்னா எதிக்கல் கிரவுண்ட்ஸ்ல இது நியாயம் இல்லைன்னும் பேச ஆரம்பிச்சாங்க''.

''தெரப்யூடிக் குளோனிங்கன்னா என்ன?'' என்றாள் அபிநயா.

''இந்த மெத்தட்ல ஸ்டெம்செல் உருவாக்கி அது மூலமா மனித உயிர்களைப் பத்திப் படிக்கறது. ஆனா இந்த முறையில கருப்பையில இருந்து எடுக்கப்படற எம்ப்ரயோஸ் அழிஞ்சுடுங்கறது இந்த முறையில பெரிய குறையா இருந்துச்சு.''



''ஆனா இப்ப என்னவோ எம்ப்ரயோஸ் அழியாம இருக்கறதுக்கான புதிய முறை கண்டுபிடிச்சிருக்காங்களாமே?''

''ஆமா! நானும் படிச்சேன். ஆனா ஒரு விஷயம் எனக்குத் தெளிவாத் தெரியும். ஜப்பான்ல சட்டப் படி தடை செஞ்சிருக்காங்க. இங்கிலாந்துல இந்த ஆராய்ச்சிக்குப் பர்மிஷன் வாங்கணும். ஆனா வளரும் நாடுகள்ல இதைப் பத்தி பெரிய கருத்தொண்ணும் இல்லே. நம்ம தமிழ் நாட்டில கூட டெஸ்ட் ட்யூப் பேபீஸ். சர்ரொகெட் மதர்ங்கிற கான்ஸெப்ட்ஸ் எல்லாம் இருக்கு.''

''..................''

''குளோனிங் முறையை ஆதரிக்கறவங்க அதுக்கு சில காரணங்கள் சொல்றாங்க. அது என்னன்னா அந்தக் குளோனிங் நன்கொடையாளருக்கு ஏதாவது நோய் வந்தா பாகங்கள் தேவைப்படும் போது இந்த இமேஜ்ல இருந்து எடுத்துக்கலாம் இல்லே! இன்னொண்ணு குழந்தை பிறக்க முடியாத சூழ்நிலையில இருக்கறவங்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதம்னு ஒரு கருத்து.''

''ஐயோ! இது என்ன அநியாயமா இருக்கே! ஸ்டெப்னி மாதிரிக் கையாள்றதா?'' என்றான் விவேக்.

''இதைத்தான் எதிர்க்கறவங்க தங்களுக்கு ஆதரவா வைக்கறாங்க. எப்ப ஒரு முழு வடிவத்துக்கு வந்துடுதோ அப்ப அது ஒரு முழு உயிர். அப்ப எப்படி அதை அப்படிக் கையாள முடியும்ங்கறதுதான் எதிர்ப்பாளர்களோட வாதம்.'' என்றான்.

''அதானே'' அது எப்படி என்று சற்று நேரம் வாதப்பிரதிவாதம் நடைபெற்றது. சளசளவென்று பேச்சாக இருந்தது. விக்ரம் அனுமதித்து விட்டு அமர்ந்து விட்டான்.

''விக்ரம் சார். இதுக்கு பதில் சொல்லுங்க. குளோனிங் அச்சு அசலா அப்படியே இருக்குமா?''

''99 சதவீதம் அப்படியேதான் இருக்கும்ங்கறாங்க'' என்றான்.

டோனரோட செல்லில் இருந்து வரும்போது அவரோட குழந்தை ஆயிடாதா?'' என்றான் விக்டர்.

''அதுபத்தியும் பெரிய விவாதங்கள் நடந்து இருக்கு. கடைசியா குளோனிங்கறது ஒரு காலந் தப்பிப் பிறந்த ட்வின்பிரதர்ன்னு ஒரு முடிவுக்கு வந்திருக்காங்க!'' என்றான்.

''ஓ! காலங்கடந்து பிறந்த இரட்டைப் பிறவியா?''

''ஆமா வயசுப்படி ரொம்ப இளமைத் தோற்றத்தோட இருப்பாங்க.''

மேலும் சற்று நேரம் விவாதம் நடந்தது. நடுவில் விக்ரமாதித்யன் ஒரு சுவாரசியமான விஷயம் சொன்னான்.

''ஒரு சுவாரசியமான விஷயம் சொல்றேன். ஒரு பையன் தன்னோட பதினெட்டு வயதில் பரீட்சையில பாஸ் பண்ணின சந்தோஷத்தைக் கொண்டாட ஒரு ''பூல் பார்ட்டி''க்கு அதாவது நீச்சல் குளத்துல நண்பர்களோட கொண்டாடறது மாதிரியான பார்ட்டிக்கு போறான்.

ஆனா ஆழமான இடம் எது ஆழம் இல்லாத இடம் எதுன்னு தெரியாம ஆழமில்லாத இடத்துல குதிச்சர்றான். பலமான அடி. இருபத்தோரு வயசுல அவனுக்கு ஒரு பெரிய அறக்கட்டளையிலிருந்து வாரிசுரிமை கிடைக்குது. ஆனா நாளாக நாளாக அவனுக்கு உடம்பெல்லாம் வலி.

செயல்பட முடியாத நிலை. நாப்பது வயசு வரை கல்யாணமாகாமே சாகிறான். அதுக்கு முன்னாலேதான் டாலி உருவாக்கறாங்க. தன்னோட உயிலையே மாத்தி எழுதறான். தன்னோட டி.என்.ஏ.வை ஸ்டோர் பண்ணி வைக்கச் செய்யறான். இந்த ஆராய்ச்சிக்காக ஒரு பெரிய தொகையை ஒதுக்கறான், எதிர்காலத்துல தன்னோட குளோன் குழந்தையைப் பெத்துக்கப் போற அந்தத் தாய்க்கு ஒரு மில்லியன் டாலர் ஒதுக்கியிருக்கான். ஒரு சாதாரண மனிதனுக்கான வாழ்க்கையை இயற்கை தன்கிட்டேயிருந்து பறிச்சுகிட்ட வருத்தத்துலயேதான் இறந்திருக்கான்.''



''சரிப்பா. விஷயத்துக்கு வா!'' என்றார் சக்கரவர்த்தி.

''வந்தர்றேன் சார்'' என்றான் பணிவுடன். தொடர்ந்தான்.

''இப்ப இந்த ரிசர்ச்ல ஓரளவு வெற்றியடைஞ்ச ஒரு விஞ்ஞானி, ஒரு பெரிய பணக்காரத் தொழில் நிறுவனம் இரண்டு பேரும் கூட்டுப் போட்டு இந்தத் தீவுல இந்த வேலை செய்றாங்க. இதுல ரகுவீர் கிட்டே மட்டும் ஒரு மில்லியன் டாலர் வாங்கியிருக்காங்க.''

''அவ்வளவு பணமா?''

''ஆமா சார். நூத்துல ஒரு முயற்சிதான் ஜெயிக்குமாம். ஆனான இத்தனை கஷ்டத்திலயும் ஜெயிச்சிருக்காங்க. எப்படி ஓரளவுக்கு வளர்ந்த நிலையில உருவாக்க இவங்களுக்கு தெரிஞ்சிருக்கு.''

''அதெப்படி...?''

''அதெல்லாம் சொல்வாங்களா... சொல்ல மாட்டேங்கறாங்க. மனித உடம்புலே செல்கள் தினமும் அழிதலும் புதுப்பித்தலும் நடந்துகிட்டேதான் இருக்கு. அதுல இந்தக் குளோனிங்ல மட்டும் அதை அதிகப்படுத்தறதுமான ஏதோ ஒரு டெக்னிக் வச்சிருக்காங்க.''

''ஓ'' என்றார் சக்கரவர்த்தி.

''ரகுவீருக்கு பதிலா சண்டைக் காட்சிகள்ல மட்டும் நடிச்சுக் குடுத்துட்டுப் போற அளவுக்கு மட்டும்தான் அந்தக் குளோனுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டு இருக்கு'' என்றான் விக்ரமாதித்யன்.

''ஆனாலும் ரொம்ப ரீலா இருக்கு'' என்றான் விக்டர்.

''ரீல் இல்லே விக்டர். நானே அந்தக் காலனியிலே போய்ப் பார்த்தேன். ஒவ்வொரு குளோனையும் நாம நம்பர் டுன்னு வேணா வச்சுக்கலாம். ஒவ்வொரு இமேஜுக்கும் இன்னொரு இமேஜ் இருக்கறதே தெரியாத அளவுக்கு வசதிகளும் இருக்கு. ரகசியங்களும் இருக்கு. ஓநாய்களோட வளர்ந்த ஒரு பையனை மீட்ட கதை கேட்டிருக்கியா? அதுமாதிரித்தான் இதுவும்'' 

''சரி. இப்ப என்ன செய்யலாம்'' என்றார்கள்.

அப்போதுதான் அப்துல் அந்த யோசனையைச் சொன்னான் "விக்ரம். இந்த ரகுவீர் இப்பக் காம வெறி பிடிச்ச மிருகமா மாறிட்டான். இன்னைக்கு அகிலா, ரமான்னு அலையறான். நாளைக்கு எந்தப் பொண்ணு கிடைச்சாலும் விட மாட்டான். கொஞ்ச நாளைக்கு அந்தக் குளோனுக்குப் பதிலா இவனை அடைப்போம். அவனை வெளியே விடுவோம். ஆஃப்டரால் இவனோட குளோன்தானே அவன். இத்தனை நாள் அவனையும் விலங்கு மாதிரி அடைச்சு வச்சிருக்காங்க. கொடுமைப் படுத்தியிருக்காங்க இல்லே" என்றான்.

சக்கரவர்த்தியிடம் கேட்டார்கள். அவர் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு சொன்னார். கொஞ்ச நாளைக்கு வேண்ணா செய்யலாம். ஆனா இந்த மேட்டர் ரொம்பப் பெரிய விஷயம். இதை ஒரு வியாபாரமா ஆரம்பிச்சுட்டாங்கன்னா என்ன செய்யறது? உலகத்தோட நிலைமை என்ன ஆகறது?"

எல்லாரும் சற்று நேரம் மௌனத்தில் ஆழ்ந்தார்கள். பிறகு அவரே சொன்னார்.

"இப்போதைக்கு நம்மகிட்டே இருக்கற ஆதாரங்களை யெல்லாம் காட்டி ருக்மணியம்மா பேர்லயும் குழந்தைங்க பேர்லயும் சொத்துக்களை எழுதி வாங்கிக்குங்க" என்றார்.

"சார். இது பிளாக் மெயிலா ஆயிடாதா?" என்றான் விக்ரம்.

"மனிதர்களைத்தான் பிளாக்மெயில் செய்யக்கூடாது. இவன் மிருகம். இவன்கிட்டேயிருந்து நிறைய பேரைக் காப் பாத்த வேண்டியிருக்கு."

செய்தார்கள்.

* * *

ரகுவீரை அடைத்து வைத்திருந்த பங்களாவில் அப்துலும் விக்டரும் மாறி மாறி காவலுக்கு இருந்தார்கள். அந்தக் குழுவைத் தவிர வேறு யாருக்கும் விஷயம் தெரியக் கூடாது என்று உறுதி எடுத்துக் கொண்டார்கள்.



ருக்மணியை அடிப்பது. அகிலாவிடம் தவறாக நடக்க முயற்சிப்பது. ருக்மணியைக் கொலை செய்ய முயற்சிப்பது எல்லாவற்றையும் திரையில் பார்த்த ரகுவீர் அதிர்ந்து போனான்.

அபிநயாவை முறைத்துப் பார்த்தான். "ஏம்மா, உன்னை நம்பி உள்ளே விட்டதுக்குப் பரிசா இது?" என்றான்.

"சார், என்னைக் குறை சொல்லாதீங்க. உங்களோட தனிப்பட்ட வாழ்க்கையோட சுவாரசியங்களை எடுக்கறதுக்குத் தான் நான் முயற்சித்தேன். அப்பக் கூட உங்களோட பர்மிஷனோடதான் எல்லாத்தையும் வெளியிடணும்னுதான் நான் நினைச்சேன்... ஆனா நீங்க உங்களோட மோசமான பக்கத்தைக் காட்டிட்டீங்க. அது உங்க தப்பு" என்றாள்.

பி.ஏ. ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தார். உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

"உன்னைப் பின்னியெடுத்தாலும் கேக்கறதுக்கு எவன்டி இருக்கான். அப்படியே வந்தாலும் என்னோட பணத்துக்கும் செல்வாக்குக்கும் முன்னாடி நிக்க முடியுமாடி?" என்று கர்ஜித்துக் கொண்டே ருக்மணியை அவன் எட்டி எட்டி உதைக்கிற காட்சி அவர் கண்முன் தோன்றியது.

ஒருமுறை ருக்மணியிடம் சொன்னார் "அம்மா இதெல் லாம் பார்க்கப் பார்க்க எனக்கு ரத்தம் கொதிக்குது. நா வேலையை விட்டுடறேம்மா" என்று.

"வேண்டாம் பி.ஏ. சார். அவரைச் சுத்தி இருக்கறவங்க எல்லாரும் பணத்துக்காக இருக்காங்க. நீங்க ஒருத்தர்தான் எனக்கு ஆதரவு. நான் உங்களை என் சொந்தச் சகோதரனா நினைக்கறேன். இது புருஷன் பொண்டாட்டி பிரச்சினை. இதைப் பத்திக் கவலைப்படாதீங்க" என்றார் விரக்தியான புன்னகையுடன்.

"அப்ப இதுக்கு விடிவே இல்லையா?" என்றார்.

"திக்கற்றவர்க்கு தெய்வமே துணை" என்றார் விரக்தி யாகப் புன்னகைத்து விட்டு நகர்ந்தார்.

இப்போது ஒரு பட்டாளமே நின்று கேள்வி கேட்பதைப் பார்த்து அவருக்கு உள்ளூர மகிழ்ச்சி. தன்னுடைய மகன் கதறிக் கொண்டு நின்ற காட்சி இப்போது கூட அவர மனத்தில் தோன்றிய போது அவருக்கு அடி வயிற்றிலிருந்து கோபம் கிளம்பியது. பரவாயில்லை தெய்வம் என்று ஒன்று என்றிருக்கத்தான் செய்கிறது. போதும் என்று எண்ணிக் கொண்டார். அதுமட்டுமல்ல இந்த இளைஞர்களின் முடிவும் நியாயமானதுதான் என்று எண்ணிக் கொண்டார்.

''பாருய்யா உன்னோட சொத்து எல்லாத்தையும் உன்னோட குழந்தைகள் பேர்லயும் உன்னோட வைஃப் பேர்லயும் தான் எழுதி வாங்குது'' என்றான் விக்ரமாதித்யன்.

தயாராய் கொண்டு வந்திருந்த பத்திரங்களில் கையெழுத்து வாங்கினார்கள். போட்டுக் கொடுத்தான். அப்போது கோபமாய் சொன்னான்.

''டேய். விக்ரம் உன்னைச் சும்மா விடமாட்டேன்டா!''

விக்ரம் அலட்டிக் கொள்ளாமல் சொன்னான் ''பாருய்யா. எனக்கு இழக்கறதுக்கு ஒன்னுமில்லே. ஆனா உன்னாலே இந்தப் பணம், புகழ், பலவீனங்கள் இல்லாமே ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. அதுல கை வச்சுருவேன் பாரு'' என்றான்.

அன்றைக்குப் போலவே ஒரு குறிப்பிட்ட நரம்பில் அடிக்க ரகுவீர் மயக்கமானான்.

பி.ஏ.விடம் எவ்வளவு தூரம் கெஞ்சியும் அவர் விக்டரையும் அப்துலையும் தீவுக்கு அழைத்துச் செல்ல மறுத்து விட்டார். அன்றைக்குப் போலவே விக்ரமும் அபிநயாவும் அந்த போட்டில் பயணம் செய்தார்கள். ஆனால் ஒரே வித்தியாசம். ஒளிந்து கொள்ளும் அவசியம் இல்லாமல் வெளிப்படையாகப் பயணம் செய்தார்கள்.

''அபி. இந்தப் பக்கம் வாயேன். இன்னும் ரெண்டு நாள்ல பௌர்ணமி வருது நிலா வெளிச்சத்துல இந்தக் கடல் எவ்வளவு அழகா இருக்கு'' என்று அழைத்துப் போனான்.



''அதுசரி. ரகுவீர் முழிச்சுக்கப் போறாரு'' என்றாள் அபிநயா.

''அதெல்லாம் முன்னெச்சரிக்கையாக் கேபினுக்குள்ளே கட்டிப் போட்டிருக்கு.'' என்றான்.

''விக்ரம் சார். உங்க மேலே எனக்குக் கோபம்'' என்றாள் அபிநயா.

''ஏன்'' என்றான் கேள்விக்குறியாக.

''பின்னே. அந்தக் கொலைகாரப் பயகிட்டே போய் இந்த நிமிஷம் நான் செத்தாலும் கூட எனக்கு இழப்பதற்கு எதுவும் இல்லேன்னு சொல்றீங்களே. ஒரு நிமிஷம் எனக்கு திக்குன்னு ஆயிடுச்சு.''

அந்த நிமிடம் அவன் திரும்பிப் பார்த்தான். நிலவொளியில் அவள் கண்கள் பேசின. அவை பேசிய விதம் பார்த்து அவன் திகைத்து நின்றான்.

''உன் விழிகளில் எத்தனை மொழிகள்!

என்னைப் பன்மொழிப் புலவனாக்கினாய்!''

என்ற கவிதைதான் நினைவுக்கு வந்தது.

''அபி'' என்றான். குரல் குழைந்தது.

''பின்னே? இழக்கறதுக்கு எதுவும் இல்லையா? என்னை இழந்துடுவீங்களா?'' என்றாள் ஆவேசமான குரலில். அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

அவன் பேச்சற்றுப் போய் நின்றான்.

அவள் சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் கொஞ்சும் குரலில் பேசினாள். ''எனக்குக் கடன் பட்டிருக்கீங்க விக்ரம். இதே மாதிரிக் கடல்ல வச்சு... உங்க மனசை திறந்து காட்டறேன்னு எனக்கு வாக்குறுதி குடுத்திருக்கீங்க. இன்னும் அதை நிறைவேத்தலை'' என்றாள்.

அவன் கிறக்கக் குரலில் சிரித்தான். ''இப்பவும் அ நிறைவேத்தறது கஷ்டம் அபி!'' என்றான்.

''ஏனாம்?''

''என் மனசு எங்கிட்டே இல்லை,'' என்றான்.

''எங்க இருக்கு?'' என்றாள்.

அவன் வார்த்தையால் அல்லாமல் செய்கையால் அதை விளக்கினான்...

இந்து நிமிடங்கள் போயிருக்கும். அவன் சிரித்துக் கொண்டே விலகினான். அவளும் விலகினாள். சற்றே வெட்கம் கலந்த பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள்.

''ஐ ம் சாரி'' என்றான்.

''எதுக்கு? நோ நீட். மிஸ்டர் விக்ரம்'' என்றாள். பிறகு கலகலவெனச் சிரித்தாள்.

''அபி. நான் எதிர்பார்க்கவேயில்லை'' என்றான் மகிழ்ச்சியாகச் சிரித்தான்.

''எனக்குப் புரிஞ்சும் புரியாமலும் இருந்துச்சு. ஆனா அப்பப்ப உங்க பார்வை காட்டிக் குடுத்துருச்சு'' என்றாள்.

''ஐயோ அதையேன் கேட்கறே. என் கண்ணும் மனசுமே எனக்குத் துரோகம் செய்ய ஆரம்பிச்சுடுச்சு. தெரியுமா? என்றான்.

அவள் சிரித்தாள். ''நீங்க ரொம்ப அப்நார்மலான ஆளு. அழுத்தம்னு நான் நினைச்சுகிட்டிருக்கேன்.. நீங்க கூட உளறுவீங்களா என்ன?'' என்றாள்.

''பெரிய பெரிய பேரரசர்கள் எல்லாம் உளறியிருக்கறப்ப நான் எம்மாத்திரம் அபி'' என்றான்.

மெல்ல அருகில் நெருங்கினான். கைக்குள் அடைத்தான். சற்றுக் கொஞ்சி மகிழ்ந்தான். சட்டென்று விலகிக் கொண்டான்.

''வேண்டாம் அபி. அப்புறம் என்னை என்னாலயே கட்டுப் படுத்த முடியாது. பெட்டர் கல்யாணம் வரைக்கும் தொடாம இருக்கறதுதான்'' என்றான்.

அவள் முகமும் சிவந்தது. ஆனால் அதற்காக நாணிக் கோணிக் கொள்ளவில்லை. மெல்லத் தலையைத் தடவிக் கொண்டபடி வேறுபக்கம் பார்த்தபடி நின்றாள்.



இதுவரையிலும் அருகில் போகலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்த பி.ஏ. இப்போது அருகில் போனார்.

''முத முதலா நானே வாழ்த்துச் சொல்லிடறேன் தம்பி. வாழ்த்துக்கள்!''

என்று சிரித்தார்.

மறுபடியும். இரண்டு பேரும் வெட்கத்துடன் சிரித்துக் கொண்டார்கள்.

''சார்'' என்று அவன் ஏதோ சொல்ல ஆரம்பிக்க... அவர்

''இருக்கறதுதான் தம்பி. அதெல்லாம் நான் கண்டுக்க மாட்டேன். இப்பக் கொஞ்சம் டைம் ஸ்பேர் பண்ணினீங்கன்னா நாம போட்டிருக்கிற திட்டத்தை எப்படி நிறைவேத்தறதுங்கறதைப் பத்திக் கொஞ்சம் பிளான் செஞ்சர்லாம்'' என்றார். குறும்பாகச் சிரித்தார். ஆனால் அவர்கள் இருவருமே சடடென்று முகபாவத்தைத் தீவிரமாக்கிக் கொண்டதைக் கண்டு ஆச்சரியமானார்.



## 24

அபிநயாவுக்குத் தூக்கமே வரவில்லை... ஒரு பக்கம் ஒரு பெரிய பிரச்சினையில் இறங்கியிருக்கிற கவலை ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம் நெஞ்சு கொள்ளாத மகிழ்ச்சி. அவளுக்குள் ஒரு சந்தேகம் இருந்து கொண்டே இருந்தது. பலமுறை கவனித்திருக்கிறாள். திடீரென்று திரும்பிப் பார்க்கும் போது அவன் வேகமாகப் பார்வையைத் திருப்பிக் கொள்வான்.

தன்னுடைய நடை உடை பாவனைகளை விக்ரம் ரசிப்பது நன்றாகவே அவளுக்குப் புரிந்தது. தனக்கும் ஏதாவதொரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு அவனைப் போய் பார்ப்பது பிடித்திருந்தது.

அன்றைக்கு ஒரு நாள் இரவு பத்து மணிக்குப் போய் அவனிடம் சண்டை போட்டதை அவன் சுவாரசியமாகக் கவனிப்பதைப் பார்த்தபோதுதான் அவளுக்கு லேசாக விஷயம் புரிந்தது.

உடனே இதயத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அன்றைக் கொரு நாள்!

அவன் வீட்டுக்கு ஏதோ புத்தகம் எடுத்து வர அவனே அனுப்பிய போதுதான் கவனித்தாள். அவர்கள் ஊரில் எடுத்த போட்டோக்களில் ஒரு செட் அவனிடம் இருந்ததை.

அவனிடத்திலே ஒரு செட் இருந்தது. ஓ! இது அவள் அக்காவும் சுரபியும் எடுத்த போட்டோக்கள் போலும். அவள் தெரியாதவள் போல் அங்கேயே வைத்து விட்டாள்.

அடுத்த நாள் அவனே அந்த போட்டோக்களைக் கொண்டு வந்து கொடுத்தான்.

''அபி, அக்கா அனுப்பி ஒரு வாரமாச்சு. இன்னைக்குத் தான் எனக்கு ஞாபகம் வந்துச்சு'' என்றான்.

அவள் ஒன்றும் தெரியாதவள் போல் வாங்கிக் கொண்டாள்.

இரண்டு பேரும் ஒவ்வொரு போட்டோவாக எடுத்துப் பார்த்தார்கள். ஒரு போட்டோவில் அவன் மாட்டுக்கார வேலனைப் போல் உருமால் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

''ஆஹா இந்த மாட்டுக்கார வேலனைப் பார்த்தீங்களா?'' என்று சீண்டினாள்.

''என்னை வேண்ணா வேலன்னு சொல்லு. மாட்டுக்காரன்னு சொல்லு. ஆனா என் சோமுவை மாடுன்னு சொல்லாதே.'' என்றான் கோபமாக.

''ஓ.கே. ஓ.கே. சோமு சார்தான் உங்களை விட அழகா இருக்காரு'' என்றாள்.

''எனக்கு வரப் போறவளுக்கு நான் அழகா இருந்தா போதும்'' என்றான் அதே மிடுக்கு குறையாமல்.



''ஓஹோ கல்யாணம் பண்ணிக்கற ஆசை வந்தாச்சா? கல்யாணத்துக்கு எங்களையெல்லாம் கூப்பிடுவீங்களா?'' என்றாள்.

''நீயில்லாம என் கல்யாணம் நடக்குமா''

அவள் ஒரு நிமிடம் திகைத்தாள்.

''அப்படீன்னா?''

''அப்படீன்னா பருப்பில்லாத கல்யாணமா? நீதான் சீஃப் கெஸ்ட்டே'' என்றான். அவள் மனத்தில் ஏமாற்றமாக உணர்ந்தாள்.

தங்களுக்குள் ஏதோ கண்ணாமூச்சி நடப்பது இருவருக்குமே தெரிந்தது. ஆனால் யார் முதலில் வெளியிடுவது என்ற தயக்கமும் இருந்தது.

அபிநயா வெளிப்படையாகப் பேசத் தயாராய் இருந்தாள். ஆனால் உறுதிப்படுத்திக் கொள்ளவும் நினைத்தாள்.

''அபி, நான் கொஞ்சம் வேலையா இருக்கேன். நீ போய் அந்த ஃபைலைக் கொஞ்சம் எடுத்துட்டு வர்றியா என்று அனுப்பி வைப்பான். இந்த மாதிரி ஒரு வாய்ப்புக்காகக் காத்திருந்தாள். ஒரு நாள் அவனே போனான். பெரும்பாலும் பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்து வைத்திருப்பான். சாவியை வாங்கிக் கொண்டு போய் தன் சம்பந்தமான விஷயங்கள் ஏதாவது இருக்கிறதா என்று தேடினாள்.

இருந்தது. அவர்கள் கிராமத்தில் எடுத்த போட்டோக் களின் பிரதிகள் எடுத்து வைத்திருந்தான்.

தாவணி அணிந்து கொண்டு அவள் நிற்கிற போட்டோ வின் பின்னே எழுதி வைத்திருந்தான்.

'தேவனிடம் தேவி கோபித்துக்
கொண்டாளாம்.
தன்னைக் காட்டிலும் அழகாய்
உன்னைப் படைத்ததனால்

என்று.

அவன் முகம் சிவந்தது. இதை வைத்துக் கொண்டு கேட்டால் இதிலென்ன இருக்கு? நீ அழகா இருக்கே அதை எழுதினேன் என்பான். என்று சிரித்துக் கொண்டாள்.

இன்னொரு படத்தில் எழுதி வைத்திருந்தான்.

'உன் இதயச் சிறையில்
ஆயுள் கைதியாக்க
நீ முடிவெடுக்கிற அந்தக் கணத்தில்
என் ஆன்மா விடுதலையாகும்.'

என்று கொஞ்சம் உருகித்தான் போனாள். உறுதியாகப் புரிந்து போனது. அதனால் நேரம் பார்த்துக் கேட்க வேண்டுமென நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் ரகுவீரிடம் எனக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லையென அவன் சொன்னவுடனே அவளுக்கு அதிர்ச்சியாகிப் போனது.

தன்னையறியாமல் வெடித்து விட்டாள். இப்போது நினைத்துக் கொள்கையில் ஆச்சரியமாகவும் இருந்தது. வெட்கமாகவும் இருந்தது. தன்னுடைய ஆயுளுக்கும் ஒரு ஆண்மகன் முன்னால் தான் வெட்கப்படுவோம் என்று அவள் நினைத்தது கூட இல்லை.

அதே நேரம் அவள் போன் ஒலித்தது. எடுத்தாள்.

''ஹலோ!'' என்றாள்.

''அபி. இன்னும் தூங்கலையா'' என்றான்.

''தூக்கம் வரலை'' என்றாள்.

''ஏன்?''

''என் வாழ்க்கையில ரெண்டு பெரிய விஷயம் நடந்திருக்கு. முத முதலா நான் எடுத்துகிட்ட கேஸ் பூதாகரமாப் போயிட்டிருக்கேங்கற கவலை ஒரு புறம்.''

அவன் குறுக்கிட்டான் ''இன்னொரு பக்கம் ஒரு கேஸ் உன்கிட்டே மாட்டியிருக்கேன்னு சந்தோஷமா?'' என்றான்.



''ஆமா!'' என்றாள். கிளுகிளுவெனச் சிரித்தாள்.

''அபி'' என்றான் குழைவான குரலில்.

''ம்'' என்றாள்.

''அபி என்கிட்டே எத்தனையோ பேர் எத்தனையோ சூழ்நிலைகளில் கோபிச்சுகிட்டது உண்டு. ஆனா இன்னைக்கு நீ கோபிச்சுகிட்டியே அதுதான் என் வாழ்க்கையிலயே நான் அனுபவித்து ரசித்த இனிமையான, சுகமான கோபம். தெரியுமா?'' என்றான் உணர்ச்சி நிறைந்த குரலில்.

''பின்னே? இழக்கறதுக்கு ஒன்னுமே இல்லேங்கறீங்களே'' என்றாள். இப்போதும் ஆதங்கம் நிறைந்த குரலில்.

''தப்புதான். அதுக்கு என்ன தண்டனை வேண்ணாலும் குடு ஏத்துக்கறேன்''. என்றான்.

''குடுக்கணும். ஆயுள் தண்டனையாக் குடுக்கணும். அதான் ஆயுள் தண்டனை வாங்கிக்கறேன். சிறைக் கைதியா இருக்கேன்னு எழுதி வச்சிருக்கீங்களே''

''ஹேய் என் வீட்லயே இன்வெஸ்டிகேஷனா?'' என்று சிரித்தான்.

''அது யாரோட கவிதை'' என்றாள்.

''அது என்னோட சொந்தக் கவிதை'' என்றான்.

''ரியலி? இந்த வொள்ளெல்லாம் வேற செய்வீங்களா?'' என்றாள்..

அவன் கிறக்கமாகச் சிரித்தான்.

''சும்மா ஒரு பரீட்சை நடத்திப் பாரேன். எனக்கு என்னென்ன தெரியும்னு ஒரு டெமான்ஸ்ட்ரேஷன் நடத்திக் காட்டறேன்'' என்றான்.

''ஆசை, தோசை, அப்பளம், வடை!'' என்றாள்.

இருவரும் சிரித்தார்கள்.

''விக்ரம்'' என்றாள் குழைந்த குரலில்.

''எங்கே அதே மாடுலேஷனில் இன்னொரு தடவை கூப்பிடு'' என்றான்.

''ஐயோ விஷயத்தை டைவர்ட் பண்ணாதீங்க. உங்க வீட்ல ஒத்துப்பாங்களா?'' என்றாள்.

''அதெல்லாம் என்னோட பொறுப்பிலே விடு. நான் பாத்துக்கறேன். வேற பேசு'' என்றான்.

''வேற என்ன பேச.''

''என்னத்துனால என்னை உனக்குப் பிடிச்சதுன்னு சொல்வேன்.''

''ஐயோ. சப் எடிட்டர் சார் எனக்கே அது புரியாமத்தான் நான் முழிச்சுக்கிட்டிருக்கேன்'' என்றாள்.

''ஹேய்! நான் ரொம்ப ஆசையாக் கேட்கறேன். காலை வார்றே!'' என்றான்.

''உங்க நடை பிடிக்கும்'' என்றாள்...

''இப்ப என்ன உன் ஜடை பிடிக்கும்னு சொல்லணுமா'' என்றான் பொய்க் கோபத்துடன்.

அவள் அதற்கும் சிரித்தாள்.

அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல் மறுபடியும் சொன்னான்.

''அபி நான் இப்ப எதுக்குக் கூப்பிட்டேன் தெரியுமா?'' என்று.

''எனக்கெப்படித் தெரியும்?''

''இதைச் சொல்லியே ஆகணும். அபி. எந்த இடத்துல வச்சுக் கேட்டாலும் நான் ரொம்ப ரசிச்சுக் கேட்கற பாட்டு ஒண்ணு இருக்கு. இன்ஃப்பாக்ட் ரொம்ப பரவசப் படுத்தற பாட்டு.''

''பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால்
புன்னகை என்றே பேராகும்''



முன்னெல்லாம் முகம் தெரியாத ஒரு பொண்ணு என் கற்பனையில வருவாப்ல. ஆனா எப்ப உன்னைப் பார்த்தேனோ அப்ப இருந்தே உன் முகம்தான் ஞாபகம் வருது. மனசுல படமா வர்றது உன் முகம்தான்.

''..................................''

''அபி. என்ன பேச்சைக் காணோம்.''

''அதான் நீங்க பேசறீங்களே!''

''அப்புறம். இப்ப என் நண்பர் ஒருத்தரோட கவிதை படிச்சேன். அதான் உன்னை உடனே கூப்பிட்டேன்'' என்றான். தொடர்ந்து கவிதை சொன்னான்.

அறிமுகப் படுத்த வரிகளைத் தேடுகிறேன்.

வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவள்
அல்லவா நீ?
நீ சிரித்த போது
நிலவுக்கு சிறகு முளைத்தது.
நீ நடந்த போது
வானம் வெட்கப்பட பழகியது.

ஒரு நிமிடம் கனமான அமைதி நிலவியது.

''யாரோட கவிதை?'' என்றாள்.

விஜய தென்னவன்னு என்னோட நண்பர். என்ன அழகான கற்பனை?

''நிலவுக்கு சிறகு முளைச்சு அப்படி நடந்து போனா எப்படி இருக்கும்.''

''எப்படி இருக்கும்? நீ ரெண்டு கையையும் ஸ்டைலா வீசிகிட்டு நடந்து போவியே இது மாதிரி இருக்கும்'' என்றான்.

''விக்ரம். இதென்ன முத நாளே இத்தனை பேசறீங்க?'' என்றாள்.

''ஹேய்! என்ன இத்தனைங்கறே? நான் எதுவும் சொல்ல ஆரம்பிக்கவே இல்லையே'' என்றான்.

''சரி! சரி'' என்றான்.

விக்ரம் லேசான பெருமூச்சுடன் ''ஓ.கே. வைக்கட்டுமா?'' என்றான்.

மனமின்றி வைத்தார்கள். வைத்தவுடனே விக்ரம் மனதில் ஒரு பெரிய கவலை பிறந்தது.

* * *

''அப்பா. இது ஒரு வகையில் ஆள் மாறாட்டம்ப்பா!'' என்றார் சக்கரவர்த்தி கவலையுடன்.

''ஒரு வகையில இல்லை சார், எல்லா வகையிலயும்தான் சார். ஆனா ரகுவீர்ன்னு ஒரு நம்பர் டூ இருக்கிறது எத்தனை பேருக்குத் தெரியும்?

இது வேற ஆள்ன்னு நாம எப்படி நிரூபிக்கறது. யார் நம்புவாங்க? அதனாலதான் தைரியமா இதைச் செஞ்சோம்.''

''..............................''

''சார். ரகுவீர் ரொம்ப வெறி பிடிச்ச மிருகம் மாதிரி ஆயிட்டான். அதனாலே அந்த ஆளுக்கும் கொஞ்சம் பயம் வரணும்... அதனாலயும் இப்படி செய்ய வேண்டி வந்தது'' என்றான் விளக்கம் போல்.

''அது சரி. இந்த நம்பர் டூவை என்ன செய்யறது? எப்படிப் பராமரிக்கறது? இவன் மட்டும் எந்த நேரம் எப்படி நடந்துக்குவான்னு உங்களாலே சொல்ல முடியுமா?'' என்றார்.

''சார். நம்பர் டூ வைப் பத்தின எல்லா விவரங்களையும் சேகரிச்சுட்டுதான் வந்திருக்கோம்'' கொயட் ஹார்மலெஸ். இப்போதைக்கு நாம எதைச் சொல்றமோ அதைச் செய் வான். பெரிய அளவு சுய சிந்தனை எல்லாம் இல்லே. ஆனா சொல்லிக் கொடுத்தா புரிஞ்சுக்குவான். நாமதான் இப்ப எதுவும் சொல்லிக் குடுக்கப் போறதில்லையே! இந்த ரகுவீரை என்ன செய்யப் போறோம்னு முடிவு செஞ்சதுக்



கப்புறம்தான் அதைப் பத்தி நாம யோசிக்கப் போறோம். அது வரைக்கும் அந்த ஆள் தீவுலயே இருக்கட்டும்.''

''இத பாருப்பா! அந்த நம்பர் டூவுக்கு ஒரு பேரு வைங்கப்பா. ஒரே குழப்பமா இருக்கு'' என்றார்.

''முகிலன். எப்படி சார். இருக்கு?''

''குட் வெரிகுட்'' கொஞ்சம் டைம் கேப் கிடைச்சா ரகுவீரைக் கொண்டு வந்தர்லாம் சார்.''

சக்கரவர்த்தி ஒத்துக் கொண்டார். ''ரகுவீர் முழிச்சா பிராப்ளம் ஆகாதா?''

''சார் நான்தான்யா ஒரிஜினல்ன்னு கத்திகிட்டிருக்கானாம். ஆனா யாருக்கும் கேட்காது. ஏன்னா அங்கே ஒவ்வொரு பிரைவேட் ஏரியாவும் சவுண்ட் ப்ரூஃப்'' என்று சிரித்தான்.

''சரிப்பா. அப்புறம் வேற விஷயம்.''

ஒரு நிமிடம் தயங்கிய விக்ரமாதித்யன் பிறகு சொன் னான். மெல்ல மெல்ல தனக்கும் அபிநயாவுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற காதலைச் சொன்னான்.

சக்ரவர்த்தியினுடைய கண்கள் ஒரு கணம் சுருங்கின. ஒரு கணம்தான் சுருங்கின.

''இப்ப என்ன செய்யணுங்கறே?'' என்றார்.

''சார். நீங்க பெண்ணைப் பெத்தவர். முதல் உரிமை அபி மேலே உங்களுக்குத்தான். நான் ஏற்கனவே அபியோட கல்யாணம் பத்தி உங்ககிட்டே பேசினேன். அப்ப அபி யோட குணத்துக்கு புரிஞ்சுக்கற மாப்பிள்ளை வேணும்னு கவலைப் பட்டீங்க. அப்பவே நான் என் மனசைச் சொல்ல லாம்னு நினைச்சேன். ஆனா அதுல அபிக்கு சம்மதமான்னு தெரிய வேண்டி இருந்தது. அதனால அப்பப் பேசலை. இப்ப விஷயம் உறுதியாத் தெரிஞ்சுது. அதனாலேதான் தைரியமா பேசறேன்'' என்றான்.

''அப்ப எதுக்குப்பா எங்க சம்மதம்?''

''அப்படியில்லை சார். உங்க சம்மதம் இல்லாம எதுவும் நடக்காது'' என்றான்.

''சரி. நான் ஒத்துக்கவேன்னா?'' என்றார்.

''ஒத்துக்க முடியாததுக்கு சரியான காரணம் குடுங்க. அது மட்டுமில்ல. ஒரு பத்திரிகையாளனா நாலையும் பார்த்து அனுபவப் பட்டவங்க. என்கிட்டே உண்மைத் தன்மை இல்லேன்னா என்னை வச்சுகிட்டிருக்க மாட்டீங்க. ஆனா இப்ப உங்ககிட்டே ரிக்வெஸ்ட் பண்றதெல்லாம். உங்க பொண்ணை சந்தோஷமா வச்சுக்கற அளவுக்கு எனக்குத் தெம்பு இருக்குன்னு நம்பிக்கை வைங்க அப்படீங்கறது தான்'' என்றான்.

அவர் இருக்கையை விட்டு எழுந்தார்.

''கொஞ்சம் டைம் குடுப்பா. இண்டர் காஸ்ட் மேரேஜ்ங்கறதுனாலே அவ அம்மாவை கன்வின்ஸ் பண்ணனும்?'' என்றார்.

''அப்ப உங்களுக்கு?''

அவர் சிரித்தார் ''இது நடக்கும்னு கொஞ்ச நாளாவே எதிர் பார்த்தேன்ப்பா!'' என்றார்.

அவன் முகம் சிவந்தது.

''சரி. இனிமேலும் ரகுவீர் மேட்டர் முடியற வரைக்கும் நீங்க சேர்ந்துதான் வொர்க் பண்ண வேண்டியிருக்கும்'' என்று இழுத்தார்.

''புரிஞ்சது. சார் அதைப் பத்தியெல்லாம் நீங்க கவலைப் பட வேண்டியது இல்லைங்க சார். ஐ நோ மை லிமிட் சார்.'' என்றான். ஆனால் முகம் சிவந்து கிடந்தது.

எத்தனையோ பிரச்சினைகளில் எதிர்த்து வாதாடிய இளைஞன் இந்த விஷயம் என்று வரும்போது லேசான வெட்கத்துடன் தன் முன் நிற்பதை ஒரு ரசனையுடன் பார்த்துக் கொண்டார் என்றாலும் மனைவியிடம் பேசினார். அவரோ கேட்டவுடனே பதறிப் போனார்.





25

''தம்பி! நல்லா யோசிச்சுக்க. அவங்க ரொம்ப வசதியானவங்க மாதிரித் தெரியுது'' என்றார் அப்பா.

''அது பாத்துக்கலாம்ப்பா.! என்றான் விக்ரமாதித்யன்.

''அது மட்டுமில்லடா? ரெண்டு பேருமே ஸ்ட்ராங் பர்சனாலிட்டீஸ் மாதிரித் தெரியுது'' என்றார் பிரகாஷ்-டாக்டர் சகோதரன்.

நேற்று சக்கரவர்த்தியிடம் பேசி விட்டுப் புறப்படும் போது அவர் சொன்னார். ''சரிப்பா! இந்த ரகுவீரோட பிரச்சினையைக் கிடப்பில போடுங்க. அப்புறம் என்ன செய்யறதுன்னு பார்க்கலாம். நான் ஒரு இரண்டு மூணு நாளைக்கு அவெயிலபிள் இல்லே!'' என்றார்.

''அப்புறம் எங்க பிரச்சினை'' என்றான் விடாமல்.

''அதுக்கும்தான். ஒரு ரெண்டு மூணு நாள் டைம் குடுப்பா'' என்றார்.

''அப்புறம் எங்க பிரச்சினை'' என்றான் விடாமல்.

''அதுக்கும்தான். ஒரு ரெண்டு மூணு நாள் டைம் குடுப்பா'' என்றார்.

அவன் முகம் வாடியது கண்டு சிரித்தார். ''விக்ரம் கவலைப்படாதே. என் பொண்ணுக்கு ஒரு டாக்டர் மாப் பிள்ளை... என்ஜினியரோ... பெரிய வசதியான ஆளோ கிடைக்கலாம். ஆனா, உன்னை மாதிரி வேல் லென்த் உள்ளவனாகக் கிடைக்கிறது கஷ்டம்ன்னு நான் புரிஞ்சுக் கிட்டிருக்கேன்'' என்றார்.

புன்னகைத்தார்.

அவன் மேலும் தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தான். அவன் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

''நீ ஒரு வார்த்தை சொன்னயே. அபியின் மீது முதல் உரிமை உங்களுக்குத்தான்னு. அது மாதிரி அவங்க அம்மாவுக்கும் ஒரு உரிமை இருக்கில்ல. அதுக்குத்தான் அந்த

டைம். மேரேஜ்க்கு ஒரு மூணு மாசம் டைம் வேணும்.'' என்றார்.

அவன் முகம் மலர்ந்தது.

அவர் குபீரென்று சிரித்தார்.

''அடேயப்பா! பெரிய பத்திரிகையாளர். இந்த விஷயத்துல இப்படிக் குழைஞ்சுகிட்டு நிக்கறே?''

''சார். நீங்களும் எல்லாத்தையும் கடந்து வந்தவங்க தானே?'' என்றான்.

சக்கரவர்த்தி வெடிச்சிரிப்பு சிரித்தார்.

அன்றிரவே தஞ்சை புறப்பட்டான்.

சகோதரன், சகோதரி எல்லோரையும் வரச் சொல்லித் தகவல் கொடுத்தான்.

இப்போது ஆலோசனை நடந்து கொண்டிருந்தது.

இப்போது பிரகாஷ் ''ரெண்டு பேருமே ஸ்ட்ராங் பர்ஸனாலிட்டீஸ்'' என்றவுடன் அவன் ஒத்துக் கொண்டான்.

''ஆமாண்ணா. மோதல்கள் வரும். அடிப்படையில அன்பு இருக்கறதுனாலே சமாளிக்கலாம்.'' என்றான் பிரகாஷ் சமாதானமாகாமல் பார்த்தான்.

''அண்ணா இப்படி யோசிங்க. எனக்கோ அபிக்கோ மண்ணாந்தையா ஒரு வாழ்க்கைத் துணை அமைஞ்சா எப்படி இருக்கும்'' என்றான்.

பிரகாஷ் சிரித்தான்.

''அது புயல் மாதிரிப் பொண்ணுடா. ஆனா சமாளிப்பே. உனக்கு உங்கண்ணி மாதிரி வீடே உலகம்னு இருக்கிற பொண்ணுங்க ஒத்து வராது'' என்றான்.

கடைசியாகத்தான் அப்பா கேட்டார். ''ஏம்ப்பா. பொண்ணு கேட்டா குடுப்பாங்களா?'' என்றார்.

பிரகாஷ் சிரித்தான்.

''அப்பா உங்களுக்கு விஷயம் புரியல. அவங்க பொண்ணு குடுக்கட்டும்னு அந்தப் பொண்ணும் காத்திருக்கப் போற



தில்லே. குடுக்கலேன்னா இவனும் விடப் போறதில்லே'' என்று சொல்லி விட்டு மறுபடியும் சிரித்தான்.

''தம்பி. ரொம்ப யோசிக்கிற பொண்ணுன்னா ஒத்து வருமா? சண்டைக்காரியா இருப்பாளா?'' என்று கவலைப் பட்டார். அவன் அதற்கும் சிரித்தான்.

அன்புடன் சொன்னான். ''அம்மா! பொதுவா சுயமா யோசிக்கிற பொண்ணுன்னா எல்லாரும் இப்படி முடிவு பண்ணிடறாங்க. அபி. அப்படியெல்லாம் இல்லம்மா. மனசுல ரொம்ப அன்பு இருக்கும்மா. அந்த மழை பெஞ்சப்ப குப்பத்து ஜனங்க பட்ட கஷ்டம் பார்த்து ரெண்டு மூணு நாள் தூங்கவே இல்லைம்மா''... என்றான்.

''ஓ! அப்ப உன்னை மாதிரித்தான்'' என்று சொன்ன அம்மா மகிழ்ச்சியானார். எப்படியோ எனக்கு நிம்மதி'' என்றார்.

''எதனாலே?'' என்றார் அப்பா.

''எப்படியோ இனி நல்ல சாப்பாடு சாப்பிடுவான். ஓட்டல் சாப்பாடு இல்லே'' என்றார்.

தாயின் மனது எப்போதும் குழந்தையின் வயிற்றையே பெரிதாக நினைக்கும் என்பது புரிந்தவனாக சிரித்தான். அம்மாவைக் கட்டிக் கொண்டு முத்தம் வைத்தான்.

''ஐயோ!

ஐயோ! அம்மா!'' என்று அன்புடன் சிரித்தான்.

''ஓஹ்ஹோ. அம்மா ரொம்பவே கிறுக்குப் பிடிச்சிருச்சு'' என்று கேலி செய்தான் சகோதரி.

மகிழ்ச்சியாய்ச் சிரித்தார்கள்.

* * *

''என்ன நீங்க கிடைக்கவே மாட்டேங்கறேள்?'' என்றாள் அபிநயா புகார் போல.

"அபி. உனக்கும் மட்டும் எப்ப வேண்ணாக் கிடைப்பேன்" என்றான் பாதி கேலியும் உண்மையுமாக.

அவள் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். ஆனால் வெளியே "சரி, சரி ரொம்பத்தான் வழியாதீங்க! இப்ப எங்க இருக்கீங்க? அதைச் சொல்லுங்க" என்றாள்.

"தஞ்சாவூர் போயிட்டு வந்திட்டிருக்கேன்", என்றான்.

"வாட்? சொல்லவே இல்லை!" என்றாள் வியப்புக் குரலில்.

"இத பார்றா! ஒரே நாள்ல எல்லாத்தையும் சொல்லிட்டு செய்யணுங்கறா!" என்று சிரித்தான்.

"ஐயோ! நான் அப்படி அர்த்தத்துல சொல்லலை!" என்று தடுமாறினாள் அபி.

"அபி. நம்ம மேட்டருக்காகத்தான் உடனே போனேன். நேத்து உங்கப்பாகிட்டே பேசினேன். அப்புறம் எங்கப்பா கிட்டே பேசிடலாம்னு போனேன். உங்கப்பா ரெண்டு நாள் அவெய்லபிள் இல்லேன்னார். அந்த கேப்ல இந்த மேட்டரை முடிச்சர்லாம்னு நினைச்சேன்" என்றான்.

"ஊர்ல என்ன சொன்ன?" என்றாள் திக்கு திக்கென்று அடிக்கும் மனதுடன்.

"என்ன சொல்வா? எல்லாரும் கொஞ்சம் அனுதாபப் பட்டா. அப்புறம் கடைசியில தோக்குத் தலையில எழுதி யிருந்தா என்ன செய்ய முடியும்னுட்டா!" என்று அவளைப் போலவே பேசி கேலி செய்தான்.

"ஊருக்கு வாய்யா பேசிக்கறேன்" என்றாள்.

அவன் சிரித்தான். பேச பேச அதுக்காகத்தான் நானும் காத்துகிட்டிருக்கேன்."

அவள் அதைக் கண்டு கொள்ளாதவள் போல சொன்னாள்.

"இங்க எங்காத்துல ஒரே புயல்தான். எங்கம்மாதான்..." என்று இழுத்தாள்.

"ஓ! உங்கம்மாவுக்கு சம்மதம் இல்லையோ?" என்றான்.



வேடிக்கை தெரியுமோ? அம்மாவுக்கு உங்களைப் பிடிச் சிருக்காம். ஆனா காஸ்ட் வேறயேன்னு யோசிக்கறா" என்றாள்.

"அப்புறம் அப்பா சமாதானம் செய்தார். அவா குடும்பம் எப்படிப்பட்ட குடும்பம் தெரியுமா? அவா குடும்பத்துக்கு நம்ம பொண்ணு போறதே பெரிய பாக்கியம்டின்னார் அப்புறம் ஒத்துண்டுட்டா!" என்றாள்.

"ஓ."

"நான் சொல்லிட்டேன். அவரோட ஃபேமிலி பேக்கிரவுண்ட் எதுவாக இருந்தாலும் சரி அவரை எனக்குப் பிடிச்சிருக்கு. அதுதான் விஷயம்னு" என்றாள்.

"நீ சொல்லுவடி" என்றான். சிரித்தான்.

"என்ன மரியாதை குறையுது?" என்றாள்.

"பஸ்ல வந்துட்டிருக்கேன். இல்லேன்னா வேற மாதிரி பதில் சொல்வேன்" என்றான்.

"சொல்லுவீங்க. சொல்லுவீங்க" என்றாள்....

"சரி விடு. இப்பக் கொஞ்சம் தூங்கிக்கறேன். நேத்து எல்லார்கிட்டயும் பேசிட்டுத் தூங்கறப்ப மணி ரெண்டு. அப்புறமும் நீ தூங்க விடலே". என்றான்.

"இதுக்குப் பேர்தான் காவேரித் தண்ணிக் குசும்பு" என்றாள்.

முகத்தில் சிரிப்பு உறைய கண் அயர்ந்து உறங்குகிற அவனை பக்கத்து சீட்டு பய்ணி ஒரு சிரிப்புடன் கவனிப்பதை அவன் அறியவில்லை.

அதே சமயம் இருவருமே எதிர்பாராத வேறொரு திருப்பம் இன்னொரு இடத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பதை இருவருமே அறியவில்லை.

* * *

"அக்கா! நான் அகிலா பேசறேன்" என்ற குரல் கேட்டதுமே கண்ணீரும் கம்பலையுமாக இருந்த ருக்மணி

''அகிலா. எங்கடி இருக்கே?'' என்றான் படபடப்பாக.

''அக்கா பி.ஏ.சாரும், விக்ரம் சாரும் அலங்கனோட பொறுப்பிலே என்னைக் கொண்டு வந்து வச்சிருக்காங்க. ஒரு பங்களாவிலே வசதியா இருக்கேன். எனக்கு எதுவும் பிரச்சினையில்லை. ஆனா வேற ஒரு பிரச்சினை வந்திருக்கு'' என்றாள்.

''என்னம்மா?'' என்றாள்.

''அக்கா இங்கே ரகுவீர் மாமாவைக் கொண்டு வந்து வச்சிருக்காங்க. கேட்டா அது ரகுவீர் மாமா இல்லேங்கறாங்க. எனக்குப் பயமாயிருக்கு'' என்றாள்.

இதுவரையிலும் ரகுவீர் சம்பந்தமான அந்தத் இவு மேட்டரை அறிந்திருக்கவில்லை. அதனால் ரகுவீரைத்தான் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள் என்று பயந்து போனாள்.

''ஐய்யய்யோ! இதென்னடி இப்படிப் பண்ணி இருக்காங்க. உங்க அத்தான் உன்னைப் பாத்தா கடிச்சுக் குதறிடுவாரே? எங்க இருக்க? சொல்லு அங்க நான் வரேன்!'' என்றாள்.

அகிலா தனக்குத் தெரிந்த வரை சொன்னாள். ருக்மணி புறப்பட்டாள்.

* * *

மேடம். நான் விக்டர். இது அப்துல். கொஞ்ச நேரம் உட்காருங்க. படபடப்பில்லாம இருங்க'' என்று உட்கார வைத்தான் அப்துல்.

ருக்மணி அமர்ந்தாள்.

பி.ஏ. கலியமூர்த்தி வந்து சேர்ந்தார். மறுபடியும் விக்ரமும் அபிநயாவும் வந்து சேர்ந்தார்கள்.

உள்ளே பெரியதொரு படுக்கையறையில் முகிலனை அமர்த்தியிருந்தார்கள்.

அவன் விளையாட்டுப் பிள்ளை போல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

விக்ரம் ருக்மணியை உள்ளே அழைத்துப் போனான்.



''ஹலோ இலங்க ருக்மணி'' என்று அறிமுகப் படுத்தினான்...

முகிலன் மலங்க மலங்க விழித்தபடி தலையாட்டினான். ருக்மணியை முற்றிலும் புதிதாகப் பார்க்கறவனைப் போலப் பார்த்தான்.

''ஐயோ! அடிச்சதுல மூளை பிசகிப் போச்சா? பயமாயிருக்கு'' என்று கலங்கினார் ருக்மணி.

அப்போதுதான் பி.ஏ. நடந்த விவகாரத்தை விரிவாகச் சொன்னார். ரகுவீர் குளோனை உருவாக்கிய விதம் பற்றிச் சொன்னார்.

ருக்மணி அதிர்ந்து போனார்.

''ஒரு மனைவியாத்தான் என்னை அவர் மதிக்கலைன்னு நினைச்சேன். ஆனா ஒரு மனுஷியாக் கூட மதிக்கலை பாருங்க'' என்று மிகவும் வருந்தினார். அபிநயாவும் விக்ரமும் பச்சாதாபத்துடன் பார்த்துக் கொண்டார்கள்.

''மேடம்! நடந்தது நடந்து போச்சு. இப்ப ஆகறதைப் பார்க்கலாம்'' என்றார்கள்.

''சரி! இனிமேலாவது என்னென்ன செய்யப் போறீங்கன்னு எனக்கு அப்பப்ப சொல்லுங்க'' என்றார் ஆழ்ந்த வருத்தத்தோடு.

''கண்டிப்பா மேடம்!'' என்றார்கள்.

''சரி இப்ப அவரு எங்கே?'' என்று கேட்டார்.

''மேடம். அப்ப இந்த ரகுவீரோட குளோனுக்கு முகிலன்னு பேரு வச்சிருக்காரு சக்கரவர்த்தி சாரு. முகிலனோட இடத்துல முகிலனுக்கு பதிலா இப்ப ரகுவீரை வச்சிருக்கு. வாழ்க்கையோட கொடுமையான பக்கங்கள் அவருக்கும் தெரியணுமில்லே'' என்றாள் அபிநயா.

ருக்மணி பெருமூச்சு விட்டார் ''அபி நீ நினைக்கற மாதிரி வாழ்க்கையோட கொடுமையான பக்கங்கள் தெரியாதவங்க இல்லே. அவரும் கஷ்டப் பட்டுத்தான் மேல வந்தாரு. ஆனா வந்ததுக்கப்புறம் வந்த விதம் மறந்துட்டாரு'' என்றார் வருத்தத்துடன்.

மேலும் கேட்டார் "அங்க சௌகரியம் எல்லாம் இருக்குமா! வசதியாவே இருந்து பழகிட்டவர்" என்றார் ஆதங்கத்துடன்.

அபிநயாவுக்கு வந்ததே கோபம். "எங்க மேடம்! நீங்க திருந்தவே மாட்டீங்களா? உங்களைக் கொலை செய்ற அளவுக்குப் போயிருக்காரு. இன்னும் சின்னப் பொண்ணு களைத் தேடிட்டு அலையறாரு. இன்னமும் வசதிகள் அவருக்குக் குறைவா இருக்குமோன்னு கவலைப் படறீங்க. பெரிய தளாயினியா நீங்க?" என்று பொரிந்தாள்.

அகிலாவின் கண்களில் கூட அந்தக் கோபம் தெரிந்தது.

"அப்படிக் கேளு!" என்றார்கள் விக்டரும் அப்துலும்.

விக்ரமாதித்யன் சற்று மௌனம் சாதித்தான். பிறகு சொன்னான்.

"மேடம் ரகுவீரைப் பொறுத்தவரை நீங்க இனிமேத் துறவு மனப்பான்மையை வச்சுக்கறது தான் நல்லது" என்றான்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனா இந்தப் பாழும் மனசு கேட்க மாட்டேங்குது" என்றார் அவரும்.

"சரி மேடம்! நீங்க இனிக் கிளம்புங்க. முகிலையும் அகிலாவையும் நாங்க பாத்துக்கறோம்" என்றார்கள்.

ருக்மணிக்குத் தன் வாழ்க்கை குறித்துப் பெரிதும் கவலை தோன்றியது. இவர்கள் எல்லாம் நினைக்கிறாற் போல ரகுவீர் பாடம் கற்றுக் கொண்டு வந்தால் தேவலை. மாறாக அடிபட்ட புலி போல் வந்தால் தாங்க வேண்டியவள் தான்தானே?" என்ற கவலையும் தோன்றியது.

மனதில் அச்சமும் கவலையும் ஊடாடிக் கொண்டிருக்க வேலையாட்களுக்கு முன் எதையும் காட்டாமல் நடமாடிக் கொண்டிருந்தார்.

வேலையாட்களுக்கெல்லாம் எதுவும் வித்தியாசம் தெரியவில்லை. ஏனென்றால் எப்போதும் ரகுவீர் ஒரு படம் முடித்தவுடன் கொஞ்ச நாள் ஓய்வு எடுத்துக் கொள்வது வழக்கம்தான். அந்த மாதிரி சமயங்களில் அவன் எங்கே



தங்குவான் என்பது வேலையாட்களுக்கே தெரியாது. அந்த மாதிரி சமயங்களில்தான் ருக்மணியும் நிம்மதியாக இருப்பது. ஒருமாதிரி சோகங்களை சந்தித்தே பழகியவர் என்றாலும் ஒருவிதமான பீதி உள்ளத்தில் இருந்து கொண்டே இருந்தது.

அதே சமயம் அவரது வாழ்க்கையையே புரட்டிப் போடக் கூடிய ஒரு பெருவெடிப்பு நிகழ்ந்து கொண்டிருந்ததை அவர் அறியவில்லை.

## 26



நள்ளிரவு!

காலிங்பெல் ஒலிக்கவும் திடுக்கிட்டுப் போய் கண்விழித்தான் விக்ரமாதித்யன். கதவைத் திறந்தான்.

பி.ஏ. அப்துல், விக்டர் எல்லாரும் ஒருவித பீதியடைந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தார்கள்.

"என்ன சார் - விஷயம்!"

அவன் சக்கரவர்த்தியை சந்தித்து நான்கு நாட்கள் போயிருக்கும். நிலைமை அப்படியேதான் இருந்தது. முதல் இரண்டு நாட்கள் அவர் கிடைக்கவில்லை. பிறகு கிடைத்த போது

"இருக்கட்டும்ப்பா. அவனும்தான் கொஞ்ச நாள் ஜெயில்ல இருந்த மாதிரி இருக்கட்டுமே!" என்று சொல்லி விட்டார். இதனால் அவனும் பிரச்சினையை மறப் போட்டு வைத்துவிட்டான்.

"ஆனால் இதென்ன! அவர்கள் இப்படிச் சொல்கிறார்களே!" என்று அதிர்ந்துதான் போனான்.

பி.ஏ. முகத்தில் கலவரம் தெரிய சொன்னார் "தம்பி. விக்ரம் அந்தத் தீவு சுத்தமா எரிஞ்சு போச்சு" என்றார்.

"வாட்" என்று அதிர்ந்து போனான்.

* * *

அன்றைக்குக் காலையில் இருந்தே பி.ஏவிடம் ருக்மணி சொல்லிக் கொண்டிருந்தார்.

"பி.ஏ சார் நீங்க எல்லாரும் நினைக்கறதைக் காட்டிலும் எங்க வீட்டுக்காரர் கெட்டிக்காரர். அந்தத் தீவுலயும் ஏதாவது தகிடு தத்தம் செஞ்சு வெளியே வந்தாலும் வந்துடுவாரு. அப்படி மட்டும் வந்தாரு. நம்ப எல்லாரோட எலும்பையும் எண்ணிடுவாரு. பாத்துக்குங்க!" என்று சொல்லிக் கொண்டே இருந்ததனால் போய்ப் பார்க்கலாம் என்று போனார்.

ரகுவீருக்கு சொந்தமான மின்சார போட்டை எடுத்துக் கொண்டு போனார்.

வழக்கமான பயணம் போல இல்லாமல் பகலிலேயே போனார்.

அங்கேயிருந்த குட்டித் தீவுகள் ஒன்றிரண்டு மிகச் சிறிய தீவுகள். தக்காணப் பீட பூமியின் நீட்டிக் கொண்டிருந்த பகுதிகளுக்குப் பின்னே இருந்ததாலோ என்னவோ யாருடைய கண்ணிலும் படவில்லை.

தனியாருக்கு சொந்தம் என்பதாலோ என்னவோ யாரும் கண்டு கொள்ளவும் இல்லை. வழக்கமான பயண நேரம் கடந்த பிறகுதான் அந்த சந்தேகம் தோன்றியது.

வழக்கமாகக் கண்ணில் படும் எந்தத் தீவும் படவில்லை'' என்னடா இது! வழி தவறி வந்து விட்டோம் போலும்'' என்ற எண்ணம் தோன்றியது.

இல்லை வழக்கமான வழிதான் என்று உறுதி செய்து கொண்டு தொடர்ந்தார்.

அருகே நெருங்க நெருங்க விபரீதம் புரிந்தது.

சென்ற வாரம் மரங்கள் நிறைந்த இடமாக இருந்த இடம் இப்போது கறுப்புக் காடாகக் காட்சியளித்தது.

அந்தத் தீவிலே குடைந்து அமைக்கப் பட்டிருந்த இடங்களெல்லாம் சாம்பல் மேடாகக் காட்சியளித்தன.



அவர் இறங்கி தீவுக்குள் நுழைய முற்பட்டபோது ராணுவ உடையில் பத்துப் பேருக்கு மேல் ஓடி வந்து தடுத்தார்கள்.

ராணுவத்தின் ஆளுகைக்குள் அந்த இடம் வந்திருந்தது புரிந்தது.

''இங்கே இருந்தவங்க எல்லாம் எங்கே?'' என்றார்.

''தெரியலே. ராணுவத்தோட ஏவுகணை ஒண்ணு இந்தத் தீவு மேல தவறுதலா விழுந்துடுச்சு. இப்போ தீவு அரசாங்கத்தின் பொறுப்பில இருக்கு. நாங்களே எல்லாம் எரிஞ்சு போனதுக்கப்புறம்தான் வந்தோம்'' என்றார்கள்.

பி.ஏ. அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு கிளம்பி வந்தார். மேலும் கேள்விகள் தன்னிடம் கேட்பதற்குள் தப்பினால் போதும் என்று வந்து விட்டார்.

பதட்டமும் கவலையுமாய் அப்துவிடம் வந்து சொன்னார். ''முகிலன் பத்திரமாய் இருக்கானா பாருங்க'' என்றார்.

இருந்தான்.

இதற்குப் பிறகுதான் விக்ரமாதித்யனிடம் பேச வந்தார்கள்.

விக்ரமாதித்யன் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

பிறகு "இப்ப முகிலன் யார் பொறுப்பில் இருக்கான்" என்றான்.

''முகிலனை கூர்க்காவுடைய பொறுப்பில் விட்டிருக்கு. அகிலாவை எங்க வீட்ல விட்டிருக்கு'' என்றான் விக்ரமாதித்யனுக்குள் ஏதேதோ சந்தேகங்கள் ஓடிக் கொண்டிருந்தது போலும்.

''சார்! ரொம்பப் பெரிய விஷயம் நடந்திருக்கு. ருக்மணியம்மாவுக்கு நான் என்ன பதில் சொல்வேன் சார்'' என்றார் பி.ஏ.

''அட போங்க சார். ருக்மணியம்மா தப்பிச்சாங்கன்னு வைங்க சார்'' என்றான் விக்ரம் கடுப்பாக.

''அதில்லை சார். ராணுவம் நுழைஞ்சுருக்குன்னவுடனே எனக்குக் குலை நடுங்குது. எந்த விஷயம் எப்ப வெளிய வருமோன்னு பயமாயிருக்கு'' என்றார்.

விக்ரமாதித்யன் அப்போது சொன்னான்.

''அப்துல், விக்டர், இந்த விஷயம் பெரிய விஷயம். இந்த விஷயத்தை வெளியே சொல்றதுல நிறைய சிக்கல்கள் இருக்கு. அதனால இப்ப நாம உறுதி மொழி எடுத்துக்கிறோம். கட்டை வேகறவரைக்கும் நாம இந்த விஷயத்தை வெளியே சொல்வதில்லைன்னு'' அப்போது அப்துல் சொன்னான்.

''ஆமடா! விக்ரம் நம்ம நெஞ்சக் குழிக்குள்ளே இந்த விஷயம் அடங்கிரணுமே தவிர யாருக்கும் தெரியக்கூடாது'' என்று உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

மேலும் சற்று நேரம். அதைப் பற்றியே பேசினார்கள். அப்போது விக்ரமாதித்யன் சொன்னான் ''பி.ஏ. சார் கவலைப் படாதீங்க உங்களுக்கு சக்கரவர்த்தி சாரோட இன்ஃப்ளுயன்ஸ் பத்தித் தெரியாது. கண்டிப்பா நல்ல ஆலோசனை குடுப்பாரு. இப்போதைக்குப் போய் பழைய மாதிரியே கன்டின்யூ பண்ணுங்க'' என்று எல்லோரையும் அனுப்பி வைத்தான்..

எழுந்த பி.ஏ.விடம் மறுபடியும் சொன்னான். ''சார் ருக்மணி மேடம் கிட்டே சொல்லும்போது மட்டும் நானும் கூட இருக்கணும்'' என்றான்.

''சரிங்க தம்பி'' என்று சொல்லி விட்டுப் போனார்.

ஆனால் அதற்குப் பிறகு அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

உடனடியாக சக்கரவர்த்திக்கு போன் செய்தான்.

''என்னப்பா இந்த நேரத்துல?'' என்றார்.

''சார் உங்ககிட்டே பேசணும்!'' என்றான்.

''என்னப்பா நம்பர் மாத்தி அடிச்சுட்டியோ?'' என்றார் இன்டல் போல்.



அவன் அதைக் கவனிக்காதவன் போல் ''சார் மேட்டர் ரொம்ப சீரியஸ்'' என்றான்.

''ஓ! இப்பப் பேசணுமா?''

''ஆமா. சார்.''

அவன் சற்றும் எதிர்பாராத விதமாக ''சரி. நான் இப்ப அங்கே வர்றேன்'' என்றார்.

சொன்னது போலவே வந்தார். வரும்போது அபிநயாவையும் அழைத்து வந்தார்.

* * *

''சார். என்ன சார் ஆச்சரியம் தீவே எரிஞ்சு போச்சுங்கறாங்க வெறும் நிலப்பரப்பு மட்டும்தான் இருக்குன்னு சொல்றாங்க. ராணுவத்தோட கட்டுப்பாட்டில தீவு வந்திருக்குன்னு சொல்றாங்க'' என்றான்.

அனுபவம் நிறைந்தவர் என்பதாலோ என்னவோ சக்கரவர்த்தி அமைதியாக உள்வாங்கிக் கொண்டார்.

''சரி இப்ப என்ன செய்யலாம்னு யோசிப்போம்'' என்றார் அலட்டிக் கொள்ளாமல்.

''அதான் சார் எனக்கும் தெரியல'' என்றான் குழப்பமாக.

''ரெண்டு பேரும் யோசியுங்க. ஒரு பக்கம் ரகுவீர் முடிஞ்சு போயாச்சு. இன்னொரு பக்கம் இந்த முகிலன்தான் உயிரோட இருக்கான். முகிலன் ரகுவீரோட குளோன்னு சொன்னா யாரும் நம்பப் போறதில்லே. எப்படி நம்மால நிரூபிக்க முடியம்?''

''சிக்கல்தான்'' என்று முணுமுணுத்தான் விக்ரமாதித்யன்.

''பொறுப்பை உங்ககிட்டே விடறேன். முடிவு செய்ங்க. இது ஆக்கவலா அபியோட ஃபீச்சர். அவளையும் கன்சல்ட் பண்ணிக்க.'' என்றார்.

மேலும் சற்று நேரம் ஆலோசித்தார்கள்.

விக்ரமாதித்யன் ''ஒரு விஷயத்துக்காக நாம சந்தோஷப் படலாம். எப்பவும் ரகுவீர் ஒரு படம் முடிச்சவுடனே கொஞ்ச நாள் எங்கேயாவது போயிடுவாராம். அதனாலே கொஞ்ச நாள் கேள்விகள் இருக்காது. மறுபடியும் கேள்விகள் வர்றதுக்குள்ளே நாம ஏதாவது செய்யணும்'' என்றான்.

''செய்'' என்றார். கொட்டாவி விட்டார்.

''அப்புறம் நீ என்னை அங்கிள்ன்னும் மாமான்னும் கூப்பிடலாமே? இந்த மேட்டர் முடிவுக்கு வந்தவுடனே உங்களுக்கு மேரேஜ் பண்ணிடலாம்னு நினைக்கறேன்'' என்றார்.

விக்ரமாதித்யனும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

''சரிப்பா. மணி ரெண்டாச்சு. நான் கிழவன்ப்பா. கொஞ்சமாவது தூக்கம் வேணும்'' என்றவர் எழுந்து நின்றார். இந்த சோபாவை விரிச்சுப் போடு ஒரு தூக்கம் போடுவோம்'' என்றார்.

அவனுடைய லுங்கியையே வாங்கி உடுத்துக் கொண்டார், படுத்தார். படுத்த மாத்திரத்திலே உறங்கி விட்டார்.

''அபி. நீ?'' என்றவன் ஒரு நிமிடம் யோசித்தான் பிறகு ''அபி நீ என்னோட பெட்ல படுத்துக்கோ! நான் இந்த ரூம் சோபாவை இழுத்துப் போட்டுப் படுத்துக்கறேன்'' என்றான்.

புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்கள்.

சற்றுக் கழித்ததும் மெசேஜ் அனுப்பினான்.

''தூக்கம் வர்லை. அபி.''

''அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?''

''நீ என்னென்ன செஞ்சாத் தூக்கம் வரும்னு என்கிட்டே ஒரு பெரிய பட்டியலே இருக்கு.''

''வேண்ணா தாலாட்டுப் பாடவா?''

''நீ பாடி எவன் கேட்கறது.''

''உதை விழும்.''



''தங்கள் சித்தம் என் பாக்கியம். அந்தப் பக்கம் வரட்டுமா? உதை இப்பவே கிடைக்குமா?''

''அலையாதீங்க. மிஸ்டர்.''

''எங்க போய் அலையறது? பாரு எதிர்லயே உங்கப்பா அழகாக் குறட்டை விட்டுத் தூங்கறதாச்சு.''

''ஐயோ பாவம்!''

''இரு. இரு அத்தனைக்கும் அப்புறம் பேசிக்கறேன்.''

''ஐயய்யோ! பேசிகிட்டேவா இருக்கப் போறீங்க?''

''யு ஆர் டெம்ப்டிங் மீ!''

''அதுசரி இப்படியே எத்தனை நேரம் அறுக்கப் போறீங்க சார்ஜ் தீரப் போகுது'' என்று ஆஃப் செய்தாள்.

இரண்டு பேரும் சிரித்துக் கொண்டார்கள். சற்றுக் கழித்து உறங்கினார்கள்.

இரண்டு மணிக்கு உறங்கிய போதும் சக்கரவர்த்தி சரியாக ஐந்து மணிக்கு விழித்து விட்டார்.

மிகவும் இயல்பாகப் பழகினார். குளித்தவர் அவனுடைய உடை ஒன்றை வாங்கி அணிந்து கொண்டு புறப்பட்டார்.

மகள் உறங்கும் அறையை எட்டிப் பார்த்தார்.

அவள் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

''இந்தப் பொண்ணைப் பாரு! எட்டு மணிவரைக்கும் தூங்குவா! இவளைப் போய் கல்யாணம் செய்றேங்கறே. உன் தலையெழுத்து அப்படீன்னா வுட்டா போகும்?'' என்று கேலி செய்தார்.

விக்ரமாதித்யன் சிரித்துக் கொண்டே காபி தயாரித்துக் கொடுத்தான்.

''அமிர்தமா இருக்குப்பா. சமைப்பியோ'' என்றார்.

''சமைப்பேன்.''

''அதுதான் நல்லது. பின்னே இவளை நம்பினியோ வயிறு காயவேண்டியதுதான்.'' என்று மறுபடியும் சிரித்தார்.

''பாத்துக்கலாம்... அங்கிள்'' என்றான்.

அதுசரி, ரொம்ப மயங்கிப் போயிருக்கே. எது சொன்னாலும் எடுபடாது'' என்று மறுபடியும் சிரித்தார்.

விக்ரமாதித்யன் புன்னகை மாறாமலே நின்றான். அருகில் அமரச் செய்து கொண்டார்.

''விக்ரம் என் கவலை புரியுதாப்பா? ரொம்ப செல்லமா வளர்த்துட்டேன்'' என்றார்.

''புரியுது அங்கிள். கவலைப்படாதீங்க. நீங்கதான் உங்க மகளை சரியாப் புரிஞ்சுக்கலைன்னு நான் நினைக்கறேன் எனக்கு மூணு நாள் வந்து சமைச்சுப் போட்டாளே. அப்படியே எங்கம்மா கை பக்குவம். அந்த ரசம் இன்னமும் என் மனசுல இருக்குது. பிறந்த வீட்ல எல்லாரும் ஜாலியா இருக்கறது தான்'' என்றான்.

விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

''தேங்க்ஸ் அங்கிள்'' என்றான்.

''எதுக்குப்பா?'' என்றார் புரியாமல்.

''இல்லே! இங்க தங்கினீங்களே அதுக்குத்தான்'' என்றான்.

''இதென்னப்பா இருக்கு?'' என்று சிரித்தபடி புறப்பட்டார்.

தனது மனதுக்குப் பிடித்தவள் தனது படுக்கையில் உறங்கிக் கொண்டிருக்கிறாள் என்ற நினைப்புடன் ஒருவிதமான பரவசப் புன்னகையுடன் நடமாடிக் கொண்டே டிபன் தயார் செய்தான்.

குக்கரில் விசில் சத்தம் கேட்டு விழித்தாள். எழுந்து வந்தாள்.

''ஹலோ! குட்மார்னிங். என்ன நடக்குது?'' என்றாள்.

''குட்மார்னிங். பேபி பல் தேச்சுட்டு வர்றியா? பால் புட்டியில பால் கலக்கித் தர்றேன்'' என்று வரவேற்றான்.

''போய்யா!'' என்று செல்லமாகத் திட்டிக் கொண்டே போய்த் தூய்மைப் படுத்திக் கொண்டு வந்தாள்.

அவன் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டாள்.



''ம். டேஸ்ட்டி! அப்பாடா அட்மாஸ்ஃபியரே நல்லா இருக்கு. உங்களோட வாழ்க்கை நல்லாத்தான் இருக்கும் போல இருக்கு.'' என்றாள்.

காபியை ரசித்துக் குடித்துக் கொண்டே அவன் பின்னாலேயே சுற்றினாள்.

''அபி! கொஞ்சம் வெண் பொங்கல் வைச்சேன். சாம்பார் இருக்கு. கூட தோசை வாத்துக்கலாமா?'' என்றான்.

''சூப்பர்'' என்றாள்.

நைட்டியெல்லாம் வாங்கி வச்சிருக்கீங்க?'' என்றாள்.

''இல்ல அபி! அக்காவும் சுரபியும் வந்து தங்கினா யூஸ் பண்றதுக்காக வாங்கி வச்சிருப்பேன். அக்கா யூஸ் பண்ண மாட்டா! சுரபி யூஸ் பண்ணுவா. அது மாதிரி'' என்று அவன் முடிக்கு முன்னே அவள் காபி டம்ளரை நொங்கென்று வைத்தாள்.

''சே!'' என்றாள்.

''அட! என்னாச்சு?'' என்றான் குறுஞ்சிரிப்புடன்.

''எனக்குன்னு வாங்கி வச்சிருந்தேன்னு சொல்வீங்கன்னு ஆசையா இருந்தேன்'' என்றாள்.

''இரு இரு நான் முடிக்கறதுக்குள்ளே நீ அவசரப் பட்டா எப்படி? முழுசையும் கேளு. இந்தத் தடவை சுரபிக்கு வாங்கினப்ப உனக்குன்னு வாங்கிட்டு வந்ததுதான் இது.'' என்றான்.

''ஓ! தாங்க் யூ!'' என்றாள். அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''அபி ஒன்னு புரிஞ்சுக்க. இங்க இருக்கிற எல்லாமே உன்னுதுதான். இன்க்ளூடிங் மை செல்ஃப்'' என்றான். சற்று நேரம் இறக்கமாகப் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''அபி. உங்கப்பா என்னை நம்பி இங்கே விட்டுட்டுப் போயிருக்காரு. அதனாலே'' என்று முடிக்காமல் விட்டான்.

அவளும் விலகிக் கொண்டாள்.

''ஓடு. குளிச்சுட்டு வா'' என்றாள்.

''டிரஸ்'' என்று விழித்தான்.

''எனக்குப் பிடிச்சதா நாலைஞ்சு செலக்ட் பண்ணி வச்சிருக்கேன்'' என்றாள்.

குளித்து விட்டு வந்தவன் தலைமுடிக்கு ஒரு ரப்பர் பாண்ட் போட்டு முடிந்து கொண்டு சமையலில் உதவிக்கு வந்தான்.

''அபி யு ஆர் லுக்கிங் பியூட்டிஃபுல்'' என்று பாராட்டிக் கொண்டான்.

சற்று நேரம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள்.

''விக்ரம்! உங்க மேல விவேக் ரொம்பக் கோபமா இருக்கான்'' என்றாள்.,

'''ஏனாம்.''

''என்னா! இவ்வளவு முக்கியமான விஷயம் எல்லாம் நடந்திருக்கு இந்தப் பய எதிலயுமே என்னைக் கன்சல்ட் பண்ணலேன்னு கோபம். அதிலயும் நம்ம விஷயத்துல நீங்க நேரடியா அப்பாகிட்டே பேசிட்டீங்களாம். அதனால கோபம்'' என்றாள்.

விக்ரம் சிரித்தான் ''நியாயம்தான். இன்னைக்கே மஸ்கா போட்டுர்றேன்.''

''அது ரொம்ப நல்லாச் செய்வீங்களே!'' என்றாள்.

''ஆமா! இன்னும் கூட நல்லா மாலீஷ் போடக் கத்துக் ணும். இல்லேன்னா உன்னை மாதிரி அரபிக் குதிரை கூட ாழ்க்கை நடத்த முடியாது'' என்றான்.

''என்னது! அரபிக்குதிரையா?'' என்று அவள் தலை ணையை எடுத்துக் கொண்டு துரத்த அவன் பயந்தாற் பால் ஓட பிறகு அவள் பிடியில் சிக்கிக் கொள்ள கலகல வன சிரித்து மகிழ்ந்தார்கள்.



அதே நேரம்!

அங்கே பாரிஜாதம் கணவனிடம் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

''என்னன்னா அறிவில்லாமப் பேசறேள்? அபிநயா அங்கே தூங்கிட்டிருக்கான்னு அறிவில்லாம சொல்றேள்? அவ ளோட டிரஸ்ஸை மாட்டிட்டு வந்து நிக்கறேள்?'' என்றார்.

அவர் நின்றார்.

கோபமாகப் பார்த்தார் ''பரி! என்ன பேசறே? ஒரு ஆணும் பொண்ணும் தப்பு செய்யணும்னு நினைச்சா இடமா கிடைக்காது. நீ முதல்ல உன் பொண்ணை நம்பு'' என்றார்.

கணவனின் கோபம் கண்டு பாரிஜாதம் திகைத்து நின்றார்.



## 27

முகிலன் சாப்பிடுகிற விதம் பார்த்து மற்றவர்கள் மலைத்துப் போனார்கள். வெக்கு வெக்கென்று அள்ளிப் போட்டுக் கொண்டான். நிறையவும் சாப்பிட்டான்.

விக்டரும், அட்சுலும் அந்தப் பக்கம் போய் கபகபவென்று சிரித்துக் கொண்டார்கள்.

''யங்கப்பா சாமி! என்னடா இப்படித் திங்கறான்'' என்று பேசிக் கொண்டார்கள்.

முகிலனிடத்தில் அடக்கி வளர்க்கப்பட்ட ஒரு குழந்தை யின் மனப்பான்மையே இருந்தது. கேட்ட கேள்விக்கு பதில் சொன்னான். ஆனால் அவனுடைய உலகம் மிகச் சிறியதாக இருந்தது. அதில் பெரிதாகச் சிந்திப்பதற்கு அவனுக்கு எதுவும் இருக்கவில்லை.

கிட்டத்தட்ட ஒரு பள்ளிக் குழந்தையாய் இருந்தான். ஆனால் சண்டையில் மட்டும் ஆர்வம் காட்டினான். மற்ற நிகழ்ச்சிகளின் போது கேள்வி மேல் கேள்வி கேட்டான்.

விக்ரமாதித்யன் எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் வந்து விஷயங்களைப் புரிய வைப்பதில் ஆர்வம் காட்டினான்.

மனோதத்துவ டாக்டர்களிடமும் கூட ஆலோசனை வாங்கிக் கொண்டான்.

அதைவிட ஆச்சரியம் என்னவென்றால் முகிலனுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை. அவனுக்கு போதிக்கப் பட்டிருந்ததெல்லாம் ஷூட்டிங் சமயத்தில் வந்து சண்டை போட்டுச் செல்வதுதான்.

விக்ரமாதித்யனுக்கு குளோனிங் பற்றித் தான் படித்த விஷயங்களில் இது பற்றிய விவாதமும் வைக்கப்பட்டிருந்ததை நினைவு கூர்ந்தான். தங்களின் சொந்த உபயோகத்துக்காக குளோனிங்குகளை உருவாக்குகிறவர்கள் நம்பர் டூவைத் தங்கள் பிரதியாக மட்டுமே பயன்படுத்துவார்கள் என்பதுதான் அது. ஆனால் குளோனிங்கை உருவாக்குவதை எதிர்ப்பவர்கள் எப்போது குளோன் உருவாகி விடுகிறதோ அப்போது அது ஒரு தனிமனிதனாகி விடுகிறது. அதை அப்படியெல்லாம் பயன்படுத்தி விடக் கூடாது என்பதைத்தான் முக்கிய வாதமாக வைத்தார்கள்.

இப்போது முகிலனைப் பார்க்கப் பார்க்க அவனுக்குள் ஆச்சரியம் பொங்கியது. ஒரேஒரு செல்லில் ஒரு மனிதனை உருவாக்க முடிகிறது என்பது எத்தகைய விஞ்ஞான விந்தை. ஆனால் அந்தக் காலனியில் ஒரு வியாபாரமாக அதைச் செய்ய ஆரம்பித்ததுதான் கொடுமையாகிப் போனது.

இப்படியெல்லாம் எண்ணமிட்டு கொண்டே விக்ரமாதித்யன் பார்த்துக் கொண்டிருக்கையில் அது நிகழ்ந்தது. எழுந்து மறைவாக நின்று கவனித்தான்.

அகிலா முகிலனின் அறைக்குள் நுழைந்தாள்.

''ஹலோ! முகிலன் சாப்பிட்டீங்களா?'' என்றாள்.



முகிலன் விழித்தான். அகிலா திரும்பவும் அவனுக்குப் பாடம் சொல்வது போல் சொன்னாள்.

''என் பேரு அகிலா. அகிலான்னு கூப்பிட்டா நான் திரும்பிப் பார்ப்பேன். அது மாதிரி முகிலன்னு கூப்பிட்டா நீங்க திரும்பிப் பார்க்கணும்'' என்றாள்...

''ஓ!'' என்றான்.

''உங்களை இதுவரைக்கும் என்னன்னு கூப்பிடுவாங்க'' என்றாள்.

''என்னையா? ஆர்.டூன்னு கூப்பிடுவாங்க'' என்றான்.

''சரி இனிமே நீங்க ஆர்.டூ இல்லே. முகிலன் சரியா? சரி நீங்க சாப்பிட்டீங்களா?'' என்றாள்.

''ம்.'' என்றான்.

''என்ன சாப்பிட்டீங்க?'' என்றாள்.

''தெரியலே. சாப்பிட்டேன்'' என்றான்.

அந்தக் கணம் முகிலனின் மேல் அகிலாவுக்கு அன்பு பொங்கியது. ''பாவம். ஒரு கருவியாகத்தான் பயன்படுத்தப் போகிறோம் என்பதே தெரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருக்கிற அவனைத் தான் பாதுகாக்க வேண்டும் என்கிற எண்ணம் தோன்றியது.

சட்டென்று குனிந்து அவன் முகத்தைத் தன் கைகளில் ஏந்தினாள். லேசாக முத்தமிட்டாள் அதன் பாதிப்பு அவன் முகத்திலும் தெரிந்தது. புன்னகைத்தான்.

''இனிமே நீங்க அந்தக் காலனிக்குப் போக வேண்டியதில்லே!'' என்றாள்.

''ஓ'' என்றான். ''போகவே வேண்டாமா?'' என்றான்.

''ஆமா. இங்கயே இருக்கலாம். சரியா?'' என்றாள்.

''உங்களோடவா?'' என்றான் ஆர்வமாக.

அவள் ஒரு நிமிடம் திகைத்தாள். பிறகு உறுதியான குரலில் சொன்னாள். "ஆமா எப்பவும் நீங்க என்னோட இருக்கலாம்" என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த விக்ரமாதித்யன் முகத்தில் சிந்தனை ரேகைகள் ஓடியது. பிறகு லேசான ஒரு புன்னகையும் தோன்றியது. அதே சமயம் அப்துலும் விக்டரும் உள்ளே வந்தனர். விக்ரம் 'உஷ்' என்பது போல் கை காட்டினான். அவர்களும் வியப்புடன் நடப்பதைக் கவனித்தனர்.

"சரி இனிமே நான் கத்துக் குடுக்கறதையெல்லாம் கத்துக்கறீங்களா?" என்றாள்.

"ம். சரி!" என்றான் உற்சாகமாக.

கண்களில் கண்ணீர் மல்க அவனை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கண்ணில்கூட கண்ணீர் மல்கியது.

* * *

கதறி அழுகிற ருக்மணியை எல்லாரும் கனமான ஒரு மௌன வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"மேடம்! உங்களைப் பொறுத்தவரை ஒரு மனித மிருகம் மாதிரி நடந்திருக்காரு. ஆனா நீங்க இப்படி உருகறீங்களே" என்றாள் அபிநயா.

ருக்மணி ஒரு பெருமூச்சு விட்டார். நான் நடிகர் ரகுவீருக்காக அழலே. ஒரு காலத்துல ரொம்பப் பிரியமா என்னை நடத்தின அந்தக் கணவருக்காக அழறேன்" என்றார்.

சக்கரவர்த்தி, ருக்மணி, விக்ரமாதித்யன், விவேக், அபிநயா, அகிலா, கவியமூர்த்தி ஆகியவர்கள் மட்டும் அமர்ந்து ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள்.

"இனி செய்ய வேண்டியது என்னன்னு பார்க்கலாம் என்றாள் அபிநயா.



ஆமா! என்ற விக்ரமாதித்யன் ருக்மணியிடம் சொன்னான்.

"மேடம். நாம இப்ப பெரிய சிக்கல்ல இருக்கோம். ரகுவீர் எரிஞ்சு போனார்ன்னு நாம இப்ப வெளியே சொல்ல முடியாது. நிறையக் கேள்விகள் வரும். எதையுமே நம்மால நிரூபிக்க முடியாது. பெரிய சிக்கல்ல மாட்டிக்கிட்டோம்" என்றான்.

"என்ன செய்றது? எனக்கும் புரியலையே!" என்றார் ருக்மணியும்.

"எங்களை நம்பிப் பொறுப்பை ஒப்படைச்சிங்கன்னா நான் எப்படியாவது பிரச்சினையைத் தீர்க்கப் பார்க்கிறோம்" என்றான்.

"சரி நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படி." என்றார் ருக்மணி.

"தாங்க்ஸ் மேடம்" என்றார்கள்.

* * *

விக்ரமாதித்யனுக்கு வெகு நாட்களுக்குப் பிறகு ஓய்வு கிடைத்தது. ரிலாக்ஸ்டாய் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். காலிங் பெல் ஒலித்தது.

திறந்தான். உலகமகா ஆச்சரியமாய் அவனுடைய பெற்றோர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

அம்மா, அப்பா, பிரகாஷ். அவன் மனைவி. அக்கா, அத்தான் கரபி... என்று எல்லோரும் வாங்க வாங்க! என்று எல்லாரையும் முக மலர்ச்சியுடன் வரவேற்றான். "அப்பா! என்னப்பா இது ஆச்சரியம்?" என்றான்.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்.

"டேய். உனக்கே விஷயம் தெரியாதா?" என்றான் பிரகாஷ்.

"என்ன விஷயம்?"

"உங்க மாமனார் நேத்திக்கு நம்ம ஊருக்கு வந்தாரு. ஞாயிற்றுக்கிழமை நிச்சயதார்த்தம்னு பேசி முடிச்சாரே?" என்றார்கள்.

"ஞாயிற்றுக்கிழமையா? நாளைக்கா?" என்றாள் ஆச்சரியமாக.

"ஆமாம்டா!" என்றான் பிரகாஷ்.

"ஓ! எனக்கு சஸ்பென்ஸா இருக்கட்டும்னு நினைச்சிருப்பாரு" என்று சிரித்துக் கொண்டான்.

அம்மா முதன் முதலில் அவனது அபார்ட்மென்ட்டுக்கு வந்திருந்தார். "என்டா! இந்தப் புறாக் கூண்டிலயா இருக்கே?" என்றார். மற்றவர்கள் சிரித்தார்கள்.

"அம்மா. இந்தச் சென்னைக்கு வந்து சொந்தமா வாங்கியிருக்கேனேன்னு சந்தோஷப் படு" என்றான்.

"இதுல அந்தப் பொண்ணு வந்திருப்பாளாடா?" என்றார் கவலையாக.

"இருப்பாம்மா!" என்றான் மறுபடியும். அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கே சரியாக இருந்தது.

"நாளைக்குக் காலையில பத்து மணிக்கு நிச்சயதார்த்தமாம்" என்றார் அப்பா.

"பாருங்கப்பா இந்த அப்பா எனக்கே சொல்லலை?" என்று அவன் குறைப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே சக்கரவர்த்தி மனைவி, மகன் சகிதம் வந்து சேர்ந்தார்.

விக்ரமாதித்யனிடம் முறைப்படி தெரிவித்தார். பிறகு அவன் தந்தையிடம் "சார். எனக்குப் பட்டணத்துல நிறையப் பேர் வேண்டியவங்க. யாரை விடறது யாரைக் கூப்பிடறதுன்னு பெரிய குழப்பமாயிடும்.

அதனால என் சிஸ்டர்ஸ் - அப்புறம் உங்க ஃபாமிலி மட்டும்தான்" என்றார்.

"உங்க சௌகரியம் சார்!" என்று சொல்லிவிட்டார். அவர்கள் கிளம்பிப் போனதற்குப் பிறகு எல்லாரும் ஹாலில் அமர்ந்தார்கள். அப்போது அம்மா அவனிடம் "விக்ரம் பாரு உன் வருங்கால மனைவிக்காக நாங்க வாங்கிட்டு வந்த பட்டு. ஆரம் என்றெல்லாம் காண்பிக்கவும்தான் அவனுக்கும் வேறொரு எண்ணம் தோன்றியது.



"நம்ம பரிசம் போடணுமில்லே!" என்றார்.

"சொல்லியிருந்தா நானே பணம் குடுத்திருப்பேன்" என்றார்.

"இதெல்லாம் எங்க கடமைடா. நீ வேணும்னா ஏதாவது வாங்கிக் குடு" என்றார் சூரியகலா.

"என்ன வாங்கித் தரட்டும். வளையல் வாங்கித் தரவா?" என்றான்.

அப்போதே புறப்பட்டார்கள். அபிநயாவையும் வரச் சொன்னாள் சூரியகலா.

"ஹேய்! என்ன இப்படி சஸ்பென்ஸ் வச்சுட்டாரு உங்கப்பா" என்றான் விக்ரமாதித்யன்.

"ஆமா எங்கப்பா ரொம்ப ஹேப்பியா இருக்காரு. அவருக்கு இதுவரைக்கும் நான் ஒண்ணுத்துக்கும் ஆகாதவ. என்னை உருப்படியாக்கற மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைச்சதுல ஒரு சந்தோஷம்" என்றாள் கடுப்பாக.

இங்கிதம் அறிந்தவளாக சூர்யகலா அந்தப் பக்கம் நகர்ந்தாள்.

"அபி. நீ உங்கப்பாவைப் புரிஞ்சுக்கலை. நெருப்பு மாதிரிப்பா. டக்குன்னு பத்திக்குவா. அவனை உன்னால புரிஞ்சுக்க முடியும். ரொம்ப ஷார்ப். செல்ஃப் டிபன்டன்ட். சுதந்திர மனப்பான்மை உள்ளவன்னு நினைக்கறாரு" என்றான்.

"அப்படியா சொல்றீங்க?" என்றாள் ஆச்சரியமாக.

"அது சரி. இப்ப உனக்குப் புடிச்ச மாதிரி வளையல் செலக்ட் செய்" என்றான்.

அவள் அவனைப் பார்த்தாள். "இது உங்க கிஃப்ட். நீங்க தான் செலக்ட் செய்யணும்" என்றாள்.

"ஹேய்! அப்படியெல்லாம் நமக்குள்ளே எதுக்கு? நான் கிஃப்ட் குடுக்கறதுன்னு ஆச்சு. அதை உனக்குப் பிடிச்ச மாதிரிக் குடுக்கறேனே?" என்றான்.

செலக்ட் செய்தாள். கவனமாக இரண்டு மூன்று முறை உங்க எஸ்டிமேட் என்ன என்று கேட்டுக் கொண்டு செலக்ட் செய்தாள்.

நானும் உங்களோட வர்றேன் என்று சொல்லி உடன் வந்தான். சூர்யகலாவோடு சேர்ந்து சமையல் செய்து அவர்களோடு நேரம் செலவழித்து பின்னர் புறப்பட்டுச் சென்றான்.

அன்றிரவு!

குடும்பமே ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கையில் விக்ரமாதித்யன் எழுந்து தனது அபார்ட்மெண்டின் பால்கனியில் வேடிக்கைப் பார்த்துபடி நின்று கொண்டிருந்தான்.

சூர்யகலா எழுந்து வந்தாள். ''தம்பி. உன் ஆளு சூப்பர். துறுதுறுன்னு இருக்கறா. ஆனா மரியாதைக் குறைவாயும் இல்லை'' மாமா. நீங்க அப்படியா சொல்றேள். நேக்கென்னவோ இப்படித் தோணுதுன்னு அப்பாகிட்டயே அலட்டிக்காம சொல்றா. ஆனா வாதாடறதில்லே. ஆனா எல்லா ரகளையும் உங்கிட்டே செய்வான்னு நினைக்கிறேன். எப்படிச் சமாளிக்கப் போறே?'' என்றாள்.

''அக்கா அவங்கப்பா அவளை அறிவுப் பூர்வமா வளர்த்திருக்கார். ரொம்ப சிம்பிளா சமாளிக்கலாங்க்கா. இதைச் செய்ன்னு ஆர்டர் போட்டா செய்யமாட்டா. இதைச் செய்தால் இன்னின்னது வரும்ன்னு சொல்லிட்டு அவ இஷ்டம்னு விட்டுட்டா யோசிப்பா. ரெண்டு விஷயம் தப்பாப் போனாக் கூட என்னக்கா - பாடம் கிடைக்குமில்லே?'' என்றான்.

சூரியகலா அவனை அன்புடன் பார்த்தாள். ''தம்பி அதிர்ஷ்டக்காரிதான். இவ்வளவு யோசிக்கிற நீ கிடைச்சிருக்கியே! அப்புறம் எப்ப உங்களுக்குள்ளே இப்படி ஒரு ஆர்வம் வந்துச்சு'' என்றாள்.

அக்காவின் ஆர்வத்தைப் பார்த்து அவன் வெட்கத்துடன் சிரித்தான்.

''நான் நினைக்கிறேன். நம்ம ஊருக்கு வந்தா இல்லே? அப்ப ஒரு கோவிலுக்குப் போனோம் இல்லே? அப்ப இருந்தே சம்டிஸ்டர்ன்ஸ். அதுக்கப்புறம் இன்வெஸ்டிகேஷனுக்



காகப் போனப்ப ரெண்டு பேரும் தனியா இருக்க வேண்டிய சூழ்நிலைகள் வந்தது'' என்று நிறுத்தினான். சிரித்தான்.

சூர்யகலாவும் சிரித்தாள்.

''ஆனா ஆச்சரியம் என்னன்னா முதல்ல சொன்னது அவதான்'' என்றான்.

சூர்யகலா கலகலவென்று சிரித்தாள்'' அப்படிப் போடு பட்டணத்துக் காரின்னு காமிச்சுட்டா'' என்று சிரித்தாள்.

மேலும் சற்று நேரம் கேலி செய்தாள். சிரித்துக் கொண்டே அவள் கேலிக்கு இடம் கொடுத்தான்.

''அக்கா நடை உடை பாவனைகள்ல மாடர்னா இருந்தாக் கூட எல்லை மீற மாட்டாக்கா. அடிப்படையில ரொம்ப நல்லவ'' என்றான்.

''சரிப்பா சரிப்பா நான் என்ன இல்லேன்னா சொன்னேன்.. ம் சரி நீ தூங்கு. நான் தூங்கப் போறேன்ப்பா'' என்று நகர்ந்தாள்.

விக்ரமாதித்யனும் சிரித்துக் கொண்டே உறங்கப் போனான்.



## 28

குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது போல் அகிலா முகிலனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதை ஒருவித சுவாரசியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அபிநயாவும் விக்ரமாதித்யனும்.

நிச்சயதார்த்தம் முடிந்து ஒரு வாரமாகி இருந்தது. தன் தங்கையை நேசிப்பதைத் தன் தந்தையிடம் மட்டுமே பேசிவிட்டான் என்று கோபமாக இருக்கிறான் விவேக் என்று அபிநயா சொன்னவுடனே அவனைச் சமாதானம் செய்யப் போனான்.

''ஏண்டா! உனக்கும் அப்பாவுக்கும் நான் அறிவிலே கம்மின்னு நினைப்பு. அப்படித்தான் இருந்தா என்னடா? நான் அவளுக்கு அண்ணண்டா!'' என்று பொரிந்தான்.

விக்ரமாதித்யன் பொறுமையாக வாங்கிக் கொண்டான். "விவேக்! உன்கிட்ட சொல்றதுக்கு என்ன கூச்சமாயிருந்துச்சுடா. உன்னை நம்பி என் தங்கையை அனுப்பிச்சதுக்கா இந்த வேலை செஞ்சேன்னு நீ கேட்டா நான் என்ன சொல்றது?" என்று விதவிதமாகப் பேசிச் சமாதானம் செய்தான்.

ஒரு வழியாக சமாதானமானான். "அபி, சொன்னாடா. அவதான் முதல்ல சொன்னாளாம்" என்று. அப்படியே உன்கிட்ட சொன்னாளா" என்றான்.

"ஆமா! அவதான் எல்லாத்தையும் ஒப்பனா பேசற ஆளாச்சே! அண்ணா உன் ஃபிரண்டுக்கு ஒரு பயம். நீ என்ன நினைப்பியோ. அப்பா என்ன நினைப்பாரோன்னு. அதான் நானே போட்டு உடைச்சேன். அப்பாடன்னா" என்று சிரித்தான்.

"ஆமடா. எனக்குக் கொஞ்சம் தயக்கம்தான். இப்ப என்ன உங்கப்பா கிட்டே சொன்னவுடனே உங்கிட்ட தானே டிஸ்கஷன் செய்தார்" என்றான்.

"ஆமா. அவராவது என்னை வீட்டுக்கு மூத்தவன்னு ஒத்துகிட்டாரே" என்றான் ஆதங்கம் குறையாமல். விக்ர மாதித்யன் எழுந்தான். இரண்டு கைகளையும் முன்னால் நீட்டி "மிஸ்டர். விவேக். நான் உங்க தங்கையை நேசிக்கிறேன். அவங்களும் என்னை விரும்பறாங்க. மனசு வச்சுக் கல்யாணம் செஞ்சு குடுங்க" என்றான்.

விவேக் அவன் கிண்டல் செய்கிறானோ என்று பார்த்தான். அவன் தீவிரமாகவே சொல்கிறான் என்பது தெரியவும் அவனும் எழுந்து நின்றான். "கண்டிப்பா விக்ரம்! என் தங்கைக்கு உன்னை மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைச்சது ஒரு சந்தோஷம்தான்" என்றான்.

இருவரும் மகிழ்ச்சியாகச் சிரித்தார்கள். நிச்சயம் முடிந்த பிறகு அபிநயாவிடம் இதைப் பகிர்ந்து கொண்டான்.

"ஆமா. அண்ணா என்கிட்டே சொன்னான். நீங்க அதை ரொம்ப சீரியஸாச் சொன்ன விதத்தையும் சொன்னான். சொல்லிட்டு உன் ஆளு எல்லாத்திலயும் சீரியஸாத்தான் இருப்பான் போல இருக்குன்னு கிண்டல் வேற" என்று சிரித்தான்.



"தட்ஸ் ட்ரூ! அபி உலகத்துல நாகரீகம் வளர்ச்சியடைஞ்ச காலத்துல இருந்தே பெண்கள் அடக்கியாளப் பட்டிருக்காங்க" பெண் விடுதலை. ஒரு புதிய தரிசனம்ங்கற புத்தகம் படிச்சேன். கொஞ்சம் அதிர்ந்து போயிட்டேன். ஓஷோ சில விஷயங்களைப் பட்ட வர்த்தனமாகப் பேசறார். அதிர்ந்து போயிட்டேன்" என்றான் "நானும் படிச்சிருக்கேன்" என்றாள்.

"பெண்ணை ஒரு உயிர்ப்போட இருக்க வைக்கவே நம்மால முடியல. நிறைய கட்டுக்கள். நிறைய நசுக்குதல்கள். அவன் தன்னுடையவளாகத் தனக்குக் கீழாகவே இருக்க வேண்டும் என்ற ஆதிக்க மனப்பான்மை. எங்கம்மாவையே எடுத்துக்க. நம்ம நிச்சயத்தப்பதான் சென்னை வந்தாங்க. இத்தனைக்கும் அப்பா எந்தக் கட்டுப்பாட்டையும் விதிச்சவர் இல்லே. ஆனா அவங்களே தனக்குன்னு கட்டுப்பாடுகளை விதிச்சுக்கறாங்க. காலம் காலமாய் வந்த நம்பிக்கைகள். உன்னை ஏன் எனக்குப் பிடிச்சதுன்னா நீ அதையெல்லாம் மீறி வளர்ந்திருக்கே. சிந்திக்கறே. என்னைப் பொறுத்தவரை கம்யூன் எல்லாம் எக்ஸ்ட்ரீம் ஐடியாஸ். ஆனா கணவனும் மனைவியும் ஒருத்தருக்கொருத்தர் சுதந்திரம் கொடுத்துக்கலாம். நீ நீயா இரு. நான் நானா இருக்கேன். சமையல் வேலை செய்றது வெளி வேலைன்னு நான் டிஃபரன்ஸ் காட்ட மாட்டேன். எனக்கு நேரமிருந்தா நான் சமைப்பேன். உனக்கு நேரமிருந்தா நீ செய்யலாம். வேலையிலும் அப்படித்தான். ஆனா எல்லாத்துலயும் நாம தகவல் கொடுக்கணும்" என்றான்.

அபிநயா மகிழ்ச்சியில் பரிசுகளை வாரியிறைத்தாள். அவனும் சளைக்காமல் பதில்கள் கொடுத்தான்.

"பார்த்தியா. இப்ப உன்னோட உணர்வுகளை எப்படி வெளிப்படுத்தினியோ அப்படியே எப்பவும் வெளிப்படுத்தலாம்" என்றான். அப்போது அபிநயா சொன்னாள். "ஆனா. என்னைப் பொறுத்தவரைக்கும் குடும்பங்கற அமைப்பு ரொம்ப அற்புதமான அமைப்புத்தான். அதுல டீவியேஷன்ங்கற

தெல்லாம் பக்குவமில்லாத சமுதாய அமைப்பில விபரீதமாத் தான் முடியும்'' என்றாள்.

''ஹேய். உலகத்தைப் பத்தின கவலையை விடு. நம்மைப் பத்திப் பேசு.''

''அதுதான் பேசப் போறோமே ஆயுசு முடிய'' என்றவன் குபீரென்று சிரித்தான்.

''ஏன் விக்ரம்? இந்த அகிலாவைப் பாருங்க. எப்படிக் காதல் வழியப் பாக்கிறா'' என்றாள்.

''பாத்தியா. ரகுவீர்கிட்டே தப்பிச்ச பொண்ணு அவ னோட குளோன்கிட்டே மாட்டிகிச்சு'' என்று சிரித்தான்.

அபிநயா அப்போது கேட்டாள் ''ஏன் விக்ரம் இந்தக் குளோன் ரகுவீரோட செல்லில் இருந்து வரும்போது முறை சரியா இருக்குமா?'' என்றாள்.

''அபி.விஞ்ஞானிகள் என்ன சொல்றாங்கன்னா டிலேயிட் டவின். அதாவது காலந்தாழ்த்திப் பிறந்த சகோதரன்னு சொல்றாங்க. எனக்கு ஒரே ஒரு வருத்தம் என்னன்னா அந்தக் காலனியில பெர்னார்ட்ன்னு ஒருத்தர். விஞ்ஞானி. அவரு முகிலனை எப்பவுமே இந்த இருபத்தைந்து வயசுத் தோற்றத்துல இருக்க வைக்கறதுக்கான முறை ஏதோ கண்டு பிடிக்கற முயற்சியில இருக்கற மாதிரிச் சொன்னார். ஆனா அதுக்குள்ளே தீவே எரிஞ்சு போச்சு.''

அபிநயா அப்போது விக்ரமாதித்யனிடம் கேட்டாள் ''அதெப்படி இந்த நேரம் பார்த்து தீவு எரிஞ்சது?'' என்று.

''அது பத்தி எனக்கும் ஒருத்தர் மேல சந்தேகம் இருக்கு. குறிப்பிட்ட ஒருத்தர் மேல சந்தேகம்'' என்றான்.

''யார் மேல?'' என்றாள் அபிநயா வெகு ஆர்வமாக.

''ம்ஹூம். நான் சொல்ல மாட்டேன். அது சரி இந்த மாதிரி நேரத்துலதான் நமக்குத் தனிமை கிடைக்குது. நிச்சயம் ஆனதுல இருந்து நீயும் ரூம் பக்கம் வர மாட்டேங் கறே'' என்றான் கடுப்பான குரலில்.



''நான் வந்துடுவேன். அம்மா ரொம்பப் புலம்பறா!'' என்றாள்.

''அதுசரி. கொஞ்ச நாள்தானே விடு. அங்க பாரு. முகிலனும். அகிலாவும் சிரிக்கறதை. இதை விட அருமையான ஆக்ஷன் ஷாட் கிடைக்காது. எடு'' என்றான்.

எடுத்தாள்.

அந்த வாரம் முதல் முதலாக ஒரு கிசுகிசு செய்தி எழுதினான். விக்ரமாதித்யன்.

''மைத்துனியுடன் ஒய்வு(!) எடுக்கிறாராம் நடிப்புக்கே கடவுளான அந்த நடிகர். விரைவில் விவாகத்துக்கு விடுதலை யாம். பரபரப்பாக பேச்சு அடிபடுகிறது. யாரையும் சந்திக்க மறுக்கிறாராம்'' என்று.

சக்கரவர்த்தி அதைப் படித்து விட்டுச் சிரித்துக் கொண்டார்.

அடுத்த வாரத்தில் முகிலனும் அகிலாவும் சிரித்துக் கொண்டிருக்கும் காட்சி பத்திரிகையில் படமாக வந்தது.

ரகுவீரின் பங்களாவுக்கு பத்திரிகையாளர்கள் வித விதமாகப் படையெடுத்துப் பார்த்தார்கள். அனுபவமிக்க பி.ஏ. அழகாகச் சமாளித்தார். ஆனால் எதிர்பாராத பிரதி பலிப்பு வேறொரு இடத்தில் இருந்து வந்தது.

* * *

''தம்பி! உடனே புறப்பட்டு வாப்பா!'' என்று பரபரப் பாக அழைத்தார் ருக்மணி. விக்ரமாதித்யனும் உடனே போனான்.

''தம்பி. என் பொண்ணும் பையனும் ஹாஸ்டல்ல இருந்து புறப்பட்டு வர்றாங்களாம். வந்து கேள்வி மேல கேள்வி கேட்கப் போறாங்க. எனக்கு என்ன செய்றதுன்னு புரியலே'' என்று புலம்பினார்.

''கவலைப்படாதீங்க மேடம். இப்படியொரு சிச்சுவேஷனை நாங்க எதிர்பார்த்தோம். சமாளிப்போம்'' என்றான் விக்ர மாதித்யன்.

* * *

குழந்தைகள் இருவரும் அதிர்ச்சியில் உறைந்து போய் அமர்ந்திருந்தார்கள்.

ருக்மணியை ரகுவீர் அடித்துத் துவைப்பது, அகிலாவிடம் தவறாக நடக்க முயற்சிப்பது. கடைசியில் ருக்மணியைக் கொலை செய்ய முயற்சிப்பது என்று எல்லாவற்றையும் பார்த்தார்கள். மகள் அழுதே விட்டாள்.

''அப்பா இப்படிப்பட்டவரா?'' என்றாள் வெறுப்பு நிறைந்த குரலில்.

''அப்புறம் ஏன் சித்தி ஒத்துக்கிட்டாங்க?'' என்றான் மகன்.

அப்போது விக்ரமாதித்யன் சொன்னான் ''என்னா எப்படியிருந்தாலும் வேற யாரையாவது வயசுப் பொண்ணைத் தேடத்தான் போறாரு. அதுக்கு நானே கல்யாணம் பண்ணிகிட்டா பின்னாடி குழந்தைகளுக்காவது நல்லது கிடைக்குமில்லே. அப்படீங்கறாங்க'' என்றான்.

''ஓ.''

''ஆமா. இனிமே அவங்க நம்மகிட்டே தொடர்பு வச்சுக்க மாட்டாங்க. ஏன்னா அவங்களுக்கு ஆபத்தாயிடும். அத னாலே நீங்களும் அகிலாவைப் புடிக்காத மாதிரித்தான் நடந்துக்கணும்'' என்றாள் அபிநயா.

குழந்தைகள் இருவரும் ஒன்றுபோல் சொன்னார்கள் ''அம்மா அந்தாளை நீ டைவர்ஸ் பண்ணிடு'' என்று.

விக்ரமாதித்யனும். அபிநயாவும் குழந்தைகள் வரவு பற்றி அறிந்தவுடனே சொன்னான் ''மேடம். இந்தக் குளோன். தீவு பற்றிய விஷயங்கள் எதுவும் குழந்தைகளுக்குத் தெரிய வேண்டாம். அவங்களுக்கு இதெல்லாம் புரியாது. வீக் பண்ணிடுவாங்க. எப்பவாவது பின்னாடி சொல்லிக்கலாம். அவங்களோட நிம்மதியான வாழ்க்கைக்கும். உங்களோட நிம்மதியான வாழ்க்கைக்கும் வேணுங்கற அளவுக்கு சொத் துக்கள் இருக்கு. இனியாவது குழந்தைங்களைக் கூட வச்சுட்டு நிம்மதியா இருங்க'' என்றார்.



அப்படியே ஏற்பாடு செய்தார்கள்.

ரகுவீரின் அலுவலகமாக இருந்த அந்த பங்களாவுக்கு பி.ஏ.வின் குடும்பம் குடி வந்தார்கள். அதனால் ருக்மணிக்குப் பாதுகாப்புக்கும் குறைவில்லாமல் இருந்தது. ஆனால் ரகுவீரின் மறைவு அவ்வப்போது அவர் உள்ளத்தில் சோகத்தை எழுப்பிக் கொண்டுதான் இருந்தது.

* * *

''ரசிகப் பெருமக்களுக்கு அநேக கோடி நமஸ்காரங்கள். நான் என் திரையுலக வாழ்க்கையை விட்டு விலகுகிறேன். புகழும் பணமும் எனக்கு அலுத்து விட்டது. தனிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ விரும்புகிறேன். நிம்மதியான அந்த வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் இடையூறு செய்ய வேண்டா மென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்று ஒரு அறிக்கை பத்திரிகைகளில் வெளியானது.

கிட்டத்தட்ட ஒரு மாதம் வரை பத்திரிகையுலகில் ஒரு பெரிய சலசலப்பு எழுந்து அடங்கியது.

விக்ரமாதித்யனும், சக்கரவர்த்தியும் ஒரு குறுஞ்சிரிப்புடன் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று விக்ரமாதித்யன் ஒரு நாளிரவு அபிநயாவுக்கு போன் செய்தான்.

''ஏய். இந்த ரகுவீர் மேட்டர்தான் ஓரளவுக்கு முடிஞ்சிருச்சில்லே. உங்கப்பனை நம்ம கல்யாணத்துக்கு நான் பார்க்கச் சொல்லு. மொட்டையாப் பேசு வார்த்தை மட்டும் முடிச்சுட்டு அப்படியே கிடப்பில் போட்டுட்டாரு'' என்றான்.

''அப்படியே சொல்லிடவா?''

''எப்படியே?''

''இல்லே! உங்கப்பனைன்னு சொன்னீங்களே அதை.''

அவன் சிரித்தான். ''வேண்டாம். ரொம்ப மனசொடிஞ்சு போயிடுவாரு. அதை மட்டும் அப்பான்னு மாத்திச்

சொல்லு. மத்ததெல்லாம் அப்படியே சொல்லு'' என்றான் மிதப்பாக.

அவன் மறக்காமல் டைனிங் டேபிளில் வைத்து அப்பாவிடம் சொன்னான்.

விவேக்கும் சக்கரவர்த்தியும் சிரித்தார்கள். பாரிஜாதம் தான் அதிர்ச்சியாகப் பார்த்தார்.

''ஐயய்யோ! இவனுக்கு மேலே லொள்ளு புடிச்சவனா இருப்பான் போல இருக்கு அந்தப் பிள்ளையாண்டான்'' என்றார்.

''அது இவனைப் பிடிக்கப் போனதுல இருந்தே தெரிய வேண்டாம்'' என்றான் விவேக்.

சக்கரவர்த்தி ரொம்ப சீரியஸாகச் சொன்னார். ''இன்னைக்குத்தான் மண்டபம் ஃபிக்ஸ் ஆச்சு. ஒரே மாசத்துல கல்யாணம்னு சொல்லு'' என்றார்.

அதையும் சொன்னான்.

''அப்படிப் போடு'' என்று சிரித்தான்.

* * *

''டேய்! புடிச்சாலும் புடிச்சே பெரிய புளியங் கொம்பாப் புடிச்சடா!'' என்று கலாட்டா செய்தான் விக்டர். காலையில் திருமணம் முடிந்திருந்தது. அதில் முக்கியமானவர்கள் மட்டும் கலந்து கொண்டார்கள். மாலையில் பெரிய அளவில் வரவேற்பு ஏற்பாடு செய்திருந்தார் சக்கரவர்த்தி.

இடையில் கிடைத்த ஒரு மணி நேரத்தில் நண்பர்களோடு அமர்ந்திருந்தான்.

விக்ரம் திரும்பச் சொன்னான் ''அபி உன்னைப் புளிய மரத்துல உட்கார்ற ஆளு அப்படிங்கறான்'' என்று சீண்டி முடித்தான்.

அபிநயா அலட்டிக் கொள்ளாமல் சிரித்தாள். ''புரியாமப் பேசாதீங்க விக்டர். இவரு பேரு என்ன? விக்ரமாதித்யனுக்கு ஏத்த வேதாளம்தானே கிடைக்கும்.''



எல்லாரும் சிரித்தார்கள்.

''பாத்தியா? இப்பவே என் வாழ்க்கை எப்படி இருக்கும்னு குட் போட்டுக் காமிச்சுட்டா. வாழ்க்கை பூராவும் நான் இவள் கேட்கற கேள்விக்குப் பதில் சொல்லிட்டு இருக்கணுமாம். இல்லே இவளைச் சுமந்துகிட்டே அலையணுமாம்'' என்றான்.

மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

''ஏண்டா. உனக்கெல்லாம் கிடைக்கவே முடியாத பொக்கிஷம்டா அந்தப் பொண்ணு'' என்றான் அப்துல்.

''டேய். கலகம் பண்ணாதீங்கடா. ஏற்கனவே நான் எதெதுக்குக் கெஞ்சிட்டு நிக்கணும்னு தெரியலே. இப்ப வேற போட்டுக் குடுக்கறீங்க. தோள்ல என்னம்மா இதயத்துலயே சுமந்துகிட்டுத் திரியறேன்னு நிரூபிக்கணும்'' என்றான்.

அப்போது வெடிச் சிரிப்பு கிளம்பியது.

அப்போது பெண்கள் அணியிலிருந்து உமா சொன்னாள் ''ஹேய். அபி. இந்த ஆம்பளைங்களுக்கு ஒரு தைரியம். இவங்க இந்த லைன்ல பேசினா நாம வெக்கப்படணுமாம். பதில் பேச மாட்டமாம்'' என்று.

''ஆமா விக்ரம். நாங்க பதில் பேசினா நீங்க தாங்க மாட்டீங்க!'' என்றாள்.

விக்ரமும். அபிநயாவும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

அப்போது அப்துல் சொன்னான் ''டேய் ரெண்டு பேரும் சேர்ந்துகிட்டு நம்மளை முட்டாள் ஆக்கறாங்க. ரெண்டு பேருமே சளைக்காம கேள்வியும் கேட்டுக்குவாங்க. திறமையா பதிலும் சொல்லிக்குவாங்க. சும்மாவா நம்ம கிங் ஜோடி சேர்த்திருப்பாரு'' என்று.

சக்கரவர்த்தியை அவர்களுக்குள் பேசும்போது அவ்வாறு குறிப்பிட்டுக் கொள்வார்கள்.

''டேய் நான் சொல்றேன் கேளு. கிங் ரெண்டு மூணு மாங்கா ஒரே கல்லில் அடிச்சுட்டாரு'' என்றான் விக்டர்.

''ஆமா. விக்ரமாதித்யனை லெவலாக் கட்டிப் போட்டுட்டாரு. மகளுக்குப் பொருத்தமா மாப்பிள்ளையும் புடிச்சிட்டாரு'' என்றான் அப்துல்.

''எனக்கென்னவோ. இதை எதிர்பார்த்துத்தான் விக்ரம் பொறுப்பில் அபிநயாவை விட்டாருன்னு தோணுது'' என்றான் விக்டர்.

''நமக்கெல்லாம் மேல்மாடி காலின்னு அவருக்குத் தெரியும்'' என்றான் அப்துல்.

விக்ரமாதித்யன் இடையில் புகுந்து ''டேய், பாவம்டா தாங்க. விட்டுருங்கடா. இது எதேச்சையாத்தான் நடந்தது'' என்று சமாளித்தான்.

சற்று நேரம் கழித்து அவர்களுக்குத் தனிமை கிட்டிய போது சொன்னான். ''அபி, இவனுங்களுக்கெல்லாம் நீ எனக்குக் கிடைச்சதுல பொறாமை. அவனுங்ககிட்டேயெல்லாம் சான்ஸ் கிடைச்சப்ப எல்லாம் இழைஞ்சு இழைஞ்சே என்னை ஒரு வழி பண்ணிட்டா அபின்னு சொல்ல முடியுமா?'' என்றான் - ஆனால் அவனே இழைந்தான்.

''அது சரி. விக்ரமன் உத்தமன் மாதிரிப் பேசிகிட்டு இப்ப எதுக்கு இழையறீங்களாம்?'' என்றாள்.

''இந்தக் கேள்விக்கு இப்பவே பதில் சொல்லவா? இல்லை'' என்று அருகில் இழுத்தபடி பதில் சொல்ல ஆரம்பித்தான்.

''ப்ளீஸ் ப்ளீஸ் இன்னும் அஞ்சாறு மணி நேரம் பொறுத்துக்குங்க'' என்று சிரித்துக் கொண்டே விலகினாள்.

''இன்னும் அஞ்சாறு மணி நேரமா?'' என்று அவன் சோகப் பெருமூச்சு விடுவதைக் கண்டு மறுபடியும் சிரித்தாள். ''யாரோ வர்றாங்க'' என்று அந்தப் பக்கமாக நகர்ந்தாள்.

''வந்துருவாங்களே. நேரம் காலம் தெரியாம'' என்று அவன் முணுமுணுப்பது காதில் விழ மேலும் சிரித்தாள்.





29

விக்ரமாதித்யனும் அபிநயாவும் தேனிலவுக்குப் போயிருந்தார்கள்.

சக்கரவர்த்தி அதை டூர் மாதிரி ஏற்பாடு செய்திருந்தார்.

எல்லா இடங்களிலும் அவர்கள் தங்குவதற்கு நல்ல வசதியான ஏற்பாடு செய்திருந்தார்.

விமானத்தில் அனுப்பி வைத்தார். அவரது சொந்தச் செலவில் போனார்கள்.

''அபி. உங்கப்பா வருத்தப்படுவாரேன்னுதான் ஒத்துகிட்டேன்'' என்றான் விக்ரமாதித்யன்.

''ரொம்ப வருத்தப்படாதீங்க. கவலை படற சுவாரசியமான விஷயங்களை எழுதிடுங்க'' என்றாள்.

''ஹேய். தட்ஸ் அன் ஐடியா'' என்றான். மனதிற்குப் படுகிற சுவாரசியமான விஷயங்களைக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தான்.

டெல்லிக் குளிர் ரொம்பவும் இதமாக இருந்தது. கம்பளிக் கோட்டில் இருவரும் ஆஜானுபாகுவாகத் தோற்றம் அளித்துக் கொண்டு அலைந்தார்கள்.

''அபி உன் மேல எனக்குப் பொறாமை'' என்றான் விக்ரம்.

''ஏன் என்னைப் போலப் பொண்ணாப் பொறக்கலேன்னா?'' என்றாள் கிண்டலாக.

''உன்னை மாதிரிப் பொண்ணாவா? போதும் நீ ஒருத்தியே போதும்ப்பா. அதுக்கு மேல புரட்சிப் புயல்களை பூமி தாங்காது'' என்றான்.

''ஹேய் திருடா. நேரத்துக்குத் தகுந்த மாதிரிப் பேசறே!'' என்று மேலே விழுந்து பிடுங்கி விளையாட்டாய்ச் சண்டை போட்டாள்.

''ஐயோ. இல்லைடா பொண்ணாப் பொறக்கறது ரொம்ப உயர்வான விஷயம்டா! என்ன விஞ்ஞான முறைன்னாலும்

சரி ஒரு கருவைச் சுமக்கறதுங்கறது ஒரு பொண்ணாலதான் முடியும். அது ரொம்ப பொறாமைப் பட வேண்டிய விஷயம்தான்'' என்றான்.

''ஓ.''

''ஆமா அப்படித்தான் ஓஷோ சொல்றாரு!'' என்றான்.

''ம்'' என்றாள் சுவாரசியத்தை முகத்தில் தேக்கி.

''இன்னும் என்னென்ன சொல்றாரு தெரியுமா? பெண்ணைக் கண்டு ஆணுக்கு உள்ளூர பயமாம். அவள் ரொம்ப சக்தி வாய்ந்தவளாம். அதனாலதான் அந்தக் காலத்துல இருந்தே ஒடுக்கி வச்சருக்காங்களாம்'' என்றான்.

''நீங்க இதையெல்லாம் ஒத்துக்கறீங்களா விக்ரம்?'' என்றாள்.

''இருக்கலாம். ஏன் இருக்கக் கூடாது? அபி. ஆனா ஒண்ணு நிச்சயம் ஆணால பெண் இல்லாம இருக்க முடியாது'' என்றான்.

அபிநயா சிரித்தாள். ''ஐஸ்.ஐஸ்'' என்றாள். அதுசரி இப்ப எதுக்கு இந்த டாபிக் வந்தது'' என்றாள்.

''அதான் நான் உன்மேல பொறாமைன்னு சொன்னேனே. அதுல வந்தது. அபி நான் உன்மேல பொறாமைன்னு சொன்னது எதுக்குத் தெரியுமா. நானும் இந்தப் பத்திரிகைத் துறைக்கு வந்து அஞ்சாறு வருஷமாச்சு. எத்தனையோ எக்ஸ்க்ளுசிவ்ஸ் பண்ணியிருக்கேன். எத்தனையோ ஃபீச்சர்ஸ் பண்ணியிருக்கேன். ஆனா உனக்குத்தானே பயங்கர த்ரில்லர் மாதிரி ஒரு மேட்டர் கிடைச்சது'' என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள் ''ஆனா என்ன கிடைச்சு என்ன? வெளியிட்டுக் கலக்க முடியாமப் போச்சே?'' என்றாள்.

''ஆமடா. தங்கம் எதிக்ஸ்ன்னு ஒண்ணு இருக்கே. அதை மட்டும் வெளியிட்டா எவ்வளவு பெரிய சூறாவளி ஆயிடும். தெரியுமா?''

''ஆமா'' என்றாள் அடங்கிய குரலில்.

அவன் திடீரென்று சிரித்தான். ''அபி உங்கப்பா பயங்கர மான ஆளு'' என்றான்.

''ஆனா நீங்க அதைவிட பயங்கரமான ஆளு. அவரு சரியான கல்லுளிமங்கன் தெரியுமா? ஒரு விஷயத்தை சொல்



க் கூடாதுன்னு நினைச்சாருன்னா சொல்லவே மாட்டாரு. நீங்க அவருகிட்டயே விஷயத்தை வாங்கிட்டீங்களே?'' என்றாள்.

அவன் சிரிப்பதை விழுங்குவது போல் பார்த்தாள்.

''போச்சு. சைட் அடிக்க ஆரம்பிச்சுட்டா'' என்றான்.

''என்னை விட்டால் யாருமில்லை. கண்மணியே உன் கையணைக்க'' என்று மெல்ல முணுமுணுத்தபடி கைகளுக்குள் அடைந்தான்.

அவளும் பாந்தமாக அடங்கினாள்.

போன வாரத்தில் இப்படித்தான் ஒருநாள்!

அபிநயாவின் வீட்டில் டைனிங் டேபிளில் அமர்ந்திருந்தார்கள்.

விக்ரமாதித்யன் மரியாதை கொடுப்பவனாக விலகியே நிற்பதைப் பார்த்த சக்கரவர்த்தி ''என்னப்பா நீ? இப்படிக் கூச்சப் படறே? நீ இந்த வீட்டு மருமகன்ப்பா. எனக்கு மகன் மாதிரி ஃபீல் ஃப்ரீப்பா'' என்று எதிரில் அமர வைத்தார்.

அவனும் புன்னகையுடன் அமர்ந்தான்.

''அப்பறம்பா. பூமிக்கு வந்துட்டியா? பத்திரிகை விஷயம் பேசலாமா?'' என்றார்.

அவன் முகம் லேசாகச் சிவக்க அழகாகச் சிரித்தான். பொதுப் படையாகப் பேசினார்கள்.

''ஏம்ப்பா என் பொண்ணு பாத்தியா ரொம்ப அமைதியா ஆயிட்டாப்ல. ரொம்ப சந்தோஷமா வேற நடமாட ஆரம்பிச்சுட்டா. உனக்கு ஏதாவது கல்யாணப் பரிசுன்னு குடுக்கணும்னு நினைக்கறேன் என்ன வேணும்னு கேளு'' என்றார்.

அவன் அவர் சற்றும் எதிர்பாராத அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''மாமா. எனக்கு ஏதாவது பரிசு குடுக்கணும்னு நினைச்சீங்கன்னா இதைச் சொல்லுங்க. அந்த தீவு எரிஞ்ச போன மர்மம் என்ன?'' என்றான்.

அவர் கடகடவென்று சிரித்தார்.

''நேரம் பார்த்துப் போட்டியேப்பா போடு!'' என்றார் ஆனால் சொன்னார்.

* * *

மனைவியையே கொலை செய்கிற அளவுக்குப் போனானே என்று ரகுவீர் மீது சக்கரவர்த்திக்குக் கடுமையான கோபம்தான். ஆனால் அந்தத் தீவுக்குப் போய்ப் பார்த்தபோது அவன் கிட்டத் தட்ட பேய் அடித்த மாதிரித்தான் நடமாடிக் கொண்டிருந்தான்.

வடநாட்டு அரசியல்வாதிக்குத் தெரியாமலேயே ஒரு குளோனை உருவாக்கியிருந்தார்கள். அற்புதமான கண்டு பிடிப்பு குளோனிங். உலகம் முழுவதிலும் அதைப் பற்றி மறைமுகமான ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. ஆனால் இந்த ஜி.எல். குருப் (அப்படித்தான் அவர்கள் தங்களை அழைத்துக் கொண்டார்கள்)க்கு.

முறையாக அதைப் பயன்படுத்தும் நோக்கம் இல்லை. வணிகத்துக்குப் பயன்படுத்த நினைக்கிறார்கள் என்பது.

தீவை விட்டு வெளியே வந்தவுடனே அவருக்குப் புரிந்து விட்டது. இது பெரிய விஷயம் தங்கள் பத்திரிகை அளவிலே முடிய வேண்டிய விஷயம் இல்லையென்றும் தெரிந்தது.

மறுநாளே டெல்லி புறப்பட்டார்.

மனைவிக்குக் கூட அவர் எதற்காகப் போகிறார் என்பது தெரியாத வண்ணம் நடந்து கொண்டார். ஜனாதிபதியைச் சந்தித்தார். ஜனாதிபதி உடனே பிரதமரிடம் பேசினார்.

சாதாரண சந்திப்பு எனச் செய்தி கசியவிட்டு நேரில் போய்ச் பேசினார். சக்கரவர்த்தியும் உடனிருந்தார். விஷயம் வெளியே வரும்போது ஏற்படக் கூடிய விளைவுகளை ஆராய்ந்தார்கள்.

''நீங்க போங்க மிஸ்டர் சக்கரவர்த்தி. இனிமே அந்தத் தீவைப் பற்றின விஷயங்களையே மறந்துடுங்க'' என்றார்கள்.

பிறகுதான் அவருக்கே தீவு எரிந்து போன விஷயம் தெரிய வந்தது. மறுபடியும் ஜனாதிபதியை சந்தித்தார்.

''கிட்டத்தட்ட மிருகமாகிப் போன அந்த ரகுவீர் இருந்தா என்ன இல்லாட்டி என்ன'' என்றார் ஜனாதிபதி. அப்போதுதான் குளோனையே ரகுவீராக்குகிற எண்ணமும் அவருக்கு வந்தது.

அதையே செய்தார்கள்.



முகிலனுக்கும் அகிலாவுக்கும் கல்யாண ஏற்பாடு செய் தார்கள். செய்தியை மட்டும் கசியவிட்டு இருவரையும் ஒரு தொலை தூர கிராமத்தில் மறைவாக வைத்தார்கள்.

ருக்மணியைத் தொடர்ந்து அதே வீட்டில் தங்க வைத் தார்கள்.

கொஞ்சநாள் கழித்து ரகுவீர் தனது பெயரை முகிலன் என்று மாற்றிக் கொள்வதாக ஒரு சிறிய அறிவிப்பு பத்திரிகை களில் ஒரு ஓரமாக வெளி வந்தது.

கடந்த மூன்று மாதத்தில் உலகம் மெதுமெதுவாக ரகுவீரை மறக்க ஆரம்பித்தது. நடிப்புக் கடல் கிடைக்காமல் போனால் என்ன? யாரோ ஒரு நடிப்பு மலை கிடைக்காமலா போய்விடுவார். கிடைத்தார். ரசிகர்களின் உலகம் அவரைக் கொண்டாட ஆரம்பித்தது.

அகிலா இப்போது வாழ்க்கையையும், கல்வியையும் சொல்லிக் கொடுக்கிறாள் என்று விவரம் சொல்லி முடித்தார்.

''அப்புறம் மேற்கொண்டு என்ன?'' என்றான் விக்ரமாதித்யன்.

இப்போதைக்கு ரகுவீரைப் பற்றிய எல்லா விஷயங்களும் முகிலனுக்கு சொல்லிக் கொடுக்கப்படுது. இது ராணுவ ரகசியம் மாதிரியான விஷயமாப் போயிட்டிருக்கு. ஓரளவு கல்வியறிவு வந்தவுடனே முகிலனை அமெரிக்காவுக்கு அனுப்பி கிரீன் கார்டு வாங்கிறதாத் திட்டம்'' என்றார் சக்கரவர்த்தி.

''மில்லியன் டாலர் கேள்வி மாதிரி மில்லியன் டாலர் மேட்டர் அங்கிள் இது. விஷயம் மட்டும் வெளியாகியிருந்துன்னா சர்க்குலேஷன் எகிறி இருக்கும் சென்சேஷனலா இருந் திருக்கும்'' என்றான்.

''ஆமா. ஆனா சென்சிடிவான இஷ்யூ அந்த ஜி.எல். குருப் பயங்கரமான எத்தனுங்கப்பா. அதிலயும் அந்தத் தீவிரவாதி.

மேட்டர் ரொம்பப் பயங்கரமான விஷயம். எல்லா விஷயங்களும் ஜனாதிபதியினுடைய நேரடிப் பார்வையில்

நடந்தது. அப்புறம்தான் தீவை எரிக்கறதுன்னு முடிவுக்கு வந்தாங்க... போல'' என்றார்.

''அதெப்படி அங்கிள் அந்தத் தீவு மேப்பிலயே இல்லாமப் போச்சு'' என்றான்.

''ரொம்ப சின்னத் தீவுப்பா அது'' என்றார்.

''அங்கிள். பத்திரிகைக்கு வந்தது சில நேரங்கள்ல சந்தோஷம். சில நேரங்களில் சங்கடம். ஆனா இந்த விஷயத்துல பெரிய விபரீதத்தைத் தடுத்தோம்னு ஒரு சந்தோஷம்தான். ஆனா இன்னும் பத்தாண்டுகள்ல குளோனிங்.

ஒரு சர்ச்சைக்குரிய விஷயமா மாறத்தான் போகுது'' என்றான்.

''பாக்கலாம்ப்பா. அப்படியொரு நிலைமை வரும்போது உலகின் முதல் மனிதக் குளோன்னு மூகிலனை வெளியே கூடக் கொண்டு வரலாம்'' என்றார் கலகலவெனச் சிரித்தார்.

''பயங்கரமான ஆளப்பா. நீ என்னவோ கேட்பேன்னு நினைச்சா இதைக் கேட்டு அசத்திட்டியே!'' என்றார்.

''அங்கிள். நீங்கதான் உங்க மகளையே எனக்குக் குடுத்திட்டீங்களே. வேற என்ன எனக்கு வேணும்'' என்றான்.

''அதான்ப்பா. உன்னைப் பாத்தா எனக்குப் பாவமா இருக்கு வேற ஏதாவது கிஃப்ட் குடுத்து சமாதானப் படுத்தலாம்னு பாக்கறேன்'' என்றார்.

''அப்பா.'' என்று சிணுங்கிய மகளைப் பாசத்துடன் பார்த்தார்.

''எப்படியோ. நான் எவ்வளவு பெரிய தியாகம் செஞ்சேன்னு உங்களுக்குப் புரிஞ்சாச் சரி'' என்று சிரித்தான்.

அன்றிரவு!

''தியாகமா செஞ்சீங்க. கிட்டக்க வந்தராதீங்க'' என்று அவள் முறுக்கிக் கொள்ள,



''பாவம்டி. உங்கப்பா. ரொம்ப ஃபீல் பண்றாரு. அவரு ஆறுதலுக்காகச் சொன்னேன்'' என்றான்.

''போய்யா'' என்று குத்துச் சண்டை பாணியில் அவள் பொய்ச் சண்டை போட அவனும் அந்த நடிப்பில் கலந்து கொண்டான். பிறகு படுக்கையில் பொத்தென்று விழுந்தார்கள். அதிரடியாகச் சிரித்தார்கள். அடுத்த கட்டத்துக்குப் போனார்கள்.

அதெல்லாம் இப்போது நினைவு வர தன் கைப்பிடியில் அடங்கியிருக்கிற மனைவியை அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''விக்ரம். அப்பாவுக்கு உங்களைப் பத்தி ரொம்பப் பெருமை. என்னைப் பத்திக் கவலைப்பட்டப்ப சொன்னீங்களாம் அங்கிள். அவ லிபரேட்டட் வுமன். ஆனா இம்பார்ட்டினன்ட் கிடையாதுன்னு அம்மாகிட்டே போய் சொல்லிகிட்டிருந்தார். பாத்தியாடி. கொஞ்ச நாள் பழகின மாப்பிள்ளை நம்ம பொண்ணை நல்லாப் புரிஞ்சிட்டார். ஆனா நீ புரிஞ்சுக்கலேன்னு... என்றாள்.

அவன் சிந்தனையுடன் சொன்னான். ''அபி இப்பக் காலம் மாறுது. பெண்களும் நல்லாப் படிக்க ஆரம்பிச்சுட்டாங்க. சிந்திக்க ஆரம்பிச்சுட்டாங்க. இனி வர்ற காலத்துல எல்லாம் பொய்யான அரசியல்வாதியை விளம்பரக்காரர்களை இனம் கண்டு பிடிச்சுடுவாங்க. அதுல உன்னை மாதிரிப் பொண்ணுங்க முதல் தலைமுறை வெடிகுண்டுகள்'' என்றான்.

''ஆனா விக்ரம் சினிமாத் தியேட்டர்கள்லயும் பீச்லயும் போய்ப் பாருங்க. விடுதலைங்கற போர்ல விலை போயிடாமயும் இருக்கணுமேன்னு கவலையாயிருக்கு'' என்றாள்.

''அபி சுதந்திரம்கறது வரும்போது சில தடுமாற்றங்களும் இருக்கத்தான் செய்யும். அப்புறம் தெளிவும் வரும்'' என்றான்.

''இப்படியே எத்தனை நேரம் பேசப் போறீங்க?''

''அப்ப பேச்சு வேண்டாங்கறியா? செயலா...?'' என்று நிறக்கமாகச் சிரித்தான்.

''அபி. ஒரு உண்மை என்ன தெரியுமா? உலகம் இருக்கற வரைக்கும் உங்க அதாவது. பெண்களோட அன்புப் பிடியிலே இருந்து எங்களுக்கு விடுதலையே இல்லை தெரியுமா?'' என்றான் கிறக்கமாகச் சிரித்தான்.

* * *

விக்ரமாதித்யனும் அபியும் ஒன்றாக அன்றைக்கு வேலைக்கு வந்தார்கள்.

அலுவலகமே அவர்களை மகிழ்ச்சியாக வரவேற்றது.

அபிநயாவின் முகத்தில் புதுமணப் பெண்ணின் மெருகு தெரிகிறதாம். பெண்கள் கேலி செய்தார்கள்.

''போங்கடி. இன்னைக்குத்தான் ஃபேஸ் கிரீமை மாத்தி னேன்'' என்றாள் பதிலுக்கு.

சற்று நேரம் சக நண்பர்கள் கலாட்டாவில் சிக்கித் திணறி னான் விக்ரமாதித்யன். ஆனால் சந்தோஷமாக.

சக்கரவர்த்தியிடமிருந்து அழைப்பு வந்தது.

போனான்.

''வாப்பா!'' என்றான். விவேக்கும் உடனிருந்தான்.

''அப்பா உனக்குப் ப்ரமோஷன் தர்றதா இருக்கார்'' என்றான் உற்சாகமாக.

அவன் முகம் இறுக நின்றான்.

''சாரி. சார். இப்ப நான் ஏத்துக்கறதாயில்லை'' என்றான்.

விவேக் அப்பாவைப் பார்த்தான். சொன்னேன் இல்ல?'' என்பது போல் பார்த்தான்.

''சாரி. சார் உங்க மகளைக் கல்யாணம் செய்தது குறுக்கு வழியில பத்திரிகையில வளர்றதுக்காக இல்லே'' என்றான்.



கோபமாகத் தன் அறைக்குப் போய்விட்டான்.

''அப்பா. என்று கவலையாய்ப் பார்த்தான் விவேக்.

''விடு பாத்துக்கலாம்'' என்று அவர் அடுத்த வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.

''என்ன விஷயம். விக்ரம்?'' என்று அபி அவன் அறைக்குப் போக,

''உங்கப்பா என்ன என்னை மாங்காய் மடையன்னு நினைச்சாரா?'' என்றான் கோபமாக.

அபிநயா அதிர்ந்து போனாள்.

அப்பாவிடம் போனாள். நடந்ததை அறிந்தாள்.

மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையே நடந்து நடந்து காலே வலித்துப் போனது.

கடைசியில் கடுப்பாகி கணவனிடம் ''ரொம்பக் கடுப்படிக்கறீங்க. வீட்டுக்கு வாங்க. பாத்துக்கறேன்'' என்றாள்.

விக்ரமாதித்யன் சிரித்தான்.



30

டிரஸ்ஸிங் டேபிளின் மேல் அமர்ந்து கொண்டிருந்தாள்.

பிற்பகலில் வீட்டுக்கு வந்து விட்டாள். கணவனும், தந்தையும் வேறு வேறு முடிவு களில் நின்றதால் ஏற்பட்ட குழப்பம் தீரவே யில்லை. உணவு நேரத்துக்குத் தந்தையிடம் நின்றாள்.

''அப்பா ரெண்டு பேருக்கும் ஹாஃப் எ டே லீவு குடுங்க. இங்க வச்சுப் பேசினா சரிவராது'' என்றாள்.

''சரிம்மா. போயிட்டு வாங்க'' என்றார்.

"அப்பாகிட்டே சொல்லி உங்களுக்கு வீவு வாங்கிட்டேன்" என்றாள்.

அவன் முறைத்தான். "உன்னை யார் என்னைக் கேட்காம வீவு வாங்கச் சொன்னது. எவ்வளவு வேலை இருக்கு தெரியுமா?" என்றான்.

"ப்ளீஸ் வாங்க. நாளைக்குக் காம்பன்ஸேட் பண்ணிடலாம்" என்றாள்.

"நீ போ! கொஞ்சம் கழிச்சு வர்றேன்" என்றான்.

இப்போது அவன் வந்து அரைமணி நேரமாகி விட்டது. கோபமாக இருந்தாள்.

"ஹாய் டார்லிங்!" என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தான்.

அவள் திரும்பிக் கோபமாகப் பார்த்தாள்.

"ஹாய், என்ன டிரஸ்ஸிங் டேபிள் முன்னாடி உட்கார்ந்திட்டிருக்கே? எங்கயாவது போறியா?" என்றான் நெருங்கினான். பின்னாலிருந்து கட்டிக் கொண்டான்.

"ஹாய்.. இப்படி ஒரு போட்டோ எடுத்துக்கலாமா? எல்லா வீட்லயும் இப்படி போட்டோ இருக்கும் தெரியுமா?" என்றான்.

அதற்குள் அவன் ஒரு காரியம் செய்தான். பவுடரை எடுத்து அவள் தலை நிறையக் கொட்டினான்.

"அடப்பாவி மனுஷா!" என்று சிரித்தாள்.

"இரு அபி வயசானா எப்படி இருப்பேன்னு பார்க்கலாம்" என்றான். தலை நிறையப் பரப்பி விட்டான். அவளும் அவன் தலை நிறையப் பரப்பி விட்டாள். நெக்கமாகச் சிரித்துக் கொண்டே அனுமதித்தான். மூச்சுத் திணற அணைத்துக் கொண்டான்.



"ஹேய், வயசானாக் கூட நீ அழகாத்தான் இருப்பே போலிருக்கு" என்றான். அதற்குப் பிறகும் கூடத் தன் கொஞ்சல்களால் குளிப்பாட்டினான்.

சற்றுக் கழித்து விலகினாள். "சே, என்ன இப்படிப் படுத்தறீங்க?" என்றாள்.

"யார்டி படுத்தறா? தஞ்சாவூருக்கு தேடிட்டு வந்து பாவாடை தாவணியில் போஸ் குடுத்த நாள்ல இருந்து நீதான்டி என்னைப் படுத்தறே?" என்று அவன் முணுமுணுப்பாகச் சொல்லிக் கொண்டே தன் காரியத்தில் கண்ணானான்.

"சே! எவ்வளவு வேலை இருக்கு. இனிப் பாருங்க தலை குளிக்கணும்." என்றாள்.

"குளி. அடியேன் எதுக்கு இருக்கேன். உதவி செய்யத் தானே?" என்றான்.

மகிழ்ச்சியும் காதலும் அங்கே சூழ்நிலையில் கலந்திருக்க சற்று நேரம் செலவழித்தார்கள்.

"சே. இப்படி யாராவது செய்வாங்களா" என்று பொய்யாகச் சலித்துக் கொண்டே அவன் குறும்புகளுக்கெல்லாம் இடம் கொடுத்தாள்.

கூந்தலைக் காய வைத்தாள். ஹேர் டிரையரைப் பயன்படுத்த உதவி செய்தான்.

"விக்ரம்! உமா, கீதா, ராதா, எல்லாருக்கும் ஆச்சரியம். எல்லா வேலைகளுக்கும் அவரு உதவிக்கு வந்தர்றாருன்னு சொன்னா ஆச்சரியம். போடி அதெல்லாம் புது மயக்கத்துல செய்யறதுதான் அப்படீங்கறாங்க" என்றாள்.

அவன் புன்னகைத்தான். "அபி நான்தான் அன்னைக்கே சொன்னேனே. நீங்க வெளியே வந்தாச்சு. எப்ப வேலை செஞ்சு பொருள் சம்பாதிக்க நீங்க ஆரம்பிச்சாச்சோ அப்ப நாங்

களும் பொறுப்புக்களை பங்கு போட்டுக்கணும் இல்லே?'' என்றான்.

இருவரும் ஒய்வாக சோபாவில் சாய்ந்திருந்தார்கள். அபிநயா அவன் மடியில் சாய்ந்து கொண்டாள்.

''இதெல்லாம் சரி. அப்பா சொன்னதுக்கு மட்டும் ஏன் ஒத்துக்க மாட்டேங்கறீங்க. நீங்க சொன்னதுக்கெல்லாம் நான் ஒத்துகிட்டேன் இல்லே?'' என்றாள்.

திருமணத்துக்கு முன்பே சொல்லியிருந்தான் ''உங்கப்பா வீடு வாங்கித் தர்றேன்னு ஏதோ சொன்னாராம் அபி. அதெல்லாம் நான் ஒத்துக்க மாட்டேன். நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து இதை விடப் பெருசா வேண்ணாலும் வாங்கலாம். இப்ப என்னோட அபார்ட்மெண்ட்லயே ரெண்டு பெட்ரும் இருக்கு. அதிலயே எல்லா வசதியும் செஞ்சு தர்றேன்'' என்றான்.

அவளும் மறுக்கவில்லை. அவளுக்கென்று அழகான ஒரு டிரஸ்ஸிங் டேபிள் வாங்கிக் கொடுத்தான்.

''அபி சிம்பிள். லைஃப்தான் எனக்குப் பிடிக்கும்'' என்றான். அவளும் கூட ஏற்றுக் கொண்டாள்.

அப்போது சொன்னான் ''அபி நான் சொல்றதை யோசிச்சுப் பாரு. கல்யாணம் முடிஞ்சவுடனே நிர்வாக ஆசிரியரானா அது என்ன நியாயம்? விக்டர். அப்துல். எல்லாம் ஒண்ணா நுழைஞ்சவங்க. பேக் டோர்ல உள்ளே நுழைஞ்சா மாதிரி ஆயிடுமில்லே'' என்று விளக்கம் கொடுத்தான்.

அவளும் யோசிக்க ஆரம்பித்தாள்.

''நீங்க உங்க பக்கத்து நியாயத்தை சொல்றீங்க. அப்பா என்ன சொல்றாரு தெரியுமா? எவ்வளவோ கட்டிக் காத்து இந்தப் பத்திரிகையை இவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கு. இதுல நிர்வாக ஆசிரியர் பொறுப்பையெல்லாம் குடும்பத்து



உறுப்பினர் அல்லாத வேற ஆட்களுக்குத் தர முடியுமாங்கறார்?'' என்றார்.

அவன் யோசிக்க ஆரம்பித்தான். ''அது சரி அபி ஆனா நிர்வாக ஆசிரியர் போஸ்டெல்லாம் ஒரே இடத்துல கட்டிப் போட்டா மாதிரி ஆயிடும்...'' என்றான்.

''அதுவும் யோசிக்கணும்!'' என்றாள் அபிநயா.

''சரி. அப்ப நீங்களே ஒரு முடிவு சொல்லுங்க'' என்றாள்.

அவன் சற்று நேரம் யோசித்தான். அவ்வப்போது மனைவியுடன் சற்று விளையாடிக் கொண்டிருந்தான். பிறகு மனைவியின் கன்னத்தில் கன்னம் இழையச் சொன்னான். ''இப்ப உனக்கு சப் எடிட்டர் போஸ்ட் குடுத்தா ஒத்துப்பியா?'' என்றான்.

''மாட்டேன் இப்பத்தான் நுழைஞ்சிருக்கேன். நியாயமில்லை'' என்றாள்.

''அது மாதிரித்தான் இதுவும் நமக்கு எது கிடைச்சாலும் ஒரு நியாயமிருக்கணும்'' என்றான். மறுபடியும் யோசித்தாள் ''சரி விடுங்க'' என்றாள். ஆனால் ஏமாற்றம் குரலில் இருந்தது.

''சரி. சரி முதல்ல வேண்ணா ஆசிரியர் குழுவில போடச் சொல்லு. ஆனா விக்டருக்கும் அப்துலுக்கும் ப்ரொமோஷன் குடுக்கச் சொல்லு. கொஞ்ச நாள் ஆசிரியர் குழுவில இருக்கேன். அப்புறமா கொஞ்சம் எக்ஸ்பீரியன்ஸ் ஆனதுக்கப்புறம் நிர்வாகத்துக்குப் போலாம். செட்டிலாகணும்னு எண்ணம் வந்தால் நிர்வாக ஆசிரியர் ஆகலாம். ஓ.கே.வா?'' என்றான்.

ஐயோ! தங்கம் ராசாத்தி என்று எழுந்து அமர்ந்து அவன் தாடையைப் பிடித்துக் கொண்டு கொஞ்சினாள்.

அவன் சிரித்தான். இப்போது அவள் மடியில் அவன் தலை வைத்துக் கொண்டான். அபிநயா மேலும் ஒரு கோரிக்கை வைத்தாள்.

''அதே மாதிரி விக்ரம். என்ன இருந்தாலும் அப்பா என்னை ரொம்ப ஆசையா வளர்த்தார். ரெண்டு நாளா வீட்ல சரியா சாப்பிடறதே இல்லையாம். எங்க பார்த்தாலும் அபி நடமாடற மாதிரியே இருக்குங்கறாராம்'' என்றாள்.

''சரி நீ போய் இருந்துட்டு வாயேன்.''

''நீங்க?''

''நானும் வர்றேன்'' அவள் நெகிழ்ச்சியான குரலில் மேலும் தொடர்ந்தாள்.

''அம்மாகிட்டே சொல்லிகிட்டிருந்தாராம். அபி. வீட்ல போய் தங்கணும். அவங்க எப்படி ஒரு வாழ்க்கை வாழறாங்கன்னு பாக்கணும்னு.''

''சரி. நானே இன்வைட் பண்றேன்'' என்றான்.

''ஆனா சின்ன போர்ஷனா இருக்கு. அதுல போய் நாம தங்கினா அவங்களுக்கு இடைஞ்சலாத்தான் இருக்கும். அப்படீங்கறாராம்'' என்றான்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள். ஹேய் தூண்டில் போடறே? எங்க வர்றேன்னு தெரியுது என்றான்.

குரலில் சலிப்புத் தெரிந்தது.

''விக்கி. ப்ளீஸ்! டோண்ட் மிஸ்டேக் மி. சொல்றது முழுசையும் கேளுங்க. எனக்காக என்னென்னமோ செய்யணும்னு நினைச்சாராம். ஆனா எதுக்குமே நீங்க ஒத்துக்கலையாம். எங்க பெண் சுதந்திரம்னு பேசறீங்க. ஆனா இந்த அபார்ட்மெண்ட்லதான் குடியிருக்கணும்னு கண்டிஷன் போட்டீங்க. நான் ஒத்துகிட்டேன். ஏன் உங்களோட இருக்கறதுதான் முக்கியம். அதனாலதான்.'' அவன் தீவிரமாகக் கவனிக்க ஆரம்பித்தான்.

''உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ இந்த அபார்ட்மெண்ட்ல இருக்கற மூணு போர்ஷனுமே எங்கப்பாவுதுதான்'' என்றாள்.



அவனுக்கு அது செய்தி.

''ஓ!'' என்றான்.

''அதனால நமக்கு சேந்தாப்ல இருக்கற அபார்ட்மெண்டை மட்டும் நம்மூதோட இணைச்சர்லாம்கறார்.''

''எது? ரைட் சைடு அபார்ட்மெண்ட்டா? அதுல ஏதோ பசங்க இருக்காங்க போல இருக்கே.''

''அப்பா. அவங்களுக்கு வேற நல்ல ஏற்பாடு பண்ணி வைக்கறாராம்.''

அவன் லேசான பெருமூச்சு விட்டான்.

''ஓ.கே. அபி'' அவரிஷ்டம்'' என்றான்.

அவள் குஷியானாள். மகிழ்ச்சியைக் கொண்டாடித் தீர்த்து விட்டாள்.

''அபி. நான் ஏன்னு சொல்றேன். புரிஞ்சுக்க. பொண்ணோட கூட எதையும் வாங்கிக்கறது பெண்ணை அவமானப் படுத்தற மாதிரின்னு நான் நினைக்கறேன். அது மட்டுமல்ல. வசதியானவங்க இப்படிச் செய்யும் போது வசதியில்லாதவங்களுக்கு அது பெரிய பிரச்சினையாகுது'' என்றான்.

அவள் அதை ஒத்துக் கொண்டாள்.

அவன் வேறு விஷயங்களுக்குத் தாவினான்.

''அபி. முகிலனும் அகிலாவும் அடுத்த மாதம் அமெரிக்கா போக போறாங்க. உங்கப்பாதான் கிட்டத்தட்ட அவங்களுக்கு கார்டியன் மாதிரி ஆயிட்டார்'' என்றான்.

''ஆமா!'' என்றாள் அவனைத் தன் கைப்பிடிக்குள் அடக்கியபடி.

''விக்ரம் முதமுதலா எப்ப என் மேலே ஆர்வம் வந்துதுன்னு சொல்லுங்களேன்'' என்றாள்.

''தெரியலை. நீ முதல்ல இருந்தே என்னை டிஸ்டர்ப் பண்ணிட்டேன்னு நினைக்கறேன். வண்டியில வந்தப்ப என்னை முதுகில அடிச்சு விளையாடினியே அப்பவே ஒரு மாதிரி ஆயிட்டேன். எத்தனையோ ஃப்ரெண்ட்ஸ் அந்த மாதிரி விளையாடி இருக்காங்க. ஆனா நான் கோபிச்சதில்லை. அதான் ஒதுக்கி வைக்கணும்னு நினைச்சேன் போல.''

அவள் வயிறுத்துக் கேட்டுக் கொண்டாள்.

''அப்புறம் ரகுவீர் வீட்டுக் குழாய் வழியா மாடியேறி னயே அப்ப ரொம்பப் பிடிக்க ஆரம்பிச்சது'' ஐயோ, அது பயங்கரப் பொண்ணா இருக்கேன்னு கவனிக்க ஆரம்பிச் சேன். ரசிக்க ஆரம்பிச்சேன். நீ மனசுக்குள்ளே ஓடிகிட்டே இருக்க ஆரம்பிச்சது'' என்றான்.

''ஓ!'' என்று மெல்லிதழ்களால் பரிசு கொடுத்தாள்.

''நீ எப்பப் புரிஞ்சுக்க ஆரம்பிச்சே?''

''உங்க ஊருக்கு வந்தனே அப்பவே. எனக்கென்னவோ நீங்க ஊருக்குப் போனவுடனே எல்லாமே எம்ப்ட்டியாயிட்ட மாதிரி ஒரு ஃபீலிங். ஒரு தவிப்பு. என்ன சாக்கு சொல்லிட்டு ஊருக்கு வர்லாம்னு யோசிச்சேன். ரகுவீர் மேட்டர் கிடைச்சது. ஓடி வந்துட்டேன்'' என்றான்.

''அங்கே அந்தக் கோயில்ல வச்சு உரசு உரசுன்னு உரசி பொறி கிளப்பிட்டடி'' என்றான்.

கிளுகிளுவென்று சிரித்தான்.

''மாட்டுக்கார வேலன் மாதிரி அந்த போட்டோ என் கிட்டே இருக்கு தெரியுமா?'' என்றான்.

''போட்டோ எதுக்கு? நானே பக்கத்துல இருக்கேனே. கவனி'' என்றான். கவனித்தாள்.

சுரபிக்கு சரியா நீ விளையாடறதைப் பாத்தப்ப கொஞ்சம் கவலையாக் கூட இருந்துச்சு. ரொம்ப விளையாட்டுப்



பொண்ணா இருக்காளே. புரிஞ்சுக்குவாளா? சரி வருமா? வசதியான பொண்ணு வேற.

சரிவருமான்னு இருந்தது. ஆனா நீவுக்கு வந்தப்ப எல்லா அசௌகரியங்களையும் இயல்பா எடுத்துகிட்டது. போட்ல வந்தது. எல்லாத்தையும் பாத்தப்ப கஷ்டங்களைக் கண்டு விலகிப் போற பொண்ணில்லைடா இதுன்னு புரிஞ்சுகிட் டேன்'' என்றான்.

''நான் கவனிக்கலேன்னு நினைச்சுட்டு நீங்க பார்த்த பார்வையையும், பார்த்தா மூடு மாத்திக்கறதையும் கவனிக் கறது எனக்கு ரொம்ப சுவாரசியமா இருந்துச்சு. அப்படி திருட்டுமாப் பாப்பீங்களே அது ரொம்பப் பிடிக்கும்'' என்றாள்.

இப்போதும் அதேபோல்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அதனாலயோ என்னமோ இழப்பதற்கு ஒண்ணுமே இல்லைன்னவுடனே எனக்குக் கோபம் வந்துருச்சு'' என்றாள்.

''கொள்ளுப் பட்டாசு'' என்று ரசித்துக் கொண்டான்.

''அபி இந்தக் காதல்தான் மனுஷனை என்ன பாடு படுத்துது தெரியுமா? எனக்கு ரொம்ப ஆச்சரியம் என்ன தெரியுமா? அகிலாவுக்கு முகிலன் மேல ஏற்பட்ட நேசம் தான். நான் ஒரு நாள் அகிலாகிட்டே கேட்டேன். அகிலா. இந்த முகிலனுக்கு அம்மா. அப்பான்னு யாரும் கிடையாது. அவன் விஞ்ஞானத்தின் விந்தைன்னு. அதுக்கு அவ சொல்றா. ஆனா என்ன சார். அவரும் மனுஷன் தானே அன்பு, பாசம், காதல் எல்லாத்தையும் அழகாப் புரிஞ்சுக்கறாரே. நாகரீகமாப் பேசறதுக்கு சொல்லித் தரணும். படிப்பு சொல்லித் தரணும். அவ்வளவுதானே? அப்படீங்கறா''என்றான்.

''ஓ! ஆமா. உண்மையில அகிலாவுக்கு ரொம்ப நல்ல மனசு. கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. இப்ப அகிலா

மட்டும் முகிலனை நேசிக்கிற சூழ்நிலை இல்லாம இருந்தா முகிலனை என்ன செய்றது? எங்க வைக்கிறது எவ்வளவு பெரிய பிரச்சினையாயிருக்கும்'' என்றான்.

''அது அப்படித்தான் அபி. நீ சொன்னது நிஜம்தான். சூனோனா இருந்தா என்ன? அகிலாவை முகிலன் பார்க்கும்போது காதல் சொட்டத்தான் செய்யுது'' என்றான்.

அதற்கு அபிநயா சொன்னாள். ''விக்ரம், பொதுவா ஒரு கருத்து சொல்றாங்க. கல்யாணம்னு ஆனாலே காதல் செத்துப் போயிடும்னு. நம்ம லைஃப் எப்படியிருக்கும்?'' என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்தான். எழுந்து அமர்ந்தான். ''அபி. காதல்னாலே நாம எல்லாரும் என்ன நினைக்கறோம். தெரியுமா? கிஃப்ட் வாங்கிக் குடுக்கறது. ஒருத்தருக்காக ஒருத்தர் ஏங்கித் தேடிட்டு அலையறது. இதெல்லாம் தான்னு.. சேர்ந்து வாழ ஆரம்பிச்சோம்னா அந்த ஆவேசம் குறையலாம். ஆனா பக்குவம் வந்துடும். ஒருத்தர்க் கொருத்தர் அவசியம்னு நாம நினைக்கற வரைக்கும் அது காதல்தான்'' என்றார்.

''ஆமா. என் காலேஜ் மேட் ஒருத்தி ஒரு கதை சொன்னா. அவங்க பக்கத்து வீட்டு லேடியாம். எப்ப பார்த்தாலும் கணவனும் மனைவியும் சண்டை போடுவாங்களாம். என்னும் கொள்ளும் வெடிச்சா மாதிரித்தான் சண்டை போடுவாங்களாம். ஆனா அந்தம்மா வெளியே போனா லேட் ஆனா வாசல்லயே காத்துகிட்டிருப்பாங்களாம். அதே மாதிரித்தான் அந்தம்மாவும், அப்போ என் ஃபிரண்ட் கேட்டாளாம் இது என்ன விதமான உறவுன்னு. அந்தம்மா உனக்கும் கல்யாணம் ஆகும்போது கேளு சொல்றேன்னாங்களாம். இவளும் கல்யாணம் நிச்சயமானவுடனே போய் கேட்டிருக்கா. அந்தம்மா சிரிச்சுகிட்டே சொன்னாங்களாம்.



அது நைட் டைம்ல ரொம்பக் கெஞ்சிக் கொஞ்சி காரியம் சாதிச்சுக்குவாரு. அதே மாதிரி நானும் அதென்ன அப்ப மட்டும் கெஞ்சின ஆளு இப்ப என்ன மிரட்டறதுன்னு எதிர்ப்புக் காட்டுவேன். ஆனா இரண்டு பேரும் ஒருத்தரை யொருத்தர் விட்டுட்டு இருக்க மாட்டோம்னாங்களாம்'' என்று சிரித்தாள்.

''அது கரெக்ட். அபி. காதல்னா வெறும் காமம் மட்டு மில்லையே. ஆனா அதுலயும் ஒரு நிறைவு வேணும். ஆணும் பெண்ணும் இயல்பா இருந்தா பின்னாடி வருத்தங்கள் இருக்காது'' என்றான் விக்ரம்.

''சரி. சரி. இப்ப எதுக்கு இந்த விளக்கமெல்லாம்'' என்ற சிரித்தாள் அபிநயா.

''சரி நான் ஒரு கவிதை எழுதினேன் தெரியுமா?''

தேனெடுக்கும் வண்டு<br>
  மட்டுமல்ல கண்ணே!<br>
நானிருப்பேன் நிழலாக.<br>
  நீ என் நிஜமானால்!

இது உங்கிட்டே விஷயம் சொல்றதுக்குத் தயக்கமா இருந்தப்ப எழுதினது'' என்றான்.

அந்தக் கவிதைக்கான பரிசும் அவனுக்குக் கிடைத்தது.

பிறகு சொன்னான் ''அபி உங்க வீட்டுக்கு போயிட்டு வரலாமா? பாவம் உங்கப்பா உன் பிரிவில கஷ்டப்படறார் போல இருக்கு'' என்றான்.

''சரி. நான் அம்மாவுக்கு போன் பண்ணிடறேன். அங்கயே நைட் டிபன் சாப்பிட்டரலாம்'' என்றாள்.

''அதுசரி அதுவரைக்கும் வயித்தைக் காயப் போட் ராதே!'' என்றான்.

அவன் வேலைக்கு உதவிக் கொண்டே இருக்க அபிநயா சொன்னாள்.

''என் விக்ரம் நானிருப்பேன் நிழலாகங்கற வசி மூவிலனுக்கு ரொம்பப் பொருத்தம் இல்லே. நிஜமாவே அவரு நிழல்தான்'' என்றாள்.

''நிழல் நிஜமானது இன்னும் பொருத்தம் இல்லே'' என்றான். மேலும் சொன்னான். ''அடி அவனுக்குப் பொருத்தம் இல்லையோ நான் உனக்கு எப்பவும் நிழலா இருப்பேன். நீ உன் வாழ்க்கையில எந்தக் குறையும் இல்லாம வாழலாம், சாதிக்கலாம்'' என்றான்.

கொஞ்சமே கொஞ்சம் மாவில் அவள் தயாரித்த பத்து பஜ்ஜிகளைப் பார்த்து சிரித்தான்.

''இதுக்கு மேலே எதுக்கு விக்ரம்? இதுலயே பக்கத்து வீட்டுக்கு ரெண்டு மூணு தரப் போறேன். போதும் என்னைப் பதார்த்தம். அளவாத்தான் சாப்பிடணும் என்றாள்.

''ஆஹா. ஃபுல் ஃப்ளெஜ்ட் வைஃப் ஆயிட்டாப்பா'' என்று சிரித்தான்.

''பின்னே எல்லாத்திலயும் தான் கரெக்டா நடந்துக் கணும்'' என்று சிரித்தபடி உணவோடு உணர்வுகளையும் பங்கிட்டுக் கொண்டார்கள்.

மெல்லக் கைகளுக்குள் அடக்கி மீண்டும் ஒருமுறை காதருகில் சொன்னான் ''நானிருப்பேன் நிழலாக'' என்று.

''நானும்தான்'' என்று அவளும்தான் புன்னகைத்தாள்.

சாகசங்களும், சர்ச்சைகளும் நிறைந்த வாழ்க்கை ஒன்று அவர்களுக்காகக் காத்திருக்கிற உணர்வோடு சிரித்தார்கள். மகிழ்ந்தார்கள்.